குமாரசுவாமிப் புலவர்

Kumaraswamy Pulavar belongs to the galaxy of Tamil Scholars of Jaffna who contributed in abundant measure to the revival of Tamil Literature during the latter half of the nineteenth century. Besides being a poet, he was the author of a number of invaluable commentaries. The natural genius of the pulavar found a convenient environment for blossoming in a home, haloed with piety and scholarship.

Panditthorai Thevar, who organised the Madura Tamil Sangam, invited Kumaraswamy Pulavar to be a member of the sangam, giving him thereby an opportunity of participating in the activities of the sangam.

If the great Arumuga navalar himself had praised the poetic genius of Kumaraswamy Pulavar, it would look impertinent for another to attempt an assesment of it.

'The Corporator'
(11-1-1964)

30/

குமாரசுவாமிப்புலவர் வரலாறு

உரிமையுரை

அன்னை மறைந்தபின் அன்பொடு வளர்த்த
அக்காள் விசாலாட்சி அம்மையா ருக்கும்,
தந்தை மறைந்தபின் தம்பொரு ளுதவி
உயர்தரக் கல்விக் கூக்க மளித்த
மாண்புறு காமாட்சி மாமியா ருக்கும்,
புலவர் வரலாறு நிலவுமிந் நூலினை
உரிமை யாக்கினன் ஓங்கி
என்பாற் கிளர்ந்த அன்பால் இனிதே.

நூலாசிரியன்



சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்

குமாரசுவாமிப்புலவர் வரலாறு

முன்னைநாட் சென்னை லோயலாக் கல்லூரித்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்,
இளைப்பாறிய அராலி இந்துக் கல்லூரி
அதிபர்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

இயற்றியது

புலவரகம்
மயிலணி சுன்னாகம் இலங்கை
1970

புலவரக வெளியீடு 18

முதற்பதிப்பு 1970

உரிமை பதியப்பட்டது

விலை ரூ. 6·50

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

யாழ்ப்பாணம்

முகவுரை

குமாரசுவாமிப் புலவர் சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியிலும், இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த வடமொழி தென்மொழி வல்ல பெரும் புலவர் களுள் ஒருவராவர். அவர் கவி புனைவதிலும், கட்டுரை வரைவதிலும், கண்டனந் தீட்டுவதிலும் தமக்கு ஒப்பா ரும் மிக்காருமின்றித் தனிப் பெருமையோடு விளங்கின வர். செந்தமிழ் வளர்ச்சிக்கும், சைவ முன்னேற்றத்திற் கும் அவர் தமது வாழ்க்கையைத் தியாகஞ் செய்து பல வகையான நூல்களை இயற்றித் தமிழுலகுக்கு அளித்து அழியாப் புகழ்படைத்துள்ளார். அவர் ஆற்றிய அரிய தொண்டினை அக்காலத்தில் வாழ்ந்த தமிழரசர்கள், புல வர்கள், பண்டிதர்கள், பிரபுக்கள் முதலிய பலரும் பாராட்டியுள்ளனர்.

இத்தகைய பெருமை வாய்ந்த புலவருடைய வாழ்க் கைச் சரித்திரம் வித்துவ சிரோன்மணி புன்னாலைக்கட்டு வன் திரு. சி. கணேசையரவர்களால் 1925-ம் ஆண்டு சுருக்கி எழுதப்பட்டது. அச்சரித்திரம் வெளிவந்த பின்னர், முன் கிடைக்காத அவருடைய வாழ்க்கைக் குறிப்புக்கள் பல, அவரால் மிக்க கலனத்தோடு பாது காக்கப்பட்ட பழைய பத்திரிகைகள் வாயிலாகவும், அவர் பெற்ற கடிதங்கள் வாயிலாகவும் கிடைத்தன. அவற்றின் உதவியோடு ''புலவர் நினைவுகள்'' என்னும் சிறிய நூலை யான் 1967-ம் ஆண்டு வெளியிட்டபோது அதனைப் படித்த அன்பர்கள் சிலர் ''இந்நூலைத் தொடர்ந்து புலவருடைய விரிவான சரித்திரம் வெளி வரும் என்று நம்புகிறோம்'' என்று கடிதங்கள் வரைந் தனர். வேறு பலரும், புலவருடைய விரிவான சரித் திரத்தை எழுதுமாறு என்னைத் தூண்டினர். எல்லா ருடைய கருத்தும் இவ்வாறுக, யானும் அதன் முக்கி யத்தை உணர்ந்து 'குமாரசுவாமிப் புலவர் வரலாறு' என்னும் இந்நூலை எழுதி முடித்தேன். இந்நூலின்கண்

சொல்லும், பொருளும் சுவைபடப் புலவர் இயற்றிய பல அரிய பாடல்களும், பத்திரிகைகள் பலவற்றிற்கு அவர் வழங்கிய கட்டுரைகள், கண்டனங்கள் முதலியனவும், நண்பர்களுக் கெழுதிய கடிதங்கள் சிலவும், அவர் நிகழ்த்திய பிரசங்கம் ஒன்றும், புலவரைப் புகழ்ந்து வேறு புலவர்கள் பாடிய வாழ்த்துப் பாக்களும், அவர்கள் எழுதிய கடிதங்களும், விமர்சனங்களும், பிறவும் இடம் பெற்றுள்ளன.

புலவர் தி. த. கனகசுந்தரம்பிள்ளைக்கு எழுதிய கடிதங்களுள் இரண்டு இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அவற்றை உதவிய அவர் மகன் திரு. தி. க. இராசராசன் B. A. அவர்களுக்கும், சேதுபதி அரசர்களைப் பற்றிய குறிப்புக்களை உதவிய திவான் திரு. எம். வி. இராகவேந்திரராவ் B. A. அவர்களுக்கும், மற்றும் பலவிதக் குறிப்புக்கள் உதவிய பலர்க்கும் எனது நன்றி உரியதாகுக.

இந்நூலைச் சீரியமுறையில் அச்சிட்டு உதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சக அதிபர் திரு. ச. குமாரசுவாமி அவர்களுக்கும் எனது நன்றி உரியதாகுக.

புலவரகம்
சுன்னாகம்
15-6-1970

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

உள்ளுறை

பக்கம்

தோற்றுவாய் 1

முற்காலம் (1854 — 1898)

1. முன்னோரும் பிறப்பும் 3

முத்துக்குமார கவிராயர், பணக்காரச் சின்னத்தம்பியார், மயிலணி, 'சைவ' அம்பலவாணபிள்ளை, சிதம்பரவம்மையார்.

2. கல்வி 9

தமிழ்க்கல்வி, வடமொழிக்கல்வி, சமயக் கல்வி, நூல்களைக்கற்றமுறை, முக்குரவர் வாழ்த்து, ஆறுமுகநாவலர் தொடர்பு, வேறுபுலவர்கள் தொடர்பு, புலவருடன் கூடப்படித்தவர்கள்.

3. ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை 17

வித்தியாசாலைத்தாபனம், தலைமையாசிரியர் பதவி, வித்தியாசாலைப்பரீக்ஷைகளும் அறிக்கைகளும், மாணவர்கள், சி. வை. தாமோதரம்பிள்ளை கடிதங்கள், வித்தியாசாலை மூடப்படல்.

4. முற்காலக் குடும்ப வரலாறு 24

சகோதரிகள் விவாகம், வடமொழிக்குரவர் தாய்தந்தையர் இறப்பு, சகோதரி இறப்பும் புலவர்விவாகமும், மக்கட்பேறு, முதலாவது இந்திய யாத்திரை, இரண்டாவது இந்திய யாத்திரை.

5. முற்கால நூல்கள் 28

செய்யுள் நூல்கள், மொழிபெயர்ப்புச் செய்யுள் நூல்கள், வாழ்த்துப்பாக்கள், உரைநூல்கள், இலக்கணநூல்கள், பதிப்பு நூல்கள்.

6. முற்காலக் கண்டனங்கள் 44

கண்டனத் திறன், கண்டிக்கும் முறை, கிறீஸ்துமத கண்டனம், இலக்கியவிலக் கணக் கண்டனங்கள், புலவரும் சபாபதி நாவலரும், சாமிநாதையரும் புலவரும்.

இடைக்காலம் (1898 — 1902)

7. இடைக்காலச் சிறப்பும், அகராதி வேலையும் 62

கடிதங்கள், நற்சாட்சிப்பத்திரம்.

8. இடைக்கால மாணவர்கள் 66

9. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் 69

தமிழ்ச்சங்கத்தாபனம், சென்னைத் தமிழக ராதி.

10. இடைக்கால நூல்கள் 71

சிறப்புப்பாயிரங்கள், உரைநூல்கள், வசன நூல்.

11. நண்பர்கள் 80

பொன். நல்லதம்பிப்பிள்ளை, சுவாமி வேதாசலம், டி. சவரிராயபிள்ளை, நண்பர்கள் பிரிவுக்கிரங்கல், மனிதரைப் பாடுதல்.

12. பிரசங்கங்கள் 92

வைதிகசைவபரிபாலனம்

பிற்காலம் (1902 — 1922)

13. ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை 99

தலைமையாசிரியர்பதவி, நாளாந்தக்கட மைகள், நடமாடுங் கலைக்களஞ்சியம், மாணவர்கள், கைமாறற்றதொண்டு.

14. மதுரைத் தமிழ்ச்சங்கம் 106

சங்க அங்கத்தவராதல், பாண்டித்துரைத் தேவர், இராஜராஜேஸ்வரசேதுபதி, தமிழ்ச்சங்கச்சேவை.

15. பிற்காலக் குடும்பவரலாறு 113

குடும்பம், நோய்வாய்ப்படல், மனைவி மறைவு, மைத்துனர்கள் மறைவு, மக்கள்.

16. மூன்றாவது இந்தியயாத்திரை 117

யாத்திரை, நண்பர்கள் சந்திப்பு, யாத் திரைப்பலன்.

17. பிற்கால நண்பர்கள் 121

த. கைலாயபிள்ளை, தி. த. கனகசுந்தரம் பிள்ளை, ந. வே. கனகசபாபதி ஐயர், ச. சபாரத்தினமுதலியார், ச. பொன்னம்பல பிள்ளை, சுவாமிநாதபண்டிதர்.

18. பிற்கால நூல்கள் 125

செய்யுள் நூல்கள், சிறப்புப்பாயிரங்கள், வாழ்த்துப்பாக்கள், உரைநூல்கள் (இலக்கியம்), உரைநூல்கள் (இலக்கணம்), இலக்கணவாராய்ச்சிநூல், பதிப்புநூல்கள், வசனநூல்கள், அகராதி, உரைநடைச்சிறப்பு.

19. கட்டுரைகள் 155

செந்தமிழ், ஞானசாகரம், வைசியமித்திரன், ஸ்ரீராமவருணனை.

20. கடிதங்கள் 165

புலவருடைய கடிதங்கள், புலவர்பெற்ற கடிதங்கள், கடிதப்பகுதிகள்.

21. புராணபடனம் 176

"இலைபொலிகலம்."

22. அரசசன்மானம் 178

ஆங்கிலமனு, பாராட்டுரை.

23. இறுதிக் காலம் 183

ஓயாத உழைப்பு, கஷ்டசம்பவங்கள், நண்பர்கள் மறைவு, இளைய மகனது கல்வி, வீட்டிற் காவிய வகுப்பு, நூலியற்றல், சிவபதமடைந்தது, மரணச்சடங்கு.

24. தோற்றம் குணம் முதலியன 188

தோற்றம், குணம், எளியவாழ்க்கை, பாடஞ்சொல்லல், தமிழன்பு, பிறருக்கு உதவிபுரிதல்.

25. கையறுநிலை 192

தந்திகள், கடிதங்கள், பத்திரிகைகளின் இரங்கல், இரங்கற்பாக்கள்.

26. பாராட்டு 208

வசனம், செய்யுள்.

27. புலவர் கையெழுத்து 219

புலவர்கையொப்பம், புலவர் தகப்பனார் கையொப்பம், புலவர் பிறனார் கையொப்பம்.

பிற்சேர்க்கை

1. புலவரியற்றிய நூல்களின் அட்டவணை 221

2. புலவர் சிறப்புப்பாயிரம் வழங்கிய நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும் 224

3. புலவர் செய்த பிரசங்கங்கள் சிலவற்றின் அட்டவணை 226

4. புலவர் பத்திரிகைகளுக்கு வழங்கிய கட்டுரைகளின் அட்டவணை 228

5. புலவருடைய சாதகக் குறிப்பு 234

6. குமாரசுவாமிப் புலவர் வம்சாவளி 235

7. குமாரசுவாமிப் புலவர் மனைவி வம்சாவளி 236

8. புலவருடன் நேரிலும் கடித மூலமும் நட்புறவு கொண்ட பெரியார் சிலரின் அட்டவணை 237

செய்யுள் முதற் குறிப்பகராதி 241

சிறப்புப் பெயரகராதி முதலியன 242

பிழை திருத்தம் 245

படங்கள்

குமாரசுவாமிப்புலவர்	முகப்பு
சி. வை. தாமோதரம்பிள்ளை	16 ம் பக்கம்
ஆறுமுகநாவலர்	104 ம் ,,

குமாரசுவாமிப்புலவர் வரலாறு

தோற்றுவாய்

முன்னைநாள் மதுரை மாநகரில் மன்னிய தமிழ்ச் சங்கப் புலவராய் விளங்கிய பூதந்தேவனார் வாழ்ந்து பெருமையடைந்த இவ்வீழ நாட்டின் சிரமெனத் திகழா நின்ற யாழ்ப்பாணம், ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்தில் தமிழும் சைவமும் வளம்பெற்றோங்கிய பெருமையுடையது. அச்சக்கரவர்த்திகள் வித்துவ சங்கங்கள் கூட்டியும், புலவர்களைச் சன்மானித்தும், பெரும் பொருள் செலவுசெய்து கோயில்களைக் கட்டுவித்தும், தமிழையும் சைவத்தையும் பலவாறு வளர்த்தனர். அக்காலத்தில் வாழ்ந்த அரசகேசரி என்னும் அருங்கவிப் புலவர் காளிதாசன் வடமொழியில் இயற்றிய இரகுவமிசம் என்னும் இணையிலாக் காவியத்தைத் தமிழில் மொழிபெயர்த்து அப்பெயரோடு ஒரு சிறந்த காவியத்தை இயற்றி அழியாப் புகழை நாட்டினர். தமிழிலக்கிய வரலாற்றில் அக்காலம் ஓர் பொற்காலம் என்றழைக்கப்படுந் தகுதி வாய்ந்தது. அக்காலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட போத்துக்கல், ஒல்லாந்து என்னும் நாடுகளைச் சேர்ந்த கொடுங்கோல் மன்னர்கள் காலத்தில் தமிழும் சைவமும் ஆதரிப்பாரின்றி அருகிப் போயின. அவர்களுடைய ஆட்சி முடிவடைந்ததும் ஆங்கிலேயர் 1796-ம் ஆண்டு தொடக்கம் இலங்கையை ஆண்டனர். அவர்கள் மக்களுக்குச் சமய சுதந்தரத்தை 1799-ம் ஆண்டு கொடுத்ததன் காரணமாகத் தமிழும் சைவமும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மறுமலர்ச்சியடையத் தொடங்கின. இம்மறுமலர்ச்சிக் காலத்தில் தமிழுக்கும் சைவத்துக்கும் ஒப்புயர்வற்ற சேவை செய்தவர்கள் சுன்னாகம் முத்துக்குமார கவிராயர், நல்லூர் ஆறுமுகநாவலர், நீர்வேலி சங்கர பண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை என்னும் நால்வருமாவர்.

இவ்வுண்மையை மதுரை வித்துவான் சபாபதி முதலியார் இயற்றிய பின்வரும் செய்யுளால் நன்கு தெளியப்படும்.

> முத்துக் குமார கவிராச சேகரன் மொய்யமரில்
> தத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சவிமடிந்து
> சித்தங் கெடவுடல் தாமோ தரேந்திரன் சிதைத்தபைபிள்
> செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் தென்முனைக்கே.

இப்பாட்டிற் குறிக்கப்பட்ட புலவர்கள் நால்வரும் யாழ்ப்பாணத்திற் கிறீஸ்து சமயத்தைப் பரப்ப முயன்ற கிறீஸ்த பாதிரிமாரோடும் பிறரோடும் கடுமையான சமயப்போர் நிகழ்த்திப் பெரும் புகழ் படைத்தனர். அவர்களுள் இப்போரில் ஈடுபட்டுப் பெரும் புகழ் படைத்த முத்துக்குமார கவிராயர் 1851 ம் ஆண்டு இறந்தனர். சங்கரபண்டிதர் 1871-ம் ஆண்டு சாலமாயினர். ஆறுமுகநாவலர் 1879-ம் ஆண்டு தேகவியோகமாயினர். சி. வை. தாமோதரம் பிள்ளையும் இப்போரிற் பங்குபற்றிய சுன்னாகம் பூ. முருகேச பண்டிதரும் தமது பிற்கால வாழ்க்கையை இந்தியாவில் கழிக்கும் நோக்கத்தோடு ஆங்குச் சென்றனர். அவர்கள் எல்லாரும் ஆற்றிய அருந்தொண்டை ஆர்வத்தோடு தொடர்ந்து செய்ய முற்பட்டவர் முத்துக்குமார கவிராயரின் வழித்தோன்றலும், வடமொழி, தென்மொழி என்னுமிரு மொழிகளையும் நிலைகண்டுணர்ந்த பெரும்புலமையாளரும், அறுபதுக்குக் குறையாத செய்யுள் நூல்களையும், உரைநூல்களையும், வசனநூல்களையும், பதிப்பு நூல்களையும் இயற்றிப் புகழ்படைத்தவரும், ''போலி நாவலர் புரைபட இயற்றிய நூலுரைப் பிழைகளை நுண்ணிதினுணர்ந்து'' முந்நூற்றுக்குக் குறையாத கண்டனங்களையும் கட்டுரைகளையும் பல மாசிக வாசிக பத்திரிகைகள் மூலம் வெளியிட்டுச் செந்தமிழிலக்கிய விலக்கண வரம்பைச் செவ்வனே பாதுகாத்த பெருமைக்கிலக்காக விளங்கியவருமாகிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவராவர். அப்புலவர் திலகர் யாவர்?

முற்காலம் (1854 — 1898)

1. முன்னோரும் பிறப்பும்

குமாரசுவாமிப் புலவர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் என்னுங் கிராமத்தில் 1854-ம் ஆண்டுக்குச் சமமான பிரமாதீச வருடம் தை மாதம் 18-ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிறந்தனர். அவருடைய முன்னோர்கள் உடுவிற் கிராமத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஞானியார் வளவில் வசித்தனர். அவர்களுள் மிகப்பழமை வாய்ந்தவர் வேளாண் குலத்தினராகிய நாகநாதபிள்ளை என்பவர். அவருக்கு மகனைத் தோன்றியவர் சந்திரசேகரப்பிள்ளை என்பவர். அவருடைய மகனுயுதித்த சுப்பிரமணிய பிள்ளை என்பவர் அவ்வூர் அருணாசலம்பிள்ளை என்பவருடைய மகளைத் திருமணஞ்செய்து அம்பலவாணபிள்ளை என்னும் புத்திரனைப் பெற்றனர். அவர் முத்துக்குமார கவிராயர், சின்னத்தம்பிப் பிள்ளை என்னும் இரு புத்திரரத்தினங்களைப் பெற்றனர். அவ்விருவரும் முறையே கல்வித்துறையிலும், செல்வத்துறையிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இலராய்க் குலத்தை விளக்க வந்த குலக்கொழுந்துகளாகத் திகழ்ந்தனர். சின்னத்தம்பிப் பிள்ளை என்பவரே புலவரின் தாதை தன் தாதையாவர்.

முத்துக்குமாரகவிராயர் (1780–1851)

முத்துக்குமார கவிராயர் ஆறுமுகநாவலர் காலத்துக்கு முன் கிறீஸ்த பாதிரிமாரோடு போர்புரிந்து யாழ்ப்பாணத்திற் சைவசமயத்தை நிலைநாட்டிப் பெரும்புகழ் படைத்தனர். அவர் முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகராய் விளங்கினமை காரணமாகக் 'கவிராயர்' என்று அழைக்கப்பட்டனர். அவர் ஞானக்கும்மி, யேசு மத பரிகாரம், நடராசர் பதிகம், ஐயனார் ஊஞ்சல், தனிக்கவிகள் முதலியவற்றை இயற்றினர். அவற்றுள்

நடராசர் பதிகம் இப்போது கிடைப்பதில்லை. ஆறுமுக நாவலர் தமது கிறீஸ்து மதப் போராட்டத்திற்கு மிகவும் உபயோகமாயிருந்த படியால் ஞானக்கும்மி, யேசு மத பரிகாரம் என்னுமிரு நூல்களை இருமுறை அச்சிட்டு வெளிப்படுத்தினர். அவர் அவற்றை இரண்டாம்முறை அச்சிட்ட காலம் ஆங்கிரச வருடம் ஆனி மாதமாகும் (1872). கவிராயருடைய தனிக்கவிகள் குமாரசுவாமிப் புலவரால் 1909-ம் ஆண்டு 'முத்தகபஞ்சவிஞ்சதி' என்னும் பெயரோடு வெளியிடப்பட்டன. கவிராயர் பல மாணவருக்குக் கல்வி கற்பித்தனர். அவருடைய மாணவருட் சிறந்தவர் முவ்சாகிப் சி. வை. தாமோதரம் பிள்ளை B. A., B. L. ஆவர். அவர் பதிப்பித்த நூல்கள் ஒவ்வொன்றிலும் தமது ஆசிரியருக்குக் குருவணக்கம் கூறியிருக்கின்றனர். அவர் வீரசோழியப் பதிப்புரையிற் (1889) கூறிய குருவணக்கச் செய்யுள் கீழே தரப்படுகின்றது.

குருவணக்கம்

எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னு
கத்துயர் மரபினேன் முத்துக்கு மார
வித்தக னடிதலை வைத்துவாழ்த் துவனே.

'பணக்காரச் சின்னத்தம்பியார்' (1790–1879)

புலவருடைய பேரனுகிய சின்னத்தம்பிப்பிள்ளை அக்காலத்திற் பெருநிதிக் கிழாராக விளங்கினமை பற்றி அவரை எல்லாரும் "பணக்காரச் சின்னத்தம்பியார்" என்று அழைத்தனர். அவர் பெருஞ் செல்வரும், பிரபுவும், அதிகார புருடருமாகிய இராமுடையார் மகள் காமாட்சியம்மையை விவாகஞ்செய்து வள்ளியம்மை, சின்னம்மை, அம்பலவாணபிள்ளை, இராமுப்பிள்ளை என்னும் நான்கு பிள்ளைகளைப் பெற்றனர். மயிலணி வாசியும்,

பிரபல வைத்தியருமாகிய தில்லையம்பலப்பிள்ளை (தில்லைஞானியார்) முதலில் வள்ளியம்மையையும், அவர் இறந்தபின் சின்னம்மையையும் விவாகஞ் செய்தனர். இராமுப்பிள்ளை என்பவர் பிரமசரிய விரதம் பூண்டு சோதிட சாஸ்திர விற்பன்னராய்த் தமது வாழ்நாளைக் கழித்தனர். கடைசி மகனுகிய அம்பலவாண பிள்ளையே புலவருடைய தந்தையாராவர். அவர் வசித்த இடம் சுன்னகத்தின் வடபாலுள்ள மயிலணியாகும்.

மயிலணி

மயிலணி என்னுமிடம் ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத் தொடக்கத்திற் சைவமுந் தமிழும் மறுமலர்ச்சியடைந்த இடங்களுள் முக்கியம் வாய்ந்தது. அங்கு வாழ்ந்த சைவ வேளாண் பிரபுக்கள் அவ்விடத்தில் ஒரு முருகமூர்த்தி கோயிலையும், ஒரு சைவக் குருக்கள் மடத்தையும், ஒரு பாடசாலையையுந் தாபித்து அவைமூலம் சைவத்தையுந் தமிழையும் மறுமலர்ச்சியடையச் செய்தனர். அவர்கள் கோயிலுக் கருகாமையில் வேதாகமங்கள் கற்றுத் தேறிய பிராமணோத்தமரைக் குடியேற்றிக் கோயிற் பூசை, திருவிழா முதலியவற்றைச் சிறப்போடு செய்வித்தனர். மடத்திற் சைவக்கிரியை கைவந்த வேதாரணியத்துக் குருக்கள்மாரைக் குடியிருத்திச் சைவ மக்களுக்குச் சமயதீக்கை, விசேடதீக்கை முதலிய கிரியைகளைச் செய்வித்துச் சைவ நன்னெறி கடைப்பிடித்தொழுகச் செய்தனர். பாடசாலையில் உள்ள மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வல்ல ஆசிரியர்களை நியமித்துக் கல்வியை விருத்தி பண்ணினர். பாடசாலையிற் கற்பித்த ஆசிரியர்களுட் சிறந்தவர்கள், சுவாமிநாததேசிகர், நமச்சிவாயதேசிகர், முத்துக்குமார கவிராயர், முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர் முதலியோர்; பாடசாலையிற் கற்றுத் தேறியவருட் சிறந்தவர்கள் சி. வை. தாமோதரம்பிள்ளை, மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஊரெழு சு; சரவணமுத்துப்புலவர், குமாரசுவாமிப் புலவர், கிரிமலை கா. சபாபதிக் குருக்கள் முதலியோர். மயிலணி அக்காலத்தில் ஓர் சிறந்த கலைக்கூடமாக விளங்கியது.

'சைவ' அம்பலவாணபிள்ளை (1808–1886)

இத்தகைய சிறப்புக்கள் ஒருங்கு வாய்க்கப்பெற்ற மயிலணியிற் புலவருடைய தந்தையாராகிய அம்பல வாணபிள்ளை 1808-ம் ஆண்டு பிறந்தனர். அவர் சிறு வயதில் ஆங்கு வசித்த வேதாரணியம் சுவாமிநாத தேசிகரிடம் சமயதீக்கை, விசேடதீக்கை என்னும் இரண்டையும் பெற்றுச் சைவாசார சீலராய்ச் சிவபூசை, செபம், தியானம், தவம் ஆகியவற்றைப் பத்தி சிரத்தையோடு செய்தனர். அவருடைய விழுமிய சைவாசாரத்தையும், தூய நல்லொழுக்கத்தையும் கருத்திற்கொண்டு எல்லோரும் அவரைச் 'சைவம்' என்று அழைத்தனர். அவர் நித்தியமும் இறைவனை நினைந்து நெஞ்சு நெக்குருகிப் பக்தியோடு தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், பெரியபுராணம் ஆதியாம் நூல்களைப் பாராயணஞ் செய்த பின்னரே உணவை உட்கொள்ளும் வழக்குடையவர். அவர் தமது பெரிய தந்தையாராகிய கவிராயரிடந் தமிழிலக்கிய விலக்கணங்களை ஓரளவுக்குக் கற்றுத்தேறினர். அவர் பாட்டுப் பாடும் வன்மையைப் பெற்றிருந்தாரென்பது அவர் தம்மை இழித்துக்கூறிய மூகாமைக்காரர் ஒருவரைக் கண்டித்துக் கூறிய பின் வரும் வெண்பாவினால் நன்கறியப்படும்.

நேரிசை வெண்பா

அம்புவியி லுள்ளவர்கள் யாரும் அறியலாம்
அம்பர்பூ தர்பேரன் ஆகாதோ — வம்பர்சிலர்
பாணன் பரதேசி பல்சமய வாதியல்ல
ஏனை எடுத்துரைத்தா ரீங்கு.

நற்குண நற்செய்கைகளும், பரோபகார சிந்தையுமுடைய அவர் யாழ்ப்பாணமெங்கணும் வாழ்ந்த பெரும் பிரபுக்களுடன் நட்புறவு பூண்டிருந்தனர். அத்தகைய பிரபுக்களில் ஒருவர் கோப்பாய் வாசியாகிய நீதவான்

அம்பலவாணர் என்பார். அவர் நீதவானை அடிக்கடி சந்தித்து உரையாடுவது வழக்கம்.

அவர் மயிலணி முருகமூர்த்தி கோயிற்றரும பரிபாலன சபையில் அங்கத்துவம் வகித்துக் கோயிற் பரிபாலனத்தை நன்கு நடாத்தினர். கோயிலின் ஆடி மாசப் பூசைக்காகத் தமது இலகடி என்னுந் தோட்டத்தின் ஓர் பகுதியைத் தருமசாதனஞ் செய்துள்ளார். அவருடைய குணமான்புகளை வியந்து தென்கோவை வித்துவான் சபாபதிப்பிள்ளை கூறிய செய்யுள் பின்வருமாறு:

விருத்தம்

பலரயன நிலவவருள் வலநிதிகொள் குலனுறுச
பலவுழவர் மரபில் வந்தோன்
பண்பழகு மண்பழகு பலகலைகொள் புலநிலைகொள்
பாக்கியம் தேக்கு பாத்ரம்
பத்திகொள்சின னத்தம்பி மெய்த்தவம் விளைத்தெய்து
பயனைய பசிய பாலன்
பாவரைய ஞானமுறு பாவனையின் ஞானசிவ
பாதமலர் பத்தி பண்ணிப்
பற்றினுட னக்கமணி பற்பமிவை நித்தமணி
பரிசுவழு வாது பரவி
பகர்துதிய தீக்கைகொடு பகலிரவு நீக்கமறு
பரமனை வணங்கு பரிசான்
பாரினுயர் கற்பிலகு பாரியொடு மிற்கிழமை
பண்புற நடாத்து சீலன்
பன்னுமம் பலவாணன் என்னுமொரு நாமமுறு
பரவுபுகழ் விசய சிங்கம்.

சிதம்பரவம்மையார்

இத்தனை சிறப்புக்களும் வாய்ந்த அம்பலவாணபிள்ளைக்கு வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தவர் சிதம்பரவம்மையாராவர். அவர் கோப்பாய் வாசியும், பெருநிலக்

கிழாரும், பிரபுவும், அதிகாரபுருடருமாகிய குமாருடையார் என்பவரின் திருமகளாவர். அவர் சுன்னாகத்தில் மயிலணியில் வசித்த வீடு அம்பலவாணபிள்ளையின் வீட்டுக்கு வடபாலுள்ளது. அவருக்கும் அம்பலவாணபிள்ளைக்கும் 1840-ம் ஆண்டுக்குச் சமமான பிலவ வருடம் வைகாசி மாதம் ஐந்தாந் தேதி சகல சிறப்புக்களோடும் விவாகம் நடைபெற்றது. அவருக்குச் சீதனமாக வீடும் பெருந்தொகைக் காணிகளும், பணமும் கொடுக்கப்பட்டன. அக்கால வழக்குக்கேற்ப அடிமை, குடிமைச் சீதனமும் கொடுக்கப்பட்டது. * அவ்விருவரும் இல்லறம் என்னும் நல்லறத்தை வழுவாதோம்பிச் சிவகாமியம்மை, குமாரசுவாமி, காமாட்சியம்மை என்னும் மூன்று பிள்ளைகளைப் பெற்றனர். தாம் அனுதினமும் வணங்கி வந்த மயிலணி முருகமூர்த்தியின் அருளினால் புத்திரப் பேறு கிடைத்த காரணத்தால் தமது புத்திரனுக்குக் குமாரசுவாமி என்னும் நாமத்தைச் சூட்டினர்.

---

* கோப்பாய் வேளாளன் குமாருடையார் பெண் வள்ளியம்மை பேரில் யாழ்ப்பாணப் பட்டினத்துள்ள அரசாங்க அலுவலகத்தில், 4-4-1821லும் பின்னரும் மூன்று ரூபா முத்திரை பதித்துப் பதிவு செய்து அனுமதிக்கப்பெற்ற அடிமைச் சீட்டுக்களிற் காணப்படும் அடிமையாட்களுள் மூன்றிலொரு பகுதியினர் சிதம்பரவம்மையாருக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்டனர். அரசினர் 1844-ம் ஆண்டு அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்கியபின் இவ்வழக்கம் நீங்கியது.

2. கல்வி

தமிழ்க் கல்வி

குமாரசுவாமிக்கு ஐந்து வயதானவுடன் தகப்பனார் தமது குலகுருவாகிய வேதாரணியம் நமச்சிவாயதேசிகரைக் கொண்டு வித்தியாரம்பஞ் செய்வித்தனர். எழுத வாசிக்கத் தெரிந்த பின்னர் அவர் மல்லாகம் ஆங்கில பாடசாலையிற் சேர்க்கப்பட்டார். அவர் அங்கு நான்காம் வகுப்பிற் கற்றுவரும் காலத்தில் ஆங்கிலக் கல்வியினுல் விளையக்கூடிய அனுசாரங்களைக் கருத்திற் கொண்ட தகப்பனார் அவரை அப்பாடசாலையினின்றும் நிற்பாட்டிச், சுன்னகம் முருகேசபண்டிதரிடம் தமிழ்க் கல்வி பயிலுமாறு அனுப்பினர். அவர் முதலிற் பண்டிதரிடம் வாக்குண்டாம், கலைசைச் சிலேடை வெண்பா, மறைசையந்தாதி, நீதிநெறி விளக்கம், திருக்குறள், நிகண்டு, நன்னூல் முதலிய நூல்களையும், பின்னர் யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம், அகப்பொருள் விளக்கம், தொல்காப்பியம், கந்தபுராணம், இரகுவமிசம், தணிகைப் புராணம் முதலிய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்று வல்லவராயினர். அக்காலத்தில் நூல்கள் கிடைப்பது அருமையாயிருந்தபடியால் அவர் தமக்கு வேண்டிய நூல்களைத் தமது நண்பர்களிடம் இரவலாகப் பெற்றுப் படித்தனர். அவருடைய கல்வி விஷயத்தில் தகப்பனார் அதிகம் கவனஞ் செலுத்தாமலிருந்தபோதும், முற் பிறவியிற் செய்த புண்ணிய வசத்தினுலும், வித்துவ பரம்பரையிற் பிறந்த காரணத்தாலும், சிறந்த வித்துவான்களின் சூழலில் வாழ்ந்தமையாலும் அவருக்குக் கல்வி கற்பதில் அளவிறந்த ஊக்கமும் விருப்பமும் இயல்பாயிருந்தது. 'குலவித்தை கல்லாமற் பாகம்படும்' என்னும் முன்றுறையரையனர் வாக்குக்கிணங்க, அவருடைய முன்னோராகிய முத்துக்குமார கவிராயருடைய புலமை எவ்வாறு அவரிடத்து இல்லாமற்போகும். அவர் புத்தகமும் கையுமாயிருந்து நாளுக்குநாள் கற்பன கற்றுக் கேட்பன கேட்டுத் தமது புலமையைப் பலவாறு

பெருக்கிக் கொண்டனர். அவர் மாணவராயிருக்கின்ற காலத்திலேயே சொல்லும் பொருளும் சுவைபடப் பாடுவதிலும், திட்பநுட்பம் நிறைந்த கட்டுரை வரைவதிலும், அவைக்கஞ்சாது சொற்பொழிவாற்றுவதிலும் இணையற்ற திறமை பெற்றிருந்த காரணத்தால் அவரை எல்லோரும் 'புலவர்' என்று அழைப்பாராயினர். 'புலவர்' என்னும் பட்டம் அவருக்கு இயற்பெயராயிற்று என்று வித்துவசிரோன்மணி சி. கணேசையர் பின்வருஞ் செய்யுளில் எடுத்துக் கூறினர்:

பாரேறு சுன்னாக் குமார சுவாமிப் புலவனுக்கே
ஏரே இடுகுறி யாகிப் புலவரெனும் பெயர்தான்
பாரேறு மற்றைப் புலவருக்குக் காரணப் பண்புறலாற்
சீரே இடுகுறி காரண மாகித் திகழ்ந்ததுவே.

வடமொழிக் கல்வி

தமிழிற் கற்கவேண்டிய நூல்களெல்லாவற்றையும் முன்முறையாகக் கற்றுத் தெளிந்தபின் தமது இருபத்தாறும் வயசில் அவ்வூர் வாசியும், நெருங்கிய சுற்றத்தவரும், கற்பிட்டி நியாயஸ்தலத்தில் துபிபாஷா வாதியும், பன்மொழிப் புலவருமாய் விளங்கிய நாகநாத பண்டிதரிடம் வடமொழி கற்கத் தொடங்கினர். முதலில் அவர் நீதிசாரம், இராமோதந்தம், சாணக்கிய சதகம் முதலிய நூல்களையும் பின்னர் முக்தபோதம், இரகுவமிசம், மாகம், சாகுந்தலம் முதலிய நூல்களையும் அவரிடம் கற்று வல்லவராயினர். பண்டிதர் யாழ்ப்பாணத்தை விட்டு வேலூர்மாற்றம் அடைந்து கற்பிட்டிக்குப் போனபின்னர் புலவருக்காகப் பல காவியங்களையும் வியாகரணங்களையும் தமிழில் மொழிபெயர்த்து அனுப்பினர். அவர் மொழிபெயர்த்து அனுப்பிய நூல்களுள் ஒன்றாகிய இதோபதேசம் என்னும் நூல் புலவரால் 1886-ம் ஆண்டு அச்சிடப்பட்டது. வடமொழியைச் செவ்வனே கற்றதன் பலனாகப் புலவர் பல வடமொழி நூல்களை மொழி பெயர்த்துப் பல தமிழ் நூல்களை இயற்றியுள்ளார்.

சமயக் கல்வி

சமய நூல்களைக் கற்க விரும்பிய புலவர் தமது குல குருவாகிய நமச்சிவாய தேசிகரிடம் சென்று சித்தாந்த சாஸ்திரங்களை முறையாகக் கற்றனர். தேசிகரோடு நெருங்கிய தொடர்பு பூண்டதன் காரணமாகத் தென் னாட்டுச் சிவத்தலங்களின் மகிமைகளையும், திருவாவடு துறை, சூரியனார் கோயில் முதலிய இடங்களிலுள்ள மடாதிபதிகளின் பெருமைகளையும், சேதுபதியரசர், பாலவனத்தம் ஜமீன்தார் முதலியோர்களது மேன்மை களையும் அறியும் வாய்ப்புப் புலவருக்குக் கிடைத்தது. இத்தொடர்பு சுன்னாகத்திலுள்ள சைவக்குருக்கள் மடம் 1893-இல் தீக்கிரையானதோடு முடிவுற்றது. பின்னர் புலவர் தமக்குள்ள சமயசாஸ்திரச் சந்தேகங்களை இணு விலி நடராசையரிடம் கேட்டுத் தெளிந்தனர்.

நூல்களைக் கற்றமுறை

புலவர் பல நூல்களைக் கற்கவேண்டும் என்னும் விருப்புடையரல்லர். அவர் தாம் கற்ற நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்துப் பாடம் போற்றுவதில் அதிக கவனஞ் செலுத்தினர். அவர் தாம் படிக்கும் இலக்கியங்களிலுள்ள செய்யுட்களைப் பலமுறை நோக்கி அவற்றில் வரும் அருஞ்சொற்களின் வடிவத்தையும் அவைதரும் பொருள்களையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து பார்க்கும் வழக்குடையர். தமக்கு விளங்காதனவற்றைத் தெரிந்தவர்பாற் சென்று கேட்டறிவர். அவர் கல்வி கற்கின்ற காலத்திலேயே அவர் பல மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்தனர் இது விஷயமாக நாக நாதபண்டிதர் 4-12-1883இல் எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறியுள்ளார். ''கைக்கூலி கொடுத்தாகு தல் படிப்பியும். இப்போது படிக்கிற பிள்ளைகளைக் கைவிடவேண்டாம். பயப்படாமல் நன்முகப் பாடஞ் சொல்லிக் கொடும்'' புலவர் அம்முறை கடைப்பிடித்துத் தமது கல்வியறிவை மேலும் மேலும் வளர்த்தனர்.

முக்குரவர் வாழ்த்து

புலவர் தமது குரவர்களாகிய நமச்சிவாயதேசிகர், முருகேச பண்டிதர், நாகநாத பண்டிதர் என்னும் மூவரிடத்தும் மிக்க நன்றியுள்ளவராய் இருந்தனர். இவ்வுண்மையை அவரியற்றிய மேகதூதக் காரிகைக் குருவணக்கச் செய்யுள் நன்கு புலப்படுத்துகின்றது. அது வருமாறு :

குரு வணக்கம்

தூய மயிலணிச் சுப்ர மணியனைத் தூநமச்சி
வாய குருவை முருகேச பண்டித மாமணியைப்
பாய வடகலை தேர்நாக நாத சபாமணியைக்
காய மொழிபனஞ் சேர்த்துதும் நங்கண் மணிகளென்றே.

ஆறுமுகநாவலர் தொடர்பு

புலவருடைய இளமைக் காலத்தில் நாவலர் இந்தியாவிற் பல வருடங்கள் தங்கியிருந்தமையாற் புலவருக்கு அவரை நேரிற் காணும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. நாவலர் 1869-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்களிக்கப்பட்ட குதூகலமான வரவேற்பு விழாவில் புலவர் நாவலரை நேரிற் காணும் வாய்ப்புக் கிடைத்தது. நாவலருடைய சைவவேடப் பொலிவழகும், நாவன்மையும், கல்வியறிவு மாட்சியும், தியாகசிந்தையும், அஞ்சா நெஞ்சமும் புலவருடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. புலவருக்கு அப்போது வயது பதினைந்து. அவர் நாவலர் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் செய்த சைவப்பிரசங்கங்கள் எல்லாவற்றிற்கும் தவறுது சென்று கேட்டு மகிழ்ந்தனர். அவரோடு பழகவேண்டும் என்னும் ஆசை புலவருடைய உள்ளத்திற் குடிகொண்டது. இவ்வாசையைத் தீர்ப்பதற்கு ஊரெழு சரவணமுத்துப் புலவர் உதவி செய்தனர். ஒருநாள் அவர் புலவரை நாவலர் வீட்டுக்குக் கூட்டிச் சென்று புலவரை அவருக்கு அறிமுகப்படுத்தினர். புலவர்

முத்துக்குமாரகவிராயர் பரம்பரையினர் என்று அறிந்ததும் நாவலர் அவரை மிக அன்போடு உபசரித்தனர். புலவர் கல்வி கற்பதிற் கொண்டுள்ள ஊக்கத்தை அறிந்த நாவலர் அவரைத் தம்மிடம் இடையிடையே வந்து இலக்கணவிலக்கியங்களிலுள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளியுமாறு கூறினர். நாவலருடைய அன்பையும், ஆதரவையும் பெற்ற புலவர் அவர் இறக்கும் வரையும் அவரிடஞ் சென்று தமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தனர். புலவர் தாமியற்றிய கவிதைகளையும், கட்டுரைகளையும், கண்டனங்களையும் நாவலருக்குக் காட்டியபோது அவர் அவற்றின் சொற்சிறப்பையும், பொருளாழத்தையும், உரைநடைச் சிறப்பையும் மிகவும் மெச்சினர். புலவர் 1878-ம் ஆண்டு கந்தபுராண விருத்தியுரைகாரரைக் கண்டித்து இலங்கை நேசன் பத்திரிகையில் வெளியிட்ட கண்டனமொன்றிற்குச் சார்பாக ஓர் கடிதத்தை நாவலரும் எழுதி அப்பத்திரிகையில் வெளியிட்டனர். இக் கண்டனத்தைப் பற்றிய முழுவிபரமும் 'கண்டனங்கள்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளது. ஆங்குக் காண்க.

நாவலருக்கும் புலவருக்குமிடையிலுள்ள நெருங்கிய தொடர்பினை நாவலர் இறந்தபோது புலவர் அவர்மீது பாடிய பாக்கள் நன்கு புலப்படுத்துவன. அவற்றுட் சில ஈண்டுத் தரப்படுகின்றன.

பின்முடுகு வெண்பா

என்கவிதை என்கடிதம் யார்க்கும் இனிதென்று
நன்குறவே பாராட்டும் நாவலனார் — எங்கேயோ
கங்கைமுடிச் சங்கரன்பொற் கஞ்சமலர்ச் செஞ்சரண்விட் டு)
இங்குவர வுங்கருத்தோ ஈன்.

வினவுத்தர வெண்பா

ஐந்தின்பின் ஆவதென்ன? ஆனனத்தின் பேரென்ன?
முந்து நடுவின் மொழியென்ன? — இந்திரற்கு
மாறுகொண்டோன் பேரென்ன? வாக்கின் மிகவல்ல
ஆறுமுக நாவலனே யாம்.

கவித்துறை

கல்விக் களஞ்சியம் கற்றவர்க் கேறு கருணைவள்ளல்
சொல்வித்து வப்பிர சாரகன் பூதி துலங்குமெய்யன்
நல்லைப் பதியினன் ஆறு முகப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியினன் நடராசன் சேவடி சேர்ந்தனனே.

வேறு புலவர்கள் தொடர்பு

புலவருடைய கல்வி விஷயத்தில் ஊக்கமளித்த நாவலர் 1879-ம் ஆண்டு இறந்தனர். அவருடைய தமிழ்க் குரவராகிய முருகேச பண்டிதர் 1878இல் இந்தியாவுக்குப் போயினர். புலவர் தமக்குள்ள இலக்கிய விலக்கணச் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிய வேறு புலவர்களை நாடினர். புலவர் நாடியவருள் ஒருவர் அளவெட்டி வாசியாகிய கனகசபைப் புலவர். கனகசபைப் புலவர் இலக்கணத்தில் இணையிலாத் திறமை படைத்தவர். கவிகள் இயற்றுவதிலும் மிக வல்லவர். அவரிடஞ் சென்று தமக்குள்ள இலக்கணச் சந்தேகங்களை வினவியறிந்தனர். சைவசித்தாந்த சாஸ்திரங்களில் தமக்குள்ள சந்தேகங்களை இணுவில் நடராசையரிடம் வினவித் தெளிந்தனர். கம்பராமாயணத்திலுள்ள சந்தேகங்களை நீக்குவதற்குக் கவித்தலம் துரைச்சாமி மூப்பன் இயற்றிய ''கம்பராமாயணக் கருப்பொருளுரை'' என்னும் நூல் அவருக்கு மிகவும் உதவிபுரிந்தது. இந்நூலைப் பெறுதற்குப் புலவர் அவர் பேரில் ஒரு சீட்டுக்கவி ஒன்று எழுதி அவருக்கு அனுப்பினர். அவர் சீட்டுக் கவியைப் பெற்று மிக மகிழ்ச்சியுற்று அந்நூலையும் மற்றுந் தாம் இயற்றிய வேறு நூல்களையும் புலவருக்கு அனுப்பினர். அச்சீட்டுக் கவி பின்வருமாறு:

சீட்டுக்கவி

செம்பதும மலரோடை தங்குயாழ்ப் பாணமாந்
தேசத்தோர் பாக மாகி
திகழ்கின்ற சுன்னாக நகரமயி லணியில்
தென்கலை பயின்று வாழ்வோன்
பம்புகவி பாடுறுங் குமாரசுவா மிப்பெயர்கொள்
பண்டிதன் வரையு மோலை
பாவலர்கள் நாவலர்கள் காவலர்கள் கொண்டாடு
பாரதிபன் பிரபு திலகன்
தும்பிபொது வேயழைத் திடவருள் புரிந்திடுந்
தோன்றலுக் கன்பு மிக்கோன்
துரைச்சாமி மூப்பனென் றுரைபெறு நிருபர்கோன்
தூயமகிழ் வோடு காண்க
கம்பரா மாயணக் கருட்பொருட் பிரதியைக்
காண்பதோர் வாஞ்சை யுள்ளோன்
காவலா ஓருபிரதி ஆவலோ டுதவியைக்
காலமும் வாழி நீயே.

புலவருடன் கூடப் படித்தவர்கள்

முருகேச பண்டிதரிடம் புலவரோடு கூடப்படித்தவருள் முக்கியமும் வாய்ந்தவர்கள் சரவணமுத்துப் புலவர், முத்துத்தம்பிப்பிள்ளை, வைத்தியநாதபிள்ளை என்போராவர்;

சு. சரவணமுத்துப்புலவர் (1848 — 1916)

ஊரெழு வாசியாகிய சு. சரவணமுத்துப்புலவர் தமது பிற்காலத்தில் நல்லூரை இருப்பிடமாகக்கொண்டனர். அவர் முருகேச பண்டிதரிடம் இலக்கிய விலக்கணங்களையும், சித்தாந்த சாத்திரங்களையும் கிரமமாகக் கற்றனர். அவர் கட்டுரை வரைவதிலும், கவிகள் இயற்றுவதிலும், பிரசங்கங்கள் செய்வதிலும் வல்லுனர்.

அவரும் புலவரும் பெரும்பாலும் சேர்ந்து பிரசங்கங்களுக்குப் போவது வழக்கம். இருவரும் உடுப்பிட்டி நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளைக்கு உதவியாயிருந்து அவருடைய தமிழகராதி வேலையில் ஈடுபட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாணச் சைவசிந்தாந்த சமாசம், வைதிகசைவ பரிபாலன சபை ஆதியாம் சபைகளில் அங்கத்துவம் வகித்து சமயப் பணியும் தமிழ்ப் பணியும் புரிந்தனர். சரவணமுத்துப் புலவர் 1880இல் உதயபானு என்னும் பத்திரிகையைத் தொடங்கியபோது புலவர் அப்பத்திரிகைக்குப் பல விஷயங்களை எழுதி உபகரித்தனர்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (1858 — 1917)

மானிப்பாய் வாசியாகிய ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை முருகேச பண்டிதரிடம் கற்ற காலந்தொடக்கம் புலவருடைய நெருங்கிய நண்பராய் விளங்கினர். புலவர் நாவலர் பாடசாலையில் கற்பிக்கும்போது தினமும் அவரைச் சந்தித்து உரையாடுவார். அவர் புலவரியற்றிய விநாயகபுராண விளக்கம், சூடாமணி நிகண்டுச் சொற்பொருள் விளக்கம், ஏகவிருத்த பாரதம் முதலிய நூல்களைத் தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்துப், புலவருக்கு மிக்க உதவி புரிந்தனர். அவரும் புலவரும் ஒன்றுகூடி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தில் தமிழ்ப்பணி ஆற்றினர்.

மு. வைத்தியநாதபிள்ளை (1850 — 1926)

சுன்னாகம் வாசியும் பெருநிலக் கிழாருமாகிய சி. வைத்தியநாதபிள்ளை முருகேசபண்டிதரிடம் கல்வி கற்ற காலந்தொடங்கிப் புலவருடைய நெருங்கிய நண்பராய் விளங்கினர். அவர் அல்லும் பகலும் புலவரோடு கூடவிருந்து இலக்கண விலக்கிய சல்லாபம் செய்து கொண்டிருப்பார். புராணப் படிப்புக்குப் புலவர் போகும்போது தமது நண்பரையும் கூட்டிச் செல்வார். புலவர் இறந்தபோது அவருடைய முயற்சியினால் புலவருடைய சரித்திரம் சி. கணேசையரால் எழுதப்பட்டது.

சி. வை. தாமோதரம்பிள்ளை, B. A., B. L.

3. ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை

வித்தியாசாலைத்தாபனம்

சைவத் தொண்டும் செந்தமிழ்த் தொண்டும் செவ்வனே ஆற்றிப் பெரும்புகழ் படைத்த ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ்வள்ளலாய் விளங்கிய ஸ்ரீவ்சாகிப் சி. வை. தாமோதரம்பிள்ளை தமது ஏழாலை என்னும் ஊரில் 1876-ம் ஆண்டுக்குச் சமமான தாது வருடம் ஆவணி மாதம் பத்தாந் தேதி ஓர் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தனர். அப்பாடசாலைக்குச் சுன்னாகம் முருகேச பண்டிதரைத் தலைமை ஆசிரியராகவும் புலவரை உதவியாசிரியராகவும் நியமித்தனர். பாடசாலை தொடங்கிய காலம் முதலியன முருகேச பண்டிதர் கூறிய பின்வரும் வெண்பாவினுல் அறியலாம்.

வெண்பா

தாது வருடம் தனியா வணிபத்தாந்
தேதி புதவாரம் தீபநாள் — ஓதுபுகழ்
தாமோ தரேந்திரனர் தர்மவித்தி யாசாலை
நாமாரம் பஞ்செய்த நாள்.

தலைமையாசிரியர் பதவி

முருகேச பண்டிதர் முதல் வருட இறுதியில் வித்தியாசாலையை விட்டு நீங்கினதும், புலவர் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டனர். சுன்னாக வாஹியாகிய சுந்தரம்பிள்ளை என்பவர் உதவியாசிரியராக நியமிக்கப்பட்டனர். சுந்தரம்பிள்ளை சிறிது காலத்தின் பின் வித்தியாசாலையை விட்டு நீங்கியபோது புலவர் எல்லாப் பொறுப்பையும் தாமே ஏற்று நடாத்தினர்.

முதல் வருடத்தில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்து நூறு பிள்ளைகள் வித்தியாசாலையிற் சேர்ந்து

கல்வி கற்றனர். அடுத்த வருடம் யாழ்ப்பாணமெங்கணும் பேதிநோய் பரவினமையாலும், முன்னொருபோதுமில்லாத கொடிய பஞ்சம் நிலவியமையாலும், வித்தியாசாலைபிற் படித்த மாணவர் தொகை அறுபதாகக் குறைந்தது. புலவர் உயர்வகுப்பு மாணவர்களுக்கு இராமாயணம், பாரதம், கந்தபுராணம், இரகுவமிசம், திருக்குறள், கம்பரந்தாதி, முல்லையந்தாதி, நன்னூல், தொல்காப்பியம் முதலிய நூல்களைக் கற்பித்தனர்.

வித்தியாசாலைப் பரீக்ஷைகளும் அறிக்கைகளும்

ஒவ்வொரு வருட இறுதியிலும் வித்தியாசாலை மாணவர்கள் பிரபல வித்துவான்களால் பரீக்ஷிக்கப்பட்டனர். பரீக்ஷகர்கள் தாம் நடாத்திய பரீக்ஷைகளின் முடிவுகளை அறிக்கைகள் மூலம் முகாமைக்காரருக்கு அனுப்பியதோடமையாது இலங்கைநேசன் முதலிய பத்திரிகைகளிலும் வெளிப்பிட்டனர். அறிக்கைகள் எல்லாம் புலவருடைய கற்பிக்குந் திறமையை எடுத்துக் கூறுகின்றன. பரீக்ஷைகளை ஆறுமுகநாவலர், முருகேச பண்டிதர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நல்லூர் வித்துவசிரோன்மணி பொன்னம்பலபிள்ளை முதலியோர் நடாத்தினர். அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளுட் சில கீழே தரப்படுகின்றன.

i

முருகேசபண்டிதர் 1877-ம் ஆண்டுக்குச் சமமான ஈசுர வருடம் புரட்டாதி மாதம் 24-ம் தேதி நடாத்திய பரீக்ஷையின் அறிக்கை வருமாறு :

ஏழாலைச்
சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரீக்ஷை

"இது சென்னபட்டினத்தில் பீ. ஏ., பீ. எல். பட்டம் பெற்று ஜென்னறல் ஐக்கௌண்டண்ட் என்னும் உத்தியோகமுடையவராயிருக்கும் ம. ரா. ரா. ஸ்ரீ. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் தாபிக்கப்பட்டு இப்போது ஒரு

வருட காலமாக நடைபெற்று வருகிறது. இவ்வித்தியாசாலையில் முதற் பரீக்ஷை சென்ற வருடத்து மார்கழிக் கடையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களாலும், இரண்டாம் பரீக்ஷை இந்த மாதம் 2-ம் தேதி எம்மாலும் நடத்தப்பட்டன. முதற் பரீக்ஷையிற் காணப்பட்ட பிள்ளைகளின் தொகை நூறு. நோயின் கலக்கத்தாலும் பஞ்சத்தின் வருத்தத்தினாலும் பிள்ளைகள் முந்திய தொகையிற் சுருங்கியிருந்தாராயினும், இரண்டாம் பரீக்ஷையிலும் அறுபதிற் குறையாமல் இருந்தார்கள். இவ்வளவு பிள்ளைகளுக்கும் உபாத்தியாயர் ஒருவரேயாகவும் இலக்கணம் முதலிய பாடங்களில் வினவிய குறுக்குக் கேள்விகள் எல்லாவற்றிற்கும் பிள்ளைகள் தவறுமல் விடை சொன்னார்கள். தமது ஊரிலே பிரபுவாகிய பிள்ளையவர்கள் இவ்வித்தியாசாலையைத் தாபித்து நடத்தி வருவதுபோல் அந்தந்த ஊரிலேயிருக்கும் ஒவ்வொரு சைவப் பிரபுக்களும் செய்து வருவார்களாயின், சைவ சமயம் தாழ்ச்சியடைதற்கு இடமுண்டாகுமா?

பிரபுக்களே!

இவ்வாறு நீங்களும் செய்தாலென்ன?

வெண்பா

தாமோ தரேந்திரனுர் செய்யுந் தருமமென
ஏனீவிர் செய்யா திருக்கின்றீர் — ஓமகிமை
பெற்றபெரி யாரே பெரிதோ நுமதுபொருள்
மற்றவருக் கீந்து வரல்.

(இலங்கைநேசன் 24-10-1887)

ii

கொக்குவில் ச. சபாரத்தினமுதலியார் 22-2-1882-ம் தேதி நடாத்திய பரீக்ஷையின் அறிக்கை வருமாறு:

"உபாத்தியாயரின் இடையரு முயற்சிக்குப் பிள்ளைகளே சாட்சிகளாக இருக்கின்றனர். கல்வித் திறமையுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் பிள்ளையவர்கள் பல

புத்தகங்களைப் பரிசாகக் கொடுத்தார்கள். இதனாலே கல்வியைத் தாம் எவ்வளவாக மதிக்கிறார்கள் என்பதனைச் செய்கையாற் காட்டுகிறார். இவரைப் போல ஏனைய உத்தியோகத்தர்களும் செய்வார்களாயின் தமிழ்க் கல்வி எவ்வளவாக விருத்தியடையும்."

iii

நல்லூர் வித்துவசிரோன்மணி ச. பொன்னம்பலபிள்ளை 1891-ம் ஆண்டுக்குச் சமமான கர வருடம் புரட்டாதி மாதம் பதினைந்தாந் தேதி நடாத்திய பரீக்ஷையின் அறிக்கை பின்வருமாறு :

"ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களால் ஏழாலை என்னுமூரிலே தாபிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கற்கும் மாணவர்கள் இம்மாதம் பதினைந்தாம் தேதி எம்மாற் பரீக்ஷிக்கப்பட்டார்கள். மேல் வகுப்பு மாணவர்கள் படிக்கும் பாடங்களாவன : தொல்காப்பியம், நன்னூல், திருவள்ளுவர் குறள், முல்லையந்தாதி, கம்பரந்தாதி, தணிகைப் புராணம், இரகுவமிசம் என்னுமிவைகளாம். இவைகளுள் எவ்வெப்பகுதிகளிலும் வினவிய விஷயங்களுக்கெல்லாம் மாணாக்கர்கள் தக்க விடையளித்தார்கள். இத்துணைச் சாமர்த்தியராக அதிபிரயாசத்தோடு கற்பித்த உபாத்தியாயர் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவருடைய வித்தகம் எவராலும் வியக்கற்பாலது."

மாணவர்கள்

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் புலவரிடம் கற்ற மாணவருள் முக்கியமானவர்கள் வித்துவான் சிவானந்தையர் (1873 — 1916), தெல்லிப்பழை இ. பாலசுப்பிரமணிய ஐயர், தெல்லிப்பழை வ. சுப்பிரமணியபிள்ளை, இளவாலை க. சங்கரப்பிள்ளை, தெல்லிப்பழை நா. மயில்வாகனம்பிள்ளை, மாவிட்டபுரம் ச. விசுவநாத முதலியார், தையிட்டி பொன்னையர், சுன்னாகம் மாணிக்கத்தியாகராச பண்டிதர், ஏழாலை வி. தம்பையாபிள்ளை, கொக்குவில் இளையதம்பிப்பிள்ளை முதலியோர்.

இவர்களுள் ஆழ்ந்த கல்வியறிவும், கவிபுனையுமாற்றலும், நூலுரைகள் இயற்றும் வன்மையும் பெரிதும் பொருந்தி விளங்கியவர் சிவானந்தையராவர். அவர் தருக்க சங்கிரக மொழிபெயர்ப்பு, புலியூர்ப் புராணம், புலியூரந்தாதி, சனிதுதி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். மாணிக்கத்தியாகராச பண்டிதர் கதாப்பிரசங்கஞ் செய்வதில் மிகத் திறமை படைத்து விளங்கினர். தம்பையாபிள்ளை புராண படனஞ் செய்வதில் வல்லுனராய் விளங்கினர்.

சி. வை. தாமோதரம்பிள்ளை கடிதங்கள்

பிள்ளையவர்கள் தமது ஏழாலைச் சைவப் பிரகாச வித்தியாசாலை புலவருடைய கற்பிக்கும் திறமையாலும், விடாமுயற்சியாலும் நாளுக்கு நாள் வளர்ந்து வருவதை நேரிலும், பரிஷகர்களது அறிக்கைகளாலும் அறிந்து மிக்க மகிழ்ச்சி எய்திப் புலவரிடத்து நம்பிக்கையும், நன்மதிப்பும் உடையவராய் அவருக்குப் பாடசாலை சம்பந்தமான பல கடிதங்கள் வரைந்தனர். அக்கடிதங்களுட் சில செய்யுள் வடிவத்திலும் சில வசனநடையிலும் அமைந்துள்ளன. அவற்றுள் வகைக்கொன்று கீழே தருதும்.

I

சென்னை,

பிரமாதீச ஆடி மாசி மீ 22 உ (1880)

நின்னிரு பங்கண்டு நென்னலென் றன்மன நெக்குருகித் தன்னிற் கரைந்தது தானென்சொல் கேனேத்துந் தாங்குமொரு வன்னெஞ் சுளேனெனு மாற்றம்பொய்யாது மல்வைநன்நாட்டின்ன மிவருனைப் போற்குமார சாமி யெனக்கன்பரே.

இங்ஙனம்,
அன்பன்,
சி. வை. தாமோதரம்பிள்ளை.

II

தண்டையார்ப்பேட்டை,
சென்னபட்டினம்,

சித்திரபானு ஞூ சித்திரை மீ 10 வ (1883)

எனது பிரிய சிநேகிதராகிய சிரஞ்ஜீவி ஸ்ரீ குமாரசுவாமிப்பிள்ளை அறியவேண்டியது.

தங்கள் அன்பான கடிதமும், சிவப்பிரகாசபண்டிதர் திருமுகமும் பெற்றுச் சகலமும் அறியலானேன். யான் இப்போது சுப்ரீம் கோட்டு வக்கீலாகும்படி சென்ற டிசெம்பர் மாதம் எழுதிக்கொடுத்திருக்கிறேன். வருகிற டிசெம்பர் வரையும் ஹைக்கோட்டிற்குப் போய்க்கொண்டிருத்தல் அவசியமானபடியால் மே மாசமும் சூன் மாசமும் ஹைக்கோட் முடிகிற காலத்தில் யாழ்ப்பாணம் வரக் கருதியிருந்தேன். எனது பாரியாரின் தேக சௌக்கியத்தை முன்னிட்டு அந்த மாதம் நெல்லூருக்குப் போகவேண்டியிருத்தலால் மற்ற டிசெம்பர் மாதந்தான் யாழ்ப்பாணம் வருவேன். திங்கட்கிழமை நெல்லூரிலிருந்து பட்டணம் வந்து சேர்ந்தேன். இது செய்தியைப் பண்டிதருக்கு அறிவிக்கவும்.

இத்துடன் ரூபா அறுபது அனுப்புகிறேன். ஐம்பது ரூபா தை, மாசி, பங்குனி, சித்திரை நான்கு மாதங்களுக்கு வித்தியாசாலை நிவேதனமாக எடுத்துக்கொள்ளவும். வைகாசி மாதம் முதல், மாதம் மாதம ஒரு மாதம் பத்து ரூபாவும், மற்ற மாதம் பதினைந்து ரூபாவாகவும் அனுப்பிக்கொண்டு வருவேன். சென்ற மார்கழி வரையும் தங்களுக்கு வரவேண்டிய தொகையின் விபரங் குறித்து ஒரு கடிதம் அனுப்புக. அப்பணத்தையும் அவ்வப்போது சாவகாசப்படி சேர்ப்பித்துவிடுகிறேன்.

இங்ஙனம்,
அன்பன்,
சி. வை. தாமோதரம்பிள்ளை.

இன்னொரு கடிதத்தில் பிள்ளையவர்கள் தம்மிலும் இருபத்திரண்டு வயசு இளையவரான புலவரைச் ''செல்வச் சிரஞ்சீவி தம்பி குமாரசுவாமி'' என்று விளித்து வரைந்துள்ளார். கடிதங்கள் எல்லாம் பிள்ளையவர்கள் புலவர்பால் வைத்த அன்பின் மிகுதியை விளக்குவன.

வித்தியாசாலை மூடப்படல் (1898)

பிள்ளையவர்கள் புதுக்கோட்டைச் சமஸ்தானத்தில் வகித்த நீதிபதி வேலையினின்று 1890-ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் அவருடைய உடல் வளமும் பொருள் வளமும் குறையத் தொடங்கியது. அவரது வாழ்க்கையிற் பலவித சங்கடங்களும் ஏற்பட்டன. இக்காரணங்களால் வித்தியாசாலையைச் சரிவர நடாத்த முடியவில்லை. அவர் யாழ்ப்பாணம் 1892-ம் ஆண்டு வந்தபோது வித்தியாசாலைக்கு ஒரு முதல்திரட்டி ஒரு சபையிடம் ஒப்படைக்க முயன்றனர். ஊரவர்கள் அத்திட்டத்தைப் பற்றி ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. பின்னரும் 1896-ம் ஆண்டு ஆனி மாதம் யாழ்ப்பாணம் வந்து கீரிமலையில் பிளவை நோயால் வருந்திக்கொண்டிருந்த காலத்திலும் வித்தியாசாலை பற்றித் தாம் வகுத்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முயன்றனர். அம்முயற்சியும் கைகூடவில்லை. பின்னர் அவர் சென்னை சென்று வாழ்கின்ற காலத்தில் தமது உடல் நலம் நாளுக்கு நாள் குன்றி வருவதை உத்தேசித்து வித்தியாசாலையை இனி நடத்துவது இயலாதென்று கருதி 1898-ம் ஆண்டு அதை மூடினர். இருபத்திரண்டு ஆண்டுகளாகத் தமிழுக்கும் சைவத்திற்கும் இன்றியமையாத தொண்டினை ஆற்றிய அவ்வித்தியாசாலை மூடப்பெற்றது யாழ்ப்பாணஞ் செய்த தவக்குறைவேயாகும். பிள்ளையவர்களும் இரண்டு வருடங்களின் பின் (1900) காலமாயினர்.

4. முற்காலக் குடும்பவரலாறு

சகோதரிகள் விவாகம்

புலவரும் இரு சகோதரிகளும் சிருஞ் சிறப்புடனும் வளர்ந்து விவாகத்துக்கேற்ற பருவத்தை அடைந்தனர். வயோதிப நிலையடைந்த அவர்களது பெற்றோரும் அவர்களுக்கு விவாக ஒழுங்குகளைச் செய்ய முற்பட்டனர். புலவருடைய மூத்த சகோதரியாகிய சிவகாமியம்மையாருக்கும் அவ்வூர் ஆறுமுகம்பிள்ளை மகன் அம்பலவாணபிள்ளைக்கும் 1872-ம் ஆண்டு விவாகஞ் செய்யப்பட்டது. புலவருடைய இளைய சகோதரியாகிய காமாட்சியம்மையாருக்கும் அவ்வூர் வயித்தியர் மயில்வாகனம்பிள்ளை குமாரர் சீனிவாசகம்பிள்ளைக்கும் 1884-ம் ஆண்டு விவாகம் நடைபெற்றது. சிவகாமியம்மையாருக்குப் பிள்ளைகள் இல்லை. காமாட்சியம்மையாருக்கு இரு குழந்தைகள் பிறந்து இறந்து போயின.

வடமொழிக் குரவர், தாய் தந்தையர் இறப்பு

புலவருடைய வாழ்க்கையில் மிகத் துக்ககரமான சம்பவங்கள் இக்காலத்தில் நிகழ்ந்தன அவருடைய வடமொழிக் குரவரும், சுற்றத்தவருமாகிய நாகநாத பண்டிதர் 1884-ம் ஆண்டு இறந்தனர். இத்துயரத்தினின்று நீங்குவதற்கு முன், தாயார் 1885-ம் ஆண்டிலும் அவர் தகப்பனார் 1886-ம் ஆண்டிலும் காலமாயினர். ஒன்றன் பின் ஒன்றுகச் சம்பவித்த மரணங்கள் காரணமாகப் புலவர் துக்கக் கடலுள் மூழ்கினர்.

மூத்தசகோதரி இறப்பும், புலவர் விவாகமும்

புலவருக்கு மேற்கூறிய மயில்வாகனம்பிள்ளையின் மகள் சின்னச்சியம்மையாரை விவாகஞ் செய்துவைப்பதாக 1884-ம் ஆண்டு நிச்சயஞ் செய்யப்பெற்றது.

ஆனல், தாய் தந்தையர் மறைவினலும் வேறு காரணங் களாலும் எதிர்பார்த்தவாறு விரைவில் விவாகம் நடை பெறுது தடைப்பட்டது. புலவரது வடமொழிக்குரவ ராகிய நாகநாத பண்டிதர் புலவருக்கு நல்ல சீதனம் பெற்றபின்னரே விவாகம் நடைபெறவேண்டும் என்று வற்புறுத்தி இது விஷயமாக 1883-ம் ஆண்டில் புல வருக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறி னர். ''நீர் நல்ல ஆஸ்தியுள்ள பெண்ணை எந்த ஊரிலும் ஆண்பிள்ளைக்குச் சரியேபார்த்து எடுக்க வேண்டும். ஆஸ்தியில்லாமல் சடங்கு செய்தால் விருதுக்கு வேட்டை யாடுவதாக முடியும்.'' புலவருடைய சகோதரிகளும் இதே எண்ணமுள்ளவர்களாய் இருந்தனர். எல்லோரும் புலவருக்குத் தக்க சீதனம் பெற்று விவாகஞ்செய்ய முயன் றனர். அந்த முயற்சிகள் ஒன்றும் கைகூடவில்லை. பெண் வீட்டாருக்கும் புலவர் வீட்டாருக்கும் இதுவிஷயமாக ஏற்பட்ட முரண்பாட்டினல் புலவருடைய விவாகம் எட்டு வருடம் தடைப்பட்டது. புலவருக்கு வயது முப்பத் தெட்டாயிற்று. புலவருடைய விவாகத்தைக் கூடிய விரை வில் செய்யவேண்டும் என்ற எண்ணம் எல்லாருடைய மனதிலும் உதித்தது. சீதனத்தினல் ஏற்பட்ட தடையை யும் ஒருவராலும் நீக்கிக்கொள்ள முடியவில்லை. இவ் வாறு சங்கடப்பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தில் புல வருடைய மூத்த சகோதரியாகிய சிவகாமியம்மையார் தீடீரென நீர்ப்படுவன் கட்டுக் காரணமாக 8-9-1892 இல் காலமாயினர். தாயினுஞ் சாலத் தம்மைப் போற்றி வளர்த்த தமக்கையாரிறந்தது புலவருக்கு ஆற்றெணாத் துயரத்தை உண்டுபண்ணியது. துயர மிகுதியினல் புல வருடைய மனேநிலையும் மாற்றமடைந்தது. எவ்விதத்தி லும் புலவருக்கு விவாகத்தைச் செய்துவைக்கவேண்டும் என்று கருதிய சுற்றத்தவர்கள் அவருக்கு முன்னரே நிச்சயிக்கப்பட்டவாறு சின்னச்சியம்மையாரை 1892-ம் ஆண்டுக்குச் சமமான நந்தன வருடம் கார்த்திகை மாதம் விவாகஞ் செய்து வைத்தனர்.

மக்கட்பேறு

புலவரும் சின்னச்சியம்மையாரும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது ஓம்பி விசாலாட்சியம்மை (1893) என்னும் புத்திரியையும், அம்பலவாணபிள்ளை (1895), முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை (1900) என்னும் புத்திரரையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் இன்புற்று வாழ்ந்தனர்.

முதலாவது இந்திய யாத்திரை

தந்தை தாயர் இறந்ததனால் ஏற்பட்ட துயரத்தைத் தணித்தற் பொருட்டும், அவர்களுடைய சாம்பரைப் புண்ணிய சேது தீர்த்தத்திற் கரைத்தற் பொருட்டும் புலவர் 1886-ம் ஆண்டு ஆனி மாதம் இந்தியாவுக்குப் போயினர். முதலில் அவர் சேதுக்கரையையடைந்து தந்தை தாயருடைய சாம்பரைக் கரைத்துத் தீர்த்தமாடியபின் இராமேசுரஞ் சென்று ஆலய தரிசனஞ் செய்தனர். பின்னர் கும்பகோணஞ்சென்று பொற்றுமரை உயர் தரப் பள்ளியில் தமிழ்ப் பண்டிதராயிருந்த முருகேச பண்டிதரைச் சந்தித்து அவருடன் சில தினங்கள் தங்கினர். அவருடன் தங்கி யிருக்கும்போது அங்குள்ள கோயில்களைத் தரிசித்தனர். உ. வே. சாமிநாதையர் கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருக்கிறார் என்பதை அறிந்து அவரைச் சந்தித்து உரையாடினர். பின்னர் சிதம்பரஞ் சென்று ஆனித் திருமஞ்சனத் தன்று ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு சென்னை சென்றனர். அங்கு அவர் சி. வை. தாமோதரம்பிள்ளையால் உபசரிக்கப்பெற்று அவர் வீட்டிற் சிலகாலம் தங்கியிருந்தனர். அவர் அங்கு தங்கிய காலத்தில் சுன்னாகம் நாகநாத பண்டிதரியற்றிய இதோபதேசம் என்னும் மொழிபெயர்ப்பு நூலை அச்சிட்டனர். அச்சுவேலை முடிந்ததும் யாழ்ப்பாணம் திரும்பினர்.

இரண்டாவது இந்திய யாத்திரை

மூத்த தமக்கையார் இறந்ததினால் ஏற்பட்ட துயரத்தைத் தணித்தற்பொருட்டும், விஜய வருடம் தை மாதம் நிகழவிருந்த அர்த்தோதய புண்ணிய காலத்தில் சேது தீர்த்தமாடும் பொருட்டும் தமது பிரிய நண்பர் வைத்தியநாதபிள்ளையுடன் புலவர் இந்தியா சென்றனர். முதலில் அவர்கள் சேதுக்கரையில் அர்த்தோதய புண்ணிய தீர்த்தமாடியபின் இராமேசுரம், கும்பகோணம், நாகபட்டினம், வேதாரணியம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினர். அக்காலத்தில் இந்தியாவில் பேதிநோய் பரவியிருந்தமையால் அவர்கள் யாத்திரையை மிகக் குறுகிய காலத்தில் முடித்துக்கொண்டனர்.

5. முற்கால நூல்கள்

I

செய்யுள் நூல்கள்

இக்காலத்திற் புலவர் இயற்றிய நூல்களுட் பெரும் பாலானவை செய்யுள் வடிவிலமைந்த தோத்திர நூல்களாகும். அவை பதிகம், ஊஞ்சல், சிந்து, இரட்டை மணிமாலை, அட்டகம், கும்மி, மொழிபெயர்ப்பு நூல் என்னும் வகைகளைச் சார்ந்தன.

பதிகங்கள்

புலவர் இக்காலத்தில் ஐந்து சிறந்த பதிகங்களை இயற்றியுள்ளார். அவை வதுளைக் கதிரேசன் பதிகம் (1884), வதுளை மாணிக்க விநாயகர் பதிகம் (1884), மாவைப் பதிகம் (1892), துணைவை அரசடி விநாயகர் பதிகம் (1894), அமராவதி பூதூர் பாலவிநாயகர் பதிகம் (1897) என்பன. இவற்றுள் முதலிரண்டு பதிகங்களும் வதுளை வாசிகளான நாட்டுக்கோட்டை நகரத்தார் விரும்பியவாறு இயற்றப்பட்டன. மூன்றுவது துணைவை வாசியாகிய சி. செல்லையாபிள்ளை விரும்பிய வண்ணம் இயற்றப்பட்டது. துணைவை என்னும் ஊர் அராலிக்கு வடபாலுள்ளது. இப்பதிகத்திற்கு வட்டு நகர் ந. சி. சிவசுப்பிரமணியக் குருக்கள், உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவர், கொக்குவில் சி. சிலம்புநாதபிள்ளை என்போர் சிறப்புப் பாயிரங்கள் வழங்கி யுள்ளார்கள். அவற்றை இந்நூலின் இறுதியிற் காண்க. ஐந்தாவது பதிகம் அமராவதி பூதூர் வாசியாகிய பெரி. இலக்குமணச் செட்டியார் விரும்பியவாறு இயற்றப்பட்டது.

பதிகங்களில் வரும் ஆசிரியப் பாக்களெல்லாம் ஒழுகிய ஓசையும், விழுமிய பொருளும், சந்தம் பயக்கும் அனுப்பிராசங்களும் மலிந்து படிப்போருள்ளத்தில் இன்பம் பயப்பன. பதிகங்கள் எல்லாவற்றிலும் புராணக்

கதைகள் செறிந்து விளங்குகின்றன: மாவைப்பதிகம் சொல்லழகும், பொருளழகும் ஒருங்கு வாய்க்கப்பெற்று இன்பம் பயக்கும் நூலாக விளங்குகிறது, அதிலிருந்து ஒரு பாட்டுத் தருதும்.

மாவைப்பதிகம்

சீர்மேவு நவரத்ன கோலமிகு சிங்கார
செம்பொனின் மகுட முடியும்
திவ்விய குணங்களோ ராறுமாய் வீறுற்ற
செய்யமுக மூவி ரண்டும்
ஏர்மேவு நீபமலர் மாலையொடு செச்சைமலர்
இனமாலை புரளு மார்பும்
எழின்மேவு மகமேரு கிரிபோல நிலவுற்ற
இணையிலாப் புயமீ ராறும்
கார்மேவு கடலிலெழு மலரிபோல் மயிலில்வரு
கனகமய மேனி யோடு
கவின்மேவும் ஆண்டலைக் கொடியுவேற் படையுமாய்க்
காட்சிதந் தருள்புரி குவாய்
பார்மேவு பல்லுயிர்க் குயிராகி நிறைகின்ற
பாரமேசுர வடிவமே!
பாவலா! தேவர்தங் காவலா! மாவையம்
பதியில்வதி கந்த வேளே!

ஊஞ்சல்கள்

புலவர் வதுலைக் கதிரேசன் ஊஞ்சல் (1884) துணைவை அரசடி விநாயகர் ஊஞ்சல் (1889), கீரிமலை நகுலேசர் ஊஞ்சல் (1896), ஏழாலை அத்தியடி விநாயகர் ஊஞ்சல் (1897) என்னும் நான்கு ஊஞ்சல் நூல்களை இக்காலத்தில் இயற்றியுள்ளார். இவ்வூஞ்சல்கள் முறையே வதுலை நகரத்தாராலும், துணைவை சி. செல்லையாபிள்ளையாலும், சி. வை. தாமோதரம்பிள்ளையாலும், அத்தியடி விநாயகர் கோயில் அர்ச்சகராலும் வேண்டப்பட்டதன் பேரில் புலவரால் இயற்றப்பட்டன. ஊஞ்சல்கள் எல்லாம்

செவ்விய இசையோடு கூடிப் படிப்போர்க்கு இன்பம் பயக்க வல்லன. நகுலேசர் ஊஞ்சலிலிருந்து ஒரு செய்யுள் தருதும்.

நகுலேசர் ஊஞ்சல்

காப்பு

சீர்கொண்ட யாழ்ப்பாண தேசந் தன்னிற்
சிறப்பமருங் கீரிமலைச் சாரல் வாய்ந்து
நீர்கொண்ட சாகரசங் கமமே யான
நின்மலபுண் ணியதீர்த்தக் கரையின் மேவும்
பேர்கொண்ட நகுலேசப் பெருமான் மீது
பெட்புறுசெந் தமிழ்க்கவிதை ஊஞ்சல் பாடக்
கார்கொண்ட யானைமுகம் உடைய முன்னோன்
கமலமலர் அடியிணைகள் காப்ப தாமே.

சிந்து முதலிய சிறுநூல்கள்

வதுனைக் கதிரேசன் சிந்து (1884), மாவையிரட்டை மணிமாலை (1892), நகுலேசர் சதகம் (1896) என்பன இக்காலத்தில் புலவரால் இயற்றப்பட்ட சிறுநூல்களாகும். வகைக்கொவ்வொரு பாட்டு கீழே தருதும்.

வதுனைக்கதிரேசன் சிந்து

ஆறெழுத் துடநீறும் அக்கமணி யுந்தா
அந்தநமன் எந்தன்முன் அணுகா வரந்தா
மாறுபுரி தீவினைகள் மாறுவர முந்தா
வதுனையம் பதியினிதம் வாழ்குமர வேளே.

மாவையிரட்டை மணிமாலை

நல்குரவு நீங்கும் நலிபிணியுந் தானீங்கும்
வெல்பகையும் நீங்கி விளிந்தோடும் — சொல்வளங்கொள்
தண்டலைசேர் மாவைத் தலத்தமருஞ் சண்முகனைக்
கண்டுதுதி செய்தக் கடை.

நகுலேசர் சதகம்

அன்று நகுலமுனி ஆதியர்க்குச் செய்கருணை
இன்று மறப்பினருள் எங்ஙனே — வன்றெலின்
வாசா வுமைநேசா வாரிமலை கீரிமலை
வாசா நகுலேசா மற்று.

மிலேச்சமதவிகற்பக் கும்மி (1888)

சுன்னாகம் சங்கர பண்டிதர் இயற்றிய மிலேச்சமத விகற்பம் என்னும் நூல், கும்மி ரூபமாக விளங்குமாயின் யாவர்க்கும் இனிதுபயோகமாகும் எனக்கருதி அதனைக் கும்மியாக்கித் தரல் வேண்டுமென்று தென்பாண்டிச் செங்கோட்டை ஆரிய நல்லூர் வாசியாகிய செ. இலக்குமணபிள்ளையுடைய வேண்டுகோட்கிணங்கி புலவரால் கும்மி ரூபமாகப் பாடப்பட்டது. இந்நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு அவர் பொருளுதவி செய்தனர். இந்நூலில் யூதமதம், யேசுமதம், இஸ்லாமதம் என்னும் மூன்று பகுதிகள் உள்ளன. இதன்கண் நூற்றிருபத்திரண்டு செய்யுட்கள் உள்ளன. இதற்கு நல்லூர் வித்துவசிரோன்மணி ச. பொன்னம்பலபிள்ளை, வடகோவை மகாவித்துவான் சபாபதிப்பிள்ளை, சுன்னாகம் பூ. முருகேச பண்டிதர் என்னும் மூவரும் சிறப்புப் பாயிரங்கள் அளித்துள்ளனர்.

யூதமதம்

ஆதியி லேகலி தோன்றி நடக்கையில்
ஆசியாக் கண்டத்து மேலைத் திசையிலே
காதுற்ற காஞன் வசிக்கு மிலேச்சர்கள்
கொண்டன ரோர்மதம் ஞானப் பெண்ணே.

யேசுமதம்

யூதேயாத் தேசத்திற் பெத்தில கேமிலே
யேசேப்புத் தச்சனுக் காக நியமித்த
மாதென்னுங் கன்னி மரியா ளொருசிறு
மைந்தனைப் பெற்றனள் ஞானப் பெண்ணே.

இசிலாமதம்

தொக்க கலியத்த மூவா யிரத்தொடும்
தோற்றெழு நூற்றொன்றின் மேலே யரபியில்
மக்கமா பட்டினத் தப்துலா மெய்மினு
மாதை மணந்தனன் ஞானப் பெண்ணே.

மொழிபெயர்ப்புச் செய்யுள் நூல்கள்

இக்காலத்தில் வடமொழியினின்று மொழிபெயர்த் தியற்றப்பட்ட நூல்கள் இரண்டு. அவை ஏகவிருத்த பாரதம் இராமாயணம் பாகவதம் முதலியன, மேக தூதக்காரிகை என்பன.

I

ஏகவிருத்த பாரதம், இராமாயணம், பாகவதம், இராவணன் சிவத்தோத்திரம், விநோத சித்திர விஞ்வுத்தரக் கவிகள்

இந்நூல் மேலே கூறப்பட்ட வடமொழிப்பெயரோ டுள்ள சுலோகங்களை மொழிபெயர்த்துத் தமிழிற் செய் யுள் வடிவில் இயற்றப்பட்டது. இராவணன் சிவத் தோத்திரம் அழகிய பத்து விருத்தப் பாக்களில் அமைந் துள்ளது. விநோத சித்திர விஞ்வுத்தரக் கவிகள் முப் பத்தொரு பாக்களையுடையது. அதன்கண் வெண்பா, கட்டளைக்கலிப்பா, விருத்தம் முதலிய பாக்கள் விரவி வருகின்றன. இந்நூல் மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை விரும்பியவாறு இயற்றப்பட்டது. இந்நூல்களில் வரும் செய்யுட்களுள் வகைக்கொன்று கீழே தரப்படுகின் றது.

ஏகவிருத்த இராமாயணம்

தாதையார் சொலவடவி ராமன் போதல்
சார்ந்துளபொன் மானெனுமா ரீசன் சாதல்
சீதையார் பிரிவெருவை மரணம பானு
சேயொடுநட் புக்கோடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடற்பரப்பை அனுமன் தாண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேவக் காண்டல்
பாதகராம் அரக்கரெலாம் மடியத் தாக்கல்
பாக்கியரா மாயணச்சீர்க் காதை யீதே.

இராவணன் தோத்திரம்

கங்கை மாநதி சடையெனுங் கடாகமீ தசைந்து
தங்க வைத்திடுங் கடவுளே! தகதகென் றெரியும்
அங்கி நேத்ர! சந்திர சேகர! அடியேற்(கு)
இங்கு வேண்டுமாற் கணந்தொறு நினைநினைந் திருக்கை.

விஞ்ஞைசித்திர விஞ்ஞத்தரம்

வர்ணைத்தரம்

நாரணனுர் மார்புறையும் நாயகியார் வன்மைதனக்(கு)
ஓரெழுத்துப் பேரென்ன? ஓதுதெய்வப் — பேரென்னை?
புள்ளுணர்த்து நாமமென்னை? பொல்லாத ராவணனுற்
கொள்ளப்பட் டாளெவளோ கூறு.

உத்தரம் — சீதாதேவி.

II

மேகதூதக்காரிகை

இது காளிதாசமகாகவி வடமொழியிற் புதுமைச் சிறப்புக்கள் பொலிந்து விளங்க இயற்றிய நூற்றிருபத் தைந்து சுலோகங்களைக் கொண்ட மேகசந்தேசம் என்னும் நூலை, வடமொழி கல்லாதவருக்கும் பயன்பட

வேண்டி நூற்றுநாற்பத்தைந்து கட்டளைக்கலித்துறைப் பாக்களில் மொழிபெயர்த்துப் புலவரால் இயற்றப் பட்டது.

இதில் குபேரனுடைய சாபத்தால் தனது மனைவியைப் பிரிந்து சித்திரகூடமலையில் இருந்த இயக்கனொருவன் அவளுக்கு மேகத்தைத் தூதுவிட்டதாகக் கற்பித்துப் பல விஷயங்களை வர்ணித்துக் கூறப்பட்ட கதை அடங்கியுள்ளது.

இந்நூல் புலவருடைய மொழிபெயர்ப்பு வன்மையையும், கவித்துவ வளர்ச்சியையும் நன்கு புலப்படுத்துகின்றது. தமது செய்யுள் நூல்களுள் இதுவே சிறந்ததென்பது புலவர் கருத்து. இது தமிழ்நாட்டுப் புலவர்களாலும் பத்திரிகைகளாலும் நன்கு வரவேற்கப்பட்டது. சேது சமஸ்தான வித்துவான் ரா. இராகவையங்கார் இதனை வியந்து எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"மேகதூதக் காரிகை கிடைத்துப் பரமானந்தபரிதனானேன். தங்கள் பேரறிவின் மாட்சியும் வடதென் மொழிப் பெருநூலுணர்ச்சியும், சொல்வன்மையும், மூன்னர்த் தாங்கள் வெளியிட்ட புத்தகங்களாலும் நன்கறிந்துள்ளேன். தாங்கள் பிறமொழிக்கண்ணுள்ள நூல்களைத் தன்கண் மொழிபெயர்த்துக் கோடலே ஒரு பாஷையின் முக்கிய வளர்ச்சிக்குக் காரணமாகும். இவ்வகை உபகாரங்களை நெடுங்காலமாகத் தமிழ்ப் பாஷைக்குச் செய்து போதரும் தங்கள்பால் தமிழுலகம் என்றும் நன்றி பாரட்டற்பாலது. (கடிதம்: 3-1-1903)

சுவாமி வேதாசலம் தமது 'ஞானசாகரம்' என்னும் பத்திரிகையில் இந்நூலைப்பற்றிப் பின்வருமாறு விமர்சனஞ் செய்தனர்.

"இது வடமொழிநூலை நிலைகண்டுணர்ந்தவரும், வன்னூர்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலை

மையாசிரியரும், மதுரை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் புலவர்களுள் ஒருவரும், அநேக நூலுரையாசிரியர்களு மான சுன்னகம் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் இயற்றியது. ஒவ்வொரு சுலோகத்தின் கருத்தை இன் னேசையும், அர்த்த புஷ்டியும் பொருந்தக் கட்டளைக் கலித் துறையிற் பாடிய புலவர்களது ஆற்றலுக்கு இந்நூலே சான்றாகும். மேகதூதக்காரிகை இடர்ப்படாதொழுகும் சொற்கோப்பு வளமும், எதுகை, மோனை முதலாயின இலகு வான சொற்களானினிதமைந்து நிற்கும் நலப்பாடும் மிகக் கொண்டு மொழிபெயர்ப்பு நூலோ அன்றே எனச் சிறந் தது.''

''உதயதாரகைப்'' பத்திரிகையில் 26-4-1899 இல் வெளிவந்த மதிப்புரை வருமாறு :

''யாவரும் விரும்பி வாசிக்கும்படி சந்தவின்பம் பொருந்தக் கட்டளைக்கலித்துறை ரூபமாய் இயற்றப்பட்டிருக் கிறது. பொருட்சுவையோடு சொற்சுவையும் பொருந்தத் தமிழ்ப் பாஷாந்தரம் பண்ணிய சுன்னகம் அ. குமாரசுவா மிப்பிள்ளை தமிழ் மாதையும் தமிழ் வாசிப்பாரையும் மிகவும் கடமைப்படுத்தினர்.''

''வைசியமித்திரன்'' (24-3-1911), ''இந்துசாதனம்'' (5-5-1897), ''ஞானப்பிரகாசம்'' (1910) முதலிய பத் திரிகைகளும் மதிப்புரைகள் வழங்கியுள்ளன. விரிவஞ்சி அவை இங்கு சேர்க்கப்படவில்லை.

இந்நூலிலுள்ள சில பாக்களைப் புலவர் அடிக்கடி படித்து இன்புறுவதுண்டு. அவற்றுள் மூன்றை இங்கே தருதும்.

தூது வேண்டுதல்

சந்தாப வெந்தழல் உற்றார்க் கினிமை தருமுகிலே
மந்தார மேவும் பொழிலள கேசன் மனக்கொதிப்பால்
வந்தே னுரைக்கு முரையைப் பிரிந்த மனையவட்குச்
சந்தாகிச் சென்றங் குரைத்துத் துயரந் தணிக்குவையே.

பயணசோபன சகுனம்

வாகார் முகிலே அனுகூல வாயுவும் வந்துபின்பால்
ஏகா யெனச்சொலி மென்மெலத் தள்ளு மிடப்புறத்திற்
பாகாரு மின்னிசை சாதகம் பாடும் பகந்தொடரும்
ஆகா நினது பயணமும் சோபன மாகியதே.

அவந்திநகர வயோதிகர்

ஆவந் திகன்மகள் வாசவ தத்தையை அன்றுவற்சன்
பார்வந் தொளித்து விரகிற் கவர்ந்த பழங்கதையின்
பாவந் தெரிந்து நரையும் மிகுந்து பழிதொலைந்து
கோவந் தணிந்த முதியோரும் அங்குளர் கொண்முகிலே.

போசப்பிரபந்தம்

புலவருடைய மொழிபெயர்ப்புத் திறனே மேகதூதக் காரிகையின் முகவுரையிற் சேர்க்கப்பட்டுள்ள போசப் பிரபந்தத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சில செய்யுட்களும் நன்கு விளக்குகின்றன. அவற்றுள் மூன்றைக் கீழே தருதும்.

1. போசராசனுடைய சிறியதந்தையார் அவனுடைய இராச்சியத்தைக் கவரும் நோக்கமாக அவனைச் சுடலையிற் கொண்டுபோய்த் தலையை வெட்டிக்கொண்டு வருமாறு சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். சேவகர்கள் அவன் தலையை வெட்ட ஆயத்தஞ்செய்தபோது அவன் பொருள் நிறைந்த ஒரு சுலோகத்தை எழுதி உயிர்தப்பினன். அச்சுலோக மொழிபெயர்ப்பு வருமாறு:

முந்தேறு கிருதயுக பூபதிமாந்
தாதாவும் முடிந்து போ ன்;
நந்தேறு கடலடைத்த செயராமச்
சந்திரனும் நடந்து விட்டான்;
வந்தேறு குருகுலத்துத் தருமன்முதற்
பலமகிபர் மடிந்து போனர்;
அந்தோவிங் கிவரொடும்போ காதபுவி
நின்னெடுதா னடையு மையா.

2. மந்தியொன்று நாவல் மரத்திலேறிப் பாய்ந்து கொப்புக்களை அசைக்க நாவற்பழங்கள் ''குளுகுக் குளுகுக்குளு'' என்னுத் தொனியோடு குளத்துக்குள்ளே விழ, அந்தத் தொனியைப் போசராசன் கவனித்துக் கொண்டுபோய்க் காளிதாசனிடஞ் சொல்ல, அவன் அக்கருத்து முழுவதையும் ஒரு சுலோகத்திற் கூறினன். அதன் மொழிபெயர்ப்பு வருமாறு :

பக்குவமாய் முற்றிப் பழுத்துளநா வற்கனிதான்
அக்கொம்பர் மந்தி அசைத்திடப் — புக்கு
மெழுகுக் குறைபோல வீழுந் தொனிதான்
குளுகுக் குளுகுக் குளு.

3. போசராசன் குளத்திலே ஸ்நானஞ் செய்யும்போது அங்கு வந்த பெண்ணொருத்தி தனது குடத்தைக் கற்படியில் தவறிவிழ விட்டனள். அக்குடம் படிகளில் தட்டுண்டு ''டண்டண்ட டண்டம்'' என்ற தொனியை உண்டு பண்ணிற்று. அத்தொனியை அவதானித்த அரசன் காளிதாசனிடம் சொல்ல அவன் அக்கருத்து முழுவதையும் ஒரு சுலோகத்திலமைத்துக் கூறினன். அச் சுலோகத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு :

மன்னர்பிரான் நீராட வந்துளபூம் பொய்கையிலே
கன்னிகையாள் கைதவறிக் கற்படியிற்—சொன்னகுடம்
டண்டண்ட டண்டம் டடடண்டம் டண்டமென்று
கொண்டுசென்ற தந்தோ குளத்து.

சிறப்புப்பாயிரங்கள்

புலவர் 1880-ம் ஆண்டு தொடக்கம் அறுபதுக்கு மேற்பட்ட பலநூல்களுக்குச் சிறப்புப்பாயிரங்கள் வழங்கியுள்ளார். இக்காலத்தில் வழங்கப்பட்ட பதினைனுட் சிறப்புவாய்ந்தவை ஆறுமுகநாவலர் சரித்திரம் (வே. கனகரத்தின உபாத்தியாயர் 1882), குடந்தை வெண்பா (பூ. முருகேசபண்டிதர் 1884) கிறீஸ்துமத கண்டனம் (சி. சங்கரபண்டிதர் 1884), வீரசோழியம்

(சி. வை. தாமோதரம்பிள்ளை 1884), பாவலர்சரித்திர தீபகம் (ஆணல்ட் சதாசிவம்பிள்ளை 1892), திருக்கோவையாருண்மை (சுவாமிநாதபண்டிதர் 1894) திருவாதவூரடிகள் புராணவுரை (க. வேற்பிள்ளை 1894), என்னும் நூல்களுக்கு வழங்கப்பட்டவைகளாகும். அவற்றுட் சில கீழே தரப்படுகின்றன,

ஆறுமுகநாவலர் சரித்திரம் சி. பா.

ஆங்கிலமே சிகமொழியும் வடமொழியும்
பொருளறியும் அளவிற் கற்று
சங்கையிலா இலக்கியமும் இலக்கணமும்
தலைகண்டு தருக்க மோதித்
துங்கமிகு புராணமிதி காசமுத
லாயபல தொன்னூ லோடு
பங்கமிலாச் சித்தாந்த சாத்திரபாண்
டித்தியமும் படைத்த சீலன்.

குடந்தை வெண்பா சி பா.

முத்திதரும் தலமேன்மை முன்னடக்கிப்
பின்மடக்காய் முறையே மேவிப்
பத்தழகும் குடிகொள்ளக் குடந்தை வெண்பா
எனவொருநூல் பகர்ந்தான் சைவ
வித்தகன்தொல் இலக்கியமும் இலக்கணமும்
கரைகண்ட விதுரன் நாயேன்
பத்திபுரி ஆசிரியன் முருகேச
பண்டிதன்பா வாண ரேனே.

வாழ்த்துப்பாக்கள்

விஞ்ஞானவர்த்தனி என்னும் பத்திரிகைக்கு 1882 இல் வழங்கப்பட்ட வாழ்த்துப்பாவும், உதயபானுப் பத்திரிகை மதுரையிலிருந்து 1884-ம் ஆண்டு சரவணமுத்துப்புலவரால் வெளியிடப்பட்டபோது வழங்கப்பட்ட வாழ்த்துப்பாவும் கீழே தரப்படுகின்றன.

விஞ்ஞானவர்த்தனி

வெண்பா

மெய்ஞ்ஞான நீங்கப் புலவ ருளங்களிக்க
மெய்ஞ்ஞான மோங்க விளங்குசிவ—விஞ்ஞான
வர்த்தனியாம் பத்திரிகை மல்கக் கரிமுகத்துக்
கர்த்தன்வி நாயகன்ருள் காப்பு.

உதயபானு

வெண்பா

போற்று மதுரைநகர்ப் பொற்ரு மரைவாயில்
வீற்றிருக்கும் சித்தி விநாயகனே! — தோற்றியருள்
சைவம் விளங்கச் சரவணமுத் துப்புலவன்
நவ்வீய பத்திரத்தால் நன்கு.

II

உரை நூல்கள்

இக்காலத்திற் புலவர் சூடாமணி நிகண்டு 1-ம் தொகுதி (1895), திருக்கரைசைப்புராணம் (1890) என்னும் இரு நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

திருக்கரைசைப் புராணவுரை

இந்தப் புராணம் திரிகோணமலைக்குச் சமீபமாயுள்ள மகாவலி கங்கைக் கரையிலே "அகத்தியத் தாபனம்" என்று வழங்கப்படுகின்ற கரைசையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானுடைய மகத்துவங்களை எடுத்துக் கூறும். இதனை இயற்றியவர் யாவர் என்று புலப்படவில்லை. புலவருடைய நண்பரும், திரிகோணமலை வாசியுமாகிய வே. அகிலேசபிள்ளை வேண்டியவாறு இதற்கு ஓர் பொழிப்புரை புலவரால் எழுதப்பட்டது.

சூடாமணி நிகண்டு 1-ம் தொகுதி சொற்பொருள் விளக்கம்

இது 1896-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது வரையும் சொற்பொருள் தெளிவின்றிக் கிடந்த நிகண்டைக் கற்ற மாணவருக்கு இது மிகவும் உதவி செய்தது.

"சன்மார்க்கபோதினி" என்னும் பத்திரிகை 31-1-1895 இல் இந்நூலைப் பற்றி வழங்கிய விமர்சனம் கீழே தரப்படுகிறது.

"இந்நூற்றொருகுதிகளுள் ஒரு தொகுதியில் ஒரு செய்யுளின் ஓரடிகேனும் இதுகாறும் சரியான பொருட்டெளிவின்றி இடர்ப்பட்டு வந்த வித்தியாபேக்ஷிகள் அப்பொருள் யாவையும் எளிதிலுணர்ந்து களிக்கச் செய்த புலவருக்கு யாவரும் துதி கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர் பொற்குடமாதலால் நாம் பொட்டிட்டு அவரை விதந்து பேசுதல் அநாவசியம்".

"உதயதாரகைப்" பத்திரிகை இந்நூலைப் பற்றி 1-6-1900 இல் வழங்கிய விமர்சனம் பின்வருமாறு :

"சூடாமணிப் பதிப்புக்கள் மூன் தோன்றியிருக்கின்றனவாயினும் அதிற் காணப்படும் சொற்களுக்குப் பொருள் கூறுதல் பிள்ளையவர்களின் பதிப்புக்குரிய விசேடமாயிருக்கிறது. முன்னே இலக்கண சந்திரிகை, மேகதூதக் காரிகை முதலிய அரிய நூல்களால் தமிழ் மாதை அலங்கரித்த குமாரசுவாமிப் புலவர் சிகாமணி அரும் பிரயாசையெடுத்துத் தொகுதி தொகுதியாகச் சொற்பொருளுடன் சூடாமணி நிகண்டை வெளியிடுதலால் உபாத்தியாயர்களையும், மாணாக்கர்களையும் மிகவுங் கடமைப்படுத்துகின்றனர் என்பது எமது அபிப்பிராயம்".

"திராவிட கோகிலம்" என்னும் பத்திரிகை 1-6-1900இல் வழங்கிய மதிப்புரை:

"சூடாமணி நிகண்டு முதலாந் தொகுதிக்குப் பொருள் எழுதியவராகிய யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்களது புலமையையும், பெருமையையும் அறியாதார் யார்? எத்துணை ஆராய்ச்சியும், எத்துணைப் பிரயாசையும் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டதென்பது அதனை ஒருகால் நோக்கினல் நன்கு புலப்படும்".

III

இலக்கண நூல்கள்

இலக்கணசந்திரிகை

இது புலவருடைய சிறந்த இலக்கணவாராய்ச்சி நூல்களுள் ஒன்று. இது 1899-ம் ஆண்டு வெளிவந்தது. இந்நூல் தமிழகராதி ஆக்கியோனும், வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் என்னும் மும்மொழியிலும் வல்லுனருமாகிய உடுப்பிட்டி நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளையின் வேண்டுகோட்கினைந்து புலவரால் இயற்றப் பெற்றது. இதிற் பழந்தமிழ் நூல்களில் உருவம் மாறுபட்டு வரும் வடசொற்களின் விதியும், பெயர், வினை, உரிச் சொற்களின் விதியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இது தமிழ் கற்போருக்குப் பெரிதும் பயன்படுவதொன்று. இந்நூல் பல புலவர்களாலும், பத்திரிகைகளாலும் பாராட்டப் பெற்றது.

சுவாமி வேதாசலம் இந்நூலைப் பற்றித் தமது "ஞான சாகரம்" என்னும் பத்திரிகையிற் பின்வருமாறு வியந்து கூறியுள்ளார்.

மதிப்புரை

"யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுன்னாகத்தில் மகாவித்துவானை விளங்கும் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களிடமிருந்து அவர்களாலியற்றப் பெற்ற இலக்கணசந்திரிகை வரப்பெற்றும். அவ்வரிய கிரந்தத்தை

உற்றுநோக்கியகாலையில் எம் முள்ளத்தே அங்குரித்துப் பின் பெரிதாயெழுந்த மகிழ்ச்சியை என்னென்பேம். இப்புஸ்தகம் நாற்பத்தைந்து பக்கங்கள் அடங்கிய ஒன்றுயினும் அதன்கண் சொல்லப்பட்ட நுட்பவிடயங்கள் மிகப்பலவாக விரிந்தன. இதன்கண் வடசொற்கள் தமிழில் வடிவு திரிந்து வழங்குமாறும், வடமொழி தென்மொழியில் எழுத்துக்கள் ஒற்றுமைப்பட்டு நடக்குமாறும், இவ்விருமொழியிலும் காணப்படும் உபசர்க்க வகுப்பும், அவற்றின் மாறுபாடும், இடைச்சொற் கூறுபாடும், தத்திதாந்த வகையும், பெயர், வினை, உரிச்சொற் பாகுபாடும் இனிது விளங்க மிக எடுத்துக்காட்டப்படும் ஓவ்வொரு சொல்லாராய்ச்சிக்கும் தொல்லாசிரியர் பிரயோக வாக்கியங்களோ நூற்பெயரோடு நன்கெடுத்து மொழியப்பட்டன. இங்ஙனம் பிரயோகங்காட்டி ஆராய்ச்சி செய்யுநெறி ஆங்கில நூல்வல்லார் செய்து போதரும் "பிலாலாஜி" என்னும் சொல்லாராய்ச்சியோடு ஒத்தொழுகி அதனினுஞ் சிறப்புறுதலின் தமிழாராய்வார்க்கெல்லாம் பிள்ளையவர்கள் செய்திட்ட இவ்வரிய நூலைப் போற்றிப் பயிறல் இன்றியமையாத கடமையாகும். நன்னூற் பயிற்சி செய்வாரினும் இந்நூற் பயிற்சி செய்வார் நுட்பவுணர்வுடையராவர் என்பது இதனைப் பயின்றூர்க்கன்றி ஏனையோர்க்கு விளங்காது."

தேவகோட்டையிலிருந்து வெளிவந்த 'வைசிய மித்திரன்' என்னும் பத்திரிகை 29-9-1911 இல் வழங்கிய மதிப்புரை வருமாறு :

மதிப்புரை

"இவ்வரிய நூலை எழுதி வெளிவிடுத்த யாழ்ப்பாணத்துச் சுன்னகம் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப் புலவர வர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது."

திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த 'உண்மை விளக்கம்' என்னும் பத்திரிகை 31-8-1899 இல் வழங்கிய மதிப்புரை வருமாறு :

மதிப்புரை

"இது சுன்னகம் குமாரசுவாமிப்பிள்ளையால் இயற்றப் பட்டது. பழந்தமிழ் நூல்களில் மாறுபட்டு வழங்கப்படும் வடசொற்கள் விதியும், வடசொற்போலத் தமிழில் வழங் கும் பெயர், வினை, இடை, உரிச்சொற்கள் விதியும் விரி வாய் எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூல் தமிழ் கற்போ ருக்குப் பெரிதும் பயன்படும். இந்நூலாசிரியர் வழியைப் பின்பற்றி ஏனைத் தமிழ்ப் புலவர்களும் இத்தகைய புது நூல்களை இயற்றி வருவார்களாயின் நமது செந்தமிழ் மொழி மிக்குப் பெருகிவிடும்.

IV

பதிப்பு நூல்கள்

இக்காலத்திற் புலவர் இதோபதேசம் (1886), நகுல மலைக்குறவஞ்சி நாடகம் (1895) என்னும் இரு நூல்க ளைப் பதிப்பித்துள்ளார்.

இதோபதேசம் (மொழிபெயர்ப்பு)

இது வடமொழி இதோபதேசத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதனை மொழிபெயர்த்தவர் பன்மொழிப் புலவராகிய சுன்னகம் அ. நாகநாதபண்டிதராவர். இது புலவரால் 1886-ம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இதற்கு நியாயவாதி 'பிறிற்ரே' அவர்களும், வண்ணைப்பண்ணை நீதிபதி செல்லப்பாபிள்ளை பி. ஏ., பி. எல். அவர்களும் முகவுரை வழங்கியுள்ளார்கள்.

நகுலமலைக் குறவஞ்சி நாடகம்

இந்நூல் அராலி விசுவநாத சாஸ்திரியாரால் இயற் றப்பெற்றது. புலவர் இதனைப் பரிசோதித்து வெளியிட் டனர்.

6. முற்காலக் கண்டனங்கள்

கண்டனத்திறன்

புலவர் இளமைக் காலந்தொடக்கம் கண்டனம் எழுதுவதில் மிகவும் திறமை படைத்திருந்தனர்; அக் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களான முருகேச பண்டிதர், சங்கர பண்டிதர், ஆறுமுகநாவலர் முதலி யோர் புலவருக்குக் கண்டனம் எழுதும் விஷயத்தில் நல்ல பயிற்சியும், ஊக்கமும் அளித்தனர். புலவரும் அவர்கள் சூழலில் வளர்ந்து கண்டனம் எழுதுவதில் ஒப் பாரும் மிக்காருமின்றி விளங்கினர். யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபால கர் த. கைலாயபிள்ளை புலவருடைய கண்டனத் திற மையை வியந்து பின்வருமாறு கூறியுள்ளார்.

"போலிப் புலவருடைய பிழைகளைக் கண்டிப்பதில் இவ ருக்கு நிகரானவரில்லை. பிழைகளை வெகுசீக்கிரத்திற் காண்பார். காண்பதும் வெகு சித்திரமாயிருக்கும். இது பற்றி இவரை "Born Critic" என்று சிலர் சொல்லுவர் (கணேசையர் — கு. புலவர் சரித்திர முகவுரை.)

புலவருடைய மாணாக்கருள் ஒருவராகிய தென் கோவைக் கந்தையாப் பண்டிதர் புலவருடைய கண்டனத் திறமையைப் பின்வருமாறு வியந்தனர்:

"புலவர் பத்திரிகைக்கு எழுதும் விஷயங்கள் விவா தச் செறிவால் போலிக் கொள்கைகளைச் சண்டமாருதம் போற்றுக்கித் தலைகுனியச் செய்வன." (செந்தமிழ் 1922)

நல்லூர் சு. சரவணமுத்துப் புலவர் யாப்பருங்கலக் காரிகைப் பதிப்புக்குக் கொடுத்த சிறப்புப் பாயிரத்தில் புலவருடைய கண்டனத் திறமையைப் பின்வருமாறு வியந்தனர்:

"எம்மை விஞ்சிடுவோர் எவருமிங் கிலையெனத்
தம்மைத் தாமே தனிவியந் தெழுதும்
போலி நாவலர் புரைபட இயற்றிய
நூலுரைப் பிழைகளை நுண்ணிதி னுய்ந்தோன்."

கண்டிக்கும் முறை

'வாழி செந்தமிழ் இலக்கிய விலக்கணவரம்பு' என்பது புலவர் வாக்கு. அதுவே அவரது இலட்சியமாகும். அவர் செந்தமிழிலக்கிய விலக்கண வரம்பைப் பாதுகாத்தலைத் தலைமேற்கொண்டு நூலுரைப் பிழைகளை ஆராய்ந்து கண்டனங்கள் வரைந்தனர். புலவர் பிழைகளைக் கண்டித்தனரேயன்றிப் பிழைபட எழுதினவரைக் கண்டித்திலர். அவர் சில கண்டனங்களைத் தமது கையெழுத்தோடும், சிலவற்றைப் புனைபெயரோடும் எழுதிவந்தனர்.

நூலுரைப் பிழைகளை வெளிப்படுத்துவதன் அவசியத்தை யாப்பருங்கலக்காரிகை, தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னுமிரு நூல்களுக்கு அவர் எழுதிய முகவுரைகளால் நன்கறியலாம். இது விஷயமாக யாப்பருங்கலக்காரிகை முகவுரையிற் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இவ்வுரையிலே வழுக்கள் வாராதென்பது எமக்கொருபோதுங் கருத்தன்று. எம் உரைகளிலே கவிகளிலே எத்தனையோ வழுக்கள் பின் பார்க்கும்போது புலப்பட்டன. அவை பிறர்க்கெல்லாம் விரைந்து புலப்படும். புலப்படும் வழுக்களைப் புலவராயுள்ளோர் எடுத்துக்காட்டி உலகறிய வெளிப்படுத்தல் நன்று. அவை வெளிப்படுங்காற் பற்பல திருத்தங்கள் சித்திக்கும். எமக்கும் பெரும் பயனுண்டாகும்."

தமிழ்ப்புலவர் சரித்திர முகவுரையிலும் இதுவிஷயமாகப் பின்வருமாறு கூறியுள்ளார்:

"பிழைகளைக் காணும் அறிஞர்கள் செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் அவைகளைப் பிரகடனஞ் செய்தல் நன்று.

பிழை கூறல் அவமானஞ் செய்தலன்று. அது சம்மான மாய் நமக்கும் பயன்படும்; கற்போர் பிறர்க்கும் பயன் படும். திருத்தமும் பலவாகும்.''

புலவர் தாம் எழுதும் நூலுரைகளில் பிழைகள் வராதவாறு மிக்க கவனஞ் செலுத்தினர்.

கிறீஸ்துமத கண்டனம்

ஆறுமுகநாவலர் இறந்த பின்னர்க் கிறீஸ்த பாதிரி மார்கள் தமது சமயத்தைப் பரப்பும் நோக்கத்தோடு ஈவநிந்தை நிறைந்த கண்டனங்களைப் பத்திரிகை வாயி லாகவும், துண்டுப் பிரசுரங்கள் வாயிலாகவும், பிரசங் கங்கள் வாயிலாகவும் வெளியிட்டனர். இடையிடையே அருளப்ப முதலியார் போன்ற கிறீஸ்த பிரசங்கிமாரை இந்தியாவினின்று வரவழைத்துக் கிறீஸ்துமதப் பிரசார மும் செய்தனர். ஆறுமுகநாவலரும் மற்றையோரும் கிறீஸ்தவர்களோடு நடாத்திய போரைப் புலவர் பத்து வருடங்கள் (1878—1888) தனியே நடத்தினர். அவர் கிறீஸ்துமதத்தைக் கண்டித்துப் பலவிடங்களிற் பிரசங்கங் கள் செய்ததோடமையாது, இலங்கைநேசன், உதய பானு முதலிய பத்திரிகைகளிலும் கிறீஸ்துமத கண்ட னங்கள் பல வரைந்தனர். இலங்கைநேசன் பத்திரிகை யில் 'கிறீஸ்து தேவனு?' (1878), 'பன்னகவரி' (1881) என்னும் கண்டனங்கள் வெளிவந்தன. உதயபானுவில் 'நற்புத்தி' (1880), 'அஞ்ஞானி என்னுஞ் சொன்மறுப்பு' (1881), 'கிறீஸ்து சிருட்டிகர்' (1881), 'பாதுகாவ லன் பத்திராதிபருக்கு' (1881), 'காரைக்கால் சத்திய வேத ஆசாரப் பிரியருக்கு' (1881), 'வடவிலங்கைக் கிறீஸ்த வித்தகருக்கு' (1882), 'நாகரீகசார விநாசம்' (1882) முதலிய கண்டனங்கள் வெளிவந்தன. புலவ ராற் கடைசியாக இயற்றப்பட்ட கண்டனம் 'மிலேச்ச மத விகற்பக் கும்மி'யாகும் (1888). 1888 க்குப் பின்னர் கிறீஸ்துமதம் பரவுவது ஓரளவுக்குக் குறைந்தமையாலும்,

கிறீஸ்துமதச் சார்புள்ள பெரியார் பலருடைய நெருங்கிய நட்புறவு ஏற்பட்ட காரணத்தாலும் புலவர் கிறீஸ்துமதக் கண்டனங்கள் எழுதுவதைக் குறைத்துக் கொண்டனர்.

புலவர் தமது இளமைக் காலத்தில் விறுவிறுப்போடு எழுதிய கிறீஸ்துமத கண்டனம் ஒன்று கீழே தரப்படுகின்றது:

சைவகண்டன பரிகரணம்

"பைக்கிரியே!

உன் "சைவ கண்டனம்" கண்டனம். ஒரு வரியேனும் பிழையற எழுதவறியாது, சைவநூலு மறியாது "காபர்" "நீமர்" முதலிய சொல்விளம்பி விட்டுக் கொண்டு வெளிப்பட்ட நீயா சைவ தூஷணஞ் செய்யத் துணிந்தாய். உன் பத்திரிகையிலுள்ள பொய், குறளை, கடுஞ்சொல் முதலிய இழிமொழிகளே உன் யோக்கியதையை யாவருக்கும் இனிது விளக்கிவிட்டன.

இருடிகள் சாபத்தால் இலிங்கம் அழுகி அறுந்து விழுந்த கதை, எந்தச் சாத்திரத்திலே எந்தப் பாகத்திலே, எந்த ஆப்தராலே சொல்லப்பட்டிருக்கின்றது. இன்ன சாஸ்திரத்தில், இன்ன இடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது என்று காட்டு. அஃது இயலாதாயின் வாய் மூடு.

சைவர் சிவனொருவரே பரமபதி எனக்கொண்டு வணங்குகின்றார்களே யன்றி, நீ சொல்லியவாறு பலரைப் பரமபதியாக வணங்கவில்லை. இந்த உண்மையை ஸ்ரீ நாவலரவர்கள் எழுதிய 'சைவசமயம்', 'சமயி' என்னும் பத்திரிகைகளாலும், பேர்சீவல் பாதிரியார் எழுதிய 'லான்ரேவ்வேட' என்னும் புத்தகத்தினாலும், சைவமகத்துவம் முதலிய நூல்களினாலும் துணிந்து கொள்ளக் கடவாய்.

விட்டுணுவுக்கும், சிவனுக்கும் குமாரன் என்று பொருள் படுகின்றதும், நன்னூற் பதவியலில் 'ஏழாமுயிரிய்யும்' என்னுஞ் சூத்திரத்தில் 'மூன்றே யகவும்' என்றபடி தமிழில் வந்து புணர்ந்ததுமாகிய 'அரிகரபுத்திரன்' என்னும் பதத்திற்கு "கையிற் பிறந்த ஐயனுர்" என்னும் பொருள் படைத்துக் கொண்டாய். "ஊக்கமது கைவிடேல்" என்பதற்கும். ஊக்கம் — முயற்சியைத் தருகிற, மது — கள்ளை, விடேல் — கைவிடாதே என்றும் உனக்கிணங்கிய படி பொருள் பண்ணுவாய்.

பைக்கிரிப் பட்டம் கட்டிக்கொண்ட நீ, தண்ணீர் எண்ணை காணுது, பேனும் நிறைந்து, ஏகவேணி வாசமாய்ச் சுருண்டு முறுகிக் கன்னத்திற் பாய்ந்து கண்களை மூடும் தலைமயிர்ப் புலுட்டையை மொட்டை தட்டித் தொப்பி இட்டுக் கொள்ளாததென்னை? இலிங்காக்கிரத்துவக் சேதனமும் செய்திருக்கிருயா? நீ என்ன பைக்கிரி? சைவர்க்குஞ் சோனகர்க்கும் இடையிற் சண்டையுண்டாக்க வந்த பைக்கிரித் தம்பியா? பொய் ஏன் சொல்லுகிருய்? பொய்யன் நாசமடைவான்?"

ஏழாலைச் அ. குமாரசுவாமிப்பிள்ளை
சைவப்பிரகாசவித்தியாசாலை

இலக்கியவிலக்கணக் கண்டனங்கள்

புலவர் தமது இளமைக் காலத்தில் இலக்கியவிலக் கணவாராய்ச்சி செய்வதில் மிகச் சமர்த்தராய் விளங்கினர். அவர் அக்காலத்தில் எழுதிய 'கந்தபுராண வியாக்கியானம்' என்னும் கண்டனம் புலவரது புகழைத் தமிழகம் எங்கணும் பரப்பியது. அக் கண்டனத்தை வாசித்த நாவலர் அதன் உரைநடையின் சிறப்பையும், தருக்கரீதியாக எழுதப்பட்டிருப்பதையும் கண்டு களித்த தோடமையாது அதற்குச் சார்பாக ஒரு கடிதம் வரைந்து இலங்கைநேசன் பத்திரிகையில் வெளிப்படுத்தினர் என்று முன்னர்க் குறிப்பிடப்பட்டது. நகைச்சுவை

தனும்ப விசித்திரமாக எழுதப்பட்ட அக் கண்டனம் பின்வருமாறு :

கந்தபுராண வியாக்கியானம்

''கந்தபுராண வள்ளியம்மை திருமணப் படலத்துக்கு விருத்தியுரை பேசும் உரையாசிரியர்களே !

''நீங்கள் எத்தனையோ ஆண்சனங்களும் பெண் சனங்களும் புராணங் கேட்டற்கண் நம்பிக்கையோடும் வந்து உங்கள் வாய்களையே எதிர்பார்த்திருக்க, நீங்கள் அவர்களுக்குக் கொஞ்சமும் விளங்காமல் வெளிப்படை யான இயற்சொற்களை எல்லாம் திரிசொற்களாக மாற்றிச் சொல்லுகிறீர்கள். 'பூ' என்பதற்கு 'வீ' என்கிறீர்கள். 'மறைந்து போனார்' என்பதற்கு 'அந்தர்த்தமாயினர்' என்கிறீர்கள். சித்தியாரிற் சில செய்யுட்களையும் அவற் றின் கடின வாக்கிய மமைந்த வியாக்கியானங்களையும் எடுத்துப் படிக்கிறீர்கள். சில கவிகளுக்கு வேதாந்த சித் தாந்தப் பிரசங்கஞ் செய்கிறீர்கள்.

அதிகாரம் அவாய்நிலை முதலியவற்றுல் வேண்டு மிடத்து உரைகளை வருவித்துரைக்கவேண்டும் என்னும் விதியினை அறியாது, வாயில் வந்தன வந்தனவற்றை விரித்து அங்ஙனம், இங்ஙனம், என்புழி, இருப்புழி, ஈண்டு விரிப்பிற் பெருகும், ஆண்டுக்காண்க என்பன முதலிய இலக்கணச் சொற்களையும் இடையிடையே வைத்து நெடு நேரஞ் சொல்லி எக் கவிகளிலும் வித்தியா கெம்பீரம் விளக்குகிறீர்கள். அரியனவும், இன்றியமையாதனவுமான சில அணிகளை எடுத்துக் கூறுவதே சிறப்பெனவறியாது, தன்மையணி, உவமையணி, ஒட்டணி, பரவணி முதலிய பல அணிகளையும் சொல்லுகிறீர்கள். தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் முதலிய யாப்பிலக்கண வாய்ப்பாடு களையும் கூறுகிறீர்கள். அகப்பொருள் விளக்கம், நன்னூல் முதலியவற்றிலே நெட்டுருப்பண்ணிய சூத்திரங்களையும் நெடுநேரம் படிக்கிறீர்கள்.

எத்தனையோ சனங்கள் 'ஏன் இங்கு வந்தோம்' என்று பெருமூச்சு விட, நீவிர் ஒரு மூச்சும் விடாமல் வாணன் கோவையையும், திருக்கோவையையும் படிக்கிறீர்கள். சில கவிகளில் ஞானக் கருத்துஞ் சொல்லுகிறீர்கள். 'வேங்கை மரமாதல்', 'காந்தருவ மணஞ்செய்தல்' முதலிய வற்றிற்கு ஒன்றும் பேசாமல், 'இங்ஙனம் மணமயர்ந்தது உலகில் இல்லறம் நிகழ்தற்'கென்று சொல்லித் ''தென் பாலுகந்தாடும்'' என்னும் திருவாசகத்தையும், 'போகியா யிருந்துயிர்க்கும் போகத்தைப் புரிதலோரார்' என்னும் சித்தியாரையும் பலவிடத்தும் பழம் பாடமாகப் படிக்கிறீர் கள். 'முராரி' என்பதற்கு 'முரன் என்னும் அரசனுக்குப் பகைவர்' என்கிறீர்கள். 'தேவர்' என்பதற்கு ஒன்றுஞ் சொல்லாது சும்மா விடுகிறீர்கள்.

உங்கள் விருத்தியுரையிற் சில விடங்களிற் 'செந் தீனு யிடியுந்தேனும்' என்னும் பாட்டு வர வைகறை விடியல் செல்ல மற்ற நாளிலும் மத்தியானமாகிறதே. இப்படி விருத்தியுரை கூறும் நீவிர் உரையில்லாத ஒரு நூலுக்காவது, இப்படலத்துக்காவது உரை எழுதி வெளிப்படுத்தலாமே. அங்ஙனஞ் செய்யாத காரணம் என்னையோ? உரை எழுதி வெளிப்படுத்தினற் பொரு ளும் புகழும் ஒருங்கு சித்திக்கும்.''

கடிதர்க்குத்தரம்

மேற்கூறிய கண்டனத்தைக் கண்ட உரையாசிரியர் கள் மறுப்புக் கடிதங்கள் வரைந்தனர். அவற்றிற்கு விடையாக ஆறுமுகநாவலர் மேலே காட்டிய தலையங் கத்துடன் இலங்கை நேசனில் எழுதிய கடிதத்தில், புலவர் பொதுவாக எழுதிய கண்டனத்தை உரையாசிரியர்கள் தங்கள்மேல் இட்டுக்கொள்ளுதல் தவறென்றும், புரா ணப் பிரசங்கத்துக்கு வருபவர்களில் அநேகர் கல்வியறி வில்லாதவர்களாதலால் வெளிப்படையான முறையிலே பிரசங்கிப்பது முறையென்றும். இலக்கணங்கள் சொல் வது தகுதியன்றென்றுங் கூறினர். நாவலருடைய கடி தம் உரையாசிரியர்களை அடங்கச்செய்தது.

'இலக்கண வினு'

இப்பெயருடைய கண்டனம் யோன் சங்கரப்பிள்ளை என்பவர் புதிய முறையில் 'இலக்கணச் சல்லாபம்' என்னும் நூலைத் தமிழ் மரபு கவனியாது எழுதினமையால் எழுந்தது. நகைச்சுவையோடு உதயபானுப் பத்திரிகையிற் (4-10-1880) புலவரால் எழுதப்பட்ட அக் கண்டனம் வருமாறு:

"யோன் சங்கரப்பிள்ளையே!

உம்முடைய 'இலக்கணச் சல்லாபம்' பார்த்தேன். அதிற் சில வினுக்களுக்கு என்னை ஏசாது வீண்வார்த்தை பேசாது மரியாதையோடு விடைசொல்லுக.

(1) 'இலக்கணச் சல்லாபம்' என்பது வடமொழிப் புணர்ச்சியா? தென்மொழிப் புணர்ச்சியா? வடமொழிப் புணர்ச்சியாயின் 'இலக்கண சல்லாபம்' என நில்லாது சகரவியஞ்சனம் மிகுந்ததெப்படி? தென்மொழிப் புணர்ச்சியாயின் இலக்கணம் முடிப்பதெப்படி? வடமொழி தென்மொழி வல்ல பண்டிதர்களின் சாட்சியம் யாது? சகரம் அச்சுப்பிழையாய் வந்ததாயின் அது பிழை திருத்தத்திற் காட்டப்படாத தென்னையோ? அன்றியும் ஓரிடத்தாவது சகாரமின்றி 'இலக்கண சல்லாபம்' என்றெழுதப்படாது, எவ்விடத்தும் 'இலக்கணச் சல்லாபம்' என்றெழுதப்பட்டிருப்ப தென்னை?

(2) "தமிழ்ப் பாஷையின் ஆதார எழுத்துக்கள் எத்தனை? முப்பத்தொன்று. இவை முதலெழுத்துக்கள் எனப்படும்" என்றீர். முதலெழுத்துக்கள் முப்பத்தொன்றென்பது நுங்கருத்தாயின், நன்னூலாசிரியர் 'உயிரு முடம்புமா முப்பது முதலே' என்ற தென்னை? உம்முடைய நூலுக்குச் சாட்சியங் கூறவந்தவருள் ஒருவர் இந்நூலை "நன்னூலுக்கு வழிகாட்டி என்பது என் அனுபவ பரீக்ஷை" என்றுரே. அவர் கருத்தென்னை?

(3) 'முள்ளி' என்பது முள்ளுடைமை காரணம்பற்றி ஓரினத்திற்குப் பொதுவாக இட்டுக்கொண்டமையால் காரணவிடுகுறிப் பொதுப்பெயரென்றீர். காரணம் பற்றிப் பொதுவாக இட்டுக்கொண்ட பெயர் காரண விடுகுறிப் பொதுப்பெயராவ தெப்படி?

(4) "பரமன் என்பது பரமுடைமை காரணம்பற்றிக் கடவுளுக்கு மாத்திரம் கருதுகின்றமையாற் காரணச் சிறப்புப்பெயர்" என்றீர். "பரமுடைமை" என்றதன் பொருளென்னே? 'பரமன்' என்பதிற் பகுதி விகுதிகள் யாவை? பகுபதம் முடிக்குமா றெங்ஙனம்? நீர் இங்கே கடவுளென்றது யாரை? நும் யேகோவா மூர்த்தியையோ?

(5) தொல்லாசிரிய ரெல்லாம் ஐம்பாலென்று முழங்க, அதனைச் சற்றுங் கருதாது ஆண்பால், பெண்பால், அல்பாலென மூப்பாலென்றீர். பின்னர் மூப்பாலையுங் கடந்து அப்பாலும் ஓர் பாலுண்டென்று போதர, "ஆண் பெண் கலந்துவரில் விரவுப் பாலென அமைக்குக" என்றீர். நன்று நன்று. நைடதத்து நாட்டுப் படலத்தில் "விழுந்த வஞ்சிறை" என்னுஞ் செய்யுளில் "மெல்லரும்பு கிழிந்து வார்தரு தேறலும்", "பழங் கனிந்து வீழ் தேறலும்" என்பன போல நின்ற ஆண் பெண் கலந்து வரில் என்னும் விதிப்படி ஆண் பெண் கலக்கவரும் பால் விரவுப் பாலில் அமையுமாயின், கறந்து வரும் மூலைப்பால், கள்ளிப் பால் முதலியவை எந்தப் பாலில் அமையும். சொல்லும், சொல்லும்.

(6) "முற்றுவினை விளம்பு முற்று, ஏவல்முற்று, வியங்கோள்முற்று என மூவகைப்படும். விளம்புமுற்றுவது இடங்காலங்களில் நிகழ்ந்த, நிகழ்கின்ற, நிகழும் செயல் களைச் சொல்லுதல் மாத்திரையாய் நிற்கும் முற்றுவினை விளம்பு முற்றெனப்படும்" என்றீர். ஓகோ! இந்த விளம்பு முற்று வினையை எங்கே கண்டுபிடித்தீர்? நூதனம்! நூதனம்! நீர் முற் கூறிய இறந்த, நிகழ்கால, வருங்கால முற்றுவினைகளுக்கும், நும் விளம்பு முற்றுக்கும், இவ் விரண்டின் உதாரணங்களுக்கும் பேதம் யாது?

(7) 'மெய்ம்மயக்கம்' எனற்பாலதை 'மெய்மயக்கம்' என்றும். 'இயல்புபுணர்ச்சி' எனற்பாலதை 'இயல்புப் புணர்ச்சி' என்றும் அச்சுப்பிழை என்றுதானுஞ் சொல்ல இடமில்லாமல் எவ்விடத்திலும் எழுதிவிட்டீர். இவற்றிற்கு விதி யாது?

(8) "உகரவீற்றின் பின் உயிர்வரின், உயிர்கெடும்" என்றீர். அப்படியாயின் உகர வீறெல்லாம் உயிர்வரக் கெடுதல் வேண்டும். அங்ஙனமாகாது சில வீறு கெடுதலும் சில கெடாதொழிதலும் என்னையோ?

(9) இலக்கணஞ் சொல்லு முறைமையில் "வான் என்பது உருபு தொக்க ஏழாம் வேற்றுமைச் சந்தி" என்றீர், இரு மொழிக்கிடையிலன்றி ஒரு மொழிக்கண் வேற்றுமைப் புணர்ச்சி வர எங்கே கண்டீர்."

(10) இவ் வினாக்களுக்கு நீர் விடை சொல்லாதொழிவீராயின் நும் சல்லாபத்தை வியந்து "இது வாசக நடை பெற்ற இலக்கண நூலெவற்றையும் தன்கீழ்ப்படுத்தித் தானே தனக்கு நிகராக வீளங்குகிறது" என்றவராவது, "சல்லாபம் வாய்த்த திளைஞருக்கே" என்றவராவது விடைசொல்லக் கடவர்கள்.

இங்ஙனம்,

சல்லாப விநோதன்.

புலவரும் சபாபதிநாவலரும் (1843 — 1903)

புலவர் சபாபதி நாவலருடைய நூல்களைப் பற்றித் "திராவிடப் பிரகாசிகைப் பிழைகள்" உட்படப் பல கண்டனங்களை 1888-ஆம் ஆண்டுக்கும், 1900-ஆம் ஆண்டுக்குமிடையில் எழுதினர். அக்கண்டனங்கள் எழுதப் படுதற்குரிய காரணங்கள் ஈண்டு ஆராயப்படத்தக்கன.

நாவலரும் தாமோதரம்பிள்ளையும்

தமிழ் வள்ளலாகிய முவ்சாகிப் சி. வை. தாமோதரம்பிள்ளை பீ.ஏ., பீ.எல். மிகப் பிரயாசப்பட்டு ஏட்டுச் சுவடியிலிருந்த இலக்கண விளக்கம் என்னும் அரியநூலை 1889-ஆம் ஆண்டு அச்சிற் பதிப்பித்தனர். இந்நூலுக்கு அவர் எழுதிய முகவுரையில் மாதவச் சிவஞான முனிவர் இயற்றிய இலக்கண விளக்கச் சூறாவளியில், இலக்கண விளக்கத்தைப் பற்றிக் கூறிய குற்றங்கள் பொருத்தமற்றன வென்று பல நியாயங்களைக் காட்டி நிரூபித்தனர். திருவாவடுதுறை யாதீனத்துப் புலவரும், தமது உபாசனை குருவுமாகிய முனிவரைப் பிள்ளையவர்கள் கண்டித்தெழுதியது, மேற்படி ஆதீனப் புலவராகிய நாவலருக்குப் பெருங் கோபத்தை உண்டுபண்ணியது. அவர் பிள்ளையவர்களைக் கண்டித்துப் பல கண்டனங்களை வரைந்தனர். இவற்றைக் கண்ணுற்ற புலவர் சிவஞான முனிவரையும் நாவலரையும் கண்டித்துப் பல கண்டனங்களைச் ஸ்ரீலோகரஞ்சனி என்னும் பத்திரிகையில் வரைந்தனர். அவற்றுள் முக்கியமானவை 'ஆசிரிய விவகாரம்' (1-9-88), 'என்மனோர் என்னுஞ் சொன்முடிபு' (15-11-88), 'புண்ணிய பூமி' (15-11-88), 'இலக்கியவிடயோபந்நியாசம்' (15-11-88), 'கல்விப்பிரகரணம்' (21-8-89), 'சாஸ்திர வினாக்கள்' (15-11-88), 'துருக்கையறியாமை' (29-1-1888), 'சூகசிகிற்சை' (29-1-1888) என்பன. நாவலர் 1894-ஆம் ஆண்டுக்குச் சமமான ஜய வருடம் வைகாசி மாதம் எழுதி வெளியிட்ட 'இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு' என்னும் கண்டனமொன்றிற் பிள்ளையவர்களைத் ''தமிழ்க் கல்வியறி வில்லாதவர்'' என்றும், ''சூறாவளியின் பெருநுட்ப மறிதற்கேற்ற மதிநுட்ப மில்லாதவர்'' என்றும், 'நும் வெள்ளறிவிற்கு ஏழாலைச் சிற்றூர் வழூஉச் சொற்புணர்ந்தவர்' என்றும் பலவாறு இழித்துக் கண்டித்தனர். தாமோதரம்பிள்ளையை இவ்வாறு இழிவான முறையிற் கண்டனஞ் செய்தது புலவருக்கு மிக்க வருத்தத்தை உண்டு பண்ணியது. நாவலர்

திராவிடப் பிரகாசிகை என்னும் நூலை 1899 இல் வெளியிட்டபோது புலவர் 'திராவிடப் பிரகாசிகைப் பிழைகள்' என்னும் கண்டனத்தை வரைந்தனர். அக் கண்டனத்துள் எடுத்துக் காட்டப்பட்ட பிழைகளுள் ஒன்று 'வேத்துணையோர் பரிபாடல்' என்பது. அது புலவரால் 'எத்துணையோ பரிபாடல்' எனத் திருத்தப்பட்டது. அத்திருத்தத்தைப் பல பண்டிதர்கள் மிகப் பொருத்தமுடைய தென ஏற்றுக்கொண்டனர்.

புலவர் சிவஞானமுனிவரைக் கண்டித்தெழுதிய கண்டனங்களுள் ஒன்று கீழே தரப்படுகின்றது:

'என்மனார்' என்னுஞ் சொன்முடிபு

"என்மனார் என்னுஞ் சொல்லைப் பகுபத முடிப்புழி என் + ம் + அன் + ஆர் என முடிப்பதே யோக்கியமாகும். பின் 'என்மருமுளரே' என்புழி மகரவிடைநிலை கொள்ள வைத்தலினாலும், இங்ஙனங் கொள்ளாக்கால் 'உண்டன', 'உண்ட' என்புழி முறையே 'டன்' இடைநிலை 'ட்' இடைநிலை என்பார்க்குக் காட்டாதலினாலும், சுருங்கச் சொல்லல் வனப்பழிதலாலும் 'என்மனார்' என்புழி மகர விடைநிலையும் 'அன்' சாரியையும் கொள்ளலே ஆசிரியர் கருத்தென்க. இதனை அறியாது சிவஞானமுனிவர் "மன்" எதிர்கால இடைநிலை என்றார். 'என்மனார்', 'என்மார்', என்புழி, 'உண்டன' 'உண்ட' என்புழிப் போல இரண்டற்கும் சாரியை நீக்கி மகரவிடைநிலை யொன்றே கோடலா? வேறு வேறு கோடலா? தக்கது யாது? சேனாவரையர் "என்மனார் என்பது செய்யுண் முடிபெய்தி நின்றதோராரீற் றெதிர்கால முற்றுச்சொல்" என்றாரன்றி இடைநிலை கூறினாரல்லர். நச்சினார்க்கினியர் சிந்தாமணியிலே கனகமாலையார் நிலம்பகத்திலே (உஅசு) 'என்மரும்' என்புழி 'என்மார்' 'என்மர்' எனத் திரிந்தது 'உண்மரும்', 'தின்மரும்' என்றாற் போல என முடித்தார். இம் முடிபுகளை அறிஞர் ஆராயக்கடவர்."

ஸ்ரீலோகரஞ்சனி. சென்னை
(10-11-88)

ஓர் அரிய சந்திப்பு

நாவலர் தம்மைப் பற்றிப் பல கண்டனங்களைப் பத்திரிகை வாயிலாகவும், துண்டுப் பத்திரங்கள் வாயிலாகவும் எழுதி வெளிப்படுத்திய புலவரைப் பற்றி அறிய வேண்டும் என்னும் ஆசையை மனதிற் கொண்டார். நாவலர் ஒருமுறை இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது அம்முயற்சியில் ஈடுபட்டனர். ஒருநாள் அவர் கீரிமலைக்குச் சென்று தீர்த்த மாடித் திரும்பிப் போகும்போது தாம் ஏறிச் சென்ற மாட்டுவண்டியை மல்லாகம் நாற்சந்தியில் நிற்பாட்டி, அங்கு சுன்னாகம் போகக் காத்துநின்ற ஒருவரைத் தமது வண்டியில் ஏற்றிச் செல்லும்போது அவரிடம் புலவரைப் பற்றி வினவினர். வண்டியில் ஏறியவர் தான் குமாரசுவாமிப் புலவர் என்பதை அவர் அறிந்து கொள்ளவில்லை. வண்டிக்குள் இருப்பவர்தான் நாவலர் என்பதையும் புலவர் முதலில் அறிந்துகொள்ளவில்லை. நாவலர் 1868-ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியாவில் வசித்தமையாற் புலவர் அவரை நேரில் அறிந்துகொள்ளவில்லை. ஒருவரையொருவர் அறியாமல் இருவரும் நெடுநேரம் உரையாடினர். நாவலர் புலவரைப் பற்றி வினவிய வினாக்களுக்குப் புலவர் வேடிக்கையான மறுமொழி பகர்ந்தனர். தம்மோடு உரையாடுபவர் நாவலராய் இருக்கக் கூடும் என்று புலவர் அனுமானித்துக் கொண்டார். ஆனால் அவர் தம்மை யாரென்று அறிமுகப்படுத்தவில்லை. வண்டி சுன்னாகம் வந்ததும் நன்றி கூறிவிட்டுப் புலவர் வண்டியினின்று இறங்கிச் சென்றனர். இதற்குப்பின் இருவரும் ஒரு போதும் சந்திக்கவில்லை.

சாமிநாதையரும் புலவரும்

புலவர், உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த சீவக சிந்தாமணிப் பதிப்பிலுள்ள பிழைகளைத் திரட்டி ''சீவக சிந்தாமணிப் பிழைகள்'' என்னும் கண்டனத்தைச்

சி. பொன்னம்பல தேசிகருடைய கையெழுத்தோடு 1901-ஆம் ஆண்டு வெளியிட்டனர். இக்கண்டனம் புல வரால் எழுதப்பட்டதென்பது யாவரும் அறிந்த உண்மை யாகும். சாமிநாதையரும் இதை நன்கறிந்திருந்தனர். புலவர் இக்கண்டனத்தை வரைதற்குரிய காரணம் ஈண்டு ஆராயற்பாலது.

ஐயரும் முருகேச பண்டிதரும்

சுன்னகம் பூ. முருகேச பண்டிதர் 1878-ஆம் ஆண்டு இந்தியா சென்று வசிக்கின்ற காலத்திற் கும்பகோணம் பொற்ருமரை உயர்தர வித்தியாசாலையில் ஒரு தமிழ்ப் பண்டிதர் பதவிக்கு இடமிருப்பதை அறிந்து அவ்வித்தியா சாலைப் பொறுப்பதிகாரியாகிய தண்டலம் கோபாலரு வுக்குத் தமது விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பினர். கோபாலருவ் அப்போது கும்பகோணம் கல்லூரி அதிப ராய் இருந்தனர். வேலைக்கு விண்ணப்பஞ் செய்தவர்கள் தொகை அதிகமாயிருந்தமையால் அவர்களைப் பரீக்ஷித் துச் சிறந்த ஓர் பண்டிதரைத் தெரிந்தெடுக்குமாறு தமது கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகிய தியாகராசச் செட்டியாரை அவர் வேண்டினர். குறித்த தினமொன் றிற் பரீக்ஷை நடாத்தப்பட்டது. பரீக்ஷையை எடுத்த வர்களுள் ஒருவராகிய முருகேச பண்டிதர், விஞ்ஞாபத்தி ரத்திற் பிழைகள் இருப்பதைக் கண்டு, விடை எழுதாது விடுத்து, அவற்றைப் 'பேஞ்'வாற் கீறி, நியாயங்காட்டி நிரூபித்ததோடமையாது, கேள்வி கேட்ட முறையையுங் கண்டித்து, விஞ்ஞாபத்திரம் அமையவேண்டிய முறையை யும் ஒரு செய்யுளில் அமைத்து எழுதி, எல்லாருக்கும் முன்னர் விடைப் பத்திரத்தைச் செட்டியாரிடம் கொடுத்து விட்டு வெளியேறினர். செட்டியார் விடைப் பத்திரத்தை வாசித்துக் கோபமும், திகைப்பும் அடைந்த வராய்ச் செய்வதறியாது கோபாலருவிடம் அதனை ஒப்படைத்தனர். அவர் பண்டிதருடைய விடைப் பத்தி ரத்தைப் பார்த்ததும், அவருடைய ஆழ்ந்த கல்வியறி வையும், மதிநுட்பத்தையும் மிகவும் வியந்து நடுநிலை

தவறாது அவருக்கே பண்டிதர் வேலையைக் கொடுத்தனர். தியாகராசச் செட்டியாருக்கு ஏற்பட்ட அவமானம் காரணமாகச் சாமிநாதையரும் பண்டிதரிடத்தில் வெறுப்புடையவராய் இருந்தனர். பண்டிதருடைய கர்வத்தை அடக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதிற் குடிகொண்டது. அவ்வாறு செய்தற்கு வாய்ப்பான காலம் 1888-ஆம் ஆண்டில் வந்தது. முருகேச பண்டிதர் பிரவேசப் பரீக்ஷைப் பாடப்புத்தகமாகிய பெருந்தேவனார் பாரதத்தின் உத்தியோக பருவத்திற்கு ஓர் உரையை எழுதி வெளியிட்டனர். இவ்வுரையைக் கண்டித்துச் சாமிநாதையர் மாணாக்கராகிய குடவாயில் 'நேட்டிவ் ஹைஸ்கூல்' தமிழ்ப்பண்டிதர் ஐ. சண்முகம் பிள்ளை "ஞானசூசனி மறுப்பு", "நிராகரதிமிரபானு" என்னுங் கண்டனங்களை எழுதினர். பண்டிதரும் அவைகளுக்கு மாறாக "முன்னென்னுஞ் சொல்வழக்கு" (தரங்கை நேசன் 1889) முதலிய கண்டனங்களை எழுதினர். இது விஷயத்திற் பண்டிதருக்கு உதவிபுரிந்தவர்கள், கும்பகோணம் இந்து யூனியன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும், 'தர்க்கசூடாரதாலுதாரி' என்னும் மறுநாமம் பூண்டவருமாகிய யாழ்ப்பாணம் திருஞான சம்பந்தப் பிள்ளையும், யாழ்ப்பாணம் விசுவலிங்கப்பிள்ளையுமாவர். சாமிநாதையருடைய மாணாக்கர் எழுதிய கண்டனங்களில் முருகேச பண்டிதரை "ஈழநாட்டாரும் சாதாரண இலக்கிய விலக்கணக் கல்வியறிவில்லாத அற்பரும்" என்றும், 'கும்பகோணம் ஹைஸ்கூலில் இரண்டாவது போதகர்' என்றும் இழிவாகக் கூறப்பட்டனர். இதைக்கண்ட பண்டிதர் உடனே 'சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம்' என்னும் கண்டனத்தை வரைந்தனர்.

சீவகசிந்தாமணிப் பிழைகள்

புலவர் தமது தமிழ்க்குரவர் கண்டிக்கப்பட்டதை உத்தேசித்துச் "சீவகசிந்தாமணிப் பிழைகள்" என்னும் கண்டனத்தை எழுதி ஓர் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டனர். இக்கண்டனத்துள் மாலையாரிலம்பகம்

வரையிலுள்ள நூறு பிழைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுட் சிலவற்றைக் கீழே தருதும்.

1. நாமகளிலம்பகம். பக்கம் உஎ, பாட்டு ருச.

'கிம்புரி வயிரங் கோளகையுமாம்' என்பதைக் 'கிம்புரி வயிரங் கொள்கையுமாம்' எனப் பதிப்பிக்கப்பட்டது. கொள்கை என்பதற்கு ஓரு பொருளுமில்லை. நச்சினர்க் கினியரும் மீமிசை என்பது போலக் கிம்புரி வயிரம் என் பதைக் கொண்டு கோளகை என்றுர். கோளகை-பூண். "புணருங் கோளகையே தாங்கி வயிரம் கிம்புரிபூணற்பேர்" என்பது சூடாமணி.

2. பக்கம் சுவ, பாட்டு சஅக. உரை.

'காமமே அடிப்பட்டு நின்ற' என்பது 'காமமே அடிபட்டு நின்ற' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது. அடிப்படுதலும் வேறு, அடிபடுதலும் வேறு.

3. பக்கம் சுசு, பாட்டு ஙகஉ.

'ஈன்றவென்ருர் பழத்தின் நெருக்கால்' என்பது விசேட வுரையில் 'நெருக்கால்' என்பது 'செருக்கால்' என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கண்டனத்திற் காட்டப்பட்ட பிழைகள் எல்லாம் நூலின் இரண்டாம் பதிப்பில் திருத்தப்பட்டுள்ளன.

'சிவகசிந்தாமணிப் பிழைகள்' என்னும் கண்டனத் துக்கு எழுதப்பட்ட முகவுரையிற் புலவர் ஐயருடைய கடுமையான உழைப்பையும், பிரயாசத்தையும் பாராட் டாது விடவில்லை. அக்கண்டனத்துக்கு எழுதப்பட்ட முகவுரைப் பகுதி வருமாறு:

"ஓரு நூலைப் புதிதாக அச்சிடுவதிலும் முன்னுள்ள நூல்களைத் திருத்தி அச்சிடுவது மகா சங்கடம். அந்நூல் கள் எவ்வளவு பழைமை பெற்றனவோ, அவ்வளவுக்குச்

சங்கடங்கள் அதிகப்படும். பழைய நூல்களைத் தேடி எடுத்து அச்சிடுவோருக்கு நாமெல்லாம் கடமை பூண்டவ ராயிருக்க வேண்டும். இவ்வாறச்சிட்டவருள் உத்தமதான புரம் ஊ. வே. சாமிநாதையரொருவர்."

நட்புறவு

புலவருக்கும் சாமிநாதையருக்கும் இடையில் 1886-ஆம் ஆண்டு தொடக்கம் நட்புறவு ஏற்பட்டதென் பது முன்னர்க் குறிப்பிடப்பட்டது. புலவர் கண்டன மெழுதிய காலத்தில் இருவருக்குமிடையில் நட்புறவு குறைந்தது. பின்னர் 1913-ஆம் ஆண்டு தொடக்கம் புலவர் இருக்குமளவும் இருவருக்குமிடையில் நட்புறவு அதிகரித்தது. அக்காலத்தில் ஐயர் புலவருக்கு ஐந்து கடிதங்கள் வரைந்துள்ளார். அவர் புலவருக்கெழுதிய முதற் கடிதமும், மற்றையவற்றின் பகுதிகளும் கீழே தரப்படுகின்றன:

கடிதம்

உ

சிவமயம்

தியாகராச விலாசம்,

திருவெட்டீசுவரன் பேட்டை,

16-3-1913.

வித்துவ சிரோன்மணியாகிய மா. ரா. ரா. ஸ்ரீ குமாரசுவா மிப்பிள்ளையவர்களுக்கு ஸ்ரீ ஆனந்த நடராசருடைய திரு வருளால் எல்லா மங்களங்களும் உண்டாகுக.

இவ்விடம் க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ள வேணவா வுடையேன்.

நீங்கள் பேரன்புடன் விடுத்த வினைப்பகுபத விளக்கம் என்னும் புத்தகம் வரப்பெற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

மேற்படி புத்தகம் உருவத்திற் சிறிதாயிருந்தாலும் பொருளமைப்பில் மிகப் பெரிதாகவிருக்கிறது. எத்தனை வருடம் கடினமாக உழைத்தீர்களோ தெரியவில்லை.

தங்களுடைய வேலைகளுள் எதுதான் சாதாரணமானது. தங்களுடைய விஷயத்தில் இத் தமிழ்நாடு மிகவும் கடப்பாடுற்றிருக்கிறது.

தங்களது உழைப்புக்களைப் பார்த்துச் சந்தோஷப்படுபவனையிருந்துந் தங்களை நேரிற் கண்டு பல வருடங்களானமையால் தங்கள் காட்சியிலும் தங்களோடு உரையாடுவதிலும் மெத்த ஆவலுள்ளவனாயிருக்கிறேன். எப்போது திருவருள் கூட்டி வைக்குமோ அறிகிலேன்.

இங்ஙனம்,
அன்பன்,
வே. சாமிநாதையர்.

கடிதப் பகுதிகள்

"தங்கள் போன்றவர்கள் இருந்து விளங்குவதுதான் தமிழ் மடந்தையின் ஆக்கத்துக்குக் காரணம்." *(20-10-1914)*

"சௌக்கியத்தை அடிக்கடி எழுதும்படி செய்யவேண்டுகிறேன். உடல் வலிமையையும் அறிவின் வன்மையையும் பெற்று நீங்கள் நீடூழி வாழ்க. சுபம்." *(26-1-1915)*

புலவர் இறந்தபோது அவர் எழுதிய இரங்கற் கடிதம் இந்நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்குக் காண்க.

இடைக்காலம் (1898 — 1902)

7. இடைக்காலச் சிறப்பும், அகராதி வேலையும்

புலவர் ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலையை 1898-ஆம் ஆண்டு விட்டு நீங்கிய காலந் தொடக்கம் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராக 1902-ஆம் ஆண்டு நியமனம் பெற்ற காலம் வரைக்கும் உள்ள காலம் இடைக்காலமாகும். இக்காலம் புலவர் வாழ்க்கையில் ஒரு பொற்காலம் என்று கூறத் தகுதி வாய்ந்தது. இக்காலத்தில் அவர் உடுப்பிட்டி நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளைக்குத் தமிழக ராதி இயற்றும் வேலையில் உதவிபுரிந்தனர். தமிழ் கற்க விரும்பி யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்த மாணவர்களுக்குக் கல்வி கற்பித்தனர். இக்காலத்தில் மாணவர்களுக்குப் பயோகமான பற்பல நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டனர். இக்காலத்தில் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளிவந்த பல பத்திரிகைகளுக்கு இலக்கியவிலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வரைந்தனர். அவரது நூலுரைகளையும், கட்டுரைகளையும் வாசித்த பண்டிதர்களும், புலவர்களும் அவருடைய நண்பர்களாயினர்.

அகராதி வேலை

உடுப்பிட்டி வாசியும், பெரும் புலவருமாகிய குமாரசுவாமி முதலியாரது புத்திரனுகிய நீதிபதி கதிரைவேற்பிள்ளை, 'தமிழ்ச்சொல் அகராதி' என்னும் பெயரிய அகராதியை இயற்றங் காலத்திற் புலவரை உதவிபுரியுமாறு அழைத்தனர். புலவர் அவரழைப்புக் கிணங்கித் தமக்கு ஓய்வுள்ள நாட்களில் அவ்வகராதி வேலையில் ஈடுபட்டனர். நீதிபதி தமது வேலையினின்று 1898-ஆம் ஆண்டு இளைப்பாறியபோது அவர் நல்லூரிலிருந்து

அகராதி வேலையைச் செய்தனர். புலவர் அதே ஆண்டில் ஏழாலை வித்தியாசாலையிலிருந்து நீங்கினமையால் தமது முழு நேரத்தையும் அவரது அகராதி வேலையிற் கழித்தனர். புலவர் அகராதி வேலையிற் காட்டிய ஊக்கமும், ஆர்வமும் நீதிபதிக்கு மிக்க திருப்தியை உண்டுபண்ணின தென்பது அவரது பின்வரும் கடிதங்களால் நன்கறியக் கிடக்கிறது:

கடிதம் I

வல்லிபட்டித்துறை,
அக்டோபர், உடு-ககூ0உ

எனதன்பான குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு,

இந்த மாதம் கடு-ம் தேதி நல்லூரை விட்டு வெளிப் பட்டு இவ்விடம் ஊரிக்காட்டில் இருக்கிறேன். இன்னும் மூன்று கிழமைக்கு இருக்க உத்தேசம். உமது செய்திகள் ஒன்றுந் தெரியவில்லை. முத்துத்தம்பி உமது காரியத்தைப் பற்றி ஒன்றும் பேசிக்கொள்ளவில்லை. நீர் பள்ளிக்கூடத்தில் ஏற்பட்டு விட்டீர் என்று புதினப்பத்திரிகை சொன்னதாக விளங்குகிறேன். அது மெய்தானு?

அகராதி அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கி ஒரு வருஷ காலமாயிற்று. உமது பிரயாசம் அதிகம் வேண்டியிருந் தும் அதனை அநுபோகிக்கக் கூடாமலே பெரும்பாலும் சம்பவித்திருக்கின்றது. முன் நாங்கள் திருத்திக்கொண்ட வைகள் பலவகையும் மாறுதலடைந்தே அச்சுக்குப் போகின்றன. அப்படிப்பட்ட சமயத்திலே நோயினாலும், பிற ஏதுக்களினாலும் நீர் என்னுடனிருந்து வேலை பார்க்கக் கூடாமல் வந்துவிட்டது. இனிமேலும் நீர் என்னுடன் இருந்து வேலை பார்க்க முடியுமோ? என்பது எனக்குத் தோன்றவில்லை. வீட்டிலிருந்து முன்போற் பார்க்கும் வேலையல்ல. என்னுடன் இருந்தே பார்க்கவேண்டும். அச்சுக்கனுப்புகிறவைகளைப் பார்வையிடவும், திருத்தவும்,

கூட்டவும், சேர்க்கவும், கழிக்கவும் அதிக பிரதான வேலை யாய் இருக்கின்றதென்பது இதுவரையில் நடந்த வேலைக ளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். உம்முடைய பிரியம் எப்படி? என்பது தெரிவிக்க. இப்போது உம்முடைய சுகம் எப்படி?

இங்ஙனம்,
கு. கதிரைவேற்பிள்ளை.

கடிதம் II

வல்லிபட்டித்துறை,
நவம்பர், 8-கக0உ

எனதன்பான குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கு,

நீர் பள்ளிக்கூடத்தில் ஏற்பட்டிருக்கிறபடியால் எனது வேலையைத் திருத்தியாகப் பார்க்கச் சமயம் இருக்கும் என்று எனக்குத் தோற்றவில்லை. இப்போது இருக்கிற வேலை முன்போல வீட்டிலிருந்து செய்யக்கூடியதாய் இருக்க மாட்டாது.

நீர் என்ன வகையில் உதவி செய்யப் போகிறீர் என் பது யோசனையாயிருக்கிறது. நீர் அசௌகரியமாய் வீட் டோடிருந்தும் அகராதி வேலையில் உமக்கும் அபிமானம் இருப்பது பற்றிச் சிறிது வேலை செய்ததற்காக நன்றி கூறுகின்றேன்.

இன்னும் ஒரு வருடத்திற்குள்ளே ஏதும் கூடியமட்டில் வேலை செய்து முடிவுகட்ட வேண்டும். என் வாழ்நாள் முடிவுக்குக் கடவுள் சித்தம் என்னவோ அறியேன். கூடி யதை விரைவிற் செய்யவேண்டும்.

இங்ஙனம்,
கு. கதிரைவேற்பிள்ளை.

புலவர் நீதிபதியோடு கூடி வேலை செய்ததன் பல னாகப் பழந்தமிழிலக்கிய விலக்கணங்களையும், நிகண்டுகளை யுந் துருவித் துருவி ஆராய்ந்து பிழைபட வழங்குஞ் சொற்களின் உண்மை உருவத்தை நிச்சயம் பண்ணும் நுட்பவறிவைப் பெற்றார். மேலும் அவர் நவீன முறை யைப் பின்பற்றி அகராதி தொகுக்கும் முறையையும் அறிந்தனர். இவ்வனுபவங்கள் யாவும் அவர் தமது இலக்கியச் சொல்லகராதி இயற்றுவதற்குப் பேருதவியா யிருந்தன.

நற்சாட்சிப் பத்திரம்

புலவர் அகராதி வேலையை விட்டு நாவலர் பாட சாலைத் தலைமை யாசிரியராக நியமனம் பெற்றபோது அவர் புலவருக்குச் சிறந்ததொரு நற்சாட்சிப் பத்தி ரத்தை வழங்கினர். அதுவருமாறு :

Testimonial

Nallur, 1902.

I have been acquainted with Ampalavanar Kumaraswamy Pillai of Chunnakam for several years. Kumaraswamy Pillai is a very good Tamil scholar versed in the different branches of Tamil Literature. He is besides a poet. I regard him as a gentleman bearing good character and unassuming manners.

C. W. Kathiravelpillai.

8. இடைக்கால மாணவர்கள்

இடைக்காலத்திற் புலவரிடம் கல்வி கற்றவருள் முக்கியமானவர்கள், இளவாலை க. சங்கரப்பிள்ளை, கொக்குவில் சீ. முருகேசையர், கந்தரோடை அ. கந்தையாபிள்ளை, நியாயவாதி வட்டுக்கோட்டை க. சிதம்பரநாதன், வண்ணார்பண்ணை ஆ. சண்முகரத்தின ஐயர், வித்துவசிரோன்மணி புன்னாலைக்கட்டுவன் சி. கணேசையர், பண்டிதர் தென்கோவை ச. கந்தையாபிள்ளை என்போர். இளவாலை வாசியாகிய சங்கரப்பிள்ளை என்பவர் புலவருடைய நெடுங்கால மாணவருள் ஒருவர். இவர் புலவரிடம் சித்தாந்த சாஸ்திரங்களை முறையாகக் கற்றவர். புலவர், தமிழ்ப் புலவர் சரித்திரம், சிசுபாலசரித்திரம் என்னும் நூல்களை இயற்றும்போது இவர் அந்நூல்களைப் பிரதிபண்ணி அவருக்கு உதவிபுரிந்தனர். கொக்குவில் வாசியாகிய சீ. முருகேசையர் என்பவர் புலவரிடம் முறையாக இலக்கிய விலக்கணங்களைக் கற்றவர். புலவரிடத்தில் பேரன்பு பூண்டவர். தமிழ்ப்புலவர் சரித்திரம் எழுதும்போது புலவருக்கு வேண்டிய நூல்கள் யாவற்றையும் தேடிக்கொடுத்து உதவி புரிந்தவர். கந்தரோடை வாசியாகிய அ. கந்தையா உபாத்தியாயர் புலவரிடம் இலக்கிய விலக்கணங்களை முறையாகக் கற்றுத் தமது ஊரிலுள்ள வித்தியாசாலையில் தமிழாசிரியராகக் கடமை பார்த்தனர்.

வட்டுக்கோட்டை வாசியும், நியாயவாதியுமாகிய க. சிதம்பரநாதன் என்பவர் புலவரிடத்து இலக்கிய விலக்கணங்களைக் கற்றுத் தேறிப் பல செய்யுள் நூல்களையும், நாடக நூல்களையும் இயற்றிப் புகழ் படைத்தனர். இவர் சாகுந்தல நாடகம், கதிரைமலைப் பள்ளு முதலிய நூல்களை இயற்றியுள்ளார். வண்ணார்பண்ணை வாசியாகிய சண்முகரத்தின ஐயர் புலவரிடம் கற்று வல்லவராகி 'ஞானப்பிரகாசம்' என்னும் பத்திரிகையை

1910-ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்திப் புகழ் படைத்தனர். இவருடைய விருப்பப்படி புலவர் வடமொழி மாகத்தை மொழிபெயர்த்துப் பாகம் பாகமாய் அப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டனர். புன்னலைக்கட்டுவன் வாசியாகிய வித்துவசிரோன்மணி சி. கணேசையர் முதலில் ந. ச. பொன்னம்பலபிள்ளையிடம் தமிழிலக்கிய விலக்கணங்களை முறையாகக் கற்றனர். பொன்னம்பல பிள்ளை 1897-ஆம் ஆண்டு இறந்த பின்னர் இவர் புலவரிடம் வந்து இரகுவமிசம், இராமாயணம், தணிகைப் புராணம் முதலிய நூல்களைக் கற்றுப் பாண்டித்தியம் அடைந்தனர். இவர் இரகுவமிசப் புத்துரை, மருதடியந்தாதி, குசேலர் சரித்திரம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். புலவர் இறந்தபின் அவருடைய சரித்திரத்தை எழுதினவரும் இவரே. தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை இக்கால மாணவருள் தலைசிறந்து விளங்கினர். இவர் தமிழோடு ஆங்கிலம், வடமொழி என்னும் மொழிகளைக் கற்று வல்லவராயினர். இவர் கொழும்பு அரசாங்கத் தமிழ் ஆசிரியர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராய்ப் பலவருடங்கள் வேலைபார்த்தனர். புலவர் கைம்மாறு கருதாது கற்பித்த உதவியை ஒரு போதும் மறவாது அவரிடத்து இடையறு அன்பு பூண்டவர். அவர் புலவருக்கு எழுதுங் கடிதங்களில் தாம் அவராற் பெற்ற நன்மைகளை அடிக்கடி எழுதும் வழக்குடையர். அவர் 9-9-15 இல் புலவருக்கு எழுதிய கடிதமொன்றில் பின்வருமாறு நன்றி கூறியுள்ளார்.

"அடியேன் பிள்ளைமைக் காலந்தொட்டு சிலரிடம் தமிழ் நூல்களைக் கற்றேனெனினும், அத்தகைய அறிவின் மிகுதிப்பாடு சிறிதாவது அடையப்பெற்றதற்கு முக்கிய காரணராய், அரும்பெறல் ஆசிரியராய் விளங்கியவர்கள், தோன்முறை தெரிந்து சொன்முட்டறுத்துப் பொருள் காணும் பேராற்றல் வாய்ந்த வித்துவ சிரோன்மணியும், அடியேன்பால் என்றுங் குன்றுத அன்புடையவர்களாய தாங்களே என்பது ஆபால கோபாலப் பிரசித்தம்."

அவர் இயன்மொழி வாழ்த்து, மணக்குட விநாயகர் ஒருபா ஒருபஃது, முருகவேள் துவாதச தோத்திர மஞ்சரி முதலிய நூல்களை இயற்றியுள்ளார். புலவர் மேலும் பல செய்யுட்களை இயற்றியுள்ளார். அவற்றுள் ஒன்றைத் தருதும்:

பொய்தவிரு நெஞ்சமுளான் புலவரெலாங்
கொண்டாடும் புலமை யாளன்,
வய்ய நிகழ் புகழாளன் வண்டமிழும்
பிறமொழியும் மரபி னுய்ந்தோன்,
கைதவமி லாதடியேற் கருங்கலைகள்
பலதெரித்த கருணை யாளன்,
செய்திகழும் வளச்சுன்னைக் குமாரசுவா
மிப்புலவன் திருத்தாள் போற்றி.

9. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம்

தமிழ்ச்சங்கத் தாபனம்

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் எங்கணும் ஆங்கிலக்கல்வி பரவியது. தமிழ்க்கல்வி சுருங்கியது. தமிழை அபிவிருத்தி செய்யும் நோக்கத் தோடு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகராகிய த. கைலாசபிள்ளை ஓர் தமிழ்ச் சங்கத்தை 1900-ஆம் ஆண்டில் தமது வித்தியாசாலையில் நிறுவினர். சங்கத் தலைவராகப் பிள்ளையவர்களே தெரிவுசெய்யப்பட்டனர். அதிகார புருடரும் சைவசித் தாந்தப் பிரசாரகருமாகிய கொக்குவில் சி. சபாரத்தின முதலியார் சங்கக் காரியதரிசியாகத் தெரிவு செய்யப் பெற்றனர். சங்கத்தின் வித்துவ அங்கத்தவர்களாகப் புலவர், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, வட்டுக்கோட்டை ஆறுமுக உபாத்தியாயர், நல்லூர் வே. கனகசபாபதி ஐயர், ஊரெழு சு. சரவணமுத்துப்புலவர் என்னும் ஐவரும் தெரிந்தெடுக்கப்பட்டனர். இச்சங்கம் பிரவேச பரீக்ஷை, பாலபண்டித பரீக்ஷை, பண்டித பரீக்ஷை முதலிய பரீக்ஷைகளை வருடந்தோறும் நடாத்தி அவற்றிற் சித்தியடைந்தவர்களுக்குப் பரிசும், பட்டமும் வழங்கியது. புலவர் இச்சங்கத்தின் முக்கிய பரீக்ஷகராகவும், விஷய ஆலோசகராகவும் இருந்து சங்க முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தனர்.

சென்னைத் தமிழகராதி

சென்னை அரசாங்கம் 1913-ஆம் ஆண்டு ஓர் தமிழ் அகராதியைத் தொகுத்தற்கு வண. யே. எஸ். சாண்ட்லர் என்னும் பாதிரியாரின் தலைமையில் ஓர் சபையை நியமித்தது. அச்சபை அகராதியின் மாதிரிப் பிரதியொன்றை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கு அனுப்பியது. யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் அப் பிரதியை

ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலவரை வேண்டியது. புலவர் அப்பிரதியிற் காணப்பட்ட பிழைகளைத் திரட்டி 4-4-1913 இல் நடந்த சங்கக் கூட்டத்தில் ஒரு நீண்ட தீர்மானத்தைக் கொண்டுவந்தனர். அக் கூட்டத்திற்குச் சமுகமளித்த பண்டிதர் சு. ஏரம்பையர், நியாயவாதி சு. குமாரசுவாமி, இந்துசாதனப் பத்ராதிபர் சு. சபாபதிப்பிள்ளை, வித்துவ சிரோன்மணி சி. கணேசையர், சி. சபாரத்தின முதலியார், தா. பொன்னம்பலபிள்ளை எம். ஆர். ஏ. எஸ்., ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. எஸ். டபிள்யு. குமாரசுவாமி முதலியோர் புலவருடைய ஆழ்ந்த மதிநுட்பத்தையும் ஆராய்ச்சித்திறனையும் வியந்து அவர் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து நிறைவேற்றினர்.

தீர்மானம் வண. சாண்ட்லருக்கு அனுப்பப் பட்டது. அவர் அதை வாசித்தபின் புலவரையும் மற்றுஞ் சில அங்கத்தவரையும் காண முடிவு செய்து, 7-2-1914 இல் யாழ்ப்பாணம் வந்து உடுவில் அமெரிக்கன் மிஷன் பெண்கள் பாடசாலையில் புலவரைப் பலமுறை சந்தித்து அகராதி விஷயமாகக் கலந்தாலோசனை செய்தனர். புலவர் அகராதியிலுள்ள குறைபாடுகளையும், அகராதி அமையவேண்டிய முறையையும் அவருக்கு எடுத்துக் கூறினர். புலவர் தாம் அரிதிலெழுதி வைத்திருந்த அகராதிக் கையெழுத்துப் பிரதியொன்றை அவருக்குக் கொடுத்துதவினர். அவர் புலவரை அகராதி வேலைக்குச் சென்னைக்கு வருமாறு கேட்டனர். புலவர் அதற்கு இணங்கவில்லை.

10 இடைக்கால நூல்கள்

இக்காலத்தில் புலவர் நீதிபதி கதிரைவேற்பிள்ளையுடைய 'தமிழ்ச் சொல்லகராதி' வேலையில் அதிகம் ஈடுபட்டிருந்ததன் காரணமாகப் புதிய நூல்கள் ஒன்றையும் இயற்றவில்லை. இக்காலத்தில் இயற்றப்பட்டன சில சிறப்புப் பாயிரங்களும், சில உரை நூல்களும், சில பதிப்பு நூல்களும் ஒரு வசன நூலுமாகும்.

I சிறப்புப்பாயிரங்கள்

புலவர் இக்காலத்தில் மூன்று நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளார். அவை, திருவெவ்வளூர் இராமசாமிச் செட்டியார் இயற்றிய திருவிடைமருதூர்க் கலம்பகம் (1900), சு. நடராசையர் இயற்றிய சந்தான தீபிகையுரை (1901), வீரப்பச்செட்டியார் பதிப்பித்த சிவக்ஷேத்திரவிளக்கம் என்பன. சிறப்புப் பாயிரங்கள் எண்சீர் விருத்தங்களாயும், அறுசீர் விருத்தங்களாயும் அமைந்துள்ளன. சிறப்புப்பாயிரங்களுள் ஒன்றைக் காட்டுதும்.

சந்தானதீபிகை சி. பா.

சோதிடந்தேர் பரம்பரையோன் சம்பு கேசன்
துணையடிப்பூ சகலெருவன் மரபில் வந்தோன்
சாதுகுண ராமலிங்க முனிவன் தந்த
சந்தான தீபிகைக்கோ ருரைதந் தானற்
கோதறுமம் முனிவன்வழித் தோன்ற லாகிக்
குலவியசுப் பிரமணியக் குரவன் மைந்தன்
வேதியர்கோன் நடராச நாம தேயன்
வித்தைபல கற்றுணர்ந்த மேலோன் தானே.

II உரை நூல்கள்

புலவர் இக்காலத்தில் ஏழு நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். அவை சூடாமணி நிகண்டு 2-ம் தொகுதி

சொற்பொருள் விளக்கம் (1900), யாப்பருங்கலப் பொழிப்புரை (1900), வெண்பாப்பாட்டியல் பொழிப் புரை (1900), இரகுவமிசக் கருப்பொருள் (1900), கலைசைச் சிலேடை வெண்பா அரும்பதவுரை (1900), மறைசையந்தாதி அரும்பதவுரை (1901), நீதிநெறி விளக்கப் புத்துரை (1901) என்பன.

1. சூடாமணிநிகண்டு இரண்டாவது தொகுதி சொற்பொருள் விளக்கம்

சூடாமணிநிகண்டுடின் முதற் றொகுதிக்குப்போல இரண்டாந் தொகுதிக்கும் சொற்பொருள் விளக்கம் எழுதப்பட்டுள்ளது.

மதிப்புரை (செந்தமிழ்)

பிள்ளையவர்கள் இரண்டாம் தொகுதிக்கு உரையிட் டிருப்பதாக அறிகிறோம். சூடாமணிநிகண்டு முழுமைக் கும் இவ்வாறேர் உரை பிள்ளையவர்களால் முடிக்கப் படுமாயின், அஃது தமிழ் நாட்டிற்குப் பெரிதும் உபயோக மாகும். நிகண்டிற் கண்ட ஒவ்வொரு சொல்லிற்கும் உண்மைப் பொருளைக் கண்டறிதலிற் பிள்ளையவர்கள் கொண்ட முயற்சி தமிழறிஞர் எல்லாம் கொண்டாடத் தக்கதாகும். இந்நூல் தமிழராயினேர் ஒவ்வொருவர் கையிலும் இருத்தற்குரியதாகும்.

2. யாப்பருங்கலப் பொழிப்புரை

'யாப்பருங்கலம்' என்பது யாப்பிலக்கணத்தை நூற்பாஅகவல் எனப்படும் சூத்திர யாப்பிலமைத்துச் செய்த ஒரு பழைய நூல். யாப்பருங்கலக் காரிகைக்கு மூலநூல் இதுவே. மாணவர்களுக்குப் பயன்படுமாறு இதற்கோர் பொழிப்புரையைப் புலவர் எழுதி வெளிப் படுத்தினர்.

3. வெண்பாப் பாட்டியல், பொழிப்புரை

புலவர் இந்நூலுக்கும் பொழிப்புரை ஒன்று எழுதி வெளியிட்டனர்.

4. இரகுவமிசக் கருப்பொருள்

புலவர், அரசகேசரி என்னும் புலவர் இயற்றிய சிறந்த காப்பியமாகிய இரகுவமிசம் என்னும் நூலிலுள்ள அருங் கவிகளுக்கு உரை எழுதி வெளியிட்டனர். இது உடுப்பிட்டி நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளை விரும்பியவாறு இயற்றப்பட்டது. அவர் அந்நூலுக்கு ஒரு முகவுரை வழங்கியுள்ளார். இந்நூலைப் பற்றி, இந்துசாதனத்தில் (9-10-1901) வெளிவந்த மதிப்புரை வருமாறு:

மதிப்புரை

"அரசகேசரி இயற்றிய இரகுவமிசம் கற்போருக்கு உபயோகமாகும் பொருட்டுச் சுன்னாகம் ஸ்ரீ. குமாரசுவாமிப் புலவர் அவர்களால் செந்தமிழ்ப் பாஷையிலே அதிசமர்த்தரும் அபிமானமுமுடைய ஸ்ரீமான் கு. கதிரைவேற்பிள்ளை விரும்பியவாறு சில கவிகளுக்குப் பதவுரையும், சில கவிகளுக்குப் பொழிப்புரையும், சில கவிகளுக்கு அந்நுவயமும், சில கவிகளுக்குச் சொற்பொருளுமாக ஏறக்குறைய முந்நூறு கவிகள் வரையிலே விளக்கப்பட்டிருக்கின்றன. அடைமொழிகளை வேருகப் பிரித்தும், முந்நூற் பொருளுக்கேற்பப் பதங்களைப் பிரித்தும் விளக்கிய உபாயம் வியக்கத்தக்கது".

'ஞானப்பிரகாசம்' (1911) என்னும் பத்திரிகையின் ஆசிரியரும், புலவருடைய மாணவருமாகிய ஆ. சண்முகரத்தினையர் அப் பத்திரிகையில் அந்நூலைப் பற்றி வழங்கிய மதிப்புரை கீழே தரப்படுகிறது.

மதிப்புரை

"இந் நூலின் கார்க்கசிக நடையின் இயல்பு நோக்கி நீதிபதி ஸ்ரீமான் கு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் வேண்டியவாறு வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், தமியேனது அஞ்ஞானமாகிய இருள் ஓட்டெடுப்பத் தமது கல்வி ஞானமென்னும் சலாகையினாலே எனது கண்களைத் திறந்து தமிழ்ச் சுவையூட்டி நுகர்வித்த எமது அருமைத் தமிழாசிரியர்களாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களால் எளிதிற் பொருள்படாதனவாய், அரிதுணர்தற் பாலனவாகிய முந்நூறு கவிகளுக்கு மாத்திரம் உரை எழுதப்பட்டது.

இவ்வுரையின் சுருக்கமுந் தெளிவும் ஒருமுறை உய்த்து நோக்குவார்க்கு நன்கு புலனாகும். அணிகளின் அமைவும் விரித்துக் கூறப்பட்டுள்ளன. அருஞ்சொற் பொருள் கோள்களும், அருந்தொடர்ப் பொருள் கோள்களும் எழுதப்பட்டுள்ளன.

இத்துணைச் சிறப்பும், அருமையும் வாய்ந்துள்ள உரையினை எழுதித் தமிழுலகத்திற்கு உபகரித்த புலவர்களது திறமை தமியேன் எடுத்துக்காட்ட இவ்வுலகம் அறியும் புதுமையுடைத்தன்று".

5. கலைசைச் சிலேடை வெண்பா அரும்பதவுரை

தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய இந்நூல் நூறு செய்யுட்களை உடையது; ஒவ்வொரு செய்யுளிலும் இரண்டாம் அடி இரண்டு மூன்று பொருள் கொள்ளும்படியாகப் பாடப்பட்டுள்ளது. இந்நூலுக்குச் சிறந்ததோர் அரும்பதவுரை புலவரால் எழுதப்பட்டுள்ளது.

6. நீதிநெறி விளக்கப் புத்துரை

குமரகுருபரசுவாமிகளால் இயற்றப்பட்ட இந்நூலுக்குக் கீரிமலை வாசியாகிய சு. கதிரைவேற் சிருப்பர் விரும்பியவாறு, எத்தனையோ நுட்பமான திருத்தங்களும், மேற்கோள்களும், பிறவும், சுருக்கமும், விளக்கமும் அமைந்த ஒரு புத்துரை புலவரால் எழுதப்பட்டது; இது பலவகையானுஞ் சிறப்பு வாய்ந்ததென்பது சேது சமஸ்தான வித்துவான் ரா. ராகவையங்கார் செந்தமிழில் எழுதிய மதிப்புரையால் நன்கு தெளியப்படும்:

மதிப்புரை

"குமரகுருபரசுவாமிகள் திருக்குறள் முதலிய நீதி நூல்களின் கருத்தைத் தழுவி வெண்பா யாப்பில் அனைத் தழகும் பொருந்த அமைக்கப்பட்ட நீதிநெறி விளக்கத் திற்கு முன்னர்ச் சிலவுரைகள் வகுக்கப்பட்டனவாயினும் அவையெல்லாம் கல்வியின் சொற்பொருள் மாட்சிகளை உள்ளவாறுணர்த்தும் ஆற்றல் உள்ளனவாகாமை தெரிந்து, யாழ்ப்பாணத்துச் சிறந்த வித்துவானுக விளங்கும் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் அதற்குச் சிறந்தவோருரை எழுதியிருக்கின்றார்கள். அவ்வுரைப் பிரதியொன்று யாமும் கிடைக்கப்பெற்றுப் படித்து மகிழ்ந்தோம். நூலாசிரியர் எடுத்தாண்ட சொற்களும், பொருள்களும், பிறவும், திருவள்ளுவப் பயன் முதலிய பண்டைப் பனுவல்களின் பெருவழக்காக நிற்றலை உரையாளர் தம் மாராய்ச்சி வன்மையால் அங்கங்கு எடுத்துக் காட்டிச் செல்கின்றனர். அந்நீதி நூல் உறுதிப் பொருள் நான்கையும் உணர்த்து முறையில் அமைந்து நிற்றலை விளக்கி, அதன் ஒவ்வொரு செய்யுட்டலைப்பிலும் கருத்துறு பொருள்களும் தெரிந்து காட்டியுள்ளார். பெரும்பான்மை பரிமேலழகர் போக்கைத் தழுவியே பிள்ளையவர்கள் அச்சிறு நூற்குச் சொற் சுருக்கமும், பொருட் சுருக்கமும் பொருந்த உரையிட்டிருக்கின்றனர். தமிழ் கற்பான் புகும் மாணவர்கட்கு

எல்லாம் இதனைப் பெற்றுப் படித்தல் நலம் பயப்பதாகும் என்று அபிப்பிராயம் உள்ளேம்.''

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'விவேகானந்தன்' என்னும் பத்திரிகையில் 24-11-1902 இல் இந்நூலைப் பற்றி வெளிவந்த மதிப்புரை வருமாறு :

மதிப்புரை

''இது கீரிமலை வாசரும், கொழும்பிலே சிரேப்பு அதிகாரியாய் இருப்பவருமாகிய ஸ்ரீமான் சு. கதிரைவேற்பிள்ளையவர்கள் விரும்பிய வண்ணம் யாழ்ப்பாணத்துச் சுன்னகம் அ. குமாரசுவாமிப் புலவரால் இந்நூலுக்குப் புத்துரை எழுதப்பட்டது.

இந்நூலில் எத்தனையோ நுட்பமான திருத்தங்களும், விசேடங்களும், சான்றுகிய மேற்கோள்களும், பிறவும், சுருக்கமும், விளக்கமுமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. இப்புத்துரையின் முற்பகுதியில் இங்கிலிசிலும், தமிழிலும் மிக்க பாண்டித்தியம் படைத்த ஊர்காவற்றுறை நீதிபதி ஸ்ரீமான் கு. கதிரைவேற்பிள்ளையவர்கள் இதன் பொருள் குறித்து இங்கிலிசிலே தமது அபிப்பிராயத்தை எழுதியிருக்கிறார்கள்.''

திருவனந்தபுரம் 'அறிவு விளக்கம்' என்னும் பத்திரிகை 10-3-1901 இல் பின்வரும் மதிப்புரையை வழங்கியது.

''இவ்வுரை பரிமேலழகர் முதலிய உரையாசிரியர் உரைத்திறன் வாய்ந்தது.''

'இந்துசாதனம்' என்னும் பத்திரிகை வழங்கிய மதிப்புரை வருமாறு :

''சுன்னகம் குமாரசுவாமிப் புலவர் முதனூற்கேற்ப வழங்கிய உரை மிகவும் வியக்கற்பாலது.''

7. மறைசையந்தாதி அரும்பதவுரை

நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் வேதாரணியேசுரர்மேற் பாடப்பட்ட இவ்வந்தாதிக்குப் புலவர் சிறந்த தோர் அரும்பதவுரை எழுதி வெளியிட்டனர்.

III பதிப்பு நூல்கள்

இக்காலத்திற் புலவர் மாணவர்களுக்கு உபயோகமாகக்கூடிய எட்டு நூல்களைப் பரிசோதித்துப் பதிப்பித்தனர். அவை யாப்பருங்கலக்காரிகை (பழையவுரை) (1900), ஆசாரக்கோவை (1900), நான்மணிக்கடிகை (1900), ஆத்திசூடி வெண்பா (1901), சிவக்ஷேத்திர விளக்கம் (1901), உரிச்சொனிகண்டு (1902), பழமொழி விளக்கம் (1902), திருவாதவூரர் புராணம் (1902) என்பன.

1. யாப்பருங்கலக்காரிகை உரை

புலவர் யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரால் இயற்றப்பெற்ற உரையிலுள்ள பல பிழைகளைத் திருத்தி இந்நூலை வெளியிட்டனர்.

திருவனந்தபுரம் 'அறிவு விளக்கம்' (1901) என்னும் பத்திரிகை இதற்கு வழங்கிய மதிப்புரை வருமாறு:

மதிப்புரை

"யாப்பிலக்கண மறிதற்குச் சாமானியமாக உபயோகிக்கப்படும் இந்நூலும், உரையும், வழுக்கள் மலிந்து கற்போருக்கு உபகாரமில்லாத விதத்தில் வந்தவற்றைப் பரிசோதித்து வேண்டுழி விரித்தும், விளக்கியும், புதுக்கியும் இருக்கின்றனர். இந்நூலைப் பதிப்பித்தவர் பழைய தமிழ் நூல்களை உலகத்திற்கு எளிதிலே பயன்படுமாறு அச்சிடுவித்தலையே தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்து

வாழ்நாளை நீத்த சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு அவ்விஷயத்தில் பெருந் துணைவராய் நின்றுதவியவர். தமிழுலகத்திற்கு இவர் புரிந்திருக்கும் உபகாரங்கள் பலவற்றுள் இதுவுமொரு பேருதவியே. வாசகம் எழுதுவதிலும், செய்யுளியற்றுவதிலும் ஓரு தன்மைத்தான திறமையுடையவர் சிலரே. அவருள் இவரே முதலிடம் பெறுந் தகைமையுடையவர் என்பதிற் கையமில்லை."

2. ஆத்திசூடி வெண்பா

இராமபாரதி என்னும் புலவரால் இயற்றப்பட்ட இந்நூலிலுள்ள வெண்பாக்களில் வரும் கதைகளைத் தெல்லிப்பழை இ. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், தெல்லிப்பழை இ. பாலசுப்பிரமணிய ஐயர், நல்லூர் வே. கனகசபாபதி ஐயர் என்பவர்களோடு சேர்ந்து புலவர் எழுதி இந்நூலை வெளியிட்டனர்.

3. சிவக்ஷேத்திர விளக்கம்

இது திருவண்ணமலை அண்ணமலை தேசிகரால் இயற்றப்பெற்றது. நடராசபுரம் வீரப்பச் செட்டியார் வேண்டுகோளின்படி புலோலியம்பதி முத்துக்குமாரதேசிகராலும், புலவராலும் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டது. புலவர் இந்நூலுக்கு மூன்று சிறப்புப்பாயிரப் பாக்கள் வழங்கியிருக்கின்றனர்.

4. திருவாதவூரர் புராணம் (மூலம்)

மணிவாசகர் சரித்திரத்தைக் கூறுமிந் நூல் கடவுள் மாமுனிவரால் இயற்றப்பட்டது. இதன் மூலபாடம் பலரால் பிழைபட அச்சிடப்பட்டிருத்தலை நோக்கிப் புலவர் பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பல திருத்தங்களைச் செய்து இந்நூலை வெளியிட்டனர். திருத்தங்கள் சிலவற்றை ஈண்டுத் தருதும்:

(1) 'திருவாதவூரடிகள்' புராணம் என்பது 'திருவாதவூரர் புராண'மெனத் திருத்தப்பட்டது.

(2) 'கவளமா களிற்றின்' என்பது 'கவளமாமுகத்தின்' எனத் திருத்தம் அடைந்தது.

(3) 'மற்புய வெற்பினி னங்கயல் வைத்த வலத்தன்' என்பது 'மற்புயன் வெற்பினி ளங்கயல் வைத்த வனத்தன்' என்று திருத்தப்பட்டது சிறப்புடையது (மந்திரி உரு).

(4) 'பார்மீதே' என்பது 'பாரமிதை' என்று திருத்தப்பட்டது. 'பாரமிதை முப்பது' என்பது புத்தநூற் கொள்கையாதலின் அதுவே பொருத்தமுடையது.''

5. ஆசாரக்கோவை 6. உரிச்சொனிகண்டு
7. பழமொழிவிளக்கம் 8. நான்மணிக்கடிகை

புலவர் மேற்கூறப்பட்ட நூல்களைப் பல பிரதிகள் கொண்டு பரிசோதித்து அச்சிற் பதிப்பித்தனர்.

IV வசன நூல்

கண்ணகி கதை

கண்ணகி கதை (1900) என்னும் சிறிய வசன நூலொன்றைப் புலவர் இக்காலத்தில் இயற்றினர். இது சிலப்பதிகாரக் கதையின் சுருக்கமாகும்.

11. நண்பர்கள்

புலவர் இக்காலத்தில் திருவனந்தபுரம் வள்ளல் சிவ ஞானதேசிகர் நடாத்திய 'அறிவு விளக்கம்' என்னும் பத்திரிகையிலும், சுவாமி வேதாசலம் நடாத்திய 'ஞான சாகரம்' என்னும் பத்திரிகையிலும் எழுதிய திட்பநுட் பம் வாய்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவருடைய புக ழைத் தமிழுலகெங்கணும் பரப்பியதன் காரணமாகப் பல பண்டிதர்களுடைய தொடர்பையும், நட்பையும் பெற்றனர். அறிவு விளக்கத்தில் வெளிவந்த 'பிங்கல நிகண்டு' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையில் வீராட்சி மங்கலம் பாடசாலை வித்தியாதரிசி தி. சிவன்பிள்ளை பதிப்பித்த பிங்கல நிகண்டில் உள்ள பல பிழைகள் பல ஏதுக்களைக் கொண்டு புலவரால் நிரூபிக்கப்பட்டன. மேலும் அப்பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளில், புதிதாகப் பதிப்பிக்கப்பட்ட வேதாரணிய புராணம், மச்சபுராணம், நாற்கவிராச நம்பியாரதம் முதலிய நூல் களிற் காணப்பட்ட பிழைகளும் ஆராய்ந்து வெளியிடப் பட்டன. பிங்கல நிகண்டைப் பற்றிய கண்டனத்திற்கு மாகறல் கார்த்திகேய முதலியார் 10-11-1901 இல் வெளிவந்த அறிவு விளக்கத்தில் சிவன்பிள்ளை சார்பிற் சமாதானங் கூறினர். புலவருடைய ஆராய்ச்சிக் கட் டுரைகளைப் படித்தவர் பலர் அவருடைய நுண்மாண்நுழை புலத்தை வியந்து கடிதமெழுதியதோடு அவருடைய நட் புறவையும் நாடினர். அவருள் முக்கியமானோர் தத்தைமங்கலம் பண்டிதர் பொன். நல்லதம்பிப்பிள்ளை, சுவாமி வேதாசலம், பேராசிரியர் டி. சவரிராயபிள்ளை, மாகறல் கார்த்திகேய முதலியார் என்போர்.

புலவர் பொன். நல்லதம்பிப்பிள்ளை

இவர் கலியாணபுரீநிவாச மாணிக்கவாசக ஆதீன வித்துவ சிகாமணியும், பாலக்காட்டரசினர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதருமாய் விளங்கியவர். இவர் புலவருடைய

அருமை பெருமைகளைப் பத்திரிகை வாயிலாக அறிந்து அவருடன் நட்புறவு கொண்டு நெருங்கிய கடிதத் தொடர்பு பூண்டனர். அவர் பாலப்பிரபோத விலக்கணம், சைவசித்தாந்த ரகசியம், தேவிமான்மியம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். புலவர் பாலப்பிரபோத விலக்கணத்திற்குச் சிறப்புப்பாயிரம் வழங்கினர். புலவர் இயற்றிய சூடாமணிநிகண்டுச் சொற்பொருள் விளக்கத்திற்குப் பிள்ளையவர்கள் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளார். அச்சிறப்புப்பாயிரம் வருமாறு:

சிறப்புப்பாயிரம்

தென்மொழியில் வடமொழியிற் செறிநிகண்டும்
இலக்கணமுந் திண்மை நுண்மை
மன்னுபல இலக்கியமுந் தருக்கமுத
லியநூலும் வாய்ந்த சைவ
நன்னெறிசேர்ந் துளநூலும் ஓர்ந்துணர்ந்தோன்
நட்பினர்பால் நன்மை யாளன்
பின்னமிலா துறைமனத்தன் குமாரசுவா
மிப்புலவன் பெருமை மாதோ!

பிள்ளையவர்கள் தாம் இயற்றிய தேவிமான்மிய அரங்கேற்ற விழாவுக்குத் தலைமை தாங்குமாறு புலவரை அழைத்தனர். புலவர் உடல்நலக் குறைவால் அவ்வைபவத்திற் கலந்துகொள்ள முடியவில்லை.

சுவாமி வேதாசலம் (1876-1950)

புலவருடைய ஆழ்ந்த கல்வியறிவின் அருமை பெருமைகளை நன்குணர்ந்து அவருடைய நட்பைப் பெற விரும்பினவருள் சுவாமி வேதாசலமும் ஒருவர். அவர் புலவருக்கு எழுதிய முதற் கடிதம், அவர் புலவர்பாற் கொண்டுள்ள பேரன்பையும், பெருமதிப்பையும் நன்குணர்த்தும். அக்கடிதம் வருமாறு:

கந்தப்பச்செட்டி தெரு,
சென்னை.
பிலவ வரு, மார்கழிமீ, சுக்ல ஏ (1901)

அன்புள்ள ஐயா!

தாங்கள் என்னை ஒருவாற்றானும் அறியீர்களாயினும் தங்கள் தமிழறிவு மாட்சிவளனும், குணநலனும் ஒருங்கு அறிந்திருக்கின்றேனாதலால், அம்முறை கடைப்பிடித்துத் தங்கள்பால் நட்புரிமை பெற வேண்டி மற்றிந்த ஆப்த நிகிதம் வரைதற்குத் துணிவு கொண்டேன். தமிழ்ப்புலவர் தம்முள் ஒருமைப்பாடுடைய ராதலின்றிக் கலாம் விளைத்து ஒற்றுமை குலைக்கின்றனர் என்று உலகம் பழிக்கின்ற மையாற்றான் அப்பழிப்புரை ஒழியுமாறு தங்களை யொத்த நல்லறிவுடைய நன்மக்களிடைக் கேண்மை பாராட்டு தலையே கடப்பாடாகக் கொள்ளும் ஒழுகலாறுடையேன். ஆதலால், இவன் யாரோ புதுவன் என்றிகழாது என் வேண்டுகோட்கு இணங்கி என்னுடன் நட்புரிமை பாராட்டு வீர்கள் என்று பிரார்த்திக்கிறேன். எனது நட்புரிமைக் கறிகுறியாக யானியற்றிய திருவொற்றியூர் மும்மணிக் கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் சிவபஸ்ம வைபவம் முதலியவற்றைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கின் றேன். ஈற்றில் நின்ற புஸ்தகம் ஈண்டுள்ள வைணவர் திருநீற்றின் மேற் புறங்கூறும் நியாயமி லாபாச உரைப் பெற்றி காட்டிப் பரிசுத்த மங்கள திருநீற்றின் பெருமை பெலப்படுத்திச் சாதாரண சனங்கட்கும் விளங்குமாறு உரைநடை தளர்த்திப் பெருந்திரளான அன்பர் கூட்டத் திற்கிடையில் உபந்நியசித்துச் சமீபத்தில் வெளியிடப்பட்ட தொன்று. ஏனையவற்றின் வரலாறு அவ்வவ் நூன்முகவுரை யில் இனிது காணக்கிடக்கும். இந்நூல்கள் முழுவதும் தாங்கள் சிறிதளவு சிரமமெடுத்துக்கொண்டு படித்துத் தங்களபிப்பிராயத்தை உரைநடையில் எழுதித் தருமாறு வேண்டுகிறேன். அது நிற்க.

சித்தாந்த சைவசமாசத்தின் பொருட்டு 'ஞானசாகரம்' என்னும் பெயரிய மாதாந்தப் பத்திரிகையொன்று பிரகட

னஞ் செய்யச் சித்தஞ் செய்து கொண்டிருக்கிறேன். முதற் பத்திரிகைக்கு வேண்டும் விஷயங்கள் எழுதிமுடிந்து அச்சிடப்படுகின்றன. பத்திரிகை நிகழும் பிலவ வரு தை மாதம் பூச நட்சத்திரச் சுபதினத்தன்று வெளிவரும். என்னுடைய சகோதரர்களாகிய தமிழ்ப்புலவர்கள் எல்லாரும் இதனை ஆதரித்து உபகரிப்பார்கள். தங்களுத்தமோபகாரத்தையும் எதிர்பார்க்கின்றேன். இரண்டாவது பத்திரிகைக்குத் தாங்களேதும் விஷயமெழுதி உபகரிக்கவேண்டும். மேலுந் தங்களாற் செய்யக் கிடக்கும் உதவிகளெல்லாம் வரையாது செய்யப்படுமென்று பிரார்த்தித்துத் திருவருளைச் சிந்திக்கின்றேன். தங்கள் தேகாரோக்கியத்தையும், பிறவிசேடங்களையும், குறிப்பிக்கும் பிரதி லிகிதம் ஒன்று வீடுக்குமாறு வேண்டும்

தங்களன்புள்ள,

நா. வேதாசலம்பிள்ளை

இருவர்களுக்குமிடையில் 1910-ம் ஆண்டு வரையும் கடிதப் போக்குவரவு நிகழ்ந்தது. அக்காலத்தில் அவர் புலவருக்கு எட்டுக் கடிதங்கள் வரைந்தனர். அவற்றின் சில முக்கிய பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

"என் ஆப்த நண்பர்களான ஐயா அவர்கள் திவ்விய சமுகத்திற்கு அநேக வந்தனஞ் செய்து எழுதும் நிருபம்." (1902)

"சீவகசிந்தாமணிப் பிழைகளை எடுத்துக்காட்டிய நுட்பவறிவினை வியக்கின்றேன்" (1903)

நீங்கள் வாதநோயால் வருந்துவது தெரிந்து ஸ்ரீமத் சவரிராயபிள்ளை முதலிய ஆப்த நண்பர்கள் எல்லாரும் மிக விசனித்துத் திருவருளைச் சிந்தித்தார்கள்" (1902)

"எனது ஆப்த நண்பர் ஸ்ரீமத் மாகறல் கார்த்திகேய முதலியார் தங்கள் நட்பைப் பெறவேண்டி ஒரு கடிதம் தங்களுக்கு எழுதுவார்கள். இவர்கள் குணப்பெருமையும், கல்வியறிவுத் திட்பமும் பெரிதும் பாராட்டற்பாலன" (1902)

இவர்கள் இருவருடைய சமயக் கொள்கைகள் முரண் பட்டிருந்தமை காரணமாக. 1910-ம் ஆண்டுக்குப் பின் கடிதப் போக்குவரவு நடைபெறு தொழிந்தது.

பண்டிதர் டி. சவரிராயபிள்ளை (1859—1923)

திருச்சி அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும், பழந்தமிழ் நூலாராய்ச்சியிற் பழுத்த அனுபவம் மிக்கவருமாகிய டி. சவரிராயபிள்ளை, புலவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஞானசாகரம், அறிவு விளக்கம் முதலிய பத்திரிகைகள் மூலம் வாசித்து, அவற்றின் அருமை பெருமைகளை நன்குமிந்து, அவருடைய நட்பைப் பெறுவான் வேண்டி அவருக்கு ஓர் நீண்ட கடிதம் 30-3-1902-ல் வரைந்தனர். அதன் முக்கியமான சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

திருச்சி,
30-3-1902.

அன்புள்ள ஐயா!

நாம் ஒருவரை ஒருவர் தம்மிற் பார்த்துப் பழகிலமெனி னும் நம்முள் "ஒத்த உணர்ச்சிதான் நட்பாங்கிழமை" தரற் பாலதன்றே? தாமின்புறுவது உலகின்புறக்கண்டு" மகிழ் வுறும் ஆன்றோராகிய தங்கள் போன்றார் நட்பை யான் என்றும் பெரிதாய் மதித்துள்ளேன். தங்கள் நட்பினர் களில் என்னையும் ஒருவனாகக் கொள்கவென்று வேண்டு கிறேன்.

திருவனந்தபுரம் அறிவு விளக்கம், சென்னை ஞான சாகரம் வாயிலாகத் தாங்கள் வெளியிடுகின்ற நுட்டப் பொருள் செறிந்தனவாகிய அரிய பெரிய வியாசங்களை எப் போதும் மிக்க ஆவலுடன் படித்துப் பேணியுள்ளேன். அவற்றோடு யாப்பருங்கலக் காரிகைக்குத் தங்களாற் புதுக் கப்பட்ட உரையும் (அறிவு விளக்கப் பத்திராதிபர் அனுப்பி யருளின) பார்த்து மகிழ்ந்தேன். அவையாவும் தங்கள்

இலக்கிய விலக்கணத் திறமையையும், அறிவின் மாட்சியையும், பரோபகார சீலத்தையும் நன்கு விளக்குவன.

இங்ஙனம் தாங்கள் தமிழுலகத்திற்கு இயற்றிவரும் நன்மைகள் அளவிடற்பாலன. ஆகவே, தமிழ் உலகில் வாழும் தமிழ் மக்கள் தங்கள்பாற் கடப்பாடுடையவராயிருக்கின்றனர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்திற்குத் தாங்கள் ஓர் சிரபூஷணம் போல் இருக்கின்றீர்கள். தங்கள் நட்புப் பேறு எனக்குப் பேரரணும், பெருநலமும் பயக்கும் என்று கருதிப் பெரிது மிழுமாந்துள்ளேன்.

இங்ஙனம்
சவரிராயபிள்ளை

சவரிராயபிள்ளை எழுதிய இரண்டாவது கடிதத்தில் தமது தனித்தமிழ்க் கொள்கையை மிகவும் விரிவாக விளக்கியுள்ளார். வைதிகக் கொள்கை கைவந்த புலவர் சவரிராயரது தனித்தமிழ்க் கொள்கையை ஏற்க மறுத்தனர். கொள்கை வேற்றுமை காரணமாக இருவருக்குமிடையில் இருந்த கடிதப் போக்குவரவு நீடிக்கவில்லை.

நண்பர்கள் பிரிவுக்கிரங்கல்

புலவர் தமது வாழ்க்கையின் முற்பகுதியிலும், இடைப் பகுதியிலும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பிரசங்கங்களையும், புராணபடனங்களையும் முறையாகச் செய்ததன் காரணமாகப் பல பெரியாருடை நெருங்கிய நட்புறவைப் பெற்றனர். புலவரோடு நெருங்கிப் பழகியவருடைய அட்டவணையொன்று நூலினிறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பெரியார்களுள் முக்கியம் வாய்ந்தவர்கள் நல்லூர் ஆறுமுகநாவலர் (1879), கேஈப்பாய் அ. அருளம்பலமுதலியார் (1889), கொக்குவில் ச. இரகுநாதையர் (1893), அதிகார புருடரும் கந்தரோடை வாசியுமாகிய நா. விசுவநாதமுதலியார் (1893), சுன்னகம் பூ. முருகேசபண்டிதர் (1899),

கந்தரோடை வே. குமாரவேற்பிள்ளை (1899), சி. வை. தாமோதரம்பிள்ளை பீ. ஏ., பி. எல். (1900), வண்ணைப் பிரபல வர்த்தகர் த. இராகவப்பிள்ளை (1900), வண்ணார்பண்ணை நீதிபதி தா. செல்லப்பாபிள்ளை (1902) என்போர். மேலே குறிக்கப்பட்டவர்கள் தேசுவியோக மடைந்த காலத்திற் புலவர் ஒவ்வொருவர் பேரிலும் சிறப்பு மிக்க இரங்கற் பாக்கள் பாடினர். அவற்றுட் சிறப்பு வாய்ந்த சிலவற்றைக் கீழே தருதும்:

நல்லூர்
ஆறுமுகநாவலர்

வெண்பா

செல்லும் பிரமாதி தேண்மதிமூ வேழுபுகர்
புல்லபர சத்தமியிற் போந்தமகம் — நல்லதமிழ்ப்
பாவலராற் பாடப் படும்புகழா றுமுக
நாவலன்மோக் கத்தடைந்த நாள்.

வேறு பாக்கள் இரண்டாம் அத்தியாயத்துள் வந்துள்ளன. ஆங்குக் காண்க.

கோப்பாய்
அ. அருளம்பலமுதலியார்

கட்டளைக் கலித்துறை

அன்றே தொடங்கி அதிகாரம் செல்வம் அறிவுகல்வி
நன்றேயு நீதி நடுநிலை சத்திய நன்குமதிப்(பு)
இன்றே வரையுங் குறையா ஒருகுலம் என்னுமெழிற்
குன்றேறு சீரரு ளம்பலத் தீபமுங் குன்றினதே.

அம்பல வாணன் கடைதொழுங் கோவையி லாதிபனும்
அம்பல வாண னருளரு ளம்பல வாண்டகையும்
அம்பல வாணன் கடக்கும் விழியுமை யார்ந்ததில்லை
அம்பல வாணன் கழனிழல் கூடின னுக்கைவிட்டே.

கொக்குவில்
ச. இரகுநாதையர்

கலித்துறை

ஆரண தந்திர சோதிட சாத்திர மாய்ந்துணர்ந்த
பூரண சந்திர முகரகு நாத புரோகிதனுஞ்
சீரண வும்பர தேவன் திருவடி சென்றடைந்தான்
தாரணி வாழ்த லமையு மினியெனத் தான்வெறுத்தே.

கந்தரோடை
நா. விசுவநாத முதலியார்

ஆசிரிய விருத்தம்

செந்திரு வெனுந்தெரிவை சந்ததம் மருவுறச்
செறியுமிரு நிதியனுந்நீ,
செயவிசய கெம்பீர வாக்குசா மர்த்தியந்
திகழுமரி யேறுநீயே,
ஐந்தருவு நைந்துளம் நாணயா சகர்களுக்
கதிகவித ரணுந்நீயே,
அமரர்பதி யிதுவெனப் பொலிகந்த ரோடைநகர்
அமருமம ரேசனுந்நீ,
சந்ததி யெனப்படுங் குன்றிடை வைத்திடுஞ்
சவுகரிய தீபமுந்நீ,
சாதுசன சங்கத்து மீதுயரு மாசனஞ்
சாருமணி முடியுநீயே,
இந்தவித மாகவிச் சுவநாத நின்னையே
யாவரும் புகழ்வரென்னில்,
ஏட்டிலும் பாட்டிலும் நாட்டுதற் கமையுமோ?
யாவுநின் பெருமைதானே.

சுன்னகம்

பூ. முருகேசபண்டிதர்

கட்டளைக் கலித்துறை

வெண்பா அகவல் முதலிய பாவும் விருத்தமுதல்
ஒண்பா வினங்களும் சிங்கார தேவி உலகுவக்கும்
பண்பா லியற்று முருகேச பண்டித பாமணியும்
மண்பா லுடலம் விடுத்துத் துயர்நீலை வைத்தனனே.

மன்னைக் காஞ்சி

கற்றவர்கள் எளிதுணரக் காட்டுமுறை கற்றவன்மன்,
விற்பனன்மன் பரசமய விவாதசயம் பெற்றவன்மன்,
அற்பகலும் சைவநெறி அறையுநெறி யுற்றவன்மன்,
பற்பலநூல் சொற்றவன்மன் முருகேச பண்டிதனே.

கந்தரோடை

வே. குமாரவேற்பிள்ளை

கட்டளைக் கலித்துறை

நந்தாத ஆங்கில மன்னவ ரோடு நவில்கிறிக்கெற்
பந்தாடும் மேன்மையை, வாம்பரி யேறும் பவனிதனை,
சிந்தா வலிமையை, ஆண்மையை, யாவருஞ் சேர்ந்துமெச்ச
அந்தோ குமார நல் வேற்பிள்ளை யுங்கதி ஆர்ந்தனனே.

சி. வை. தாமோதரம்பிள்ளை பி. ஏ. பி. எல்.

வெண்பா

தொல்காப் பியமெங்கே! சூளா மணிமுதலாந்
தொல்காப் பியமெங்கே! தொன்னூல்கள் — பல்குமோ?
தாமோ தரவள்ளல் தந்திலனே லச்சினிடை
நாமோது மாறெங்கே? நன்கு.

கட்டளைக் கலித்துறை

பாடுங் கவியிற் பழந்தமிழ் நூற்பரி பாலனத்திற்
கூடும் வலியி லறிவிற் பொறையிற் குணநிறைவில்
தேடும் புகழில் அதிகார மேன்மையிற் சீரியர்யார்?
நீடும் புவியினில் தாமோ தரற்கு நிகர்சொலவே.

ஏட்டி லிருந்த அருந்தமிழ் நூல்க ளெனப்பலவும்
தீட்டி வழுக்களைந் தச்சினி லாக்குபு செந்தமிழ்சேர்
நாட்டி லளித்துயர் தாமோ தரேந்திர னண்ணுபுகழ்
பாட்டி லடங்குந் தகைத்தோ புலவர்கள் பாடுதற்கே.

வண்ணைர்பண்ணை
த. இராகவப்பிள்ளை

கட்டளைக் கலித்துறை

நல்லையி லாறு முகநா வலரிடம் நண்புமிக்கோன்
தில்லையி லம்பலக் கூத்தன் திருவடி சேர்த்தநெஞ்சன்
சொல்வழு வாத இராகவப் பிள்ளையுந் தொல்லுலகில்
அல்ல லகலப் பரகதி வாழ்க்கை அடைந்தனனே.

வண்ணைர்பண்ணை
தா. செல்லப்பாபிள்ளை பி. ஏ., பி. எல்.

ஆசிரியவிருத்தம்

எட்டுணையும் வழுவடையா நீதி மானுய்
இன்சொல்லுந் தாழ்நடையும் இயல்பாக் கொண்டோன்
கட்டுறுபொய் பயனிலசொல் கடுஞ்சொ னிந்தை
கனவிலுங்கூ றுணைவிரதங் கடைப்பி டித்தோன்
அட்டதிசை யினும்பரந்த கீர்த்தி யாளன்
ஆழ்ந்தகருத் ததிநுட்ப மமைந்த தீரன்
சிட்டர்புக ழாசார விநய சீலன்
செல்லப்ப பிள்ளையொப்பார் செகத்தில் யாரே.

கட்டளைக் கலித்துறை

பாரிற் பரந்தது நாவலர் பாவிற் பரந்ததுமை
சூரிற் பரந்தது செந்தமிழ் நாட்டொடு சூழ்திருவாங்
கூரிற் பரந்த துலகாளு மன்னவ ரோங்குசபைச்
சீரிற் பரந்தது செல்லப்ப பிள்ளை செழும்புகழே.

முன்னே பலப்பல நன்மைசெய் நாவலன் முத்திபெற்றான்,
பின்னே புரிந்த துரைநா கலிங்கப் பிரபுசென்றான்,
இன்னே புரிந்த தயாநிதி செல்லப்ப வேந்தல்சென்றான்,
அன்னே சுதேசப் பெருநன்மை செய்பவ ராரினியே

புலவர் 1902-ஆம் ஆண்டு நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பதவியை ஏற்ற காலந் தொடக்கம் மனிதரைப் பாடும் வழக்கத்தைக் கைவிட்டனர். அவர் அவ்வாறு விட்டதற்குரிய காரணத்தை ஆத்மபோதினி, வைசியமித்திரன் முதலிய பத்திரிகைகளில் விளக்கியுள்ளார். அவர் அவ்விஷயம் பற்றி ஆத்மபோதினியில் வெளியிட்ட கடிதம் வருமாறு:

மனிதரைப் பாடுதல்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் "தம்மையே புகழ்ந்திச்சை பேசினுஞ் சார்பினுந் தொண்டர் தருகிலாப், பொய்மையாள ரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று தொடங்கி ஒரு பதிகத்திலே மனிதரைப் பாட வேண்டாம் என்று புலவரை நோக்கிக் கடிந்து கூறினர். மனிதரைப் பாடுதல் இம்மைக்கும் ஆகாது, மறுமைக்கும் ஆகாது. "மனிதரைப் பாடுதல் தீமை பயக்கும்" என்று காசி காண்டமும் பேசிற்று. கந்தபுராணத்திலும் பொய் பேசுதலைக் குறித்து "வரந்தரு புலவர் சொற்றூர் மற்றதற் காகவன்றே நாளுமிரந்திடுந் தொழிலராகி யிழுக்கமுற்றூர் களன்றே" என்றூர். "இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான் யானுமென் குற்றத்தா லேகின்றேனே" என்றும் ஓரு புலவர். மனிதரைப் பாடுதல் வறுமையையும்

பயக்கும். ஆறுமுகநாவலரவர்கள் மனிதரைப் பாடுந் தொழிலே முற்ற வெறுத்தார்கள்.

பாடுங்கவியிலே அமங்கலமான சொல்லும் பொருளும் பொருந்துமாயின், பாடுவிப்போருக்கும் கேடு பயக்கும். சில கவி சிலர்க்குக் கேடு பயந்ததென்று கேட்டுளேன். முற்காலத்திலே நந்திபோத வன்மராசன் கலம்பகப் பரமாலையாலே மாண்ட கதையும் நாடறியும். பாட்டிலே வைத்துப் பாடும் இல்லாத புகழ்ச்சியாலே ஒருவருக்கு உள்ள புகழ்ச்சியும் கெடும். இல்லாத புகழ்ச்சியைக் கேட்போரெல்லாம் அவருடைய இகழ்ச்சியையே எடுத்துப் பேசுவர். இவ்வாறு பேசுதற்குக் காரணமாய் வந்தது கவியே யன்றே. பின்னைப் பாடுவிப்போருக்கு வரும் நன்மைதான் என்ன? சரம கவியிலே எவரையும் பரம பதஞ் சேர்ந்தார் என்று பாட வேண்டும். யான் சரம கவியை முற்ற வெறுக்கிறேன். பாடுவிப்போரும் என்னைக் கேளாமை வேண்டும். என்மேலன்புடையரும், தருமகர்த் தாவும், பிரபுவுமாகிய ஸ்ரீமான் சு. கதிரைவேற்பிள்ளைச் சிரேஷ்டபரவர்கள் சரமகவி பாடுதல் குற்றம் என்று பலமுறை சொன்னார்கள். அவர் வாக்கினை ஒரு நல்லுபதேசமாகக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்

12. பிரசங்கங்கள்

சுவாமி விவேகானந்தர் 1897-ஆம் ஆண்டு யாழ்ப் பாணம் வந்ததன் பின்னர் அங்கு சைவ மறுமலர்ச்சி உண்டாயது. நாடெங்கணும் சைவப் பாடசாலைகளும், சைவச் சபைகளும் அதிகரித்தன. சைவப்பிரசங்கங்கள் எல்லாப் பாடசாலைகளிலும் சபைகளிலும் ஒழுங்காக நடைபெற்றன. அக்காலத்தில் யாழ்ப்பாணமெங்கணும் சென்று சைவப்பிரசங்கஞ் செய்தவருள் புலவரும் ஒருவர். புலவர் செய்த பிரசங்கங்கள், செய்த இடம், காலம் முதலியவற்றின் அட்டவணையொன்று நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் பிரசங்கங்களுக்குப் புலவரோடு கூடச் சென்றவர்கள் நல்லூர் வே. கனக சபாபதி ஐயர், நல்லூர் சு சரவணமுத்துப் புலவர் ஆதி யோர். 1900-ஆம் ஆண்டு திருகோணமலை வாசியாகிய அகிலேசபிள்ளையின் அழைப்புக்கிணங்க அங்கு வே. கனக சபாபதி ஐயரோடு கூடச் சென்று புலவர் பிரசங்கஞ் செய்தனர். 1900-ஆம் ஆண்டு உடுவில் ஆங்கிலப் பாட சாலையில் புலவரோடு சென்று பிரசங்கம் செய்தவர் இந்துக்கல்லூரி அதிபராகிய ஐயாசாமி சாஸ்திரியார். புலவருடைய பிரசங்க விஷங்கள் பெரும்பாலும் சமய சம்பந்தப்பட்டனவாகும்.

புலவர் ஒரு சிறந்த பேச்சாளரல்லர். எனினும், அவர் விஷயங்களை முறைப்படுத்திப் பேசுவதில் வல்லவர். அவருடைய பேச்சு, சொற் சுருக்கமும் பொருட் பெருக்க மும், தெளிவும், இனிமையும் கூடி விளங்கியது. அவர் யாழ்ப்பாணம் வைதிக சைவபரிபாலன சபையின் முக்கிய அங்கத்தவராயிருந்து பல இடங்களிலும் பல சைவப் பிரசங்கங்களைச் செய்தனர். அவர் 1902-ஆம் ஆண்டு 'வைதீக சைவபரிபாலனம்' என்னும் விஷயம் பற்றிச் செய்த பிரசங்கம் சாலச் சிறந்தது. அப்பிரசங்கம் வரு மாறு:

வைதிக சைவ பரிபாலனம்

(பிரசங்கம்)

சபையோர்களே !

வைதிக சைவ பரிபாலனஞ் செய்தற்குப் பெரிதும் உரிமை பூண்டு விளங்கும் நீவிர் "வைதிக பரிபாலனம் யாது? என்பதனையும், அப் பரிபாலனத்தால் எய்தும் நற்பலன் யாது? என்பதனையும், அறிந்து கொள்ளுதல் அவ்சியமேயாம். ஆதலின் அவ்விரண்டினையும் யாமறிந்த வளவிலே இங்கே சுருக்கிச் சொல்லுதும்.

எப்பொருளையுங் கடந்து விளங்கும் அதீத வஸ்துவாகிய பரமசிவனனவர் தமது பெருங்கருணையினாலே ஒரு வடிவங் கொண்டு உயிர்கள் மெய்ப்பொருளுணர்ந்து நற்கதி பெறும்பொருட்டு இருக்கு முதலிய வேதங்களையும், காமிகம் முதலிய ஆகமங்களையும், திருவாய் மலர்ந்தருளினர். அந்த வேதாகமங்கள் விட்டுணு முதலிய தேவர்களாலும், வசிட்டர் முதலிய மானிட முனிவர்களாலும், ஆதிசேடன் முதலிய நாகர்களாலும் பெறப்பட்டு யாண்டும் பரந்தன. அந்த வேதாகமங்கள் இவ்வாறு வெளிப்படாதாயின், அக் கடவுளையும், அவரை வழிபடு நெறியையும், உள்ளவாறுணர்ந்து பேரின்பம் பெறும்படி முயல்வாரிலராவர். இதற்குப் பிரமாணம் :

சிவஞானசித்தியார்

ஆரண மாகமங்கள் அருளினுல் உருவுகொண்டு
நாரண னருளானுயிற் கதிப்பவ நில்லையாகும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகற் கெல்லாம்
சீரணி குருசந்தானச் செய்தியுஞ் சென்றிடாவே.

திருக்களிற்றுப்படியார்

ஆகமங்க ளெங்கே? அறுசமயந் தானெங்கே?
யோகங்க ளெங்கே? யுரையெங்கே? — பாகத்
தருள்வடிவம் தானுமா யாண்டிலனே லந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

வேதம்

வேதம் என்பதற்கு அறிதற் கருவி என்று பொருள் கூறுவர். வேதம் எதனை அறிதற்கும் கருவியாகும் என்பீராயின், பிரத்தியட்சமாகிய காட்சியினாலும், அனுமானத்தினாலும், அறியப்படாத பொருள்களை அறிதற்குக் கருவியாகுமென அறிக. வேதங்களிலே தேவபூசையும், யாகம் முதலிய கருமவியல்பும், கடவுளாகிய பிரமவியல்பும், பிறவும் கூறப்படுமென்பர். வேதங்களிலே அறங்களெல்லாம் கூறப்பட்டன வென்று திருமூலநாயனார் கூறுவர்.

திருமந்திரம்

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தில்
ஓதா தகுமற மெல்லா முளதாக்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
பேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.

ஆயுள்வேதம் முதலிய உபவேதங்களும், ஸ்மிருதி, புராணம் முதலியவைகளும் வேதங்களை அனுசரித்துச் செய்யப்பட்டன. சாத்திரங்கள் என்று சொல்லப்படும் தேவாரம், திருவாசகம், திருக்குறள் முதலியனவும் வேதப் பொருளோடு பேதமில்லாத மகாவாக்கியம் என்று ஔவையார் கூறுவர்.

தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்;
மூவர் மொழியும், முனிமொழியும், — கோவை
திருவா சகமும், திருமூலர் சொல்லும்,
ஒருவா சகமென் றுணர்.

இந்த வேதங்களிலும், வேதங்களை அநுசரித்த மற்றைய நூல்களிலும், தருமநெறி யாதோ, அதுவே வைதிகம் என்று சொல்லப்படும். வேதசம்பந்தமுடையது வைதிகம் எனத் தத்திதாந்தமாயிற்று. இனிச் சொல்லப்படுவது சைவம்.

சைவம்

வேதங்களிற் சொல்லா தொழிந்த பொருள்களையும், வேதாந்தமாகிய உபநிடதப் பொருள்களையும் சொல்லும் நூல் சைவமெனப்படும். 'நீள் மறையினெழி பொருள் வேதாந்தத் நீதில் பொருள் கொண்டுரைக்கு நூல் சைவம்" என்பது சித்தியார். சைவம் என்றது ஆகமத்தினை. ஆகமம் என்பதற்கு 'வந்தது' என்பது பொருள். ஆப்தராகிய சிவபிரானிடத்து நின்று வந்ததென்றவாறும். இனி ஆ-சிவஞானம், க-மோக்கசாதனம், ம-மலநாசம் எனக் கொண்டு சிவஞானம் வாயிலாக மலத்தை நீக்கி முத்தி கொடுப்பது எனப் பொருள் கூறுதலுமுண்டு. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளையும் அறிவிப்பது எனக் கூறுதலுமுண்டு. ஆகமங்களிலே சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என நான்கு பாதங்கள் உள்ளன. சரியாபாதத்திலே சிவலிங்கவிதி, சிவாலய சேவை, சிரார்த்தவிதி முதலியனவும், கிரியா பாதத்திலே சந்தியாவந்தனம், சிவபூசை முதலியனவும், யோக பாதத்திலே தத்துவம், யோகவுறுப்பு முதலியனவும், ஞான பாதத்திலே பதியிலக்கணம் முதலியனவும் சொல்லப்படும். காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களன்றி உபாகமங்களும் பலவுள. தமிழ்ப்பாஷையிலே விளங்கும் சிவதருமோத்தரம், சைவசமயநெறி, சிவஞானபோதம் முதலிய நூல்கள் சிவாகமங்களின் பொருளுடையனவேயாம்.

இவ்வியல்புடைய ஆகமங்களிலும், ஆகமங்களை அனுசரித்துச் செய்யப்பட்ட மற்றைய நூல்களிலும் சொல்லப்பட்ட தருமநெறிகளும் சைவமெனப்படும். சைவம் என்பது சிவனைத் தலைமையாகவுடைய நூலெனவும், சிவனைத் தலைமையாகவுடையது எனவும், சிவனுலே சொல்லப்பட்ட நெறியெனவும் பொருள் சொல்லப்படும். சைவம் சிவனுடன் சம்பந்தமாவது, "சைவந்தனை அறிந்தே சிவஞ் சாருதல்" என்று திருமூலநாயனரும் கூறினர்.

வேதங்களிலே சொல்லப்பட்ட நெறிகளும், ஆகமங்களிற் சொல்லப்பட்ட நெறிகளும், பொதுவுஞ் சிறப்புமாகக்

கொள்ளப்படுவதன்றிப் பேதமாகக் கொள்ளப்படுவன வல்ல. இவ்விருவகை நெறிகளையும் பேணி நிலைநிறுத்து தலையே வைதிக சைவ பரிபாலனம் என்பர். வைதிக சைவ மென்பதற்கு வேதாகமம் என்னுமிரண்டினையும் குலமாகக் கொண்ட சமயம் எனக் கூறுதலும் பொருந்தும். வைதிக சைவம் என்பதற்கு வேதத்திலே பெரிதும் கூறப்பட்ட சைவம் எனவும், உத்தர சைவம் எனவும், சித்தாந்த சைவமெனவும் பெயர்பெறும் எனவும் சிவாக்கிர தேசிகர் கூறுவர். எங்ஙனங் கூறினுஞ் சைவ சமயத்தைக் குறிப்பிடு வதாகும்.

வேதாகமங்களிலும் அவற்றின் வழிவந்த நூல்களிலுஞ் சொல்லப்பட்ட கொல்லாமை, பொய் சொல்லாமை, பிறர் பொருள் விரும்பாமை முதலிய பொதுத் தருமங்களை உறுதியாகக் கொள்ளுதலும் வைதிக சைவ பரிபாலன மாம். விபூதி, உருத்திராக்கந் தரித்தல் சிவதீக்கை பெறு தல், சிவாலயந் தொழுதல், சிவகதை கேட்டல் முதலிய விசேட தருமங்களை உறுதியாகக் கொள்ளுதலும் வைதிக சைவ பரிபாலனமாம். இத்தருமங்களை எவரும் கொள்ளும் படி செய்தலும் வைதிக சைவ பரிபாலனமாம்.

இத்தருமங்களை எல்லாம் நன்குணருமாறு வைதிக சைவ சாத்திரங்களைக் கற்றலும், கற்பித்தலும், கற்பிக்கப் பட்டவாறு ஒழுகுதலும், கற்றுணர்ந்த மெய்ப்பொருளைப் பிரசங்கித்தலும், வைதிக சைவ பரிபாலனமாம். கற்போ ருக்கும், பிரசங்கிப்போருக்கும் உதவிசெய்து தத்தம் முயற்சி தளராவண்ணம் பேணுதலும் வைதிக சைவ பரிபாலன மாம். கிரமந்தவறி நடக்குஞ் சைவாலயங்களைக் கிரமமாக நடக்கச் செய்தலும், வைதிக சைவ பரிபாலனமாம். சைவ சமயிகள் வைதிக சைவ சமயங்களிலேற்றுங் குற்றங்களைப் பரிகரித்தலும், வைதிக சைவ பரிபாலனமாம். சைவாலயங் களில்லாத விடத்திலே சைவாலயங்களைத் தாபித்தலும் வைதிக சைவ பரிபாலனமாம். வைதிக சைவ சாஸ்திரங் களைப் போற்றுதலும், அவற்றின் பொருள்களை யாவருக் கும் இலகுவில் அறியுமாறு வசனநடையாக எழுதி

அச்சிடுதலும் வைதிக சைவ பரிபாலனமாம். இவ்வாறே வைதிக சைவ பரிபாலனம் எத்தனையோ வகையாகவிருக்கின்றது.

முற்காலத்திலே திருஞானசம்பந்த நாயனார் முதலிய சைவ குரவர்களும், மெய்கண்டதேவர் முதலிய சந்தான குரவர்களும், வைதிக சைவப் பொருள் போதிக்கும் பாடல்களைச் செய்தும், அற்புதங்களைச் செய்தும், சமயவாதஞ் செய்தும் வைதிக சைவத்தைப் பெரிதும் நிலை நிறுத்தினர்.

இக்காலத்திற் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் வைதிக சைவ சாஸ்திரங்களைப் பரிசோதித்து அச்சிட்டும், வைதிக சாஸ்திரப் பொருள்களை எவர்க்கும் இலகுவாக அறியும்படி செந்தமிழிலே சிறந்த வசன ரூபமாகப் பல புத்தகங்கள் எழுதி அச்சிட்டும், ஆங்காங்கு சைவப் பிரசங்கங்கள் செய்தும், பல வித்தியாசாலைகளைத் தாபித்தும், கற்பித்தும் பலவாறுக வைதிக சைவ பரிபாலனத்திலே கண்ணுக இருந்தனர்.

அத்தனைப் பெரியோர்கள் இன்மையால் இவரது வைதிக சைவ பரிபாலனம் பலருங் கூடிச் செய்தற் பால தாயிற்று. சுருக்கமாகச் சொல்லப்புகில் கடவுளுடைய வேதாகம விதிப்படி யாவரையும் ஒழுகுமாறு செய்தலே வைதிக சைவ பரிபாலனமாகும். அவ்விதி கடந்து வேண்டியவாறே ஒழுகுவோர் நரகத் துன்பமுறுவர். "மறைகளீசன் சொலிச்சொல வழிவராவுயிர்கள் வைக்குஞ் சிறைக் கண் மாநிரயம்" என்பது சித்தியார். வைதிக சைவ ஆசாரங்களை அவமதித்தொழுகி நரகத் துன்பம் பெறுதற் காளாய் நிற்போருக்கு அந்த ஆசாரங்களை அறிவித்து அனுஷ்டிக்கும்படி செய்தலிலும் உயிர்களுக் கிதஞ்செய்தல் சிறந்தது. இதமாவது உயிர்களுக்கு நன்மை செய்தல். இதஞ் செய்வோருக்குக் கடவுளும் பெரிதும் அருள் செய்வர். சமயாசாரங்களைக் கேட்டு நடப்போரும் அருள் பெறுவர். ஆகவே, யாவரும் இருவகையின்பமும் அடைவர்.

சைவசமயிகளே !

இங்கே கூறப்பட்ட சைவ பரிபாலனங்களுள்ளே எல்லாத் தருமங்களையும் உள்ளபடி அறிதற்குக் காரண மாயுள்ள வைதிக சமய சாஸ்திரங்களைக் கற்பித்தலும், அவற்றில் விதிக்கப்பட்டவாறு யாவர்க்கும் பிரசங்கிக்கும் படி பிரசாரகர்களை நியமித்து நடத்துதலும், பிரசங்கிக்கப் பட்ட விஷயங்களை எழுதி ஒரு பத்திரிகை நடாத்துதலும், இவற்றிற்கு வேண்டும் புத்தகங்களை ஈட்டிப் பலருக்கும் உபயோகமாக ஓரிடத்திலே வைத்தலும், பெண்களைப் படிப்பித்தலும் ஆகிய ஐந்தும் இச் சபையாராலே இப் போது செய்யப்பட எடுத்துக் கொள்ளப்பட்ட காரியங்க ளாம். நீங்கள் எல்லீரும் உபகாரிகளாய் நின்று இவை களை நடாத்திச் சுகம் பெறக் கடவீர்கள்.

'வைதிக சைவ பரிபாலினி' (1902

பிற்காலம் (1902 — 1922)

புலவருடைய பிற்காலம் முழுவதும் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் கழிக்கப்பட்ட படியால் இக் காலத்தை நாவலர் வித்தியாசாலைக் காலம் எனினும் பொருந்தும்.

13. ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திற் பிறநாட்டுக் கிறீஸ்த பாதிரிமார் அரசினருதவியோடு 1804-ஆம் ஆண்டுக்கும், 1918-ம் ஆண்டுக்குமிடையில் யாழ்ப்பாணத் தின் பல பாகங்களிலும் பல பாடசாலைகளைத் தொடங்கி அவற்றின் மூலந் தமது மதத்தைத் தீவிரமாகப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். இலவசக் கல்வி, பணம், உத்தியோகம் முதலியவற்றை நாடிச் சைவ மதத்தினர் பலர் கிறீஸ்து மதத்தைத் தழுவினர். சைவம் குன்றி வந்த அக்காலத்தில் ஆறுமுகநாவலர் தோன்றிச் சைவத்தை வளர்க்க முற்பட்டனர். அவர் சைவக் கல் வியை விருத்தி செய்யும் நோக்கத்தோடு 1848-ஆம் ஆண்டுக்குச் சமமான கீலக வருடம் ஆவணி மாதம் ஐந்தாந் தேதி வண்ணார்பண்ணையிலே ஒரு வித்தியா சாலையை ஆரம்பித்தனர். முதலில் நாவலரே அவ்வித்தி யாசாலைக்குத் தலைமையாசிரியரா யிருந்தனர். பின்னர் மு. தில்லைநாதபிள்ளையும், மா. வயித்தியலிங்கம் பிள்ளை யும் ஒருவர் பின் ஒருவராய்த் தலைமையாசிரியராயிருந்த னர். மா. வைத்தியலிங்கம் பிள்ளை 1902-இல் நோய் வாய்ப்பட்டுத் தமது வேலையைச் சரிவரச் செய்ய இய லாதிருப்பதை அறிந்த சிதம்பரம் நாவலர் சைவப்பிர காச வித்தியாசாலை அதிபராகிய ச. பொன்னம்பல பிள்ளை, புலவரை அவருடைய இடத்திற்கு நியமிக்கு மாறு வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகராகிய த. கைலாயபிள்ளைக்கு ஒரு கடி தம் வரைந்தனர். அவர் புலவருக்கு எழுதிய கடிதம் வருமாறு :

சிதம்பரம்,
13-9-1902

அதிப்பிரியர்களாகிய புலவரவர்களுக்கு,

நடேசானுக்கிரகத்தினாலே இவ்விடம் க்ஷேமமுடையோம். தங்கள் க்ஷேமாதிசயங்களை அடிக்கடி அறியும் அவாவுடையேன்.....

யாழ்ப்பாணம் வித்தியாசாலைத் தலைமையாசிரியரவர்கள் அதிகம் அசௌக்கிய முள்ளவர்களாயும், இனிமேலுங் கற்பிக்கும் வன்மை யில்லாதவர்களாயும் இருக்கின்றார்களாமே. அவர்களிருக்கின்ற காலத்திலேயே திறமையுடைய ஒருவரைத் தேடிய கைலாயபிள்ளையவர்கள் இப்போது ஒருவரைத் தேடுவது இன்றியமையாதது என்று எண்ணுகிறேன். அப்படித் தேடித் தங்களை அழைக்கின்ற காலத்தில் தாங்கள் உடன்பட்டு அதனை வகித்துக்கொள்ளுதல் அவ் வித்தியாசாலையிலும், தங்களிடத்தும் அன்பு பாராட்ட வேண்டிய என்போல்வார்க் கெல்லாம் ஆராத சந்தோஷத்தை விளைவிக்கும் என்பதை யான் எழுத வேண்டியதில்லை. வண்ணார்பண்ணை வித்தியாசாலை விஷயத்திற் த. கைலாயபிள்ளை தங்களைக் கலக்கக் கூடும். தாங்கள் அவருக்கு என் கருத்தைச் சொல்ல வேண்டாம்.

தங்களன்பன்
ச. பொன்னம்பலவன்

தலைமையாசிரியர் பதவி

இக்கடிதம் எழுதி இரண்டு வாரம் சென்றபின் மா. வைத்தியலிங்கம் பிள்ளை 29-9-1902-இற் காலமாயினர். த. கைலாயபிள்ளை புலவரை 1-10-1902-ஆம் தேதி தொடக்கம் தமது வித்தியாசாலைத் தலைமையாசிரியராக நியமித்தனர். புலவர் அவ்வித்தியாசாலையில் இருபது வருடங்கள் கடமை ஆற்றினர். புலவர் நாவலர் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செந்தமிழ்த் தொண்

டையும், சைவத் தொண்டையும் ஆற்றுவதற்கு அவ் வித்தியாசாலை அதிபராக நியமிக்கப்பட்டது மிக வாய்ப் பாயிருந்தது.

புலவருக்கு உதவியாசிரியர்களாக நீர்வேலி ச. சிவப் பிரகாச பண்டிதரும், வடலியடைப்பு அருணாசல சாஸ் திரியாரும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் முறையே தமிழையும், வடமொழியையுங் கற்பித்தனர். சிலகாலத் தின் பின் அவ்விருவரும் வித்தியாசாலையை விட்டு நீங் கினதும் புலவர் தாமாகவே எல்லாக் கடமைகளையும் ஏற்று நடாத்தினர்.

நாளாந்தக் கடமைகள்

புலவர் தமது வீட்டிலிருந்து ஆறு கல் தூரத்திலுள்ள வித்தியாசாலைக்கு முதலில் நடந்து போய்வந்தனர். பின்னர். 13-3-1903 தொடக்கம் சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையிற் புகைவண்டி ஓடத் தொடங்கியபோது, அவர் வித்தியாசாலைக்குப் புகை வண்டி மூலம் சென்றனர். வித்தியாசாலைக்குப் போகு முன்னர் தினமும் தமது நண்பர் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையைச் சந்தித்துச் சிறிதுநேரம் உரையாடுவார். பின்னர்ப் பாடசாலையில் ஒன்பது மணி தொடக்கம் ஒரு மணி வரையும் கற்பிப்பார். ஒரு மணிக்குமேற் சிவன்கோயில் வீதியிலுள்ள பொன்னம்பல தேசிகரு டைய உணவுக்கடையில் மதிய உணவருந்துவார். மதிய வுணவின் பின்னர்ச் சிவன்கோயில் வடக்கு வீதியிலுள்ள பிச்சுவையர் மடத்தில் தங்கியிருக்கும் புலோலி வ. குமார சுவாமிப் புலவரைச் சந்தித்து அவரோடு சில நிமிடங் கள் உரையாடுவார். பின் இரண்டு மணிக்குப் பாட சாலைக்கு வந்து நான்கு மணிவரையும் மாணவர்களுக் குக் கற்பிப்பார்.

நடமாடும் கலைக் களஞ்சியம்

வித்தியாசாலை வேலை சரியாக நாலு மணிக்கு முடி வடையும். அந்த நேரந் தொடங்கி அவர் வீடு போய்ச்

சேருமளவும் மாணவர் புடை சூழ்ந்து பாடங்கேட்ட வண்ணம் இருப்பர். அவர் செல்ல வேண்டிய ஆறு மைல் தூரத்தையும் பாடஞ் சொல்லிக்கொண்டு மெது வாகத் தாண்டுவதைக் கண்டவர்கள் அவரை 'நடமாடுங் கலைக் களஞ்சியம்' என்று அழைத்தனர்.

நாவலர் வித்தியாசாலை வேலை நான்கு மணிக்கு முடி வடையும்போது கொக்குவில் வாசரும், 'பிஸ்கால் கந் தோர்' முதலதிகார புருடரும், சைவ சித்தாந்த சாஸ் திர விற்பன்னருமாகிய சபாரத்தின முதலியார் தமது குதிரை வண்டியிற் புலவரை ஏற்றிச் சென்று கொக்கு விற் சந்தியில் விடுவார். அதுவரையும் அவர் தமக்குள்ள விலக்கிய விலக்கணச் சந்தேகங்களைப் புலவரிடம் கேட் டுத் தெளிவார். கொக்குவிலிலிருந்து தாவடி வரையுந் தம்மைச் சூழவரும் மாணவர்களுக்குப் பாடஞ் சொல் லியவண்ணம் செல்வார். பாடங் கேட்டவருள் முக்கிய மானவர்கள், தாவடி பொன்னையா பிள்ளை, கொக்கு வில் இளையதம்பிப் பிள்ளை என்போர். தாவடி தொடக் கம் வேறேர் கூட்டம் மாணவர்கள் சூழ்ந்து புலவரிடம் பாடங் கேட்பர். அக்கூட்டத்துள் முக்கியமானவர் தென் கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை, நீர்வேலி மயில் வாகன உபாத்தியாயர் முதலியார். மருதயினர் மடந் தொடக்கம் சுன்னாகம் வரையிலும் பாடங் கேட்போர் இல்லாதிருந்தால் அக்காலத்தைச் செய்யுளியற்றும் வேலையிற் கழிப்பார். இக்காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா என்பன. சுன்னாகச் சந்தை சேர்ந்ததும், அவர் வரவை எதிர்நோக்கி நிற்கும் அவர் நண்பராகிய வயித்தியநாத பிள்ளை அவரை வரவேற்று அவருடைய வீட்டுக்குக் கூட்டிச் செல்வார். தினமும் வீட்டுக்கு ஆறு மணியள வில் வந்து சேருவார். நடந்துவந்த களைப்பின் மிகுதி யால் அவர் கட்டிலில் படுத்திருந்தவண்ணம் தமது நண் பருடனும், மற்றுந் தம்மைக் காண வந்த சுற்றத்தவர் களுடனும், பிறருடனும் எட்டு மணிவரையும் உரையாடு

வார். எட்டு மணிக்கு அவர் இராப்போசனம் உட் கொள்வார். ஒன்பது மணி தொடக்கம் பன்னிரண்டு மணி வரையும் வடமொழியாராய்ச்சி செய்வார். காலை யில் ஆறு மணிக்கு நித்திரை விட்டெழுந்து நூலியற் றும் வேலையில் ஈடுபடுவார். விடுமுறை நாட்களில் மாணவருக்குப் பாடஞ் சொல்வதிலும், நூலியற்றுவதி லுந் தமது நேரத்தைக் கழிப்பார். வித்தியாசாலைக்குச் சனி, ஞாயிறு, திங்கள் என்னுந் தினங்கள் தவிர்ந்த மற்றை நாட்களில் போவது வழக்கம்.

மாணவர்கள்

நாவலர் சைப்பிரகாச வித்தியாசாலையிற் கற்பித்த இருபது வருட காலத்தில் அவரிடம் கற்றுத் தேறிய மாணவர் பலராவர். அவர்களுள் முக்கியமானவர்கள், உடுவில் தமிழ்ப் புலவர் வ. மு. இரத்தினேசுர ஐயர், உடுவில் ஆசிரியர் மு. ஜகநாதையர், காரைநகர் ஆசிரியர் ச. பஞ்சாட்சர ஐயர், இருபாலைப் பண்டிதர் சி. வேதாரணிய தேசிகர், இருபாலை சி. தியாகராச பிள்ளை, தாவடி ஆசிரியர் மு. பொன்னையாபிள்ளை, நாயன்மாகட்டு செ. சிவசிதம்பரப்பிள்ளை, நீர்வேலி வி. மயில்வாகனப்பிள்ளை, தெல்லிப்பழை மேற்குப் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை, வேதாரணியம் தி. அருண சல தேசிகர், சிறுப்பிட்டி த. கார்த்திகேயபிள்ளை, நல் லூர் க. குருமூர்த்தி சிவாசாரியர், மட்டுவிற் பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை, மட்டக்களப்புப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை முதலியோராவர்.

அவர்களுட் புலவர் வ. மு. இரத்தினேசுவர ஐயர் புலவரிடம் கற்றுத்தேறியபின் இலங்கை, இந்தியா, பேர்மா முதலிய நாடுகளிற் பலவருடங்கள் உபாத்தி யாயர் தொழிலில் ஈடுபட்டு இப்போது இணுப்பாறி வாழ்கின்றார். அவர் கவிபாடுவதிலும், கட்டுரை வரை வதிலும் வல்லுனர். அவர் பிரசங்கம் செய்வதில் அதி சமர்த்தரானமை பற்றிப் 'பிரசங்கசபாமணி' என்னும் பட்டமும் பெற்றுள்ளார்.

தெல்லிப்பழை மேற்குப் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை புலவருடைய பிரிய மாணவருள் ஒருவர். அவர் சேர் அம்பலவாணர் வித்தியாசாலைத் தலைமையாசிரியராகக் கடமையாற்றி இப்போது இளைப்பாறி வாழுகின்றார். அவர் கவிபாடுதலில் வல்லவர். அவருடைய சாரீரம் மிகவும் இனிமையுடையதாதலினற் புலவர் புராண படனத்திற்குச் செல்லும்போது அவரைப் பெரும்பாலும் அழைத்துச் செல்வது வழக்கம்.

பண்டிதர்மணி சி. கணபதிப்பிள்ளை புலவரிடம் முறையாகக் கற்றவருள் ஒருவர். அவர் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராகக் கடமையாற்றி இப்போது இளைப்பாறிப் புகழோடு வாழுகிறார். இவர் கந்தபுராணம் தக்கிணகாண்டதிற்கு ஓர் உரையும், சில சமய நூல்களும் இயற்றியுள்ளார். அவர் பிற்கால மாணவருள் புலவருடைய அன்புக்குரிய மாணவராய்த் திகழ்ந்தனர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை புலவரிடம் கற்றுத் தேறியபின், மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகக் கடமையாற்றி இப்போது இளைப்பாறி வாழுகின்றனர். அவர் கவிகள் புனைவதில் அதிசமர்த்தராதல் பற்றி அவருக்குப் 'புலவர்மணி' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. புலவர் செய்த நன்றியை மறவாத பெருந்தணம் இவர்பாற் பெரிதுங் காணப்படும். அவர் 'பகவத் கீதைவெண்பா' முதலிய நூல்கள் இயற்றியுள்ளார்.

மற்றைய மாணாக்கர்களுட் பலர் பற்பல துறைகளிற் புகழ் படைத்து வாழ்ந்து காலமாயினர். சிலர் இப்போதுஞ் சிறுஞ் சிறப்போடும் வாழ்கின்றனர்.

கைமாறாத தொண்டு

புலவர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நியமனம் பெற்றபோது சைவத் தொண்டும், தமிழ்த்



நல்லூர் ஆறுமுகநாவலர்

தொண்டும் செய்வதே அவருடைய பெருநோக்கமாக விருந்தது. வித்தியாசாலைத் தருமபரிபாலகர் முதலில் பத்து ரூபாவும், இருபது வருடங்களுக்குப் பின்னர் இரு பத்திரண்டு ரூபாவும் போக்குவரவுச் செலவுக்கென்று கூறிப் புலவருக்குக் கொடுத்து வந்தனர். போக்குவர வுச் செலவுக்கும் போதாத இச்சிறு தொகையையும் புலவர் வேண்டியதில்லையென்று சொல்லி அதைப்பெற மறுப்பார். பின்னர் வற்புறுத்திக் கொடுக்கும்போது அதனைப் பெற்றுக் கொள்வார். புலவர் இந்த அற்ப தொகையைப் பெற்று மிக்க திருப்தியோடு தமது கட மையைத் திறமையுடன் ஆற்றிவந்தார். வித்தியாசாலை யதிபரும் மிகவும் கண்ணியமாக அவரை நடாத்திவந்த னர். புலவர் கல்வியைப் பெரிதாக மதித்தனரே யன்றிப் பொருளைப் பெரிதாக மதிக்கவில்லை.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் பரமேஸ்வரக் கல்லூரி தொடங்கியபோது உயர்ந்த சம்பளம் கொடுப் பதாகக் கூறி அங்கு பண்டிதராக இருக்கும்படி கேட்ட னர். சென்னைத் தமிழகராதிச் சபைத் தலைவர் வண. யே. எஸ். சாண்ட்லரும் அகராதி வேலை செய்யச் சென் னைக்கு வருமாறு கேட்டனர். புலவர் நாவலர் பாட சாலையை விட்டு வேறிடங்களுக்குப் போகச் சம்மதிக்க வில்லை. பிற்காலத்திற் புலவர் ஆற்றிய அருந்தொண் டைப் பாராட்டிப் போக்குவரவுச் செலவுக்குப் போது மான ஒரு தொகைப் பணத்தைக் கொடுக்க அவ்வித்தி யாசாலைத் தரும பரிபாலகர் முன்வரவுமில்லை; புலவ ரும் தமது செலவுக்குப் போதுமான பணம் கிடைக்க வில்லை என்று மனஞ் சலிக்கவுமில்லை.

14. மதுரைத் தமிழ்ச் சங்கம்

சங்க அங்கத்தவராதல்

முன்னுள் மதுரைமாநகரில் நிலவிய முச்சங்கங்களைப் போன்ற ஒரு தமிழ்ச் சங்கத்தைப் பாலவனத்தம் ஜமீன்தாராகிய பொ. பாண்டித்துரைத்தேவர் அந்நகரில் 1901-ம் ஆண்டில் நிறுவினர். தமிழ் நாட்டிலுள்ள புலவர்கள் எல்லாரும் அச்சங்கத்தில் அங்கத்தவராக விருந்து தமிழ்த் தொண்டு புரிய இசைந்தனர். புலவருடைய அருமை பெருமைகளைக் கேள்வியுற்ற தேவர் சங்கந் தொடங்கிய சில மாசங்களுக்குள் அச் சங்கத்தின் வித்துவ அங்கத்தவராக அவரை அமர்த்த விரும்பிப் பின்வருங் கடிதத்தை அவருக்கு அனுப்பினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
17-10-1902

ஐயா,

1901-ம் வருடம் மே மாதம், இம்மதுரை மா நகரின் கண்ணே ஒரு தமிழ்ச் சங்கம் ஸ்தாபனமாய் நடைபெற்று வருவதைப் பத்திரிகை வாயிலாகத் தாங்கள் அறிந்திருக்கலாம். அதன் விபரம் இத்துடன் அனுப்பியுள்ள பிரகடனப் பத்திரத்தால் நன்கு விளங்கும். தாங்கள் அச் சங்கத்தின் வித்துவ அங்கத்தவருள் சிறந்த வித்துவானாக அமர்ந்திருந்து வேண்டியவற்றைச் செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இது விஷயமாகத் தங்கள் சம்மதத்தை வேண்டிக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை

புலவர் தமது சம்மதத்தைக் கடித மூலமாகத் தேவருக்கு அறிவித்தனர். புலவருடைய சம்மதப் பத்திரத்தை வாசித்த தேவர் பெருமகிழ்ச்சியடைந்து புலவருக்குப் பின்வருங் கடிதத்தை வரைந்தனர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
29-11-02.

ஐயா,

தாங்கள் மதுரைச் சங்கத்தின் கல்வியங்கத்தவருள் ஒருவராக அமர்ந்து செந்தமிழ்ப் பாஷாவிருத்திக்கு வேண்டுவனவற்றைப் புரிவதற்கு மனமுவந்து வரவிடுத்த சம்மதப் பத்திரிகையைக் கண்ணுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்தேன். இவ்வாறு அன்புகூர்ந்து மனமுவந்து வாக்குதவிய தங்கட்கு அநேக வந்தனம் அளிக்கின்றேன்.

இங்ஙனம்
பொ. பாண்டித்துரை

பின்னர்ச் சங்க வெளியீடாகிய செந்தமிழ்ப் பத்திரிகைக்கு விஷயதானம் புரியுமாறு தேவர் புலவரைப் பின்வருங் கடிதமூலம் வேண்டினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

ஐயா,

நம் சங்கத்தினின்றும் செந்தமிழ் எனப் பெயரிய ஓர் மாதாந்தப் பத்திரிகை வெளிப்படுத்தலாமென முன்னரே அறிவித்துள்ளபடி வெளியிடற்கு அப்பத்திரிகைக்குத் தாங்கள் அருமையிற் கற்ற கல்வியானைய விஷயதானங்கள் இன்றியமையாதனவாய்ச் சிறப்புடையவாதலின், தங்கள் நுண்ணறிவுக்கெட்டிய அரும் பெரும் விஷயங்கள் யாவும் செந்தமிழ்ப் பத்திரிகை தன்னிடங் கொண்டு இத் தமிழுலகிற்கு நன்மைபுரியுமாறு செய்விக்கத் தங்கணை வணக்கமாக வேண்டிக் கொள்ளுகிறேன்.

தங்களன்பன்
பாண்டித்துரை

பின்வரும் கடிதமும் அதுபற்றியது.

உ

திருச்சிற்றம்பலம்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

மகா. ரா. ரா. ஸ்ரீ. அ. குமாரசுவாமிப் புலவருக்கு,

அன்பார்ந்த ஐயா!

க்ஷேமம். அது கேட்க ஆவலதிகம். செந்தமிழ்ப் பத்திராதிபராய் இருந்த மு. இராகவையங்காரை நீக்கித் திரு. நாராயணையங்காரவர்களை எடிற்றராக நியமித்திருக் கிறேன். இனி நம் செந்தமிழ் நல்ல கட்டுரைகளோடு உரிய காலங்களில் தவறாது வெளிவருவதற்கு வேண்டுவன செய் திருக்கின்றேன். தாங்கள் என்மீது தயைகூர்ந்து நம் செந் தமிழ் தம் விஷயங்களைக் கொண்டு முன்னிலுஞ் சிறந்து விளங்குமாறு செய்தற்குக் கேட்டுக் கொள்ளுகிறேன். இது பற்றிக் கொடுத்துள்ள சிரமத்திற்காக என்னைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டும்

தங்களன்பன்
பாண்டித்துரை
அக்கிராசனாதிபதி

சன்னி வருத்தம்

புலவர் 1904-ம் ஆண்டு மார்கழி மாதம் சன்னி வருத் தத்தினற் பீடிக்கப்பட்டுப் பல நாட்கள் வருந்தினர். யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்து பெருந் தொகையான நண்பர்கள் வந்து அவருடைய சுகத்தை விசாரித்தவண்ணமிருந்தனர். இதையறிந்த தேவர் புல வருடைய சுகத்தைப் பின்வரும் கடிதமூலம் விசாரித்தனர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்
22-1-05.

அன்புமிக்க ஐயா!

தாங்கள் சில நாளாக நிரம்பத் தேக அசௌக்கியமுற் றிருந்ததாகவும் இப்போது குணமடைந்து வருவதாகவும்

நம் அக்கிராசனாதிபதி கேள்வியுற்றுப் பெருந்துக்கமும், சந்தோஷமும் அடைந்தார்கள். முழுவதும் சௌக்கியப்பட்டு மற்றுந் தமிழுலகத்திற்குப் பல நன்மைகள் செய்துவருமாறு திருவருளைப் பெரிதுஞ் சிந்திக்கிறார்கள். தங்கள் சௌக்கியத்தை அறிய விரும்புதலால் அக்கிராசனாதிபதி அவர்களுக்கு அவ்விஷயமாக எழுதுவிக்கவேண்டுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்
S. Subramania Iyer
Manager

பாண்டித்துரைத் தேவர் (1867 — 1914)

தேவர் புலவரிடத்துப் பெரும் பற்றும், நன்மதிப்பும் உடையவர் என்பது முன் காட்டப்பெற்ற கடிதங்களாற் புலனாகும். புலவரும் தேவரிடத்து அன்புடையராய் அவருடைய நன்முயற்சிகளில் அவரோடு சேர்ந்துழைக்க முற்பட்டனர். 1909-ம் ஆண்டிற் புலவர் மதுரைக்குச் சென்றபோது தேவர் அவரைப் பெரிதுமுபசரித்துக் கௌரவித்தனர். புலவர் தேவர்பாற் கொண்டுள்ள பெருமதிப்பைப் பின்வரும் தண்டியலங்கார முகவுரைப் பகுதியும், அவர் தொகுத்த சைவமஞ்சரிக்கு வழங்கிய சிறப்புப்பாயிரப் பாக்களும் நன்கு புலப்படுத்தும்.

தண்டியலங்கார முகவுரை

"செந்தமிழ்ப் பரிபாலனம் பூண்டு தண்டமிழின் மேலாந்தரமாயுள்ள திருக்குறளுரை, திருக்கோவையாருரை முதலிய செந்தமிழ் நூல்கள் வெளிப்படக் காரணராய் விளங்கிய தந்தையார் போலச் செந்தமிழ் நூல்களுக்குத் தாமும் உபகரித்துவரும் பெருமையுடையர் எவரோ அவரே அந்நன்றியாளராவர். அவர் தாம் யாவரெனின், பாலவனத்தம் ஜமீன்தாரென்றும், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரென்றும், தலைமைப் புலவரென்றும், செந்தமிழ்க் கலா விநோதரென்றும், பிரபு வென்றுஞ் சொல்

லப்படுஞ் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரென்போம். மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய், பாவேந்தருங் குறைந்து, நூலுரைகளும் மறைந்து, படிப்பாருமின்றிக் கேட்பாருமின்றித் தமிழ்க் கல்வி மழுங்கி வருமிக்காலத் திலே, மதுரை மாநகரிலே வித்துவ சங்கங் கூட்டியும், அருந்தமிழ் நூல்கள் ஈட்டியும், படித்து நல்லவராவார்க் குப் பரிசில் கொடுத்தும், செந்தமிழ் என்னும் மாசிக வாசிக பத்திரிகையை வெளிப்பட விடுத்தும் பிரபுவவர் கள் பலவாறுகச் செய்துவரும் தமது செந்தமிழ்ப் பரிபா லனச் செய்கைகளுள் இதனையும் ஒன்றாக மதிப்பார்கள் என்பது நமது கருத்து.

சைவமஞ்சரிச் சிறப்புப்பாயிரம்

திக்குலவும் புகழாளன் பிரபுகுல
சிகாமணியாய்ச் சிறந்த சீலன்,
அக்கிரகண் ணியன்பொன்னுச் சாமியெனும்
நரபாலன் அருளும் பாலன்,
நக்கனடி யவர்பாலன், பேறுளத்தன்
வெண்ணீறு நண்ணும் பாலன்,
தக்கபொருள் நிலவுகலை விநோதனுயர்
சற்சங்க சனனு கூலன்.

பூதேவன் புகலியர்கோன் முதலறிஞர்
தமிழ்நூலின் பொருள்க ளுள்ள
மீதேவன் புறமருவப் பதித்தேவன்
தேவனெனும் வெளிறு நீங்கி
நீதேவ னெனக்கொண்டு நிலத்தேவன்
பகைகடந்து நெறிநின் றீசன்
மாதேவன் பதத்தேவன் மகிழ்பாண்டித்
துரைத்தேவ மன்னன் மாதோ.

இராஜ ராசேஸ்வர சேதுபதி

பாண்டித்துரைத் தேவர் 1914-ம் ஆண்டு இறந்த பின்னர் இராமநாதபுரத்து மன்னராகிய இராஜ ராசேஸ் வர சேதுபதி மதுரைத் தமிழ்ச் சங்க அக்கிராசனாதிபதி

ஆயினர். அவரும் புலவரிடத்து அன்பும். பெருமதிப்பு முள்ளவராய் இருந்தனர். புலவர் தாமியற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலை அம்மன்னருக்கு அர்ப் பணஞ் செய்தனர். அவரும் புலவருக்குச் சன்மானமாக ஒரு தொகைப் பொருளை வழங்கினர். புலவர் மன்னரின் பெருமைகளைக் கூறுஞ் சில பாக்களியற்றி அந்நூல் முக வுரையிற் சேர்த்திருக்கிறார். அவை சொற்சுவை, பொருட்சுவை மிக்குப் படிக்குந்தோறும் இன்பம் பயப் பன. சில வருமாறு:

சீதைகாவல னுதியி னுட்டிய
தேவ ராலயம் போற்றிடுங் காவலன்,
நீதி காவலன், தொன்னெறி காவலன்,
நீடு முன்னவர் செய்தரு மங்களின்
பாது காவலன். பாவலர் காவலன்,
பழைய வைதிக சைவர்கள் காவலன்,
சேது காவலன்; செந்தமிழ்க் காவலன்,
சீர்த்தி ராஜரா சேசுர மன்னனே.

வாழ்த்து

ஓதுதமிழ்ப் புலவர்சரித் திரமா மிந்நூல்
உயர்ச்சிபெற உபகரித்த செல்வச் சீமான்,
தாதுமலி தவளமலர் மாலை மார்பன்,
சயவீர ராசரா சேசு ரப்பேர்ச்
சேதுபதி நரபாலன் பலநூல் கற்றோன்,
செய்யதமிழ் வளர்க்குமபி மான சீலன்,
மாதுபதி ராமேச னருளால் வேண்டும்
வரங்களெலாம் பெற்றினிது வாழ்க மாதோ.

மதுரைத் தமிழ்ச்சங்கச் சேவை

புலவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு இருபத்தொரு வருடங்கள் கைமாறற்ற தொண்டினைப் புரிந்தனர். அத் தொண்டின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த சங்கப் புலவரும், பிறரும் அவரைப் பாராட்டினர். செந்தமிழ்ப்

பத்திராதிபராயிருந்த மு. இராகவையங்கார் புலவருக் கெழுதிய கடிதமொன்றிற் பின்வருமாறு பாராட்டியுள் ளார்.

"தாங்கள் செந்தமிழுக்கு எழுதியனுப்பும் விஷயங்கள் தமிழகம் முழுவதும் படித்துப் பாராட்டப்படத் தக்கனவாய் ஒளிர்கின்றன. நம் செந்தமிழ்ப் பெருமையை வளர்த்தற்கண் தாங்கள் கொண்டுள்ள முயற்சியளவு வேறெவரும் கொண் டிலர் என்பது இந்நாட்டின் பொது அபிப்பிராயம்". (8-1-1905).

27-8-22-இற் கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கம், புலவரது சேவையைப் பாராட்டி ஓர் தீர்மானத்தை நிறை வேற்றியது. அதுவருமாறு:

தீர்மானம் 6

'சங்க வித்தியா விஷய ஆலோசனைச் சபையின் அங் கத்தவராகிய மகா ஈ. ஈ. ஸ்ரீ அ. குமாரசுவாமிப் புலவர் காலஞ்சென்றமையாற் சங்கத்திற்கேற்பட்ட பெருநட் டத்தைக் குறித்துச் சங்கத்தார் அநுதாபமொழி கூறும்படிக் கும், மேற்படியாரின் குடும்பத்தாருக்கு அநுதாபத்தைத் தெரிவிக்கும்படிக்கும் சங்க நிர்வாகசபையார் தீர்மானிக்கின் றனர்'

B. இராசராசேஸ்வர சேதுபதி
President
இலக்குமி நாராயணன்
Manager

15. பிற்காலக் குடும்ப வரலாறு

குடும்பம்

புலவரும் மனைவி மக்களும் சிருஞ் சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர். புலவருடைய இளைய சகோதரியும் கணவரும் புலவருடைய குடும்ப விஷயங்கள் யாவற்றையும் ஒருவித குறையுமின்றிக் கவனித்து வந்தனர். புலவர் தமது முழு நேரத்தையும் இலக்கிய விலக்கண வாராய்ச்சி செய்வதிலும், நூலுரைகள் எழுதுவதிலும் கழித்து வந்தனர்.

நோய்வாய்ப்படல்

புலவர் 1902-ம் ஆண்டு வாத நோயாற் பீடிக்கப் பட்டனர். அவ்வருத்தம் மாறியபின் 1904-ம் ஆண்டு மார்கழி மாதம் சன்னி வருத்தத்தாற் பீடிக்கப்பட்டனர். இந்நோய்கள் காரணமாகப் புலவருடைய உடல் மெலிவுற்றது. இந்நோய்களுக் குட்கொண்ட மருந்துகள் புலவருடைய பற்களைத் தளர்ச்சியடையச் செய்தன. இக் காரணம் பற்றிப் புலவர் பிரசங்கஞ் செய்வதைப் பிற் காலத்திற் குறைத்துக் கொண்டனர்.

மனைவி மறைவு

புலவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துக்க சம்பவம் ஒன்று இக்காலத்தில் நிகழ்ந்தது. புலவருடைய மனைவியாகிய சின்னாச்சியம்மையார் (1861 — 1907) முகவாத சன்னி காரணமாக 1907-ம் ஆண்டுக்குச் சமமான பிலவங்க வருடம் வைகாசி மாதம் ஏழாந் தேதி காலமாயினர். மனைவியின் மறைவு புலவருக்கு ஆற்றொணாத் துயரத்தை விளைத்தது. புலவருடைய இளைய சகோதரியும் கணவரும் அவருடைய பிள்ளைகளைப் பராமரித்து வந்தமையால் அவருடைய துயரம் ஒருவாறு தணிந்தது.

புலவருடைய மனைவியின் மறைவைக் குறித்து ஆத்ம போதினி என்னும் பத்திரிகை 3-6-1907-ம் தேதி பின் வரும் செய்திக் குறிப்பை வெளியிட்டது. அது வருமாறு:

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்களது பாரியாரின் தேகவியோகம்

"தமிழ்ப் பாஷையிலே தமக்கொப்பாரிலையென வித்துவான்கள் எவராலும் வியந்து பாராட்டப்படும் சிறந்த வித்துவானும், வடமொழியிலே பாண்டித்தியமுடையவரும், பிரயோசனமமைந்த பல நூல்களும், உரைகளுஞ் செய்து வெளிப்படுத்தி இலங்கை, இந்தியா முழுவதும் பெரும்புகழ் படைத்தவரும், யாழ்ப்பாணம், மதுரை என்னுமிரு சங்கங்களிலும் புலவராக விளங்குபவரும், சைவப்பிரகாச வித்தியாசாலைப் பிரதமாசிரியரும், "கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்னுந் திருக்குறட் கணிகலனுகியும், "மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல வலிய தன்றே தாழுந் துலைக்கு" என்றவாறு தமது கல்விச் செருக்காற் சிறிதளவும் இறுமாப்புறுது எவ்வெவரிடத்தும் பணிந்த மொழியும், தாழ்ந்த நடையுமுடையவரும், நல்லொழுக்கம், ஈசுரபக்தி முதலியவற்றுக் கொரு களஞ்சியமாக வுடையவரும், விரிவஞ்சி ஈண்டொழிக்கப்பட்ட பிற நல்லிலக்கணங்கள் எல்லாம் குடிகொண்டுள்ள ஓரு பாத்திரமாக வுள்ளவருமாகிய சுன்னாகத்துச் ஸ்ரீமான் குமாரசுவாமிப் புலவரவர்களது அருந்ததியன்ன கற்புக்குரிய அரிய மனைவியார் இந்த வைகாசி மீ 7-ம் உ சோமவாரத்தன்று சிவபதமடைந்த வியசனச் செய்தியை இதனல் அறிவிக்கின்ருேம்.

"சிலநாள் வருத்திய அற்ப நோய் இவருடைய பிரிவுக்குக் காரணமாயிற்று. இவருக்கு ஒரு புத்திரியும் இரண்டு புத்திரரும் உண்டு. உடம்பின் அநித்தியத்தை ஏனைய எவரினும் பற்பல நூல்கள் வாயிலாகப் புலவரவர்கள் நன்ருக அறிந்துளரேயாயினும், விவாகமான நாள்

தொடக்கம் இல்லறத்தை முறை பிறழாது நடாத்தி, வரு விருந்துகளைப் புலவருடைய குறிப்பறிந்து ஓம்பி, இல் லறத்தா லெய்தும் வியசனங்கள் ஒன்றும் எள்ளளவாவது பிரவேசியாது அடக்கத்தோடிருந்து நூலாராய்ச்சியையே போதுபோக்காகக் கொண்டு காலங் கழிக்குமாறு புலவர வர்களுக்குச் சுகஞ் செய்து வந்தமையை நோக்கிப் புலவ ரவர்கள் சிறிது வியசன மடைந்திருக்கிறார்கள். இந்தத் துக்கச் செய்தியைக் கேள்வியுற்ற பற்பல பிரபுக்கள், வித்து வான்கள், பிராமணோத்தமர்கள் முதலிய எத்திறத்தினருந் தவறாது சென்றமை, எவ்வெவ் வகுப்பினரும் புலவரவர் களிடத்தே உள்ளன்புடையரா யிருக்கின்றார்கள் என்பதனை நன்றாக விளக்கிற்று.''

மைத்துனர்கள் மறைவு

புலவருடைய மூத்த சகோதரியின் கணவர் இறந்து சில வருடங்களின் பின்னர்ப் புலவருடைய இளைய சகோதரியின் கணவராகிய சீனிவாசகம்பிள்ளை 1919-ம் ஆண்டு காலமாயினர். அவர் 1884-ம் ஆண்டு தொடக் கம் புலவர் குடும்பத்திலொருவராயிருந்து அவரது குடும்ப விஷயங்களை யெல்லாம் கவனித்துப் புலவருக்குக் குடும் பக் கவலைகள் நேராவண்ணம் உதவி புரிந்தனர். அவ ருடைய மறைவு புலவருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பத்தை உண்டுபண்ணியது. அத்திருப்பத்தின் விளைவுகள் 'இறுதிக் காலம்' என்ற பகுதியில் மேலும் ஆராயப்படும்.

மக்கள்

புலவருக்கு ஒரு புத்திரியும், இரண்டு புத்திரர்களும் உளர் என்று முன்னரே குறிப்பிடப்பட்டது. மூத்த மக ளாகிய விசாலாட்சியம்மையார் அவ்வூர்ப் பிரபல வைத் தியராகிய வல்லிபுரநாத பிள்ளையின் குமாரராகிய கனக சபைப்பிள்ளை என்பவரை விவாகஞ் செய்து சிவபாக்கியம்,

சிவயோகம் என்னும் இரு பிள்ளைகளைப் பெற்று வாழ்கின்ற காலத்தில் 1925-ம் ஆண்டு காலமாயினர். அவருடைய மூத்த குமாரராகிய அம்பலவாணபிள்ளை மேற்படி வைத்தியரது மகளாகிய ஆச்சிமுத்தம்மையாரை 1916-ம் ஆண்டு விவாகஞ் செய்து, காலஞ்சென்ற இராமசாமி என்னும் புத்திரனையும், பரமேஸ்வரி, மனோன்மணி என்னும் புத்திரிகளையும் பெற்றுச் சீருஞ் சிறப்புடனும் வாழுகின்றனர். அவர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிற் பல வருடம் ஆசிரிய சேவையிலிருந்து இப்போது இளைப்பாறியிருக்கின்றார். புலவருடை கடைகி மகனுகிய முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை (இந்நூலாசிரியர்) சைவவித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகள் சிலவற்றில் அதிபராகக் கடமையாற்றி இப்போது இளைப்பாறியுள்ளார்.

16. மூன்றாவது இந்திய யாத்திரை

யாத்திரை :

புலவர் தம்மைப் பீடித்த சன்னி வருத்தினின்று சுக மெய்திய காலந் தொடக்கம் இந்தியத்தல யாத்திரை செய்யும் நோக்கமுள்ளவராகவீருந்தனர். அந்த நோக்கம் பல காரணங்களாலும் அப்போது நிறைவேறவில்லை. 1907ம் ஆண்டு அவர் மனைவி இறந்த பின்னர் அவ்வெண் ணம் திரும்பவும் அவர் மனதில் உதித்தது. அவருடைய உழுவலன்பர் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித் தியாசாலைத் தலைமையாசிரியர் ச. பொன்னம்பலபிள்ளை, புலவரை இந்திய யாத்திரை செய்யுமாறு வற்புறுத் தினர். புலவரும் அதற்கிசைந்து 1909-ம் ஆண்டு புரட் டாதி மாதம் வயித்தியநாதபிள்ளை, மயிலணி சீனிவாச கக் குருக்கள், தாவடி சோமாஸ்கந்த பண்டிதர் முதலி யவர்களோடு இந்தியாவுக்குப் புறப்பட்டனர். இந்தியா வில் அவர்கள் இராமேசுவரம், இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, ஸ்ரீரங்கம், கும்பகோணம், திருவாவடுதுறை, திருவிடை மருதூர் ,சூரியனூர் கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீகாழி, சிதம்பரம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் ஆதியாந் தலங்களைத் தரிசித்துக் கொண்டு தூத்துக்குடி மார்க்க மாகக் கொழும்பு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணந் திரும்பினர்.

நண்பர்கள் சந்திப்பு

புலவர் இராமநாதபுரஞ் சென்றபோது பாண்டித் துரைத் தேவர் அனுமதிப்படி பண்டிதர் கோபாலையர், புலவரையும், அவரோடு சென்றவர்களையும் புகைவண்டி நிலையத்தில் வரவேற்று இராமநாதபுரம் கூட்டிச் சென்று அவர்களுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்தனர். அச் சமயம் தேவர் மதுரையில் இருந்தமையால் அவரை

அங்கு சந்திக்க முடியவில்லை. இராமநாதபுரத்தை விட்டு மதுரை போகுமுன் புலவர் தமது வருகையைத் தந்திமூலம் தேவருக்கு அறிவித்தனர். அவர் புகைவண்டிமூலம் மதுரையை அடைந்தபோது, தேவரும் மற்றுஞ் சங்கப் புலவர்களும் அவரைக் குதூகலமாக வரவேற்றனர். அவர் தமது வண்டியில் ஏற்றிச்சென்று தாம் வசித்த மாளிகையில் தங்குவதற்கேற்ற வசதிகள் செய்தனர். மறுநாள் சங்கப் புலவர்களாகிய சுப்பிரமணியக் கவிராயர், அருணாசலக் கவிராயர், நாராயணையங்கார், மு. இராகவையங்கார் முதலிய எல்லோரையும் ஒன்று கூட்டிப் புலவரை வரவேற்று உபசரித்தனர். சங்கப் புலவர்களைப் புலவருக்கு அறிமுகஞ் செய்தபின்னர் எல்லோருஞ் சேர்ந்து சங்க விஷயமாகவும், பிறவிஷயமாகவும் பலமணிநேரம் உரையாடினர். தேவர், புலவரையும், அவரோடு கூடச்சென்ற வர்களையும் கூட்டிச் சென்று சங்கத்துக்கங்கமாயுள்ள கலாசாலை, புத்தகசாலை, அச்சுக்கூடம் முதலியவற்றைக் காண்பித்தனர். மதுரையில் அவர் மூன்று நாட்கள் தங்கிய போது சங்கப் புலவர்கள் எல்லாருடைய நட்பைப் பெற்றனர்.

புலவர் திருவாடுதுறை சென்றபோது அங்கு மடாதிபதியாய் விளங்கிய அம்பலவாண தேசிகரைச் சந்தித்து அவரோடு ஒருநாள் முழுவதும் இலக்கிய விலக்கண சம்பந்தமான விஷயங்களைப்பற்றி உரையாடினர். தேசிகர், புலவருடைய நுண்மாணுழைபுலத்தை மிக வியந்து இரண்டு விலையுயர்ந்த பட்டுச் சால்வைகளைச் சன்மானமாகவழங்கினர். புலவருடன் கூடச் சென்ற சோமாஸ்கந்த பண்டிதருக்கும் பட்டுச் சால்வை சன்மானமாகக் கொடுக்கப்பட்டது. புலவர் தேசிகரிடத்திற் பேரன்பு பூண்டவராய் அவர்மீது பல பாக்களைப் பாடித் தோத்திரஞ் செய்து அவரை மகிழ்வித்னர். அவற்றுள் இரு பாக்களைக் கீழே தருதும்.

தோத்திரம்

தேவார மாதி யருட்பெருஞ் செல்வர் திருமுறைகள்
நாவார வோதிக் குசையினுங் கூரிய நன்மதியாற்
பாவாண ருங்கொள நற்பொரு ளாய்ந்து பகர்ந்துமகிழ்
கோவே நமோநம அம்பல வாண குருமணியே.

விருதமர் கோகழி அம்பல வாண வியன்குருவின்
அரிதுணர் கல்வியை ஈகையை ஞானத்தை ஆடகப்பொன்
பொருதிரு மேனியைச் சைவநல் வேடப் பொலிவழகைக்
கருதிடுஞ் சுன்னைக் குமார சுவாமி கவியிவையே.

சூரியனூர் கோயில் சென்றபோது ஆங்கு மடாதி பதியாய் விளங்கிய முத்துக்குமார சுவாமித் தம்பிரானைச் சந்தித்து அவரோடு உரையாடி அவருடைய சன்மானங் களையும் பெற்றனர்.

சிதம்பரஞ் சென்றபோது பொன்னம்பல பிள்ளை, புல வரையும், அவரோடு சென்றவர்களையும் சிறப்பாக வர வேற்றுத் தமது வீட்டிற்றங்குமாறு ஒழுங்குகள் செய்த னர். முதலாள் பொன்னம்பலபிள்ளையினுடைய விருப் பத்திற்கிணங்கி ஆறுமுகநாவலர் பாடசாலை மாணவர் களைப் புலவரும், சோமாஸ்கந்த பண்டிதரும் பரீக்ஷித்த னர். இரண்டாம் நாள் சிதம்பர நடராச தரிசனஞ் செய்தனர். மூன்றும் நாள் புலவர் தமது நூல்களை நாவலர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கவேண்டிய ஒழுங்கு களைப் பொன்னம்பல பிள்ளையோடு செய்தனர்.

புலவர் திருப்பரங்குன்று சென்றபோது ஆங்கு வசித்த காசிவாசி செந்திநாதையரைச் சந்தித்து அவ ரோடு உரையாடினர். பின்னர்த் திருநெல்வேலி சென்று நியாயவாதி பால்வண்ண முதலியாரையும், தூத்துக்குடி சென்றபோது, சைவசித்தாந்தப் பிரசாரகர் முத்தைய பிள்ளையையுஞ் சந்தித்து உரையாடினர்.

யாத்திரைப் பலன்

புலவர் செய்த இத்தக் கடைசி யாத்திரை அவருக்குப் பல நன்மைகளை உண்டுபண்ணிற்று. மனைவியின் மறைவால் ஏற்பட்ட மனத்துயரம் அவரை விட்டு நீங்கிற்று. பல பாடல்பெற்ற தலங்களைத் தரிசித்ததனால் அத்தலங்களின் மகிமையையும், தலவரலாறுகளையும் நேரே அறியுஞ் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தொடர்பும், மதிப்பும், பல புலவர்களது நெருங்கிய பழக்கமும் அவருக்குக் கிடைத்தன. அவருடைய நூலுரைகளை அச்சிடும் வசதிகளும் ஏற்பட்டன.

17. பிற்கால நண்பர்கள்

புலவருடைய புகழ் எங்கணும் பரவியதன் காரண மாக அவருடைய நண்பர்களும் பெருகிப் பலராயினர். அவர்களுள் முக்கியமான ஒரு சிலருடைய குறிப்புக்கள் இங்கு தரப்படுன்றன.

த. கைலாயபிள்ளை (1855–1939)

இவர் ஆறுமுகநாவலரது தமையனரின் புத்திரரா வர். இவர் முதலிற் புலவரை ஆறுமுகநாவலர் வீட்டில் 1870-ஆம் ஆண்டிற் சந்தித்தனர். அக்காலந் தொடக்கம் இருவரும் நெருங்கிய நண்பர்களாயிருந்த னர். புலவர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராக நியமனம் பெற்றபின் இருவருக்கும் இடையிலுள்ள தொடர்பு அதிகப்பட்டது. யாழ்ப்பா ணத் தமிழ்ச் சங்கத்திலும், வைதிக பரிபாலன சபையி லும் இருவரும் சேர்ந்து உழைத்தனர்.

தி. த. கனகசுந்தரம்பிள்ளை (1863–1922)

அருங்கலை விநோதரும் பெருந் தமிழறிஞருமாகிய பிள்ளையவர்களுக்கும், புலவருக்கும் நட்புறவு 1907-ஆம் ஆண்டு தொடங்கியது. அக்காலந் தொடக்கம் புலவரு டைய இறுதிக்காலம் வரையும் அவர்கள் உற்ற நண்பர் களாயிருந்தனர். இலக்கிய விலக்கண ஆராய்ச்சி விஷய மாக இருவருக்குமிடையிற் கடிதப் போக்குவரவு அடிக் கடி நடைபெற்று வந்தது. பிள்ளையவர்களும் புலவரும் கூடி அகப்பொருள் விளக்கப்புத்துரை, பாலகாண்டம் அரும்பதவுரை என்னும் நூலுரைகளை இயற்றிப் பதிப் பித்தனர். இவருடைய முயற்சியாற் புலவருடைய சில நூல்கள் சென்னை அரசினரால் நாடத்தப்படும் பரீக்ஷை களுக்குப் பாடபுத்தகமாக வைக்கப்பட்டன.

ந. வே. கனகசபாபதி ஐயர் (1856 – 1920)

இவர் புலவருடைய நெருங்கிய நண்பர்களிலொருவர்; இவரும் புலவருஞ் சேர்ந்து பிரசங்கஞ் செய்யப் பலவிடங்களுக்குப் போவது வழக்கம். 1900-ஆம் ஆண்டு இருவரும் திருக்கோணமலை, நிலாவெளி முதலாம் இடங்களுக்குச் சென்று பல பிரசங்கங்கள் செய்தனர். இவரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தில் ஓர் அங்கத்தவராயிருந்து புலவரோடு கூடித் தமிழ்த் தொண்டு செய்தனர்.

ச. சபாரத்தினமுதலியார் (1853 — 1922)

சைவ சித்தாந்தப் பிரசாரகரும், தமிழறிஞரும், யாழ்ப்பாணம் பிஸ்காற் கந்தோரின் முதலதிகாரியுமாகிய கொக்குவில் ச. சபாரத்தினமுதலியார் புலவருடைய நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். அவர் புலவரை அடிக்கடி சந்தித்துத் தமக்குள்ள இலக்கண விலக்கியங்களிலுள்ள சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வார். அவர் சைவ சித்தாந்தத்தைப் பிரசாரஞ் செய்வதையே முழு நோக்காகக் கொண்டு பல தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுட் சில சீவான்மபோதம். ஈச்சுர நிச்சயம், பிரபஞ்ச விசாரம் என்பன. அவர் சமய சம்பந்தமான சில நூல்களை ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டனர்.

ச. பொன்னம்பலபிள்ளை (1852 — 1918)

இவர் முதலிற் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை யாசிரியராகவும்; பின்னர்த் தரும பரிபாலகராகவும் கடமையாற்றினர். இவருக்கும் புலவருக்கு மிடையில் நட்புறவு 1900-ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்டது. இவரது முயற்சியினால் புலவர் வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டனர். இவர்

புலவர் இயற்றிய பல நூல்களைத் தமது அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் புலவருக்குப் பேருபகாரியாக விளங்கினர். அந்நூல்களில் ஒன்றாகிய தண்டியலங்காரப் புத்துரைக்கு இவர் வழங்கிய சிறப்புப்பாயிரப் பாக்களுட் சில வருமாறு:

தண்டிகவி இயற்றுதமி ழலங்காரத்
துரைபுதுக்கித் தகவிற் றந்தான்
மண்டுமியற் றமிழ்ப்புலமை வாய்ந்ததலே
டாரியமும் வல்லான் கேட்போர்
கொண்டுளத்தில் தெரிந்திடமெய்ந் நூலுரைகள்
போதிக்குங் குரவன் கூர்ந்த
திண்டிறற்சொல் வன்மைகவி செய்வன்மை
யவையஞ்சாத் திறமை மேன்மை.

முன்னுகும் இலக்கணங்கள் அமைந்தகுணக்
குன்றறிவின் முதுவோர் மன்னு
சுன்னக நகர்வாசன் குமாரசா
மிப்புலவன் துன்னு மேருக்
கெந்நாளு மேர்செய்வார் இலரெனுரைக்
கரில்பரிப்பித் தெவரும் ஏத்தப்
பொன்னுரு மலங்காரக் கலங்காரம்
புரிந்தபுகழ் புகழற் பாற்றே.

பொன்னம்பலபிள்ளை 1918-ஆம் ஆண்டு இறந்த போது துயர மிகுதியினுல் தமது நண்பர் த. கனகசுந்த ரம் பிள்ளைக்குப் புலவர் பின்வருமாறெழுதினர்:

''பொன்னம்பலபிள்ளை தங்களுக்கும், எனக்கும், வேறு பலர்க்கும் மனமொழி மெய்களாற் சிறந்த நண் பராய் விளங்கினர். எனக்குப் பேருபகாரியாய் விளங் கினர். அவர் பிரிவாலாய துக்கம் நீங்கலரிதே''.

சுவாமிநாதபண்டிதர் (1864–1927)

பண்டிதருக்கும் புலவருக்குமிடையில் நெருக்கமான நட்புறவு 1907-ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்டது.

அக்காலத்தில் அவர் தாம் பதிப்பித்த தேவாரம், சிவஞானபோதமாபாடியம், சர்வஞானேத்தரம் முதலிய நூல்களைப் பரிசோதித்து அச்சிடுவதற்குப் புலவர் உதவி புரிந்தனர். அவர் விரும்பியவாறு சர்வஞானேத்தரத்திற்கு ஓர் முகவுரையும் புலவரால் எழுதிக் கொடுக்கப் பட்டது. 1911-ஆம் ஆண்டில் அவர் 'நாவலர் தருமசிந்தனை' என்னுங் கண்டனம் ஒன்றிற் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராகிய பொன்னம்பலபிள்ளையையும், நாவலர் தரும ஸ்தாபனங்களையுங் கடுமையாகத் தாக்கி எழுதினர். அக்கண்டனத்தைக் கண்ணுற்ற புலவர் அவருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்வதை நிறுத்தினர். பொன்னம்பலபிள்ளை இறந்தபின் அவர் புலவரோடு மீண்டுந் தொடர்பு பூண்டனர். புலவர் இறந்தபோது அவர் சில உருக்கமான இரங்கற் பாக்களைப் புலவர்மேற் பாடினர். அவை நூலின் இறுதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

18. பிற்கால நூல்கள்

புலவர் தமது பிற்காலத்தில் மாணவருக்கும், பிறருக்கும் உபயோகமாகக் கூடிய பல நூல்களை இயற்றியுள்ளார். அவை செய்யுள் நூல்கள், உரைநூல்கள், இலக்கண நூல்கள், வசனநூல்கள், அகராதி என்னும் பலதிறத்தன. புலவருடைய நூலுரைகள் வெளிவருவதற்குப் பேருபகாரியா யிருந்தவர்கள் பாலவனத்தம் ஜமீன்தாராகிய பாண்டித்துரைத் தேவரும், இராமனாதபுரம் இராசராசேஸ்வர சேதுபதி மகாராசாவுமாவர்.

I

செய்யுள் நூல்கள்

இக்காலத்திற் புலவர் சாணக்கிய நீதி வெண்பா (1914), இராமோதந்தம் (1921) என்பவற்றையும், ஆறு ஊஞ்சல் நூல்களையும் இயற்றியுள்ளார்.

சாணக்கிய நீதிவெண்பா

இது சந்திரகுப்த மகாராசாவின் மந்திரியாய் விளங்கிய சாணக்கிய பண்டிதரால் உலகுக்கு வாய்த்த பலவகை நீதிகளைத் திரட்டிச் செய்த 'சாணக்கிய சதகம்' என்னும் வடமொழி நூலை மொழிபெயர்த்து நூறு வெண்பாக்களால் இயற்றப்பட்டது. அதிலிருந்து இரண்டு பாக்கள் தரப்படுகின்றன.

பண்டிதரல்லாதார்

உருவ மிளமை உயர்குடித் தோற்றம்
மருவினுமென் கல்வியிலா மக்கள் — ஒருசிறிதும்
வாசந்தரா முருக்கின் வண்மலரே போல்வரெனப்
பேசுவரே நூலோர் பிரித்து.

வஞ்சகன்

நாக்கு நுனிக்கண் நறுந்தேனு நெஞ்சத்து
நீக்கரிய நஞ்சும் நிலைபெற்ற — தீக்குணத்தோன்
இன்சொ லுரைக்கின்றுன் என்றவனை நம்பாதே
என்சொலினுஞ் செய்வா னிடர்.

மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் இந்நூலைப் பற்றி 29-10-1914-இற் புலவருக்கு எழுதிய கடிதமொன்றிற் பின்வருமாறு கூறியுள்ளார் :

"வடமொழி தென்மொழியில் ஒழுங்கான பயிற்சியடைந்து, பலன்களையும் பெற்று விளங்குந் தங்களது நூலின் அருமைகளை யான் பாராட்டுதல் மிகை. மொழி பெயர்ப்பும் செய்யுட்களின் நடையும், குறிப்புரையும் மிக்க திருப்தியை விளைவிக்கின்றன. தங்கள் போன்றவர்கள் இருந்து விளங்குவதுதான் தமிழ் மடந்தையின் ஆக்கத்துக்குக் காரணம்."

தேவகோட்டையிலிருந்து வெளிவந்த 'வைசிய மித்திரன்' என்னும் பத்திரிகை 10-8-1914-இல் இந்நூலை வியந்து பின்வரும் மதிப்புரையை வழங்கியது.

மதிப்புரை

"யாழ்ப்பாணத்துச் சுன்னகம் அ குமாரசுவாமிப் புலவர் மொழிபெயர்த்து அழகிய வெண்பாக்களில் அமைத்துள்ளார்களென்றுல் அதன் அருமை பெருமைகளைச் சொல்லவும் வேண்டுமா? புலவரவர்கள் வடமொழி தென்மொழியாகிய இரண்டிலும் சிறந்த ஆராய்ச்சியுடையவர்கள் என்பதை நம் தமிழ் நாட்டார் நன்கு அறிவார்கள். அந்நூலிற் காணப்படும் ஒவ்வொரு வெண்பாவிலும் பெருங் கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. செய்யுட்களோ ஓதுவதற்கு இனிமையாயும், பயில்வதற்கு இலகுவாகவும் அமைந்திருக்கின்றன. இது கலாசாலையிற் படிக்கும்

மாணவருக்குப் பெரிதும் பயன்படுவதாகும். இதிற் காணப்படும் அரிய நீதிகளைத் தமிழ் மக்கள் எல்லோரும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'மகாவிஜய லட்சுமி' என்னும் பத்திரிகை 12-10-1914 இல் வழங்கிய மதிப்புரை வருமாறு :

மதிப்புரை

"சாணக்கிய சதகத்தைத் தமிழிலே பெயர்த்து நூறு வெண்பாக்களாகப் பாடியவர் செயற்கரிய பற்பல நூல் களைச் செய்து பெரும்புகழ் படைத்திருக்கின்ற சுன்னாகத்துச் ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவரவர்களேயாம். யாழ்ப்பாணத் துப் புலவர்களுள்ளே சிரத்தானமாக விளங்குபவர் இவர் ஒருவரே என்று பற்பல புலவர்களாலே பாராட்டப்பட்ட இப்புலவர் பெருமானது பெருமைகளை மேலும் மேலும் புகழ்தல் மிகையென்றஞ்சி அவரைக் குறித்து யாதும் பேசாது இத்துணையில் விடுகின்றும்."

"வெண்பாக்கள் சொற்சுவை பொருட்சுவை அமைந் துள்ளன. சிறுவர் நெட்டுருச் செய்வதற்கு இலகுவா யுள்ளன. இலகுவில் பொருள் காணுதற் கியலாதனவாய், நாவுக்கிசையாத தொடைகளை யுடையனவாய் இக்காலத் தமிழ் நடைக்கு மாறுபாடுடையனவாயுள்ள நாலடியார் முதலிய நீதி சாஸ்திரங்களைப் போலாகாது தெய்வப் புல மைத் திருவள்ளுவ நாயனரால் அருளிச் செய்யப்பட்ட திருவள்ளுவர் நீதிநூல்களைப் போல ஓசையுடைமை, நவின்றேர்க்கினிமை முதலிய சிறப்புக்கள் அமைந்துள் ளன."

கொழும்பிலிருந்து முன்னுள் வெளிவந்த "The Ceylonese" என்னும் பத்திரிகை 7-8-1914 இல் இந் நூலைப் பற்றி வெளியிட்ட மதிப்புரை வருமாறு :

"The translator is Mr. A. Kumaraswamy Pulavar of Jaffna who is a distinguished Tamil and Sanskrit scholar. The verses are very lucid in expression and stand side by side in diction to the poems of Auvaiyar the famous Tamil Poetess."

இந்நூலுக்குப் புலவருடைய சிறந்த மாணவருள் ஒருவராகிய தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையா பிள்ளை அளித்த சிறப்புப் பாயிரம் வருமாறு :

சிறப்புப்பாயிரம்

உலகுபுகழ் வடமொழியி லுயர்சாணக்
கியகவிஞன் உரைத்த நீதி
குலவியநூ லுறும்பொருளைப் பத்தழகும்
நவரசமும் குதிகொண் டாட,
நிலவுதமிழ் வெண்பாவில் ஔவைமொழி
இதுவென்று நிலத்தோர் கொள்ளப்
புலவர்புது விருந்துகொளப் பெயர்த்துரைத்தான்
யாவனெனப் புகலக் கேண்மோ.

மன்னியசெந் தமிழ்மொழியும் வடமொழியும்
இனிதுணர்ந்தோன் மாசில் வாய்மை
துன்னிமிகு குணக்குன்று கவிஞர்சிகா
மணியாகத் துலங்குந் தோன்றல்,
பன்னுமெம்போல் வார்பலர்க்குப் பலகலைகள்
அளித்தருளும் பரோப காரி,
சுன்னையெனும் நகராளி குமாரசுவா
மிப்புலவன் சுகுணன் மாதோ.

இந்நூலின் சிறப்பினை நண்குணர்ந்த சென்னை அரசாங்கத்தினர் இந்நூலை மாணவருக்குரிய பாடபுத்தகங்களில் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டனர்.

இராமோதந்தம்

புலவர் இயற்றிய கடைசிச் செய்யுள் நூல் இதுவே யாகும். இது அவர் இறப்பதற்குச் சில மாசங்களுக்கு முன் இயற்றப்பட்டது. இது வடமொழியில் இலகுவும். சுருக்கமும் ஒருங்கியைந்து விளங்கும் இராமோதந்தம் என்னும் நூலைத் தமிழ் மாணவர்க்கு உபயோகப்படுமாறு நூற்றிருபத்தெட்டு விருத்தப் பாக்களாற் செவ்விய நடையில் மொழிபெயர்த் தியற்றப்பட்டுள்ளது. இந்நூலை மதுரைச் சங்கத்தினர் 1922-ம் ஆண்டு அச்சிட்டு வெளிப் படுத்தினர். பாக்களின் சுவையறிதற் பொருட்டு அதி லிருந்து இரு பாக்கள் தருதும்.

மானுரு வெடுத்துக் கொண்டு
மாயமா ரீசன் சென்று
சானகி முன்னே நிற்பச்
சானகி "யீது பொன்னின்
மானிதை நீபி டித்துத்
தரு" கென வாஞ்சை கொண்டு
கோனடி பணிந்து கேட்டாள்
கோனுமங் கதன்பின் போனன்.

பொன்னின்மா னதன்பின் போன
பூபதி தம்பி வந்து
சொனவா சகங்கள் கேட்டுத்
துயர்ப்பெருங் கடலின் மூழ்கி
பன்னசா லைக்கண் வந்து
பாவையைக் காணு னாகி
இன்னலுற் றழுங்கி நின்ரூன்
இருவருந் தேட லுற்றூர்.

இந்நூலின் இறுதியிலுள்ள வாழிவிருத்தத்திற் புலவர் "வாழி செந்தமிழ் இலக்கிய விலக்கண வரம்பு" என்று கூறியிருக்கின்றூர். இதுவே புலவரது உயர்ந்த குறிக் கோளாகும். இக்குறிக்கோளைக் கடைப்பிடித்தே தமது நூல்களைப் புலவர் இயற்றியிருக்கின்றனர்.

ஊஞ்சல் நூல்கள்

பிற்காலத்திற் புலவர் ஆறு ஊஞ்சல் நூல்களை இயற்றியுள்ளார். அவை, நல்லூர்க் கைலாயபிள்ளையார் ஊஞ்சல் (1904), கோப்பாய் வெள்ளெருவை விநாயகர் ஊஞ்சல் (1905), விளிசிட்டி பொற்கலந்தம்பை வைரவர் ஊஞ்சல் (1912), தெல்லிப்பழை தில்லையிட்டி அம்மன் ஊஞ்சல் (1915), பன்னாலை வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் (1916), அராலி முத்துமாரியம்மன் ஊஞ்சல் (1921) என்பன. இவற்றுட் கோப்பாய் வெள்ளெருவை விநாயகரூஞ்சல் ஆறு பாக்கள் கொண்டது; வள்ளிமலைக் கந்தசுவாமி ஊஞ்சல் நான்கு பாக்கள் கொண்டது; மற்றைய நான்கும் ஒவ்வொன்றும் பத்துப் பாக்கள் கொண்டன. கைலாயபிள்ளையார் ஊஞ்சல் அக் கோயிற் றருமபரிபாலகராயிருந்த த. கைலாயபிள்ளை விரும்பியவாறு இயற்றப்பெற்றது. இவ்வூஞ்சற்பா ஒன்று தருதும்.

ஊஞ்சல்

ஆரணமும் ஆகமமுந் தூண்க ளாக,
அறிவரிய சிவஞானம் வட்ட மாக,
ஏரணவு நூல்வாக்குக் கயிற தாக,
ஏற்றமுறும் உபநிடதம் பலகை யாக,
பேரணவும பிரணவமே பீட மாக,
பிறங்கியநுள் ஊஞ்சலின்மேல் இனிது வைகிக்
காரணவுங் கோபுரஞ்சேர் நல்லை வாழுங்
கைலாய விநாயகரே ஆடி ரூஞ்சல்.

சிறப்புப் பாயிரங்கள்

புலவர் பிற்காலத்தில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட சிறப்புப்பாயிரங்களைப் பல புலவர்கள் இயற்றிய நூல்களுக்கு வழங்கியுள்ளார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள். மதுரை பொ. பாண்டித்துரைத்தேவர், தத்தை மங்கலம் பொ. நல்லதம்பிப்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர், வித்துவசிரோன்மணி சி. கணேசையர், மட்டக்களப்புப்

பண்டிதர் ச: பூபாலபிள்ளை முதலியோர். இக்காலத்திற் பாடிய சிறப்புப் பாயிரங்கள் யாவும் புலவருடைய பழுத்த பாவன்மையை நன்கு புலப்படுத்துவன. சிறப்புப் பாயிரங்களைப் பற்றிய விபரங்கள் நூலின் இறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன. சில முக்கிய சிறப்புப் பாயிரங்கள் கீழே தரப்படுகின்றன.

சிறப்புப் பாயிரம்

பாலப்பிரபோத விலக்கணம்

மரபோது நெறிதழுவிச் சங்கதமுந்
திரமிடமும் வளாவப் பாலப்
பிரபோத விலக்கணப்பேர் நூலொன்று
கற்பவர்கள் பெட்பத் தந்தான்
திரபோத நூல்கள்பல செந்தமிழா
ரியங்களிடைத் தேடிக் கற்ற
பரபோத காசிரியன் பண்டிதன்பேர்
நல்லதம்பி பாவல் லோனே.

சிவஞானபோதமாபாடியம் சி. பா.

பண்டையுள சான்றோர்க ளிலக்கியமும்
இலக்கணமும் பயின்றோன் அன்பு
கொண்டுசிவ னடிபணிவோன் சைவமதம்
வளரமுயல் கொள்கை யாளன்
தண்டமிழிற் சித்தாந்த சாத்திரமும்
கற்றுணர்ந்தோன் சாமி நாத
பண்டிதனும் பெயருடையோன் பகிரங்க
மாதல்பெரும் பயனு மென்றே.

இரகுவமிசவுரை சி. பா.

காசிபகோத் திரமுடையோன் புன்னைநகர்ச்
சின்னையர் காதன் மைந்தன்
தேசிகன்வித் துவசூடா மணிபொன்னம்
பலப்பெயர்கொள் செம்மல் பாங்கே
பேசரிய விலக்கியமும் இலக்கணமும்
பிறநூலும் பெரிது கற்றோன்
பூசுரர்கோன் கணேசனெனும் பெயருடையோன்
கவிபாடும் புலமிக் கோனே.

தமிழ்வரலாறு சி. பா.

திருநாமம் ஆயிரத்தோன் தொடர்தமிழின்
பெருமைபல தெரியக் காட்டித்
தருநாமந் தமிழ்வரலா றெனவசன
நூலொன்று தமிழ்கற் போர்கள்
பெருநார நிதியுலகிற் பெறவளித்தான்
பூபால பிள்ளை என்னும்
வருநாம தேயமுளோன் பழையதமிழ்
மொழியிலபி மானி மாதோ.

வாழ்த்துப் பாக்கள்

பிற்காலத்திற் புலவரால் இயற்றப்பெற்ற வாழ்த்துப் பாக்கள் சிலவற்றை ஈண்டுத் தருதும்.

சென்னை

வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின்
ஐம்பதாவது வருடோற்சவ

வாழ்த்து

(1910)

மன்னுசிவா கமம்வாழி மறையும் வாழி,
பத்திபுரி சிவனடியார் கூட்டம் வாழி
தன்னிகரிற் சிவசமயம் வளரும் வண்ணம்
தலையளிசெய் பண்டிதர்கள் தாமும் வாழி,

துன்னியசித் தாந்தகலை உணர்ந்தோன் சோம
சுந்தரநா யகன்சைவந் துலங்கக் காட்டுஞ்
சென்னைநகர் வேதாக மோக்த சைவ
சித்தாந்த சபைபுவியில் தினமும் வாழி.

இங்கிலாந்து

ஜோர்ஜ் மன்னர் மகுடாபிஷேக மங்கல

வாழ்த்து

(1910)

திங்களெனக் குளிர்ச்சிதருஞ் செங்கோ லாளன்
தேசமெலாம் சமாதானந் தேடுங் கோமான்
செங்கதிரோன் அத்தமியா மண்ட லேசன்,
செந்தண்மை பூண்டுகுடி ஓம்புஞ் சீமான்,
அங்கிலபூ மிக்கரசன் வாய்மை யாளன்,
அறிவுடையோன் பொறையுடையோன் பரத கண்ட
மங்கலசக் கரவர்த்தி ஜோர்ஜ்சு மன்னன்,
மணிவிமேரி யம்மையுடன் வாழி, வாழி.

புதுவயல்

ஞானப்பிரகாச சபை

வாழ்த்து

(1910)

மாமேவு நான்மறைதேர் பனவர் வாழி,
மன்னுபசு நிரைவாழி முகில்கள் வாழி,
கோமேவு நெறிவாழி வளங்கள் வாழி,
கூறருவை திகசைவ நீதி வாழி,
பூமேவு தடப்பொய்கை புடையே சூழும்
புதுவயல்சேர் தனவசியர் சமூகம் வாழி,
பாமேவும் அவர்புரியும் தருமம் வாழி,
பகர்ஞானப் பிரகாச சபையும் வாழி.

நகரவைசியர் வாழ்த்து
(1915)

ஓவாத முயற்சியிறை பொருள்க ளீட்டி
உத்தமமாம் தருமவழிக் குதவுஞ் சீலர்,
தேவாரம் பெற்றசிவத் தலங்கள் எல்லாம்
சென்றிறைஞ்சித் திருப்பணிகள் செய்யுஞ் சீலர்,
பாவாணர் அந்தணர்கள் வறிய ராதி
பலருக்கும் உபகாரம் புரிந்து வாழ்வோர்,
நாவார உண்மைசொலும் குணத்தால் மிக்க
நகரமுறும் வசியர்குலம் நாளும் வாழி.

II
உரை நூல்கள்
I. இலக்கியவுரை நூல்கள்

புலவர் இக் காலத்திற் சிறந்த இலக்கிய நூலுரைகள் எழுதியுள்ளார். அவைகளுட் சிறந்தன திருவாதவூரர் புராணப் புத்துரை (1904), முத்தகபஞ்சவிஞ்சதி குறிப்புரை (1909), கம்பராமாயணம் பாலகாண்டம்* அரும்பதவுரை (1918), ஏரெழுபது பொழிப்புரை (1919), கல்வளையந்தாதி பதவுரை (1920) என்பன.

திருவாதவூரர் புராணப் புத்துரை

மாணிக்கவாசகப் பெருமான் சரித்திரத்தைக் கூறும் இந்நூல் கடவுண்மாமுனிவரால் இயற்றப்பெற்றது. இப் புராணமூலம் புலவரால் முன்னர்த் திருத்தி வெளியிடப் பட்டது. புலவர் 1904ம் ஆண்டில் இதற்கோர் புத்துரையை எழுதி வெளிப்படுத்தினர். புத்துரையின் சில பகுதிகள் மெச்சுதற்குரியன.

1. மந்திரிச் சருக்கத்தில் ''தீயசிகையில்லார்க்கு'' என்பதில் வரும் 'சிகை' என்பதற்குக் 'கணக்குத் திரள' எனப் பொருள் கொண்டது மெச்சத்தக்கது.

* பாலகாண்ட அரும்பதவுரையைப் புலவர் தி. த. க.வுடன் சேர்ந்து இயற்றினர்.

2. திருப்பெருந்துறைச் சருக்கத்தில் 39-வது செய்யுளில் வரும் 'திவ்வியாதரமேயான செய்தியர்' என்பதைத் "திவ்விரதரமேயான செய்தியர்" எனப் பாடங் கொண்டு 'திவ்விரதரம்' என்பதற்கு "தீவிரதரம்" எனப் பொருளுரைத்தது சிறப்புடைத்து. மூலபாடத் திருத்தங்களைப் பற்றி முன்னர் இந்நூலைத் திருத்தி வெளிப்படுத்திய பண்டிதர்களுக்கும், புலவருக்கும் பத்திரிகைகளில் விவாதம் நிகழ்ந்தது. புலவருடைய திருத்தங்கள் கொள்ளப்படத் தக்கனவென்று வித்துவசிரோன்மணி சி. கணேசையர், வட்டுக்கோட்டை வித்துவான் ஆறுமுக உபாத்தியாயர் என்போர் ஞானப்பிரகாசம் (1911) என்னும் பத்திரிகையிலும் வேறு பத்திரிகைகளிலும் தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தினர். வட்டுக்கோட்டை வித்துவான் ஆறுமுக உபாத்தியாயர் ஞானப்பிரகாசத்தில் வெளியிட்ட அபிப்பிராயம் வருமாறு.

திருவாதவூரர் புராணம்

"ஓதநீர்வேலி உலகின்கண்ணே மாதுரியமமர்ந்த வாதவூரர் புராணத்தைச் சோதனை செய்து அச்சிட்டவர் பலர். அவர்களெல்லாருள்ளும் ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவரவர்களே பல திருத்தங்கள் கூட்டி அச்சிட்டிருக்கின்றார்கள். இத்திருத்தங்களை யாம் பலமுறை பார்த்தோம். சில ஏட்டுப் பிரதிகளையும் பார்த்தோம். பாரத ராமாயணப் பிரசங்கங்களன்றி, வாதவூரர் புராணப் பிரசங்கமும் பல வித்துவ சபைகள் முன்னே செய்திருக்கின்றோம். அச்சபைகளிலெல்லாம் 'வாதவூரர் புராணம்' என்னும் பெயரையே நாட்டியிருக்கின்றோம். சரவணப் பெருமாளையர் முதலிய மெய்ப்புலவர்களும் 'வாதவூரர் புராணம்' என்பதனையே அங்கீகரித்திருக்கிறார்கள். "திருவாதவூரரெனும் திருநாமம் புனைந்தார்கள்" என்று கடவுள் மாமுனிவரும் கூறியிருக்கின்றார்கள். இவ்வளவுமாகவும் பத்திரிகையொன்றில் 'திருவாதவூரர் புராண' மென்பதை மறுத்து "திருவாதவூரடிகள் புராணம்" என்பதை நாட்டப் பார்க்கின்றார். இதுவும் வாய்க்குமா? 'திருவாதவூரர்' அன்றித்

'திருவாதவூரடிகள்' என்பதும் அவருடைய பெற்றோரால் இடப்பட்ட பிள்ளைத் திருநாமம் என்று கற்றோராற் கொள்ளப்படுமா?

ஸ்ரீமத் குமாரசுவாமிப் புலவரவர்கள் 'கவளமாகளிற்றின்' என்பதை 'கவளமாமுகத்தின்' என்று திருத்தினரே. இது மறுக்கப்படுமா? "மின்பயிலுமா, மேவுமூர்," "தாவுமூர்," 'தவர்நூல்' என்பதற்கும் அவர் கூறிய உரையைப் பாராட்டுகின்றேம். 'பற்றினர் பிறிதோரோலை' "சாத்தினர் வாரியர்," 'பாரமிதை' என்பவற்றிற்கு அவர் கூறியவுரை நம்போலிய இலக்கிய விலக்கண வித்துவான்களன்றிப் பிறரும் அறியுந் தரத்ததோ? 'பொதுமொழி' என்பதன் பொருளும் 'அடிகள்' என்பதன் பொருளும், இலக்கணப் பிரயோகமும் அறியாதவரோடு வாதஞ் செய்யப்புகுதல் நீதியன்று.

"வித்துவசபையிற் சந்தித்து வலியுறுத்தக் காத்திருக்கின்றேம்."

வட்டுநகர், மகாவித்துவான் மு. ஆறுமுகம்பிள்ளை.

முத்தகபஞ்சவிஞ்சதி, குறிப்புரை

இது புலவருடைய முன்னோராகிய முத்துக்குமார கவிராயர் இயற்றிய முத்தகச் செய்யுட்கள் இருபத்தைந்தைத் தொகுத்துக் குறிப்புரையோடு வெளியிடப்பட்ட நூலாகும். இந்நூலில் வரும் செய்யுட்கள் யாவுஞ் சொல்லும், பொருளுஞ் சுவைபட நல்லிசையோடு படிப்பவர் மனதை மகிழவிக்கும் தன்மையன. செய்யுட்களில் மடக்கலங்காரம், நாமாந்தரிதை, சங்கியாதை, வியிற்கிராந்தை முதலிய பல அணிகள் நூதனமாக அமைத்துப் பாடப்பட்டுள்ளன. பாக்களின் பொருளை விளக்குவது மிகவும் கஷ்டம் என்று உணர்ந்து, புலவர் அவற்றிற்கு ஓர் குறிப்புரை வரைந்தனர். இந்நூலைச் சுவாமிநாத பண்டிதர் தமது அச்சுக்கூடத்திற் பதிப்பித்து உபகரித்தனர்.

கம்பராமாயணம் பாலகாண்டம்
அரும்பதவுரை

இராமாயணப் பதிப்புக்களிற் பலவிதமான வழுக்களும், பாடபேதங்களும் விரவிவருவதை உத்தேசித்து இயன்ற வரை ஒரு சுத்தமான பதிப்பொன்றை வெளிபிடக் கருதிப் புலவரும், தி. த. கனகசுந்தரம்பிள்ளையுந் திட்டமிட்டு அவ்வேலையில் 1908-ம் ஆண்டு தொடக்கம் ஈடுபட்டனர். அவர்கள் தமிழ் நாட்டின் பல பாகங்களிலுந் தேடிப்பெற்ற பல ஏட்டுச் சுவடிகளின் உதவியைக் கொண்டு நூலைப் பரிசோதித்தனர். பிள்ளையவர்கள் சென்னையிலிருந்தமை யாலும், புலவர் யாழ்ப்பாணத்தில் இருந்தமையாலும், அவர்கள் அடிக்கடி சந்திக்க முடியாதிருந்தமை காரண மாக அவர்கள் திட்டமிட்டபடி அவ்வேலையை விரைவிற் செய்து முடிக்க இயலவில்லை. பாலகாண்டத்தை முடிக் கப் பத்துவருட காலம் சென்றது. மற்றைய காண்ட வேலைகள் ஒன்றும் நிறைவேறவில்லை.

பாலகாண்டத்திற் செய்யப்பட்ட சிறந்த திருத் தங்களுட் சில கீழே தரப்படுகின்றன:

''ஆற்றுப்படலத்தின் 11-ம் செய்யுளில் ''மணியிடைக் கொடி'' என்பது 'மணிநுரைக்கொடி' எனவும், 15-ம் செய்யுளில் ''மறியுடையாயர் மாதர்'' என்பது ''மறி விழியாயர் மாதர்'' எனவும், நாட்டுப்படலத்தின் 2-ம் செய்யுளிற் ''கரம்பெலாம்'' என்பது ''கரும்பெலாம்'' எனவும், 25-ம் செய்யுளிற் 'குறிகளும் போற்றிக் கொள் வார்' என்பது ''குறிகளும் போத்திற் கொள்வார்'' எனவும், நகரப்படலத்தின் 3-ம் செய்யுளில் 'கண்டிலாத கரது' என்பது ''கண்டிலரங்கது'' எனவும் திருத்தப்பட் டன. இவ்வாறு திருத்தப்பட்டன பல.''

அரும்பதவுரையுள்ளும் சிறந்த பொருள் கோள்களுள. அவற்றுட் சில பின்வருமாறு:

நாட்டுப்படலத்து 1-ம் செய்யுளில் வரும் ''வாங்கரும் பாதநான்கும் வகுத்தவான் மீகியென்பான்'' என்னும் அடியில் வரும் ''வகுத்த வான்மீகி'' யென்பதை ''வகுத்து அவ்வான்மீகி'' எனவுரைத்தது சாலச் சிறப்புடைத்து. நகரப்படலத்து 79.ம் செய்யுளில் ''குணங் கூட்டிசைக் குப்பை'' என்பதில், 'கூட்டு' என்பதற்கு நட்பு எனப் பொருள் கொண்டது சிறப்புடையது. இவைபோன்ற சிறந்த பொருள் கோள்கள் பலவுள.

கல்வளையந்தாதியுரை, ஏரெழுபது பொழிப்புரை

புலவர், கம்பராமாயணம், பாலகாண்ட அரும்பத வுரை வெளிவந்த பின்னர்ச் சின்னத்தம்பிப்புலவர் இயற் றிய கல்வளையந்தாதிக்கும், கம்பர் இயற்றிய ஏரெழுப துக்கும் முறையே பதவுரையும், பொழிப்புரையும் எழு தினர். அவையிரண்டும் அச்சிடப்படவில்லை.

II. இலக்கண நூலுரைகள்

புலவர் 'இலக்கணக் கொட்டர்' என்றழைக்கப் படும் மகாபண்டிதராகிய முருகேச பண்டிதரிடம் பல வருடங்களாகப் பஞ்சலக்கணங்களை ஐயந்திரிபறக் கற் றுத் தேர்ந்தமையாலும், பல்லாண்டு அவற்றைப் பல மாணவர்க்குப் போதித்தமையாலும் அத்துறையிலவர் அதிக நுட்பம், திட்பம் வாய்ந்த அறிவையும் சிறந்த ஆராய்ச்சி வன்மையையும் பெற்று விளங்கினர். தமது பழுத்த இலக்கண நூலுணர்ச்சியின் விளைவாகப் புலவர் தண்டியலங்காரப் புத்துரை (1903), யாப்பருங்கலக்காரி கைப் பத்துரை (1908) என்னும் நூல்களுக்குச் சிறந்த புத்துரைகள் எழுதி வெளியிட்டனர். அகப்பொருள் விளக்கப் புத்துரை தி. த. கனகசுந்தரம்பிள்ளையோடு சேர்ந்தியற்றப்பட்டது. (1912)

தண்டியலங்காரப்புத்துரை

தண்டியலங்காரம் வடமொழியிலுள்ள 'காவியதர்சம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும். இதனை இயற்றியவர் தண்டி என்னும் புலவராவர். இந்நூலுக்கு எழுதப்பட்ட பழைய உரை, பிழைகள் மிகுந்திருந்தமையால் அவற்றையெல்லாம் வடமொழியிலுள்ள அலங்கார நூல்களின் உதவிகொண்டு திருத்தியும், ஆவசிகமான சிலவற்றைக் கூட்டியும், விஷயங்களை வேறுவேறாக விரித்து விளக்கியும், முன்னுள்ள உதாரணங்களோடு பின்னுங் கந்தபுராணம், இராமாயணம் முதலியவற்றிலிருந்து சிலவற்றை எடுத்துக் காட்டியும் மாணவர் நன்கு விளங்குமாறு புலவர் இதற்கோர் புத்துரை வகுத்தனர்.

இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் பொ. பாண்டித்துரைத்தேவர் விரும்பியவாறு இயற்றப்பெற்றது. இதற்குச் சிதம்பரம் நாவலர் சைப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

இந்நூலைப் பற்றிச் 'செந்தமிழ்'ப் பத்திரிகை வழங்கிய மதிப்புரை வருமாறு:

மதிப்புரை

"கற்றோருக்கும் மற்றோருக்கும் பெரிதும் பயன்படுமாறு சொற்சுருக்கமும், பொருட்சுருக்கமும் பொருந்த யாழ்ப்பாணத்துச் சுன்னகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களால் உரை இயற்றப்பெற்றது."

சென்னையிலிருந்து வெளிவந்த 'நவசக்தி' என்னும் பத்திரிகை வழங்கிய மதிப்புரை: (1927)

மதிப்புரை

"தண்டியலங்காரம் மூலமும், உரையும் தமிழ்ப்புலவர்களுக்குப் பயன்படும் வகையில் ஓழுங்கு செய்யப்பட்டது

குறித்து மகிழ்வெய்துகிறேம். அவ்வொழுங்கு திறம்படச் செய்துமுடித்த தமிழ்மணி சுன்னகம் குமாரசுவாமிப் புலவருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்படுவதாக. உரையும் எடுத்துக் காட்டும் புலவர் புதுக்கியுள்ளார்கள். புதுக்கியுள்ளமுறை தமிழ்ப்புலவர்களுக்குப் பெருந்துணை புரியுமென்பதிற் சந்தேகமில்லை."

யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை

புலவர் யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரர் இயற்றிய பழைய உரையை 1900-ம் ஆண்டு பதிப்பித்தனர். அதிலுள்ள குறைபாடுகளை நீக்கி 1908-ஆம் ஆண்டு புலவர் இதற்கோர் புத்துரையை இயற்றி வெளியிட்டனர். இதன்கண் முன்னர்க் கூறப்படாத கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா என்பவற்றின் இலக்கணங்களும், வண்ணங்களின் விளக்கங்களும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பழைய உரையாசிரியரின் போக்கைப் பின்பற்றியும், தற்காலத்திற்கேற்ற முறையைத் தழுவியும் பேருழைப்புடன் இவ்வுரை எழுதப்பட்டது. இப்புத்துரையைப் பண்டிதர்கள் நன்கு பாராட்டினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி பொ. பாண்டித்துரைத் தேவர் இப்புத்துரையைப் பற்றிப் பின்வருமாறு வியந்துள்ளார்கள்.

மதிப்புரை

"மாணவர் எளிதில் உணரக்கூடியவாறு விரிந்த காரிகையுரையைச் சுருக்கி வெளிப்படுத்த வேண்டுமென்பது சங்க நோக்கங்களி லொன்று. அவ்வேலையைச் சங்கத்தின் முக்கிய அங்கத்தவராகிய தாங்கள் மிக அழகுறச் செய்து வெளியிட்டிருப்பது மிக்க மகிழ்ச்சியை விளைத்தது. தங்கள் நூலை ஆங்காங்கு பார்த்து வந்தவளவில் விஷயங்களை எவ்வளவு தெளிவு படுத்தக் கூடுமோ,

அவ்வளவு தெளிவுடனும், ஏற்ற உதாரணச் செய்யுட் களுடனும் அது விளங்காநின்றது. இத்தகைய உபகாரத் தைத் தமிழகம் பெரிதும் உணர்ந்து பாராட்டக் கூடும் என்றே நம்புகின்றேன்.'' கடிதம் (29-9-1908)

நல்லூர் சு. சரவணமுத்துப் புலவர் வழங்கிய மதிப் புரை வருமாறு:

மதிப்புரை

''இவ்வுரை பிற்காலத்து உரையாசிரியர்களாகிய சிவ ஞானசுவாமிகள் முதலியோருடைய உரைபோல நறுஞ் சுவை பயந்து புவரவர்களுடைய நுண்ணுணர்வை நேரே விளக்குகிறது. இது விருத்தியுரையேயாயினும் யாப்பிலக் கணத்தைச் சுருக்கி விளக்கி முடித்த நூலாசிரியர் அமிர்த சாகரரைப்போல விஷயங்களைச் சுருக்கி விளக்குதலே குமாரசுவாமிப் புலவரது கருத்தாமென்பது நன்கு புலப் படுகின்றது.''

சுவாமிநாத பண்டிதர் வழங்கிய மதிப்புரை:

''காரிகையிலே நீங்கள் பிரயாசப்பட்டிருக்கிறீர்கள். அந்த அருமையறிந்து உதவிசெய்யத் தமிழரசரில்லை. காரிகையில் முன் விளங்காதன இப்போது விளங்குகின் றன.'' (கடிதம்)

சென்னையிலிருந்து வெளிவந்த ''தமிழ்நாடு'' என் னும் பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராக விளங்கிய பண்டிதர் ம. க. ஜெயராம் நாயுடு, அப்பத்திரிகையில் 10-10-26-இல் வழங்கிய மதிப்புரை.

மதிப்புரை

''இப்புத்துரை இயற்றிய புலவர் பெருமான் பல தமிழ் நூல்களை இயற்றித் தமிழ் மாதை அணிபெறச் செய்து தமிழுலகிற்குப் பேருதவி புரிந்த பெருந்தகையாளர்

என்பதைத் தமிழறிஞர் அனைவரும் நன்கறிவர். செந்தமிழ்த்தாய் தன்னுடைய நறுமணத்தை வீசி உலவி வரக் கண்டுகளிக்க முயன்ற பெரியாருள் இந்நல்லிசைப் புலவரும் ஒருவர். இவர்பால் எஞ்ஞான்றும் தமிழ்மக்கள் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பது சொல்லாமலே விளங்கும்.''

''அருமைத்தாய யாப்பருங்கலக் காரிகைக்குக் குணசாகரர் இயற்றிய பழையவுரை பயன்படாததைக் கண்டு நல்விசைப் புலமை வாய்ந்த குமாரசுவாமிப் புலவர் புத்துரை ஒன்றை இயற்றித்தந்தது தமிழகத்தின் தவப்பயனேயாம்.....''

'நாகை நீலலோசனி' அளித்த மதிப்புரை பின்வருமாறு. (14-12-14)

மதிப்புரை

''ஐந்திலக்கணங்களுள் யாப்பிலக்கணத்தினை இனிதெடுத்து விளக்கிய ஆசிரியர் அமுதசாகரராலே செய்யப்பெற்ற யாப்பருங்கலக் காரிகைக்கு யாழ்ப்பாணத்துச் சுன்னாகத்துப் புலவர் திலகராகிய குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் அருமையும், பெருமையும் வாய்ந்த ஓர் புத்துரை இயற்றி அச்சிற் பதிப்பித்திருக்கிறார்கள். இவ்வுரையாசிரியராகிய புலவரவர்கள் இந்தியா, இலங்கையில் பெருங்கீர்த்தி பெற்று வாழும் மகாவித்துவ சிரேட்டருள் ஒருவர். இலக்கியவிலக்கண மிரண்டிலும் பரிபூரண பாண்டித்தியம் பெற்றவர். ஐந்திலக்கணங்களிலும் அதிசமர்த்தர். நவரசம் மலியக் கவிபாடுந் திறலாளர். வடமொழி வல்லுனர். இவர்கள் எத்தனையோ நூல்கள் இயற்றியும், நூல்களுக்கு உரை இயற்றியும், மொழிபெயர்த்தும், லோகோபகாரமாக அச்சியற்றி வழங்கி வருகின்றார்கள். மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வழங்கிவரும் விஷயதானத்தைக் கண்டு இவர்கள் கல்வியாழத்தை மெச்சாதாரில்லை. இத்தகைய இலக்கிய விலக்கணத் திறமையும்,

கவிபாடும் வன்மையும் மற்றும் எல்லா நலன்களும் ஒருங் கமையப் பெற்ற பூரண வித்துவான்கள் இக்காலத்தில் இவர்கள்போற் பலர் கிடைப்பது அருமையென்றே கூற லாம்.''

அகப்பொருள் விளக்கப்புத்துரை

''முன்னைய நூல்களுக்கெழுதப்பட்ட புத்துரைபோல இதற்குப் புலவராலும், தி. த. கனகசுந்தரம்பிள்ளையாலும் ஒரு புத்துரை எழுதப்பட்டது.'' (1912)

பாராட்டு

''தமிழுலகிற்குப் பொருள், யாப்பு, அணி என்னும் மூன்று இலக்கணங்களைப் புத்துரையுடன் வெளியிட்டு என்றும் அழியாப்புகழை நிறீஇய தங்களுக்குக் கோடி வந்தனம்.

''தாங்கள் வெளியிட்ட நம்பியகப்பொருளுக்கு இத் தகைய உரையை வெளியிட்டவர் ஒருவருமிலர்.''

C. சிவஞானமபிள்ளை
Head Clerk
office of the Inspector of schools
6 th Circle, Tanjore.

III. இலக்கணவாராய்ச்சி நூல்

வினைப்பகுபதவிளக்கம்

புலவருடைய இலக்கண ஆராய்ச்சி நூல்களுள் இதுவே தலைசிறந்தது. இந்நூலிற் கையாளப்பட்ட இலக்கணவாராய்ச்சி முறை தமிழ் மொழிக்குப் புதுவதொன் றாகும். இது நன்னூலிலுள்ள 'நடவாமடிசீ' என்னுஞ் சூத்திரத்தைப் பீடிகையாகக்கொண்டு இருபத்துமூன்று பகுதிகளையும் தனித்தனி விளக்கிக் காட்டுகின்றது.

இந்நூல் புலவரது திட்ப நுட்பமான அறிவின் மாட்சியையும், பழந்தமிழ் நூலாட்சியையும் நன்கு புலப்படுத்தும். இந்நூல் மாணிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை விரும்பியவாறு இயற்றப் பெற்றது. அதனை அச்சிட்டுதவியவரும் அவரே.

இந்நூல் பல புலவர்களாலும், பத்திரிகைகளாலும் நன்கு வரவேற்கப்பட்டுப் புலவருடைய புகழை எங்கும் பரவச் செய்தது. மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் இந்நூலைக் கண்டவுடன் 19-1-13-இல் எழுதிய கடிதத்தில் பின்வருமாறு மொழிந்துள்ளார்;

"இந்நூல் உருவத்திற் சிறிதாயினும் பொருளமைப்பிற் பெரிதாயிருக்கிறது. எத்தனை வருடங்கள் கடுமையாக உழைத்துத் தொகுத்தீர்களோ தெரியவில்லை."

'சத்திய வேதபாதுகாவலன்' வழங்கிய மதிப்புரை (15-8-13)

"இந்நூல் செய்த குமாரசுவாமிப் புலவரைப் போன்ற வித்துவான்கள் தமிழ்நாட்டில் வேறெவருமிலர் என்று சொல்லலாம்."

'மகாலட்சுமி' வழங்கிய மதிப்புரை (1913)

"இப்பேரரிய நூல் வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியராகிய சுன்னைச் ஸ்ரீமான் அ குமாரசுவாமிப் புலவராலே இயற்றப்பெற்றது. இது நன்னூலிலுள்ள 'நடவாமடிசீ' என்னுஞ் சூத்திரத்தைப் பீடிகையாகக் கொண்டு தனித்தனி விளக்கிக் காட்டு முகத்தால் இலக்கணத்துச் சொல்லதிகாரத்தில் அடங்கிய பதங்களனைத்தும் மிக இலகுவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. துறை காணற்கரிய தொல்காப்பியம் முதலிய விரிந்த இலக்கண நூல்களையும், இலக்கியங்களையும், நெடுங்காலத்தமைந்திருந்தாய்ந்து, தெளிவுறக் கற்றுணர்ந்து

அவற்றுள் இலைமறை காய்போல் ஆங்காங்கமைந்துள்ள பொருள் முழுவதையும் மிக வெளிதே சிலகாலத்திற் கற்றுணரத் தக்கதானதோரரிய சுருங்கிய நூலாக விளங்குகின்றது. இந்நூலாசிரியரைப்போல் இலங்கை இந்தியாவிற் பிறரொருவர் இலர் என்பது கற்றுவல்ல புலவரெவரானும் மறுக்கவியலாத சத்தியமே... .. இந்நூலாசிரியரது ஆற்றலையும் பெருமையையும், நூலினது பெருமையையும், சொற்சுருக்கமும், பொருளாழமும், நுண்ணறிவுடையோரானன்றி ஏனையோரால் விளங்குதற்கரிதாம். உயர்தரப் பிரயோகமுடையதாய் நூன்முகத்திலெழுதப்பட்ட அணவுரையானும் அறிஞர் உய்த்துணரத் தக்கதாயிருத்தலின் நாமிதனை இத்தனையில் முடிக்கிறோம்.''

'உதயதாரகைப்' பத்திரிகையின்
மதிப்புரை (19-3-1913)

''ஆக்கியோன் தமிழிலக்கிய விலக்கணங்களிற் சிறந்த பாண்டித்தியமும், பல விசேட இலக்கண நூல்களை இயற்றிய வன்மையுமுடையவராயிருத்தலின் இவ்விலக்கண நூல் மிகச் சிறப்புடைத்தென யாம் கூறல் பொன்னின் குடத்துக்குப் பொட்டிடுதல் போலாகும் என்று நினைக்கின்றோம். இந்நூல் அதிக பிரயோசனமாகவிருக்கும் என்பது எமது அபிப்பிராயம். இவ்விலக்கண நூலையும், ஏனையிலக்கண நூல்களையும் இயற்றிய ஆக்கியோனுக்குத் தமிழுலகம் மிகக் கடமைப்பட்டுள்ளது.''

'சண்முகநாதன்' பத்திரிகையின்
மதிப்புரை (21-2-1913)

''இந்தப்பெயர் வாய்ந்த அதியற்புத நூலொன்று கண்ணுறும் பேறு பெற்றோம்.''

'Hindu Organ' பத்திரிகையின் மதிப்புரை (14-5-1913)

Mr. A. Kumaraswamy Pillai of Chunnakam has produced a masterly treatise on the verbal derivatives namely 'Venaippakupatha Vilakkam', which every true lover of Tamil should welcome with genuine joy. This work is the first of its kind in Tamil and leaves remarkable traces of the author's originalty of mind and deep acquaintance with ancient Tamil Classical Literature..... ....." (W. Coomaraswamy Tellippalai)

III பதிப்புநூல்

சிவத்தோத்திரக் கவித்திரட்டு (1911)

இது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருப்புகழ், பெரியபுராணம் முதலிய நூல் களிலிருந்து திரட்டப்பெற்ற ஓர் தொகை நூலாகும்.

IV வசனநூல்கள்

புலவருடைய பிற்காலத்தில் தமிழ்மொழி கட்டாய பாடமாக எல்லாப் பரீக்ஷைகளுக்கும் வைக்கப்பட்டதன் காரணமாக மாணவர்களுக்கேற்ற சிறந்த வசன நூல் கள் மிகவும் தேவைப்பட்டன. புலவருடைய வசன நடையின் சிறப்பினை நன்கறிந்த இராசவாசல் முதலி யார் சிற் கைலாயபிள்ளையும், வித்தியாகந்தோரில் வேலை பார்த்த தென்கோவை பண்டிதர் கந்தையாபிள்ளையும் மாணவருக்கேற்ற வசனநூல்கள் இயற்றுமாறு புலவரை வேண்டினர். புலவரும் அவர்களுடைய வேண்டுகோளுக் கிசைந்து தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916), இதோபதே சம் (1920), சிசுபாலசரிதம் (1921), இரகுவமிசசரிதா மிர்தம் (1922) என்னும் வசன நூல்களை இயற்றினர்.

தமிழ்ப்புலவர் சரித்திரம்

இந்நூலின்கண் தமிழ்மொழிக்கண்ணுள்ள இலக்கிய விலக்கணங்களைக் கலக்கமறக் கற்றுணர்ந்த மெய்யறிவும், பிரபந்தஞ்செய்யும் பெருவலியுமுடைய புலவர்களுடைய சரித்திரச் சுருக்கமும், அவர்கள் பாடிய அருங்கவிகளும், அவற்றின் உரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலுக்கு எழுதப்பட்ட முகவுரை மிகவுஞ் சிறப்பு வாய்ந்தது. இந்நூலின் வசனங்கள் சுருக்கமும், தொடைநயமும் பொருந்த அழகுற எழுதப்பட்டுள்ளன. இது இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. அவர் இதற்கு ஒரு தொகைப் பணத்தைச் சன்மானமாக வழங்கியுள்ளார். இந்நூலின் அருமை பெருமைகளை நோக்கி இதனைச் சென்னைச் சர்வகலாசாலையார் பட்டப் பரீட்சைப் பாடப்புஸ்தகமாக வைத்துள்ளனர்.

சென்னையிலிருந்து வெளிவரும் 'The Hindu' என்னும் பத்திரிகை 11-5-1952 இல் இந்நூலுக்குப் பின்வரும் மதிப்புரையை வழங்கியது.

"The book under review is valuable in many ways. It is the only source for the Tamil poets of Ceylon. Further as the compiler happens to he a deep scholar in the various branches of Tamil learning and as he is himself an author of no small merit his way of approach is fresh and interesting."

இந்நூலைப் பெற்றுப் பேருவகை எய்தினவராகிய வண. தா. கிங்ஸ்பெறிதேசிகர் புலவருக்கெழுதிய கடிதமொன்றிற் (7-9-1917) பின்வரும் வெண்பாவால் அவரைப் புகழ்ந்திருக்கின்றார்.

வெண்பா

சீரார் தமிழ்ப்புலவர் செம்மைச் சரித்திரத்தைப்
பாரார் படிக்கப் பகர்ந்திட்டான் — நேராரும்
இல்லக் குமார சுவாமி இருமொழியும்
வல்லான்சுன் னகத்தான் மற்று.

தமிழ்ப் புலவர் சரித்திரத்தைக் கண்ணுற்று மிகவும் மகிழ்ச்சியடைந்த திருச்சித் தமிழ்ச் சங்க அக்கிராசனதி பதியாகிய க. ச. வரதராசையர் புலவருக்கு 20-1-1920 இல் எழுதிய கடிதம் வருமாறு:

"அருந்தமிழ்ப் புலவ! அடியேன் நும்மை நேரிற் காணும் பாக்கியம் பெறுதவனெயினும், நும்மைக் கண்ணுற் றதுபோல நும்மாலியற்றப்பட்ட தமிழ்ப்புலவர் சரித்திரத் தைக் கண்ணுற்று உவகை எய்தினேன். தற்காலத்திற் பண்டைப் புலவர் போல்வாருளரோ? எனச் சிலர் கொண்டுள்ள ஐயப்பாட்டை நுமது கத்தியநூல் அறவே அகற்றியது. இம்மகோபகாரத்திற்குத் தமிழுலகம் செய்யக் கடவ கைம்மாறென்னை?

இதோபதேசம்

இது விட்டுணுசர்மர் இயற்றிய வடமொழி நூலுக்குச் சுன்னகம் நாகநாத பண்டிதர் (1824—1884) இயற்றிய மொழிபெயர்ப்பைத் தழுவி வசன ரூபமாக மாணவர்க் குப் பயன்படும் வகையிற் புலவரால் எழுதப்பட்டது. இந்நூலுக்கு தி. த. கனகசுந்தரம்பிள்ளையும், எஸ். அநவரதவிநாயகம்பிள்ளை எம். ஏ. அவர்களும் முன் னுரைகள் வழங்கியுள்ளார்கள். அவற்றின் பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

"It is admirably suited for the purpose for which it is intended. The prose of Mr Kumaraswamy Pulavar

is simple and dignified and has a grace and smoothness of its own which gives marked pleasure to the reader."

T. T. Kanagasundaram Pillai B. A.
Chairman of the Board of Examiners in Tamil,
Madras University.

"This is written in easy flowing elegant prose and has some special features about it that will fit it for use in girls' schools as well as boys' schools.

S. Anavaratha Vinayagam Pillai M. A. L. T.
Superintendent of Vernacular Studies; Madras Christian (College and) .
Chairman, Tamil Board of studies, Madras University.

சிசுபாலசரிதம்

மாகம் என்னும் மறுபெயர் பூண்ட வடமொழிச் சிசுபாலவதம் என்னும் நூல் சேதிநாட்டரசனுகிய சிசுபாலனுடைய சரித்திரத்தைக் கூறும். புலவர் இதனை மொழிபெயர்த்துச் சிசுபாலசரிதம் என்னும் பெயரோடு வெளிப்படுத்தினர். புலவருடைய உரைநடை நூல்களில் இது சிறந்தது.

இரகுவமிச சரிதாமிர்தம்

இது காளிதாசன் இயற்றிய மகாகாவியமாகிய இரகுவமிசம் என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழிபெயர்த்து மாணவர்க்குபயோகமாகுமாறு இயற்றப்பட்டது. இதுவே புலவராற் கடைசியாகச் செய்யப்பட்ட நூலாகும்.

V இலக்கியச் சொல்லகராதி

இது சங்க இலக்கியங்களிலும், சங்கமருவிய இலக்கியங்களிலும், பிற்றைச் சான்றோ ரிலக்கியங்களிலும்

வருகின்ற அருஞ் சொற்களாகிய இலக்கியச் சொற்களைத் தொகுத்து இயற்றப்பட்டது. மற்றைய அகராதிகளில் வழுவுற எழுதப்பட்ட சொற்களும், சொற்பொருள்களும் இதன்கண் திருத்தமுற எழுதப்பட்டுள்ளன. மற்றைய அகராதிகளில் வராத அனேகம் புதுச்சொற்கள் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. இது உருவத்திற் சிறிதாயினும் பண்டைக்கால இலக்கியங்களைப் பயில்வாருக்குப் பெரிதும் பயன்படும்.

இதன் பெருமையை இராமநாதபுரம் இராஜ ராஜேஸ்வர சேதுபதி மகாராசா எழுதிய பின்வரும் கடிதம் நன்குணர்த்தும்:

இராமநாதபுரம்,
29-9-1915.

மகாவித்துவான் ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்களுக்கு விஞ்ஞாபனம்.

தாங்கள் அன்புகூர்ந்தனுப்பிய இலக்கியச் சொல் லகராதி என்ற அரிய புத்தகம் எய்தப் பெற்று மகிழ்ச்சி யடைந்தேன். பெரிய இலக்கியங்களிலுள்ள அரிய சொற்கள் எல்லாம் இதன்கணுண்மையால் இது தமிழ் நூலாராய்வார்க் கெல்லாம் அதிகமாகப் பயன்படு மென்று கருதுகிறேன்.

இங்ஙனம்,
B. இராஜராஜேஸ்வரசேதுபதி

VI உரைநடைச் சிறப்பு

புலவருடைய உரைநடை யாவராலும் விரும்பிப் படிக்கப்படுவதொன்று. அவருடைய உரைநடைச் சிறப்பினைத் தண்டியலங்கார முகவுரை (109-ம் பக்கம் பார்க்க) தமிழ்ப்புலவர் சரித்திர முகவுரை, வினைப் பகுபதவிளக்க முகவுரை முதலியன நன்கு விளக்கும்.

அவையெல்லாம் செந்தமிழ்த் தேன்பிலிற்றிப் பத்தழுகும் குதிகொண்டோங்கக் கெம்பீரமான நடையோடு கூடிப் படிப்பவர்களுக்கு இன்பம் பயக்கவல்லன. தமிழ்ப்புல வர் சரித்திர முகவுரையை வாசித்த சேதுபதி மகா ராஜா, ரா. இராகவையங்கார், தி. த. கனகசுந்தரம் பிள்ளை என்போர் அதனை மெச்சிக் கடிதம் வரைந்துள் ளனர். இராகவையங்கார் 10-2-1917-இல் எழுதிய கடி தத்தில், ''புலவர் சரித்திர முகவுரை படித்தேன். செவ் வனே அமைந்துள்ளது.'' மாட்சிமை தங்கிய சேதுபதி மகாராஜா அவர்களும் மகிழ்வு கூர்ந்தனர். அம்முக வுரைப்பகுதி வருமாறு:

''இப் புலவர் சரித்திரத்தை இனிது நோக்கிப் பெரிது மதித்துப் பெருந்தொகைப் பொருளுபகாரஞ் செய்த பெருமையாளரும் ஒருவருளர். அவரோ ஒரு சாமானிய மானவரல்லர். உத்தம புருடர்களுள்ளே உத்தம புரு டர். அரும்பொருட் கலையுணர்வும், பெரும்பொருள் வருவாயும், பரம்பொருட் பத்தியும், திரம்பெறு புத்தி யும், வரம்பிலவாங் கொடையும், விநய வீரியாதி சகல சுகுணங்களும் பரம்பரையாக நிரம்பப் பெற்றுச் செந் தமிழ்ப் பரிபாலனஞ் செய்துவந்த சேதுபதியரசர் மர பினர். அவர்கள் போலக் கலையுணர்வும், பொருள் வரு வாயும், பத்தியும், புத்தியும், கொடையும், பிறவும் திரம்பப் பெற்றுச் செந்தமிழ்ப் பரிபாலனமும், சைவ பரிபாலனமும் செய்துவருஞ் சீமான். இராமநாதபுர சமஸ்தானக் கோமான். செந்தமிழபிமானியும், சித் தாந்த சைவப் பிரசங்க சிங்கமும், பெருங்கொடை வள்ளலுமாய் விளங்கிய பாஸ்கர சேதுபதி மகாராசாவின் பெருந்தவப் புலவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக் கிராசன முதல்வர். ''சந்தந் தெளிக்குங் கலைவாணர் சங்கத் தமிழ்க் குருகிச் — சித்தங் களிக்கும்'' திருவாளர் ராஜராஜேசுவர சேதுபதியரசர் எனப் புலவர் பாடும் புகழாளர்.'' (தமிழ்ப் புலவர் சரித்திர முகவுரை)

வினைப்பகுபத விளக்க முகவுரை கடினமான சொற் பிரயோகமும், நுட்பமான அரிய இலக்கண முடிபுகளும் செறியச் சிவஞான முனிவருடைய வீறுபெற்ற உரை நடையைத் தழுவி எழுதப்பட்டது. அம்முகவுரைப்பகுதி வருமாறு:

''வினைப் பகுபத முடிப்பு விளக்கலின் இது வினைப் பகுபத விளக்கம் எனும் பெயர்த்தாகின்று. வினைப் பகு பதப் புணர்புணரும் விருப்புடையர் தமிழின்கட் சிவ ணிய இயற்கை செயற்கைகளின் பெருமைகளையும் நினைக் கல் வேண்டும். அவை அளக்கற்பாலனவல்ல. இயற் கையோ செம்மை, இனிமை, பசுமை, தண்மை முதற் பலவாகும். செயற்கையும், சொற் சுருக்கம், பொருட் பெருக்கம், இலக்கண வரம்பு, புணர்ச்சி யிறுக்கம் முதற் பலவாகும். தமிழ் என்புழிப் பலரும் பலவாறு கூறுப· யாம் கூறும் பொருள் தகவு, இனிமை என்க. ஒல்லாங்கு நோக்கி ஈங்குப் பெயராதல் தெற்றென்றற்று.

தமிழ்ச் சொற் கூறு பெயர், வினை என இருபாற்று. ''சொல்லெனப் படுவ வினையே பெயரென் — றுயிரண் டென்ப வறிந்திசினோரே'' என்பர் தொல்காப்பியர். இடையுரிகளோ அவற்று வழிமருங்கி னுக்கம். பெயர்ச் சொற்கண்ணும் பலப்பல சொற்கட்கு வினைச் சொற் களே மூலம். அது வினைமுதனிலைப் பட்டாங்குகளைத் தக்காங்கு நோக்கி நினைக்குங்காற் புலப்படல் வற்று. அன்றெனினும் பண்டைச் சான்றோர் பனுவனெக்கமும் அவசியம்.'' (வினைப்பகுபத விளக்க முகவுரை)

புலவருடைய வசன நூல்களுட் சிறந்தது சிசுபால சரித்திரம். அது புலவரால் மிக்க பிரயாசத்தோடு சகல அழகுகளும் பொருந்த எழுதப்பட்டது. வித்துவ சிரோன்மணி சி. கணேசையர் இந்நூலைப் புகழ்ந்து ''தமிழிலே உரைநடையில் இதுபோலும் மொழி பெயர்ப்பு நூல் செய்தவர் இதுவரையும் இல்லையென லாம்'' என்று தாம் எழுதிய குமாரசுவாமிப்புலவர் சரித் திரத்திற் கூறியுள்ளார். அந்நூற்பகுதி வருமாறு:

மாலையுங் காலையும் வருகை

''சூரியனும் மேலைக்கடலை நோக்கினன். சீரியரும் மாலைக்கடனை நோக்கினர். மீருகங்களும் துயிலிடத்தை நோக்கின. பறவைகளும் கூடுகளை நோக்கின. திக்கும் சிவந்தது. செக்கரும் பரந்தது. பகலும் போயிற்று. இரவும் வந்தது. இருளும் செறிந்தது. சந்திரனும் எழுந்தது. தாமரையும் குவிந்தது. குவளையும் மலர்ந்தது. விண்மீன்களும் விரிந்தன. யாவரும் தத்தமக் கேற்ற இடங்களை எய்தினர், உண்டனர், மகிழ்ந்தனர், உறக்கமும் புகுந்தனர். இப்படியே இரவும் போயிற்று. காலையும் வந்தது. சூதரேத்திய துயிலெடை நிலையும் எழுந்தது. கீதவாத்திய முரச சங்க நாதமும் எழுந்தது. கோழிச் சேவல் கூவுஞ் சத்தமும் எழுந்தது. தாழித் தோய் தயிர் கடையும் சத்தமும் எழுந்தது. யாவருந் துயிலெழுந்திதயந் தெளிந்தனர். தேவரை வழிபாடு செய்து மகிழ்ந்தனர். அரசரும் நால்வகை உபாயங்களை ஆராய்ந்தனர். தாமரையும் மலர்ந்தது, குவளையும் குவிந்தது, வண்டுகளும் மொய்த்தன. இரவும் பரவிற்று. பகலும் வந்தது. சந்திரனும் நடந்தது. சூரியனும் எழுந்தது.'' (சிசுபால சரிதம்)

புலவர் இலக்கியச் சொல்லகராதிக்கு எழுதிய முக வுரையும் உரைநடைச்சிறப்பு வாய்ந்தது. அம்முகவுரை யின் ஓர் பகுதி கீழே தரப்படுகிறது:

''சொல்லாவது யாது? பொருளை அறிவிக்கும் ஆற்ற லுடைய எழுத்தொலியே சொல்லெனப்படும். ''இரு திணையைம்பாற் பொருளையுந் தன்னையும் மூவகையிடத் தும் வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே'' என்று நன்னூலாருங் கூறுவர். பொருள்களைப் புலப்பட விளக்கும் பெருமை நோக்கி வடநூலார் சிலர் சொல் லென்பதையும் ஒரு சோதி என்பர். சொல்லென்னுஞ் சோதி தோன்றுதாயின், எல்லை நீர் ஞாலத்தில் எப் பொருள்தான் புலப்படும்? ஆதிபகவனை அறிவதுமில்லை,

ஆகமங்களை அறிவதுமில்லை, அறம் பொருள் முதலியவை களை அறிவதுமில்லை. அவற்றை வலியுறுத்தும் பழஞ் சரிதங்களை அறிவதும் இல்லை. தங்கருத்தைப் பிறர் அறிவதும் இல்லை. பிறர் கருத்தைத் தாம் அறிவதும் இல்லை. அறியாமையே யாண்டுந் தலைப்படும். உலகமுந் தடுமாறும். ஆதலால் உலகம் வழங்கி வரச் செய்வது சொல்லெனப்படுஞ் சோதி என்றே சொல்லுக. பொருள்களை அறிவிக்கும் ஆற்றலில்லது சொல்லெனப் படமாட்டாது.'' (இலக்கியச் சொல்லகராதி முகவுரை)

19. கட்டுரைகள்

புலவர் தமது பிற்காலத்திற் பல நுட்பப் பொருள் பொதிந்த கட்டுரைகளைச் செந்தமிழ், ஞானசாகரம், வைசியமித்திரன் முதலிய பத்திரிகைகளுக்கு வழங்கிப் பெரும் புகழ் படைத்தனர். கட்டுரைகள் யாவும் புலவருடைய வடமொழி தென்மொழிப் பெருநூலுணர்ச்சியையும், நூலுரைப் பிழைகளை நுண்ணிதினுணர்ந்து திறத்தினையும் நன்கு புலப்படுத்தும்.

செந்தமிழ் (1902)

செந்தமிழுக்குப் புலவர் வழங்கிய கட்டுரைகள் நூறுக்கு மேற்பட்டன. அவைகள் பலதிறப்பட்ட வாய்ப் பல துறைகளில் அவர் அடைந்துள்ள திறமையைப் புலப்படுத்தும். ''தணிகைப்புராணம்'' (1902), ''பரிமேலழகருரை'' (1902) முதலியன புலவருடைய ஆழ்ந்த இலக்கிய நூலுணர்ச்சியைப் புலப்படுத்தும். ''உகரவீற்று வினைப்பகுதி'' (1902), ''யாப்பருங்கலக் காரிகை'' (1909), ''வினைப்பகுதி வேறுபடுகை'' (1913) முதலியன அவருடைய சிறந்த இலக்கணவறிவைக் காட்டும். ''அத்தியாத்துமராமாயணம்'' (1902), ''தத்தி தாந்தபதம்'' (1902), ''சாந்தோக்கியோபநிடதம்'', ''சாணக்கியநீதிசாரம்'' (1908), முதலியன அவருடைய வடமொழியறிவின் பெருமையைப் புலப்படுத்தும். ''தருக்கசூத்திரப்பரீக்கை'', ''பதார்த்ததீபிகை'' முதலியன அவருடைய தருக்கசாஸ்திர அறிவைப் புலப்படுத்தும். ''ஏதுப்போலி'', ''உவமப்போலி'', ''பக்கப்போலி'' முதலியன அவரது அலங்கார நூல்வன்மையைப் புலப்படுத்தும். ''நாலடியார்'', ''கடவுள் வாழ்த்து'', ''விஞ்ஞாபனசமஞ்சரி'', ''இலக்கணவரம்பு'', ''பழந்தமிழ் நூற் சொற்கள்'', ''வாணன்கோவையுரை'' என்பன புலவருடைய நூலுரைப் பிழைகளை நுண்ணிதினுணர்ந்து பிழைகளைக் காணும் நுட்பவறிவினை விளக்கும்.

செந்தமிழ்க் கட்டுரைகளைப் படித்தவர்கள் புலவரைப் பாராட்டிப் பல கடிதங்கள் வரைந்தனர். தென் கோவைத் தமிழ்ப் பண்டிதர் ச. கந்தையாபிள்ளை 12-9-1911-இல் எழுதிய கடிதத்திற் புலவரைப் பின் வருமாறு பாராட்டியிருக்கின்றார்:

"செந்தமிழிற் ரூங்கள் எழுதிய நீதிசாரத்தைப் பார்த்தேன். பாரத நீதிசாரத்தை இராமாயணப் பாக்களிலிருந்து பலருக்கும் புலப்படுமாறு எழுதிய தங்கள் மதிநுட்பம் வியக்கற்பாலது. தமிழுலகம் பெருமையடையும்."

உடுமலைப்பேட்டை வாசியும், தமிழபிமானியுமாகிய K. சண்முகம்பிள்ளை என்பவர் 18-6-1913-இல் எழுதிய கடிதமொன்றிற் பின்வருமாறு கூறினர்.

"தங்களாற் செந்தமிழில் எழுதப்படும் விஷயங்களைப் பார்த்து அளப்பரும் ஆனந்தமடைந்தேன்."

சென்னை அரசாங்க வித்தியாதரிசியும், தொல்காப்பியப் பொருளதிகாரவாராய்ச்சி நூலாசிரியருமாகிய வே. முத்துச்சாமிஐயர் எம். ஏ. எல். ரி. அறுப்புக்கோட்டையிலிருந்து எழுதிய கடிதத்தில் (5-3-1914) பின்வருமாறு புலவரை வியந்தனர்:

"தாங்கள் செந்தமிழில் எழுதிவரும் விஷயங்கள் நுண்மை, வண்மை, அருமை, பெருமைகளால் விளங்கப் பெறுதலின் தங்கள்மாட்டுப் பெரிதும் மதிப்புள்ளேன்."

திருநெய்த்தானம் ஞா. அரங்கசாமி சாஸ்திரியார் 17-4-1916-இல் பின்வருமாறு எழுதினர்.

"தங்களுடைய அழகிய வியாசங்களைச் செந்தமிழிற் கண்ணுற்றுக் களித்தேன்."

'ஞானசாகரம்' (1902)

'ஞானசாகரம்' என்னும் பத்திரிகையைச் சுவாமி வேதாசலம் 1902-இல் தொடங்கியபோது அதற்கு

விஷயதானம் புரியுமாறு அவர் புலவரை வேண்டினர். அவர் வேண்டுகோளுக்கிணங்கிக் ''காப்பியம்'', ''கந்த புராணம்'', ''இலக்கிய வாராய்ச்சி'', ''கந்தபுராண வரலாறு'' முதலிய விஷயங்களை அவருடைய பத்திரிகையில் வெளியிட்டனர். இவ்விஷயங்களை வாசித்து இன்புற்ற திருச்சி அர்ச்சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பண்டிதராகிய டி. சவரிராயபிள்ளை புலவருக்கு 20-3-1902-இல் எழுதிய கடிதமொன்றிற் பின்வருமாறு கூறியுள்ளார்:

''ஞானசாகரத்தில் தாங்கள் எழுதிய இலக்கண வாராய்ச்சியைப் பார்த்தேன். படித்து வியந்தேன், நயந்தேன். இத்தகைய ஆராய்ச்சி பெரிதும் செய்யவேண்டிய தொன்று.''

வைசியமித்திரன் (1911)

புலவருடைய நண்பர்களுள் ஒருவராகிய தேவகோட்டை எஸ். ரி. இராமநாதன் செட்டியார் 1911-இல் 'வைசியமித்திரன்' என்னும் பத்திரிகையைத் தொடங்கிய போது அவருடைய வேண்டுகோளுக்கிசைந்து பல அரிய கட்டுரைகளை அப்பத்திரிகைக்கு வழங்கினர். அவற்றுட் சிறந்தன 'நல்லுபதேசம்' (22-2-11), 'மனிதரைப் பாடுதல்' (27-7-11), 'பஞ்சபௌதிகம்' (4-8-11), 'தருமவிசாரம்' (28-8-11), 'கனவிலும் பொய் சொல்லாதே' (28-9-11), 'இருவகை இந்திரியம்' (13-11-11) என்பன.

ஞானப்பிரகாசம் (1910)

புலவர் தமது பிரியமாணவருள் ஒருவராகிய வண்ணார்பண்ணை ஆ. சண்முகரத்தின ஐயர் 1910-இல் 'ஞானப்பிரகாசம்' என்னும் பத்திரிகையைத் தொடங்கியபோது அதில் வடமொழி மாகத்தை மொழிபெயர்த்துப் பாகம் பாகமாய் வெளியிட்டனர். இதேபோன்று மற்றைய பத்திரிகைகளிலும் பல அரிய விஷயங்களை வெளியிட்டனர்.

1911-ஆம் வருடம் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்த ஸ்ரீராம வருணனை என்னும் விஷயம் கீழே தரப்படுகிறது. இக்கட்டுரை புலவருடைய கட்டுரை வன்மையை இனிது புலப்படுத்தும்.

ஸ்ரீராம வருணனை

சீதாபிராட்டியைத் தேடி இலங்கையிற் சென்ற அநுமார் இலங்கையிலுள்ள ஊர்களோறுஞ் சென்று சென்று தேடியும் அப்பிராட்டியைக் கண்டிலராய் அயலிலுள்ள சோலை ஒன்றிற் புகுந்தார். புகுந்து பலதிசைகளிலுந் தேடிப்பார்த்தார். பார்த்தபோது உடலும் மெலிந்து துயரும் மிகுந்து வருந்தியிருந்த பிராட்டியைக் கண்டார். கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார். பிராட்டி தம்மை இராமருடைய தூதர் என்று நம்புமாறு தம் முருவத்தையுங் காட்டி, ஸ்ரீராமருடைய சுவரூபம் முதலியவைகளையும் வேறுவேறுகக் கூறினர். கூறுமாறு சொன்ன தூதுரைகளையுங் கூறினர்.

அவர் கூறியவைகளையெல்லாம் வான்மீகி முனிவர் தமது இராமாயணத்திலே விஸ்தாரமாக விரித்துக்கூறினர். கம்பநாடரோ அவற்றுள்ளே சிலவற்றை எடுத்துக் கொண்டு தாமுஞ் சிலவற்றைச் சேர்த்துத் தமிழ்நாட்டிற்குந் தமிழ்க்காப்பிய நடைக்கும் ஏற்குமாறு ஸ்ரீராமரைப் பாதாதிகேசமாக வர்ணிப்பாராயினர். பெரும்பாலும் அவ்வருணனைகளெல்லாம் உவமாலங்காரபேதமாய் விளங்கும்.

உபநியாசம்

படியெடுத் துரைத்துக் காட்டும் படித்தன்று படிவம் பண்பின்
முடிவுள வுவமைக் கெல்லா மிலக்கண மொழியு முன்னாத்
துடியிடை யடையாளத்தின் றொடர்வையே தொடர்தியென்னு
அடிமுதன் முடியீ றுக வறிவுற வநுமன் சொல்வான்.

(உருக்காட்டு படலம்.)

படி = உவமை. துடியிடை = விளி. அடையாளத்தின் தொடர்வையே தொடர்தி என்ஞ = அடையாளத்தின் தொடர்ச்சியை விடாமல் அநுசரித்து நிஞைதி என்று. தொடர்வையே என்பது நாம் வைத்திருக்கும் அச்சுப் பிரதியிலே தொடரவை என்று வேறுபட்டிருக்கின்றது. கம்பநாடர் இந்த உபநியாசத்தின் பின் பாதந் தொடங்கி வருணிப்பர்.

பாதவருணஞை

சேயிதழ்த் தாமரை யென்று சேணுளோர்
ஏயின ரதன்றுஞை யெளிய தில்லையால்
நாயகன் றிருவடி குறித்து நாட்டுறிற்
பாய்திரைப் பவளமுங் குவளைப் பண்பிற்ரூல்.

சேணுளோர் ஏயினர் = தூரத்துள்ளோர் கூறினர். ஒருகாலுங் காணுதவர் என்பது போதரச்சேணுளோர் என்ரூர். அதன்றுஞை = அதஞை ஒத்ததாய்.

வான்மீகி முனிவரோ, ஸ்ரீராமரைப் பாதாதிகேச மாக வர்ணித்துச் சென்ரூரல்லர். அவர் ஸ்ரீராமருடைய பேரழகு, குணம், பிரதாபம் முதலியவைகஞை முன்னர்க் கூறி அப்பால் அவயவங்களிலுஞ் செல்வர். எப்படி யெனிற் கூறுதும்.

ஸ்ரீராமபிராஞை எவர்மனத்தையும் வலிந்து கவர்ந் திழுக்கும் பேரழகுடையவர். நாகரிகமும் நல்லுருவமு முடையவர். மேனியின் காந்தியாற் சூரியஞை ஒப்பவர். பொறுமையிஞற் பூமியை ஒப்பவர். புத்தியிஞற் பிருகற் பதியை ஒப்பவர். எங்கும் பரந்த பெருங் கீர்த்தியிஞல் இந்திரஞை ஒப்பவர். தமது குலாசாரங்கஞைத் தவரு தகாக்கும் பெருவிரதசீலர். தமது பந்துசனங்கள்போலச் சகலசனங்கஞையும் பரிந்தோம்பும் பெருங்கருஞையாளர். பகைவரை வாட்டும் பண்புடையவர்.

பிராமணர் முதலிய வருணத்தார் நால்வரும் ஒரு வரோடொருவர் கலந்து பிறழா வண்ணம் அவரவர்க் கியைந்த ஆசாரங்களை ஆஞ்ஞாபித்துப் பின்னர் அவை களைப் பரிபாலனஞ் செய்யுந் தருமகர்த்தர். நீதிநெறி களை நியமித்து அந்நெறிகளிலே செல்லுமாறு யாவரையும் நடாத்தும் இறைமாட்சியுடையவர். பெரியோரை யெல்லாம் பொன்போலப் பேணும் பெருந்தகையாளர். ஏகபத்தினிவிரதத்தை என்றும் மறவாதவர். நன்றி மறவாதவர். எந்தக் காரியங்களையும் இனிது முடிக்குந் தந்திர வழிகளை நன்கறிந்தவர். அந்தணரை வழிபட்டு அரசநீதிகளைக் கேட்டறிந்தவர். இருக்கு முதலிய வேதங் களையும், வியாகரணம் முதலிய வேதாகமங்களையும் மற் றைச் சாத்திரங்களையும் நன்கு கற்றவர். இன்சொல் லுந் தாழ்நடையும் இழுக்காவொழுக்கமும் என்றும் பெரிதுடையவர்.

விசாலமான புயங்களுடையவர். நீண்ட கரங்களு டையவர். சங்கு போன்ற கழுத்துடையவர். மலர்ந்து விரிந்த முகமுடையவர். தசையினல் எலும்பு மறைந்த மணிக்கட்டுடையவர். பேரிகைத் தொனிபோன்ற கம் பீரமான பேச்சுடையவர். கை, கால் முதலிய இரட்டை யவயவங்களெல்லாம் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வில் லாதவர். பச்சைப் புல்லுப்போன்ற கருநிறமுடையவர்.

வான்மீகி முனிவரால் இங்ஙனம் வருணிக்கப்பட்ட உறுப்புக்களுள்ளே புயம், கரம், கழுத்து என்னும் உறுப் புக்களின் வருணனைகளிலே கம்பநாடரும் பெரும் பான்மை ஒத்துச்செல்லுகின்றனர். வான்மீகி முனிவர் விசாலமான புயம் என்பர். கம்பநாடர் பொருப்பை யும் வென்றதென்பர். எனவே, அதுவும் அதன் விசா லத்தையே அறிவிக்கும்.

புயவருணனை

திரண்டில வொளியில திருவின் சேர்வில
முரண்டரு மேருவின் முரிய மூரிநாண்
புரண்டில புகழில பொருப்பொன் ரொன்றுபோன்(று)
இரண்டில புயங்களுக் குவம மேற்குமோ.

(உருக்காட்டு படலம்)

இங்கே பொருப்பு என்பதனை எழுவாயாக எடுத்துக் கொண்டு திரண்டில, ஒளியில, சேர்வில, புரண்டில, புகழில, இரண்டில, ஏற்குமோ என்னும் பயனிலைகளோடு முடிக்க. உபமேயமாகிய புயங்களுக்கு உயர்ச்சி தோன்று மாறு உபமானமாகிய பொருப்பிலே திரண்டிருத்தல், ஒளியுடைமையாதல் முதலியன இல்லை என்று விலக்குதலால் இது விலக்குவமை என்னும் அணியாகும். இவ் விலக்கினாலே திரண்டிருத்தல், ஒளியுடைமையாதல் முதலியனவெல்லாம் புயங்கண்மாட்டுள என்பது தானே பெறப்படும்.

ஒளி - பிரதாபம். திருவின் சேர்வில-வீரலக்குமியின் வாசமுமில்லாதன. சேர்வு-சேர்ந்திருத்தல், வீடு. மேருவில் - மேருமலைபோன்ற திரியம்பகம் என்னும் வில்லு. இவ்வில்லின் வரலாற்றையும், இவ்வில்லினை, ஸ்ரீராம பிரான் முரித்த செய்தியையுங் கார்முகப் படலத்திற் காண்க. நாண்புரளுதல் - நாணழுந்துதல். ஒன்று ஒன்று போன்று இரண்டில - தம்முள்ளே ஒன்றினை ஒன்றொத்து இரண்டு மலை இல. உவமம் ஏற்குமோ - உவமையாதல் பொருந்துமோ?

இக்கவியிலே "பொருப்பொன்றொன்றுபோன்றிரண்டில" என்பது அச்சுப் பிரதியிலே "பொருப்பென் றொன்றுபொன்றிரண்டில" என வேறு பாடமாய்ப் போயிற்று. இதற்குரை கூறி முடித்தல் யாவர்க்கும் அரிது.

கரவருணை

நீடுறு கீழ்த்திசை நின்ற யானையின்
கோடுறு கரமெனச் சிறிது கூறலாம்
தோடுறு மலரெனச் சுரும்பு சுற்றருத்
தாடுறு தடக்கைவே றுவமை சாலுமோ.

வான்மீகி ''நீண்டகை'' என்றதைக் கம்பநாடர் அநுசரித்துத் ''தாடுறுதடக்கை'' என்றார். தாடுறு தடக்கை - முழந்தாளிற் பொருந்திய வளைந்த கை. தாள் + துறு - தாடுறு, தட - வளைவு. கீழ்த்திசை நின்ற யானை - ஐராவத யானை. கோடு - கொம்பு. கூறலாம் - (உவமை) சொல்லலாம்.

இக்கவியிலே ''தாடுறு'' என்பது ''தாடொடு'' என்றும், ''சாலுமோ'' என்பது ''சாலுமே'' என்றும் அச்சிற் பாடம் வேறுதலாயிற்று.

களவருணை

(களம் - கழுத்து)

கடற்படு பணிலமுங் கன்னிப் பூகமும்
மிடற்றினுக் குவமையென் றுரைப்பர் மெல்லியோர்
உடற்பட வொண்ணுமோ வுரகப் பள்ளியான்
இடத்துறை சங்கமொன் றிருக்க வெங்களால்.

மெல்லியோர் உவமை என்றுரைப்பர் எனவும், சங்கம் ஒன்றிருக்க எங்களால் (அஃது) உடற்பட ஒண்ணுமோ எனவும் முடிக்க. ''சங்குபோன்ற கழுத்துடையவர்'' என்று வான்மீகி கூறியதை இக் கவியும் அநுசரிக்கின்றது.

பணிலம் - சங்கு. பூகம் - கமுகு. மெல்லியோர் - மெல்லிய அறிவாளர். உடற்பட - உடன்பட. ஒண்ணுமோ - இயலுமோ. உரகப்பள்ளியான் - விட்டுணு. உரகப்பள்ளியானிடத்துறை சங்கம் - பாஞ்சசன்னியம். உரைப்பர் என்பது அச்சிலே உரைக்கும் என வேறுயிற்று.

ஸ்ரீ ராமபிரானுக்கு மார்பு, மணிக்கட்டு, முட்டி என்னும் மூன்றவயவங்களும் கடினமாயிருக்கும். புருவம், கை, அண்டம் என்னும் மூன்றவயவங்களுந் தாழ்வுடையனவாயிருக்கும். தலைமயிர் நுனி, முழங்கால், அண்டம் என்னும் மூன்றவயவங்களும் உயர்வு தாழ்வற்றிருக்கும். நாபி, மார்பு, வயிறு என்னும் மூன்றவயவங்களும் உயர்ந்திருக்கும். கடைக்கண், விரல், பாதம் என்னும் மூன்றவயவங்களும் சிவந்திருக்கும். பாதரேகைகள், தலையின்மயிர், இலிங்கம் என்பன மூன்றும் மிருதுவாயிருக்கும். குரல், நடை, நாபி என்னும் மூன்றும் கம்பீரமாயிருக்கும்.

முகத்திலுங் கழுத்திலும் மூன்று மடிப்புண்டு. புருவம், மூக்கு, கண், காது, உதடு, முலைக்கண், முழங்கை, மணிக்கட்டு, முழந்தாள், அண்டம், மருங்கு, கை, கால், கடிதடம் என்னுமிந்தப் பதினைன்கவயவங்களும் உயர்வு தாழ்வின்றி ஒப்புடையனவாயிருக்கும். உதடுகள் கொவ்வம்பழம் போலச் சிவந்திருக்கும். கன்னங்களிரண்டும் திண்ணியனவாயிருக்கும். மூக்கு உயர்ந்து நீண்டு சுந்தரமாயிருக்கும். கண்கள், பல்லுகள், பாதம், மயிர், தோல் என்னும் ஐந்தும் மிருதுவாயும் ஆனந்தமாயுமிருக்கும். சரீரம், கை, கைத்தலம், கால், விரல், மூக்கு, கண், காது என்னும் எட்டும் நீண்டிருக்கும். நடை, யானை, புலி, இடபம் என்பவைகளைப்போல அதிக கம்பீரமாயிருக்கும்.

இங்கே ஸ்ரீ ராமபிரானுடைய நடைக்கு உவமையாகக் கூறிய யானை, புலி, இடபம் என்னும் மூன்றுள்ளே யானையையும் இடபத்தையுங் கம்பநாடரும் அநுசரித்தனர்.

நடை வருணனை

புல்ல லேற்ற திருமகளும் பூவும் பொருந்தப் புவியேழும்
எல்லை யேற்ற நெடுஞ்செல்வ மெதிர்ந்த ஞான்று மஃதின்றி
அல்ல லேற்ற கானகத்து மழியா நடையை யிழிவான
மல்ல லேற்றி னுளதென்னு மத்தயானை வருந்தாதோ.

இங்கே யானையும், இடபமும் ஸ்ரீராமபிரானுடைய நடைக்கு உவமானமாகத் தோன்றுமாறு கூறிய சித்திரம் அறிக.

ஸ்ரீராமபிரானுக்கு முகம், வாய், கரம், பதம் முதலிய அவயவங்கள் செந்தாமரை மலர்போன்று சிறந்திருக்கும். கம்பநாடரோ ஸ்ரீராமபிரானுடைய முக வருணனையிலே தாமரை மலரையும் மறுத்தனர். சந்திரனையும் மறுத்தனர்.

முகவருணனை

அண்ணறன் றிருமுகங் கமல மாமெனின்
கண்ணினுக் குவமைவே றியாது காட்டுகேன்
தண்மதி யெதிரென வுரைக்கத் தக்கதோ
விண்ணுடல் பொலிந்தது மெலிந்து தேயுமால்.

இக் கவியிலே விண்ணுடல் என்னும் பாடம் அச்சுப் பிரதியிலே ''வெண்மதி'' என்று வேறுபட்டுப் போயிற்று.

ஸ்ரீராமர் எங்கும் பரந்த பெருங்கீர்த்தியுடையவர்; குற்றமற்ற தந்தை தாயரையுடையவர். சத்தியந் தவறுதவர். இக்குணங்களெல்லாம் இலக்குமணரிடத்திலும் உண்டு.

இதுகாறும் இங்கே கூறிய ஸ்ரீராமபிரானுடைய வருணனைகளெல்லாம் வான்மீகி ராமாயணத்திலே சுந்தரகாண்டத்திலே முப்பத்தைந்தாம் சருக்கம் நோக்கியும் வேறே உரை நோக்கியும் எழுதியது எனக்கொள்க. சில விலக்கப்பட்டன.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

20. கடிதங்கள்

I

புலவருடைய கடிதங்கள்

புலவர் தமது வாழ்க்கையிற் பல கடிதங்களைப் பல நண்பருக்கு எழுதியுள்ளார். அக்கடிதங்களுள் தி. த. கனகசுந்தரம்பிள்ளைக்கு எழுதிய சிலவற்றைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. அவற்றுள் இரண்டு கீழே தரப்படுகின்றன.

I

உ

சிவமயம்

சுன்னாகம்,
3-6-1916.

அன்புள்ள பிள்ளையவர்களுக்கு,

இங்கு யாமெல்லாம் ஆரோக்கியமுடையோம். உங்குள்ள ஆரோக்கியங்களை அறிவிக்க. திருமணப் பத்திரம் வந்து படித்து மகிழ்ந்தேன். மணவாளன் ஸ்ரீ இரங்கநாதனவர்களும் மணவாட்டி செல்வநாயகியும் சிரஞ்சீவிகளாய் இஷ்ட சித்திகளெல்லாம் பெற்று வாழ்க்கையுறும்படி சிவபிரானைப் பிரார்த்திக்கிறேன். இதனுடன் ஒரு மங்கல வாழ்த்துக் கவி வருகிறது. அதனை நன்றாகப் பார்த்துத் திருத்தமுண்டானாற் றிருத்தி அங்கீகரிக்க.

புலவர் சரித்திரம் பதினைந்து பாரம் வரை அச்சாய் விட்டது. முகவுரை ஒன்று எழுதி வைத்திருக்கிறேன். விவாகக் கொண்டாட்டம் முடிந்தபின் உங்கே வரத்தக்கதாக அனுப்புவேன். புலவர் சரித்திரத்துக்குமுன் இராமாயணம் வெளிப்படவேண்டுமென்பது எனது விருப்பம். எப்படியாவது விரைந்து முடிக்க முயற்சி செய்க.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை

II

உ
சிவமயம்

சுன்னாகம்,
20-4-1919.

ஐயா,

தாங்கள் 17-ம் தேதி அனுப்பிய கடிதம் இன்று வந்தது. இராமாயணம் நூறு பிரதியும் இங்கே விற்றுக் கொள்ளுவேன். சேதுபதி மகாராசாவுக்கும், ஸ்ரீ ராகவையங்காருக்கும் அச்சிட்ட தாங்களும் நானும் அனுப்பிய தாக உங்கேயிருந்து அனுப்பக்கூடுமாயின், அனுப்பி வைப்பது நல்லது. இராசாவுடைய பெயர் புத்தக மட்டையில் அச்சிடப்பட்டிருந்தால் நல்லது. சாதாரணமாகக் கட்டப்பட்டிருந்தாற் போதும். சற்றே திறமாயிருந்தாலும் குற்றமில்லை. இங்கே வந்து போகில் நாட்செல்லும்.

மேகதூதக் காரிகையிலே நாலாம் பாட்டுக் கடைசியடியை "இன்பொடு வந்தனையோ?" என ஓகார வீறுகத் திருத்தி விடுக. அப்படியே மூலப் பிரதியில் இருக்கிறது. "ஏர்" என்பது சிறப்பன்று. 'ஏல்' என்பதும் சிறப்பன்று. முன் உங்கே அனுப்பிய பிரதியிற் சில திருத்தங்கள் செய்திருக்கிறேன். இன்று அனுப்பப்படும் பிரதியிலும் சில திருத்தங்கள் செய்திருக்கிறேன். சிறப்பான திருத்தங்களே எடுத்துக் கொள்க. மேகதூதக் காரிகை இங்கே கிடையாது. அருமையாகத் தேடிவைத் திருந்த பிரதியை இன்றைக்குத் தங்களுக்கு அனுப்புகிறேன். அவதானமாக வைத்துக்கொள்க.

இதோபதேசம் செலவு கொடாமல் அச்சிடும் வழியை விசாரித்து எழுதுக. இன்னும் நான்கிலொரு பங்கு திருத்தவேண்டும். வாதநோய் சுகமான பின் அது எழுதப்படும்.

வாதநோய் இன்னும் ஆரோக்கியமாகவில்லை. இப் போது ஒரு விசேடமான வைத்தியரைக் கொண்டு மருந்து செய்வித்து உண்டு வருகிறேன். நோய் பீடித்து மூன்றுமாத காலமாயிற்று. வீட்டிலே தான் இருக்கிறேன். விரைவிற் சுகமாகும் என்று கருதுகிறேன்.

அயோத்தியா காண்டத்தை விரைவிலே அரும்பத வுரையும் எழுதிக் கொண்டு தொடங்குவோம்.

தண்டியலங்காரம் அச்சிடுதற்குச் சற்றே காகிதவிலை மலியவேண்டும் என்று விசுவநாதபிள்ளை எழுதினர். மேகதூதக் காரிகையை விரைவில் முடிப்பிக்கவும். இன் றைக்கு அனுப்பிய மேகதூதக் காரிகை பெற்ற செய்தியை அறிவிக்க.

என்னுற் சிறிதும் நடக்கவியலாது. சரீரம் மெலிவடைந் துள்ளது.

தங்களன்புள்ள,
அ. குமாரசுவாமிப்பிள்ளை

II

புலவர் பெற்ற கடிதங்கள்

புலவர் தமது வாழ்நாளிற் பெற்ற கடிதங்கள் மிகப் பலவாகும். அவற்றை எழுதினவர்களும் பலராவர். அவர்கள் இலங்கை, இந்தியா, பேர்மா, மலாயா முத லிய நாடுகளில் வாழ்ந்தவர்கள். கடிதங்களுட் பெரும் பாலன கல்வி சம்பந்தமானவை. அவை எல்லாம் ஒரு தனி நூலாகத் தொகுக்கப்படத்தக்க தகுதி வாய்ந் தன. அவற்றைப் பற்றி ஈண்டு ஆராய்வாம்.

கடிதர்களின் நோக்கம்

பண்டிதரும், பாவலரும், பிறரும் வெவ்வேறு நோக் கங்களுடன் புலவருக்குக் கடிதங்கள் வரைந்தனர். சிலர் தாம் இயற்றிய நூல்களைப் புலவரைக் கொண்டு திருத்து விக்கும் நோக்கத்துடனும், சிலர் தமது நூல்களைப் பற் றிப் புலவர் கொண்டுள்ள அபிப்பிராயங்களைப் பெறும்

பொருட்டும், பத்திராதிபர் சிலர் தமது பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்விக்கும் பொருட்டும், சிலர் அவர் நட்பைப் பெறும்பொருட்டும், சிலர் தமக்குள்ள இலக்கியவிலக்கணச் சந்தேகங்களை நீக்குதற் பொருட்டும் புலவருக்குக் கடிதங்கள் எழுதினர்.

சுவாமிநாத பண்டிதர், சிவஞானபோதமாபாடியம், தேவாரம், சர்வஞானேத்தரம் முதலிய நூல்களை அச்சிட்டபோது புலவரைக் கொண்டு அவற்றைத் திருத்துவித்தனர். இது சம்பந்தமாகப் புலவருக்கு 6-10-1909 இலும், 12-10-1909 இலும், பின்னரும் பல கடிதங்கள் வரைந்தனர். சைவ சித்தாந்தப் பிரசாரகர் தூத்துக்குடி பொ. முத்தையபிள்ளை, சிவஞானசித்தியார், சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் என்னும் நூல்களைப் புலவரைக் கொண்டு திருத்துவிக்க எண்ணி 2-3-1915 இலும், 15-2-1918 இலும் அவருக்குக் கடிதங்கள் வரைந்தனர். அவர் புலவரைக் கொண்டு திருத்துவிக்க எண்ணியதற்குக் காரணம் அவர் புலவர்மீது பாடிய ''வடமொழி வல்லார் தாமும் வரையறுத்துரைக்க லாற்ரு — திடருறு மிடங்கள் தோறும் இடரறுத் தியம்பவல்ல'' என்னுஞ் செய்யுட் பகுதியாற் புலனுகும். கொழும்பு நியாயவாதி மு. திருவிளங்கம், சித்தியார், சிவப்பிரகாசம், திருப்புகழ் என்னும் நூல்களுக்குரை எழுதியபோது புலவருக்குப் பல கடிதங்களை 18-2-1918 க்கும் 22-2-1921 க்கு மிடையில் எழுதினர்.

வித்தியாதரிசி வே. முத்துச்சாமி ஐயர் தமது தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சிக்கும், செந்தமிழ்ப் பத்திராதிபர் திரு. நாரயணையங்கார் தமது பழமொழிக் குறிப்புரைக்கும், வெள்ளக்கால் பி. வி. சுப்பிரமணிய முதலியார் தமது அகலிகை வெண்பாவிற்கும் புலவருடைய அபிப்பிராயத்தை வேண்டி முறையே 9-11-1910 இலும், 9-3-1916 இலும், 1915 இலும் கடிதங்கள் வரைந்தனர். அபிப்பிராயம் வேண்டிக் கடிதம் எழுதினவர் இன்னும் பலராவர்.

பொ. பாண்டித்துரைத் தேவர் செந்தமிழுக்கும், சுவாமி வேதாசலம் ஞானசாகரத்திற்கும், திருவனந்தபுரம் வள்ளல் சிவஞானதேசிகர் அறிவு விளக்கத்திற்கும், கொழும்பு சி. செல்லையாபிள்ளை பாலச்சந்திரனுக்கும், இன்னும் வேறுபலரும் கட்டுரைகள் வழங்குமாறு முறையே 1901 இலும், 1902 இலும், 1907 இலும், 1910 இலும் பின்னும் கடிதங்கள் வரைந்தனர்.

புலவருடைய நட்பைப் பெறவிரும்பிச் சுவாமி வேதாசலமும், டி. சவரிராயபிள்ளையும் எழுதிய கடிதங்கள் பதினைராம் அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. மு. இராகவையங்கார் 12-1-1903 இலும், மாகறல் கார்த்திகேய முதலியார் 1902 இலும், எஸ். அநவரத விநாயகம்பிள்ளை எம். ஏ. எல். டி. 10-10-1915 இலும் இன்னும் வேறு பலரும் புலவருடைய நட்பைப்பெறக் கடிதங்கள் வரைந்தனர். கார்த்திகேய முதலியாரைச் சுவாமி வேதாசலமும், அநவரதவிநாயகம்பிள்ளையைக் கனகசுந்தரம்பிள்ளையும் புலவருக்கு அறிமுகப்படுத்தினர்.

புலவருடைய உதவியை நாடி உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் 8-7-1887 இலும், உடுப்பிட்டி கு. கதிரைவேற்பிள்ளை 1902 இலும், ந. வே. கனகசபாபதி ஐயர் 26-10-1910 இலும் பின்னரும், திருநெல்வேலி இந்துக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் டி. எம். சிவஞானம்பிள்ளை 30-9-1911 இலும், மு. ரா. அருணாசலக் கவிராயர் 25-10-1913 இலும், சிதம்பரம் பச்சையப்பன் பாடசாலை ஆசிரியர் ப. சு. இரத்தினவேலு முதலியார் 13-2-1914 இலும், பூவை கலியாணசுந்தர முதலியார் 14-3-1917 இலும், காரைக்குடி சொ. சொக்கலிங்கச் செட்டியார் 28-5-1918 இலும் புலவருக்குக் கடிதங்கள் வரைந்தனர்.

புலவரைக் கொண்டு புது நூல்கள் இயற்றுவிக்க விரும்பினோருள் மியிங்கான் (பேர்மா) வாசியாகிய நியாயவாதி பி. சாம்சன் தேசாபிமானி என்னும் நூலை இயற்றுவிக்கவும், தேவகோட்டை சி. த. இலக்குமணச் செட்டியார் தணிகைப்புராணத்திற்கு உரை இயற்று

விக்கவும், ந. வே. கனகசபாபதி ஐயர் தோத்திரப் பாமாலை ஒன்று இயற்றுவிக்கவும் புலவருக்கு முறையே 1917 இலும், 1911 இலும், 1912 இலும், கடிதங்கள் வரைந்தனர். சங்கநூல்களிலும் சங்க மருவிய நூல்களிலும், பிற்கால நூல்களிலும், தமக்கேற்பட்ட சந்தேகங்களைத் தெளிவிக்குமாறு கடிதங்கள் எழுதினோரும் பலர். அவருள் முக்கியமானவர்கள் தி. த. கனகசுந்தரம் பிள்ளை, திருநெல்வேலி பண்டிதர் டி. எம். சிவஞானம் பிள்ளை, சிதம்பரம் பெ. சு. இரத்தினவேலு முதலியார் முதலியோர்.

கடிதப் பகுதிகள்

புலவர் பெற்ற கடிதங்களிற் சிறப்பு வாய்ந்த பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

நல்லுபதேசம்

"நீரும் எனது பிள்ளைகளும் எள்ளும் எண்ணெயும் போற் செறிந்து ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி நல்வழியில் நடவுங்கள். காவியம் வாசித்து இலக்கணம் படித்தல் நன்று."

சுன்னகம். அ. நாகநாத பண்டிதர்,
1-4-1883

எங்களுக்கு வாழ்வு

"உதயதாரகைப் பத்திரிகை சிலநாள் நின்று திரும்ப நடைபெறுகிறதாகவும், தாமே தலைமையாயிருக்கிறதாகவும், திங்கட்கிழமை அறிந்தேன். தாம் ஏற்பட்டது எங்களுக்கு வாழ்வு வருகிறதற்குத்தான்."

உடுப்பிட்டி அ. சிவசம்புப்புலவர்,
8-8-1886

சாத்வீக குணங்கள் படைத்தவர்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்று திராவிட சுருதி கூறியவாறு எல்லாச் சாத்வீக குணங்களும் அமைந்த தங்களைப்போன்ற ஆசிரியர்பால் தூரதேசங்களுக்குச் சென்றுயினும் கற்கவேண்டுமென்று அவா நிகழினும்,

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

என்ற திருவள்ளுவர் வாக்குக்கு இலக்காகி இருக்கின்றேன்."

ராம. சி. த. இலக்குமணச் செட்டி,
தேவகோட்டை, 1-8-1907

விண்ணப்பம்

"மகாகனம் பொருந்திய குமாரசுவாமிப் புலவரவர்கள் திருச்சமூகத்திற்கு அதிக தாழ்மையுடன் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்.

ஐயா,

அடியேன் க்ஷேமம். தேவரீருடைய க்ஷேமாதிசயங்களை அறிய விரும்புகிறேன். அடியேன் தங்களுடைய வீட்டுக்கு ஒருமுறை வந்தேனுயினும், தங்களுடைய க்ஷேமாதிசயங்களை அறிய அதிக அவாவுடையவனுயிருக்கிறேன்."

சா. மயில்வாகனம் (சுவாமி விபுலானந்தர்)
7-9-1911

விருத்தியுரை வேண்டும்

"வாழ்கவந்தணர் — தீர்கவே." இதற்கு ஓர் சிறந்த விருத்தியுரை எழுதியனுப்பும்படி கேட்கிறேன். யான் தேவகோட்டையில் ஒரு பிரசங்கஞ் செய்யப்போகிறேன்.

அங்கே சித்தங்கேணி அம்பலவாணபிள்ளை பெரிய புராணத்திற்குப் பொருள் சொல்லுகிறார். எல்லாந் தெரிந்த தங்களுக்குப் பிரித்தெழுத வேண்டியதில்லை.''

சுவாமிநாதபண்டிதர்
10-9-1911

பெரிய வித்துவான்

''கல்வியருமை பெருமை நிறைந்த கனந்தங்கிய ஐயா அவர்கள் சமூகத்திற்கு உபயக்ஷேமம். தங்கள் போன்ற பெரிய வித்துவான்களாற் பூர்த்தி செய்யப்பட்ட திருக்குறள் வசனப்புத்தகம் ஒன்று பையிண்ட் செய்து அனுப்பியிருக்கிறேன். வந்துசேர்ந்திருக்குமே. அப்புத்தகம் பெரும்பாலும் யாழ்ப்பாணம் முழுவதும் பரம்புமாறு சிறுபான்மை தாங்கள் பிரயாசை எடுத்துக்கொள்ளுமாறு பெரும்பாலும் கேட்டுக்கொள்ளுகிறேன்.....உபகார வடிவமாகிய தங்களுக்கு உபசாரமெழுதப் படாதென்று இம்மட்டில் ஓடுங்கினேன்.''

மு. ரா. அருணாசலக் கவிராயர்,
மதுரை, 25-10-1911

அபிப்பிராயம் வேண்டும்

இத்தபாலில் யான் எழுதிய தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி என்னுஞ் சிறுநூலைத் தங்கள் திருப்பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். இவ்விஷயம் சிறிது சிறிதாகச் செந்தமிழில் வெளிவந்ததைத் தாங்கள் கவனித்திருப்பீர்கள். இவ்வாராய்ச்சியைப் பற்றித் திருவுள்ளத்திற்றோன்றும் அபிப்பிராயத்தை எனக்கு அனுப்புமாறு வேண்டுகிறேன்.''

வே. முத்துச்சாமி ஐயன் எம். ஏ., எல். டி.
வித்தியாதரிசி, அறுப்புக்கோட்டை, 5-3-1914

நாவலர் தருமச் சுமை

"என்னுடைய தேக சௌக்கியம் குறைந்து வருகிறது. வித்தியாசாலைக்கு மாசமொருமுறை போய் வருவதும் கஷ்டமாயிருக்கிறது. சரீரம் இப்படியிருக்க, மனம் நாவலரையா தருமச் சுமையை எங்கே இறக்குவது என்னும் ஓழியாத கவலையாற் பீடிக்கப்படுகிறது. நம்மவர் கைலாசபிள்ளையைக் கேட்டாலோ, அவர் அதற்குமுன் என்னைக் கேட்கிறார்." *(14-4-1914)*

இங்கு வசிப்பீர்களா?

எனக்கு வரவர வாய்வு அதிகரிக்கிறது. சஞ்சாரம் இயலாது. இதுவும் நாவலர் பாடசாலைதானே. வண்ணை வித்தியாசாலையில் லீவு பெற்றுக்கொண்டு நீங்கள் இங்கு வசிப்பீர்களா? மனேச்சர் அநுமதியை நானே வேண்டிக்கொள்ளுகிறேன். *(1-8-1917)*

அம்பலவாணர் நாவலர்

"அம்பலவாண நாவலர் உங்கு வந்தது தாங்களும் கைலாயபிள்ளையும் எழுத அறிந்தேன். விசேட சமஸ்கிருத உணர்ச்சியும், தடைபடாது பேசும் வன்மையும் நமது தேசத்தவர்கள் பலரை வசீகரிக்குமென்று எண்ணுகிறேன். நம்ம தேசத்து இங்கு வந்து பொருளீட்டிய சிலருள் இவர் நல்லவரென்பது எனது கொள்கை. உங்கே வந்து வித்தியாசாலைக்கு வந்தால் ஏற்ற முறையில் உபசரிப்பது நன்றென்று எண்ணுகிறேன்." *(7-3-1913)*

"கைலாயபிள்ளையிடத்திலும் தங்களிடத்திலும் யாழ்ப்பாணம் வந்து மீண்டபின் அதிபிரீதியிருப்பதாகத் தெரிகிறது." *(27-6-1915)*

சிதம்பரம் ச. பொன்னம்பலபிள்ளை,
நாவலர் வித்தியாசாலைத் தரும பரிபாலகர்.

சேதுபதி வருகை

"சேதுபதி கண்டிக்குப் போயினர் என்று சில தினங்களுக்கு முன் அறிந்தேன். அவருடன் வித்துவான்கள் வரவில்லையாம். தங்களைப்பற்றி விசாரித்தது முதலியார் கைலாயபிள்ளையைத்தான். அவர் வியந்து கூறினராம்." *(22-6-1914)*

பேருதவி

"எனது விஷயத்தில் தாங்களே பேருதவியாயிருந்தீர்கள். தங்கள் பேருதவி இன்னொருவர் உதவிபோல் வைத்து மதிக்கற்பாலதன்று. முன்னறியப்படாதவனுயிருந்தும் என் அவாவையும் பிரயாசத்தையுங் கண்டு துணை செய்தீர்கள். தாங்கள் நம்மவருக்குக் கடமைப் பட்டவருமல்லர். கோட்டமில் குணத்தொடு கேட்டனவற்றை மருது விளக்கினீர்கள். காலஞ் சிறியதாயினும் அடைந்த நன்மைகள் பல. ஆதலிற்றங்கள் உதவியை மருது என்றும் நினைக்கற்பாலதும், கைம்மாறு அளித்தற் பாலதுமேயாம்." *(9-9-1915)*

தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

அபிப்பிராயம் வேண்டும்

"இலங்கையில் தமிழ்வித்துவான்களில் தாங்களே தலைமையானவரென்று யாவருங் கருதுவதால் தாங்கள் பரோபகாரம் பொருட்டு வெளிப்படுத்தும் இந்நூலை (தமிழ்வரலாறு) பரிசோதித்து மதிப்புரை வழங்குவது தங்கள் கடமையாகும்."

பண்டிதர் ச. பூபாலபிள்ளை
மட்டக்களப்பு, 5-1-1917

நூறுரூபாவுக்குக் குறையாமற் கேளுங்கள்

"அகராதி (சென்னைத் தமிழகராதி) நடத்துவதற்கு மதுரையிலுள்ள வண. சாண்ட்லர் (Rev. J. S. Chandler) என்னும் பாதிரி ஏற்பட்டிருக்கிறார். மாசம் நூறு ரூபாவுக்குக் குறையக் கொடுத்தால் நீங்கள் இங்கு வருவதிற் பயனில்லை. வண. கிளேயிற்றன் (Rev. Clayton) பாதிரி உங்களை விசாரித்தால் நூறு ரூபாவிற்குக் குறையாமற் கேளுங்கள்." *(30-11-1918)*

வாதநோய்

"தங்களுக்கு வாதநோய் நீங்காததைப் பற்றி விசனப்படுகிறேன். தக்க வைத்தியமில்லையோ? தங்களுக்கு வாதநோய் வந்தது ஆச்சரியம். ஏனையோர்களைப் போலன்றித் தினமும் ஏழெட்டு மைல் நடந்து வந்த தங்களுக்கு வாதநோய் ஏன் வரவேண்டும்?" *(21-9-1919)*

தி. த. கனகசுந்தரம்பிள்ளை பி. ஏ.

உயர்குணம்

"ஆப்தரவர்களுக்கு மங்களாசீர்வாத விஞ்ஞாபன உபயத்ர க்ஷேமோபரி.

"தங்களன்புள்ள கடிதமும் புத்தகமும் எய்தப்பெற்று ஆனந்த பரிதனானேன். தங்கள் கல்வித் திறமையையும் உயர் குணத்தையும் யானடிக்கடி நினைத்ததுண்டு. ஸ்ரீமத் சேதுபதி மகாராசாவிடத்தும் பலமுறை தங்களைப்பற்றிப் பேசியுள்ளேன். எங்களுக்கெல்லாம் தங்களைக் கண்டளவளாவ ஆசையுளது."

இங்ஙனம்,
தங்களன்புள்ள,
ரா. இராகவையங்கார்
இராமநாதபுரம், *13-12-1915*

21. புராணபடனம்

புலவர் காலத்திற் புராணபடனம் யாழ்ப்பாணத் திலுள்ள முக்கிய கோயில்கள் எல்லாவற்றிலும் சிறப் பாக நடைபெற்று வந்தது. கோயில்களிற் படிக்கப் பட்ட புராணங்களுட் கந்தபுராணம், பெரியபுராணம், சிவராத்திரிபுராணம், திருவாதவூரர்புராணம், மயூர கிரிப்புராணம் என்பன முக்கியம் வாய்ந்தன. விசேட படிப்புக்களுக்குப் புலவர் அழைக்கப்பட்டுப் போவது வழக்கம். போகும்போது இசையோடு வாசிக்கவல்ல தமது மாணவருட் சிலரைக் கூட்டிச் செல்வார். பெரும் பாலும் அவர் இருபாலை பண்டிதர் வேதாரணிய தேசி கரை அல்லது பன்னாலைப் பண்டிதர் சி. கதிரிப்பிள்ளையைக் கூட்டிச்செல்வார். புலவருடைய சாரீரம் அதிகம் இனி மையுடையதன்று. ஆனால், அவர் பொருள் சொல்லும் முறை யாவராலும் போற்றப்பட்டது. அவர் பெரும் பாலும் சொல்லொடு பொருள் கூறுவர். சிற்சிலவிடங் களில் மாத்திரம் விருத்தியுரை கூறுவர். தமக்கு முன் உரை கூறியவர் பிழைபடக் கூறியிருந்தால், அவர் அப் பிழையைக் கண்டித்துத் திருத்துவார். இக்காரணம் பற்றி உரைகாரர் அவர் முன்னிலையில் அதிகம் கவனமா யிருப்பர்.

சிறுப்பிட்டி விநாயகராலயத்தில் 1911-ஆம் ஆண் டுக்குச் சமமான விரோதுகிருது ஐப்பசி மீ நடந்த வள்ளியம்மன் திருக்கலியாணப் படிப்பில் புலவருக்கும் அவருக்கு முன் உரை கூறிய நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதருக்குமிடையில் 'இலைபொலிகலம்' என்னுந் தொடர் பற்றி விவாதம் உண்டாயது. பண்டிதர் அத் தொடரை 'விலைபொலிகலம்' எனப் பிரித்து 'விலையாற் பொலிந்த பொற் பாத்திரம்' எனப் பொருள் கூறினர்;

புலவர் அவர் கூறிய பொருளை மறுத்து 'இலைபொலி கலம்' எனப் பிரித்து 'இலையாற் செய்யப்பட்ட தொன்னை' என்று பொருள் கூறினர். இது பற்றிப் பத் திரிகைகளில் விவாதம் நிகழ்ந்தது. புலவர் கொண்ட பொருளே சிறந்ததென்று பல பண்டிதர்கள் தத்தம் அபிப்பிராயங்களைப் பத்திரிகைமூலம் வெளிப்படுத்தினர். வித்துவசிரோன்மணி சி. கணேசையர் 27-7-1911 இல் வெளியிட்ட அபிப்பிராயம் தரப்படுகிறது.

'இலைபொலிகலம்'

"வேட்டுவ சாதியினர் சீர்திருந்திய சாதியில்லாமையி னல் அவர்கள் காட்டிலுள்ள இலைகளைப் பிடுங்கி, கல்லை யாகத் தைத்து அவற்றையே பாத்திரங்களாக வைத்து வழங்குவதன்றிப் பொன் முதலியவற்றுற் செய்யப்பட்ட பாத்திரங்களை வைத்து வழங்குவது வழக்கன்றென்க. இதுவே உலகவழக்கும், செய்யுள் வழக்குமாகும். ஒரோ விடத்துக் கூறப்படுமாயின் அஃது இல்லதை உள்ளதா கப் புனைந்துரைத்ததென ஓழிக. இங்ஙனமாக நீர்வேலி ஸ்ரீமத் சிவப்பிரகாச பண்டிதரவர்கள் கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப் படலத்துள்ள "செந்தினையிடியுந் தேனும்" என்னுஞ் செய்யுளில் இரண்டாமடியிலுள்ள 'இலைபொலிகலம்' என்பதை வகர உடம்படுமெய்யையுஞ் சேர்த்து 'விலைபொலிகலம்' எனக் கண்ணழித்து, விலையாற் பொலிந்த பாத்திரம் (பொற் பாத்திரம்) எனச் சிறுப் பிட்டி விநாயகராலய புராணப்படன வியாக்கியான சபை யிலே பொருள் கூறினர்களாம். உடனே ஸ்ரீ அ. குமார சுவாமிப் புலவர் கவனித்துப் பண்டிதர் கூறியது சிறிதும பொருந்தாது என்று மறுத்தனர். என்னையெனின், ஆசிரி யர் கச்சியப்ப சிவாசாரியர் அப்படலத்திலே பல இடங்க ளிலும் வேட்டுவருடைய சாதியாசார வழக்கமுறை ..... கூறுமாற்றுனே ஈண்டும் 'இலையாற் செய்த கலம்' எனப் பொருளமையுமாறு 'இலைபொலிகலம்' என்றார். அன்றிப் பொற்பாத்திரமென்பதே அவர் கருத்தாயின் செவ்வே தம் வழக்கப்படி பொற்பாத்திரமெனச் செஞ்சொல்லாற் செய் யுள் செய்வார்மன். அங்ஙனஞ் செய்யுள் செய்யாமையின் அவர்க்கது கருத்தன்றென்பது இன்னும் "பொன்னைசனத் திருத்தினன்" எனக் கூறலானும் "வேங்கைப் பொன்றிகழி தளின் மீது பொலிவுறவிருத்தினனே" எனக் கூறலானும் பெறப்படும்."

22. அரச சன்மானம்

செந்தமிழபிவிருத்தி நோக்கிச் சேர் பொன். அருணாசலம் தலைமையில் செந்தமிழ்ப் பரிபாலன சங்கமொன்று நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் 23-7-1917 இல் தாபிக்கப்பட்டது. அச்சபை 23-6-1920 இற் சேர் அம்பலவாணர் கனகசபை தலைமையிற் கூடி நாற்பது வருடகாலம் கைமாறற்ற செந்தமிழ்த் தொண்டு செய்த புலவருக்கு அரசினர் உபகாரச் சம்பளம் வழங்குமாறு தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்யத் தீர்மானஞ் செய்தது. சபையின் காரியதரிசி சங்கத்தின் விண்ணப்பத்தையும், புலவர் இது விஷயமாக எழுதிய மனுவையுஞ் சேர்த்துத் தேசாதிபதிக்கு அனுப்பினர். சபையின் விண்ணப்பம் வருமாறு:

Jaffna,
1-3-1920.

To,

The Honourable,
The Colonial Secretary,
Colombo.

Sir,

We the undersigned members of the Sentamil-Paripalana Sangam have the honour to forward herewith for the favourable consideration of His Excellency the Governor, a memorial from Mr. A. Kumaraswamy Pulavar of Chunnakam, Jaffna, praying for the grant of a pension.

We beg to state that at a meeting of the sangam held on the 26 th inst. the memorial was considered and the following resolution was passed.

Resolution

(1) Resolved that the memorial of Mr. A. Kumaraswamy Pulavar of Chunnakam, Jaffna, be submitted to his Excellency the Governor as a Tamil Scholar and author of great repute for grant to him of a substantial pension.

(2) We were appointed a committee to forward the memorial and the resolution and to submit the following points for the favourable consideration of His Excellency the Governor.

(3) Mr. Kumaraswamy Pulavar comes of a family well known for Tamil learning. In his early age he came under the influence of the late Srilasri Arumuga navalar, the foremost Tamil scholar of the last century. This early association with such a great personality contributed greatly to the intellectual development of the Pulavar who rose to distinction as an author from 1886 when he edited Mr. Naganatha pandit's translation of the great Sanskrit work, Hitopadesa.

(4) Since then he has been continuously at work as pandit and author and he is even now, though sickly engaged in imparting instruction to such students as aspire to an intimate knowledge of the Tamil classics.

(5) The treatises and publications have been so highly valued that some of them have been recognized as text books for the higher examinations of the University of Madras and by the Madura Tamil Sangam.

(6) During the last forty years he has been often consulted by scholars in South Indin and Ceylon with regard to difficulties arising in connection with the transcription of manuscript works and their publication and his collaboration has been of great value and has added to his reputation as the foremost scholar in Ceylon.

(7) His old age and his present state of health and slenderness of means and circumstances which render his case worthy of special consideration.

(8) We pray that his Excellency may be graciously pleased to grant Mr. A. Kumaraswamy Pulavar a substantial pension worthy of his high position in the field of Tamil Literature.

We beg to remain, Sir,
Your obedient Servants

Sir Ampalavanar Kanagasabai B.A.
President

C. Arulambalam
Proctor & Notary Public

A. Rasanayaka Mudaliar
Registrar of the Supreme Court
Treasurer

K. Tambiah
Proctor s.c. & Notary Public
Joint Secretaries

Committee Members

W. Doraisamy B. A.	Advocate
T. Kailayapillai	Trustee, Navalar School
N. Selvadurai B. A.	Principal, Jaffna Hindu College
S. W. Coomaraswamy	Clerk, Police office, Jaffna
Allen Abraham B. A.	Professor, Jaffna College
S. Sabaratna mudaliar	Dy. Fiscal, Jaffna
J. K. Chanmugam B. A.	Vice Principal, Jaffna Central College

தேசாதிபதி புலவருடைய மனுவையும், சங்கத்தாருடைய விண்ணப்பத்தையும் ஏற்றுப் புலவருக்கு ரூபா 250 கொடுக்குமாறு உத்தரவிட்டனர். இச்செய்தியைக் கேட்ட புலவருடைய நண்பர்களும் பிறரும் பெருமகிழ்ச்சி எய்தினர். பத்திரிகைகளும் இச்செய்தியை வரவேற்றுப் புலவரைப் பாராட்டின.

பாராட்டுரை

10-2-1921 இல் இந்துசாதனத்தில் வெளிவந்த பாராட்டுரை வருமாறு:

அரச சன்மானம்

'ஸ்ரீமத் குமாரசுவாம்ப் புலவருக்கு ரூபா 250 கொடுக்க அரசாங்கத்தினர் நிச்சயித்திருக்கின்றனர். இவர் தமிழிலக்கிய விலக்கணங்களைச் சந்தேக விபரீதமறக் கற்றுணர்ந்தவர். வடமொழிப் பயிற்சியுமுடையவர். பல நூல்களுக்கு உரை எழுதி அச்சிட்டிருக்கிறார். கண்ணகி சரித்திரம், தமிழ்ப்புலவர் சரித்திரம் என்பன இவர் எழுதிய வசனநூல்களாகும். மதுரையிற் பிரசுரமாகும் செந்தமிழ்ப் பத்திரிகைக்கு இவர் மாசந்தோறும் எழுதியுதவும் விஷயங்கள் நுண்மை வாய்ந்தன. யாழ்ப்பாணத்திலுமன்றி இந்தியாவிலும் இவர் புகழ்ந்து பேசப்படுகின்றார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது யாழ்ப்பாணத்துச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நெடுங்காலமாகக் கல்வி பயிற்றும் பிரதமாசிரியராக அமர்ந்துள்ளார். இங்குள்ள தமிழறிஞருட் சிலர் இவருக்கு மாணாக்கராயுள்ளார். போலிப் புலவர்கள், பண்டிதர்கள் போன்ற நடையுடைபாவனைகள் இவரிடம் கிடையா. சுருங்கச் சொல்லின் இவருக்கிணையானவர்கள் சிலரினுஞ் சிலராவர். புலவர் அரசினர் செய்துவருஞ் சன்மானத்தோடு இனிது வாழ்ந்து கொண்டு இன்னும் தமிழகத்தாருக்குப் பயன்தரும் பல நூல்களை இயற்றி வெளியிடும் வண்ணம் எம்பெருமான் திருவருள் முன்னிற்பதாக.'

தேவகோட்டையிலிருந்து வெளிவந்த வைசியமித்திரன் என்னும் பத்திரிகை *12-9-1920* இற் புலவர் அரசினர் சன்மானம் பெற்றதைப் பாராட்டி எழுதிய வியப்புரை வருமாறு:

"அரசினர் சன்மானம் பெற்ற புலவர் சாமானியரல் லர். வடமொழியும் நன்கு கற்றவர். இலக்கியவிலக்கணங் களைக் கலக்கமறக் கற்றுத் தெளிந்தவர். தருக்கு அணுவ ளவுமில்லாதவர். யாப்பிலக்கணம், அணியிலக்கணம் முத லியவைகளைப் பரிசீலனை செய்து அச்சிடுவித்தவர். தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் வசன நூலைச் சந்தர்ப்பத்திற் கேற்றப் புலவர் செய்த கவிகளையும் கூட்டி முத்தீகரணஞ் செய்தவர். இந்தியா. இலங்கை ஈரிடத்துங் கலாவிநோதர் கள் புகழ்ந்து போற்றும் வித்துவசிரோன்மணி. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவருள்ளே ஒரு மணி. தமிழ்ப் பாஷையிற் கிஞ்சித்தும் தெரியுமென்று தற்காலம் வெளி வரும் பாலியர்களுக்கு ஆசியரியமணி. இவர் நாமம் ஸ்ரீ குமாரசுவாமிப்புலவர் என்பதேயாகும். இவர்களுக்கு இச் சன்மானம் தக்கதேயாகும். அரசினர் சன்மானத்துடன் புலவர் நீடூழி காலம் வாழ்ந்து தமிழருமை விளங்கத் திருவருள் துணைபுரியுமாறு பிரார்த்திக்கின்றோம்."

புலவர் அரசினரின் சன்மானம் பெற்றதைக் குறித் துப் புலவருடைய நண்பருட் சிலர் அவருக்குச் சிறந்த பாராட்டுவிழா ஒன்று வைக்க முயன்றனர். புலவர் பாராட்டுவிழா வைப்பதை விரும்பாத காரணத்தால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

23. இறுதிக் காலம்

ஓயாத உழைப்பு

புலவர் தமது வயோதிப காலத்தில் கடுமையாக உழைத்துத் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் நூலை 1916 இல் வெளியிட்டனர். பின்னர் தி. த. கனக சுந்தரம் பிள்ளையோடு சேர்ந்து பல ஏட்டுச் சுவடிக ளோடு ஒப்பு நோக்கி இராமாயணம் பாலகாண்டத் தைத் திருத்தி அதற்கோர் அரும்பதவுரையும் எழுதி, 1918-ஆம் ஆண்டு வெளியிட்டனர். இடையறு உழைப் புக் காரணமாக அவரூடைய உடல் நலம் குன்றியது. இரத்தக் கொதிப்பு நோயும் தாக்கத் தொடங்கியது. 1919-ஆம் ஆண்டு முடக்குவாத நோயால் அவர் தை மாதந் தொடக்கம் ஐந்து மாதங்கள் வரையிற் படுக் கையில் இருக்கவேண்டியிருந்தது.

கஷ்ட சம்பவங்கள்

அக்காலத்திற் புலவருடைய மனோநிலையைப் பாதிக் கக் கூடிய சம்பவங்களும் நிகழ்ந்தன. புலவருடைய மூத்த மகனுகிய அம்பலவாணபிள்ளை கடுமையான அதிகார சுரத்தினுல் ஒருமாதம் வரையிற் பீடிக்கப்பட்ட னர். அது புலவருக்கு அதிக வருத்தத்தை உண்டுபண் ணியது. புலவருடைய மைத்துனராகிய சீனிவாசகம் பிள்ளை 1919 இல் இறந்தது புலவருடைய வாழ்க்கையில் ஓர் பெரிய திருப்பத்தை உண்டுபண்ணியது. அவர் குடும் பத்துக்குச் சொந்தமான தோட்டங்கள், வயல்கள், பனை யடைப்புக்கள், புலங்கள், இருபதுக்குக் குறையாத பசுக் கள் ஆதியவற்றைத் திறம்படப் பராமரித்தனர். அவர் இறந்தபின் அவ்வேலைகளைப் புலவர் பார்க்க வேண் டிய அவசியம் ஏற்பட்டது. கல்வித்துறையிலுள்ள வேலைக ளோடு இவ்வேலைகளையும் பார்ப்பது புலவருக்கு மிக்க கஷ்டத்தை உண்டுபண்ணியது. 1919 இல் முன்னெரு

போதுமில்லாத பெருமழையினால் உண்டான பெரு வெள்ளத்தினால் அவருடைய நூல்நிலையம் சேதமுற்றதும் அவருக்குக் கவலையை உண்டுபண்ணியது.

நண்பர்கள் மறைவு

புலவருடைய நெருங்கிய நண்பர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராய் இறந்ததும் அவருக்கு மிக்க மனக்கவலையை உண்டுபண்ணியது. நல்லூர் சு. சரணமுத்துப் புலவர் 1916 இலும், மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 1917 இலும், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகர் ச. பென்னம்பலபிள்ளை 1918 இலும், நல்லூர் ந: வே. கனகசபாபதி ஐயர் 18-7-1920 இலும், கீரிமலை கா. சபாபதிக் குருக்கள் 1921 இலும், கொழும்பு நியாயதுரந்தரர் மு. திருவிளங்கம் 1922 இலும், ஆ. சண்முகரத்தின ஐயர் 1921 இலும் காலமாயினர். அவர்களது மறைவினால் ஏற்பட்ட துயரமும் அவருக்குச் சங்கடத்தை உண்டுபண்ணியது.

இளையமகனது கல்வி

புலவருடைய இளையமகன் சர்வகலாசாலைப் படிப்புக்கு 1919-ஆம் ஆண்டு தகுதி பெற்றனர். புலவர் அவரைச் சென்னைச் சர்வகலாசாலைக்கு அனுப்பி உயர்தரக் கல்வி கற்பிக்கத் திட்டமிட்டிருந்தனர். அது விஷயமாகத் தி. த. கனகசுந்தரம்பிள்ளையோடு கடிதத் தொடர்பு பூண்டனர். சர்வகலாசாலைப் படிப்புக்கு ஐயாயிரம் ரூபா வரை தேவைப்பட்டது. மாசம் இருபத்திரண்டு ரூபாவைச் சம்பளமாகப் பெற்ற புலவர் இப்பெருந் தொகையைத் தேடுவதெப்படி? முன்னோருடைய காணிகளை விற்றுச் செலவு செய்வது புலவருடைய கொள்கைக்கு மாறுனது. அவர் கையிற் பணமோ கிடையாது. சில நண்பர்கள் புலவரைச் செட்டிநாடு சென்று நகரத்தாருடைய உதவியை நாடும்படி வேண்டினர். பணப்பிச்சை எடுக்கச் செட்டிநாடு போவது

புலவருக்கு விருப்பமில்லை. மகிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், பண்டிதர் இரத்தினேசுர ஐயர் மூலம் செட்டிநாட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர். புலவர் அந்த அழைப்பை ஏற்று 1922-ம் ஆண்டு ஆனி மாதம் இந்தியா செல்லத் திட்டமிட்டனர். அவர் தமது மகனைப் படிக்கவிடும் விஷயமாகத் தி. த. கனகசுந்தரம்பிள்ளைக்கு 18-4-21 இல் எழுதிய கடிதத்தில் ''என் மகனைப் படிப்பிக்க விடும் விஷயம் சங்கடமாயிருக்கிறது'' என்று எழுதினர்.

வயோதிபத்தினாலும், நோயினாலும், சங்கடங்களினாலும் புலவருடைய உடல் நிலை வரவரக் குன்றியது. இக்காலத்தில் தமது நண்பரொருவருக்கு எழுதிய கடிதமொன்றில் (19-4-21) ''கஷ்டகாலம், சரீரப்பெலம், புத்திப்பெலம் வரவரக் குறைகிறது. ஆரோக்கியகுறைவினால் உடன் பதிலெழுதவில்லை, மறதி அதிகம்'' என்று கூறியுள்ளார்.

வீட்டிற் காவிய வகுப்பு

இந்நிலையில் நாவலர் வித்தியாசாலைக்கு முன்போலப் போக முடியவில்லை. அவர் முதலில் வாரத்தில் ஒரு நாள் மாத்திரம் போய் வந்தனர். பின்னர் அவ்வாறு செல்லுதலும் இயலாது போயிற்று. வகுப்பு மாணவர் தினமும் புலவர் வீட்டுக்கு வந்து பாடங் கேட்டனர். அப்போது படித்த மாணவர்கள் பண்டிதர்மணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, க. குருமூர்த்தி சிவாசாரியர், சி. தியாகராசபிள்ளை என்போர். 1921-ம் ஆண்டு இறுதியிற் பண்டிதர்மணியைத் தவிர மற்றவர்கள் ஒருவர்பின் ஒருவராய் வகுப்பை விட்டு நீங்கினர்.

நூலியற்றல்

உடல் நலம் குன்றிய இக்காலத்திலும் புலவர் நூலியற்றும் வேலையைக் கைவிடாது தொடர்ந்து செய்து

வந்தனர். இக்காலத்தில் அராலி முத்துமாரி அம்மன் ஊஞ்சல், எருமூபது பொழிப்புரை, கல்வளையந்தாதி பதவுரை, இரகுவமிசசரிதாமிர்தம் என்னும் நூல்கள் அவரால் இயற்றப்பட்டன.

சிவபதமடைந்தது

இவ்வாறு கடுமையாக உடல்நலக் குறைவோடு உழைத்து வருகின்ற காலத்தில் 1922-ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10-ந் தேதி மெல்லிய சுரமும், வயிற் றுழைவு நோயும் (Bacillus Dysentry) புலவரை வருத் தத் தொடங்கின. முதலிற் பிரபல வைத்தியர் சுன்ன கம் க. வல்லிபுரநாதபிள்ளையும், பின்னர் டாக்டர் சு. ஆறுமுகம் என்பவரும் வைத்தியஞ் செய்தனர். நோய் தணியவில்லை. அறிவும் இடையிடையே குறைந்தது. புலவர் நோயுற்ற காலந் தொடக்கம் பண்டிதர்மணி கணபதிப்பிள்ளை புலவரோடு கூடவிருந்தனர். இருபத் திரண்டாந் தேதி பின்னேரம் (8-3-1922) மரணக்குறிகள் தென்பட்டன. அன்றிரவு மூன்றரை மணியளவில் (9-3-1922) அவர் இறைவன் திருவடி நிழலை எய்தினர். அவரைச் சூழ்ந்துநின்ற சுற்றமித்திரர் யாவரும் கவலைக் கடலுள் மூழ்கினர்.

மரணச் சடங்கு

பங்குனி மாதம் 23-ம் தேதி (9-3-1922) புலவரு டைய மரணச் சடங்கு வேதாரணியம் ஐயாசாமி தேசி கராற் சிறப்பாக நடாத்தப் பெற்றது. பிரமுகர்களும், பண்டிதர்களும், புலவர்களும், நண்பர்களும், சுற்றத்த வர்களும், மற்றையோரும் பெருந்திரளாகக் கூடியிருந்த னர். புலவருடைய பூதவுடல் நறுநீரால் ஆட்டப் பெற்றுக் கிரியைகள் யாவும் முடிந்து வாய்க்கரிசி போடும் நேரம் வந்ததும், ஆறுமுகநாவலர் வண்ணார் பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலக ராகிய த. கைலாயபிள்ளை புலவருடைய பூதவுடலுக்கரு கிற் சென்று கவலைக் கடலிற் பெரிதும் மூழ்கியவராய்ப்

பத்து ரூபாவோடு ஒரு பிடி அரிசிப்பொரியைச் சேர்த்து அள்ளி, ''நான் இன்று தமிழுக்கு வாய்க்கரிசி போடுகிறேன்'' என்று உரத்துக் கூறிப் பொரியைப் புலவர் வாயிற் போட்டனர். அன்று இரண்டு மணியளவில் புலவருடைய பூதவுடல் அலங்கரிக்கப்பட்ட பூம்பாடையிற் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பெருந் தொகையான மக்கள் பாடையோடு கூடச் சென்றனர். மூன்று மணியவில் பூதவுடலுக்குத் தீ மூட்டப்பெற்றது; அப்போது அங்கு சமுகமளித்த புலவருடைய சிறந்த மாணவராகிய பண்டிதர்மணி சி. கணபதிப்பிள்ளை கையாறுற்றுக் கவலையில் மூழ்கிப் பின்வருஞ் செய்யுளைக் கூறித் தமது குரவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். அச் செய்யுள் வருமாறு:

செந்தமிழும் ஆரியமுந் தேர்ந்து வீறித்
தேயமெலாம் சென்றிலகும் சீர்த்தி ஒன்றே
இந்தநில மிசையிருப்ப இணையி லாத
எண்ணில்பல கவிதழைத்த இனிய வாயும்,
அந்தமிலாக் கவிகள்பல எழுதி வைத்த
அம்புயநேர் திருக்கரமும், அந்தோ! அந்தோ!
இந்தனத்திற் செந்தழலில் உருகி வீய
யாமிதனைப் பார்த்திருத்தல் என்னே! என்னே!

24. தோற்றம், குணம் முதலியன

தோற்றம்

புலவர் ஆறடிக்கு மேற்பட்ட கறுத்த பருத்த உடலமைப்பும், நிமிர்ந்த நெற்றியும், அறிவொளி வீசுங் கண்களும், நேரிய பார்வையும், ஆழ்ந்த சிந்தனையோடு கூடிய முகவிலாசமும் உடையவர். நெற்றியிற் சந்தனப் பொட்டும், முழந்தாளுக்குச் சற்றுக் கீழே தொங்கவிட்டு அரையிற் கட்டிய வேட்டியுஞ், சவுக்கமும், தோளிற் சால்வையும், தலையில் மிண்டுத் தலைப்பாகையும், கையில் வெள்ளிப் பூண் போட்ட பிரம்பும் விளங்கச் சபைகளுக்கு அவர் போகும் வழக்குடையவர். எங்கு சென்றாலும் காசு, பாக்குச்சீவல், கராம்பு, கடுக்காய்த்தோல், கற்கண்டு, புகையிலை, திருநீறு ஆதியனவற்றைக்கொண்ட சம்புடமொன்றை இடது இடுப்பிற் சொருகி வைத்துக் கொள்ளுவார். அவற்றுள் ஏதாவதொன்றைத் தேவைக்குத் தக்கவாறு உபயோகிப்பது வழக்கம்.

குணம்

கல்விச் செருக்கால் இறுமாப்படையாது காட்சிக் கெளியராய்ப் பணிந்த மொழியுடனும், தாழ்ந்த நடையுடனும், சீரிய நோக்குடனும், தூய உள்ளத்தோடும் யாவருடனும் பழகிக் கொள்ளும் இயல்புடையவர். கோபம், பொய், பெருமை, புறங்கூறல், தம்மைவியத்தல், பேராசை முதலிய தீக்குணங்கள் ஒரு சிறிதுமில்லாதவர். ஒருவருக்கும் தீமை நினைக்காமலும், தீமை செய்யாமலும் வாழ்ந்தவர். தமது சுகத்துக்காகப் பிறரை வருத்தாமலுமிருந்தவர். அளவுக்கு மிஞ்சிய நேர்மையுமுடையவர். உள்ளது போதும் என்ற திருப்தியையுமுடையவர். சுதந்திர வாழ்க்கையில் விருப்பமுடையவர். பொருளை மதியாது கல்வியை மதிக்கும் மாண்பு பெரிதுமுடையவர். ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்து

செய்யும் வழக்கமுடையவர். எந்த நேரமும் சிந்தனையுலகிற் சஞ்சாரஞ் செய்துகொண்டிருப்பவர். அவர் தமது வாழ்நாள் முழுவதையும் கல்வி கற்பித்தலிலும், நூலியற்றுவதிலும், பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் வரைவதிலும், பிரசங்கங்கள் செய்வதிலும் கழித்தவர்.

எளிய வாழ்க்கை

புலவர் எளிய வாழ்க்கையில் பெரு விருப்புள்ளவர்; குடை பிடிப்பது அருமை. செருப்புப் போடுவது கிடையாது. பட்டுப் பீதாம்பரங்கள்; குண்டலங்கள், மோதிரங்கள், உருத்திராக்க மாலைகள் முதலியவற்றை அவர் அணிவதில்லை. வெறும் பாயிலன்றி மெத்தையில் அவர் படுப்பதில்லை. நிலத்தில் சப்பாணி கொட்டிக்கொண்டிருந்து மண்குந்துக்குமேல் வைக்கப்பட்ட பலகையின்மேல் கடதாசியை வைத்து நூலுரைகள் எழுதுவார். மேசை, கதிரை முதலியவற்றை அவர் உபயோகப்படுத்துவதில்லை; பிறர் தம்மை மதிக்கவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் எள்ளளவும் இல்லை. அவர் ஒருபோதும் விளம்பரத்தை நாடுவதில்லை. சேர் பொன். இராமநாதன் ஒரு முறை அவரைத் தமது குதிரை வண்டியில் அழைத்துக் காணவிரும்பினர். புலவர் தமக்குக் குதிரைவண்டி வேண்டியதில்லையென்று மறுத்து விட்டு, நடந்துபோய் அவரைக் கண்டவர். அரசினர் சன்மானம் பெற்ற போது அவரது நண்பர்கள் அவருக்கொரு பாராட்டு விழாவொன்று வைக்க முயன்றபோது அவர் அது வேண்டாம் என்று கூறி மறுத்தனர். உணவைப்பற்றிய கவலை அவருக்கில்லை. எந்த உணவையும் குறைநிறைவின்றி உண்பவர். அவருக்கெனத் தனிச் சமையல் ஒருபோதும் செய்யப்படுவதில்லை.

பாடஞ் சொல்லல்

புலவர் தம்மையண்டின மாணவருக்குப் பரிவோடு பாடஞ் சொல்லுவார்; புஸ்தகங்களோடு வருபவரெவ

ரையும் சந்தேகமுண்டோ? வென்று கேட்டுச் சந்தேகத்தை நீக்குவார். மாணவர்கள் எத்தனை கேள்விகள் கேட்டாலும் பொறுமையுடன் அவற்றை விளக்குவார். எந்த நேரம் வந்து கேட்டாலும் பாடஞ் சொல்ல மறுக்க மாட்டார். புலவர் விஷயங்களை விளங்கவைக்கும் முறை மாணவர்களைக் கவர்ந்தது.

தமிழன்பு

புலவர் பழந்தமிழ்ப் புலவர்களுட் கம்பர், சிவஞான முனிவர், சின்னத்தம்பிப்புலவர், அழகிய சிற்றம்பலக் கவிராயர், சரவணப்பெருமாட் கவிராயர், முத்துக் குமார கவிராயர் முதலியோருடைய செய்யுள் நலன்களை எடுத்துக் கூறியின்புறுவார். கந்தபுராணம், தணிகைப் புராணம், பொருள்வளத்தாலும், சொல்வளத்தாலும் சிறந்தன என்று கூறுவர். பரிமேலழகருரைச் சிறப்புக்களை அடிக்கடி எடுத்துக் கூறுவார்; சின்னத்தம்பிப்புலவரது ''மாசாலமோ மணிவாய் நோகுமோ'' (கர. வே. கோ.) என்னும் பாட்டைப் படித்துப் புகழ்ந்து பேசுவார். காளிதாசன், போசன் முதலிய வடமொழிப் புலவர்களது புலமையையும் எடுத்துரைப்பார். இலக்கியச் சுவையறியாதவருக்கு இலக்கியச் சுவையை அறிவித்தல் தகாது என்று கூறுவர். இதற்கு மேற்கோளாக ''இதர தாபசதாநியதேச் சயா'' என்னுஞ் சுலோகத்தை எடுத்துக் கூறுவார்.

பிறருக்கு உதவியுரிதல்

புலவர் இயல்பாகப் பிறருக்கு உதவிபுரிதலில் விருப்புடையவர். புலவருடைய உதவிபெற்ற பல புலவர்களைப் பற்றிக் 'கடிதங்கள்' என்ற அத்தியாயத்தில் முன்னர்க் குறிப்பிடப்பட்டுள்ளது ஆங்குக் காண்க. பிற்காலத்துப் புலவர்களுள் வித்துவான் கணேசையர் புலவருடைய உதவியோடு இரகுவமிசத்துக்கு உரையெழுதினர்;

புலவருடைய குணதிசயங்களைப் பற்றி வித்துவான் கணேசையர் தாமியற்றிய ''குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்'' என்னும் நூலிற் பின்வருமாறு கூறியுள்ளார்.

''இவர் மாணவர்களுக்குத் தாமறிந்த நுண்பொருள்களை வஞ்சியாது கற்பிப்பவர். தமது புத்தகங்களை மாணாக்கர்களுக்குக் கொடுத்தும் கல்வி கற்குமாறு ஏவுவார். கற்பவர்களிடத்து மிகவும் அன்புள்ளவர். கற்றவர்களோடு பேசும் விருப்புடையவர். மற்றவர்களோடு வினைதமாகப் பேசும் விருப்புடையவர். ஏனைய புலவர் போலப் பிறரைக் கொண்டு தம்மை மதிப்பிக்க வேண்டுமென்று விரும்பாதவர். உடைநடைகளாற் பிறர் தம்மை மதிக்க வேண்டுமென்று விரும்பாதவர். தாம் புலவரென்று தாமியற்றிய நூல்களில் தாமேயெழுதாதவர். தமக்கு அவமானமென்று கருதாது தமக்குப் புலப்படாதவற்றைக் கற்றவர்பால் வினவியறியும் பெருங்குணம் பூண்டவர். தெரியாதவற்றைத் தெரியாது என்று சொல்லுதல் அவமானமென்று கருதாது தெரியாதென்று சொல்லுவர். நூலுரைகளிலும் பிழைகளைச் சிறிதும் சகிக்காதவர். தனது நூலுரைகளில் வரும் பிழைகளை ஒப்புக்கொள்ளுவர்''.

25. கையறுநிலை

புலவருடைய மறைவால் அவர் சகோதரி காமாட்சி யம்மையாரும், அவருடைய பிள்ளைகளாகிய விசாலாட்சி யம்மையாரும், அம்பலவாணபிள்ளையும் முத்துக்குமார சுவாமிப்பிள்ளையும் துக்கக் கடலில் மூழ்கினர். தமிழுல கமும் துக்கக் கடலில் மூழ்கியது. அரசர்கள், அதிகாரி புருடர்கள், பண்டிதர்கள், புலவர்கள், நண்பர்கள் முத லியோரும் துக்கத்தில் மூழ்கினர். அவர்களடைந்த துய ரத்தைத் தந்தி மூலமும், தபால் மூலமும், இரங்கற் பாக்கள் மூலமும் வெளிப்படுத்தினர். பத்திரிகைகளும் புலவருடைய மறைவைப் பற்றிய செய்திகளை வெளியிட் டன, அவற்றுட் சில கீழே தரப்படுகின்றன.

I

தந்திகள்

Extremely sorry. Great loss Tamilagam.

Sethupathy
Rajah of Ramnad
9-3-1922.

Extremely sorry. Great loss to Tamil world.

M. P. Pettachchi Chettiar
Zemindar of Andippatti
& Vice-President Madura Tamil Sangam.
17-3-1922

Deeply grieved. Irreparable loss Tamil learning.

Sir P. Arunachalam
Colombo 11-3-1922

Deeply regret Tamil damsel lost her inestimable necklace. Irreparable loss to Tamilakam. Accept heartfelt condolence. May he rest in peace.

S. Kandiah Pillai
Education Office
9-3-1922

By your father's death Tamil world has sustained irreparable loss. Accept heartfelt condolence.

T. Kanagasundaram Pillai
Madras 9-3-1922

Tamil lost brightest jewel. Be consoled.

K. C. Nathan
Proctor S. C.
Colombo 9-3-1922

II

கடிதங்கள்

Foremost Scholar of the day

The death of your father is a great loss to Jaffna and the whole of Tamil land. He was undoubtedly the foremost scholar of the day. He has kept the torch of Tamil learning bright for many years and I do not see any one in Jaffna to take his place.

Hon. K. Balasingam
Colombo 9-3-1922

பெரும் புலவர்

செந்தமிழிலும், சித்தாந்தங்களிலும், வடமொழியிலும் மிகுந்த ஆர்வமுடையவராய்ப் பலவாண்டுகளாகத் தமிழ்நாட்டிலே பெரும்புகழ் வாய்ந்து திகழ்ந்த பெரும் புலவராகிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரவர்கள் சிவபதமடைந்தாரென்று கேள்வியுற்றுப் பெரிதும் வருந்துகின்றேம்.

மோ. கந்தசுவாமி முதலியார் B. A., M. R. A. S.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத் தலைவர்
சென்னை 14-3-1922

பல்வகை வளனும் நிரம்பிய புலவர்

ஸ்ரீமத் குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் இறந்த செய்தி தெரிந்து மிகவும் வருந்துகின்றேன் தமிழுலகிற்கு ஓர் பேரிழவேயாகும். பல்வகை வளனும் நிரம்பிய இவரன்ன கல்வியறிவை இக்காலத்திலே காண்பதரிது.

ரா. இராகவையங்கார்
சேதுசமஸ்தான வித்துவான்
இராமநாதபுரம் 20-4-1922

வித்துவரத்தினம்

வித்துவரத்தினமாகிய குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் தேகவியோகமடைந்த செய்தியறிந்து மெத்த வருத்தமடைந்து கொண்டேன். என்ன செய்யலாம். தமிழின் நிலைமை இவ்வாறிருக்கிறது.

உ. வே. சாமிநாதையர்
சென்னை 23-3-1922

அருமை வாய்ந்த பண்டிதர்

பண்டிதர் ஸ்ரீமத் குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் காலஞ் சென்றதாக எழுதிய கடிதம் கிடைத்தது. அவர்களது அருமை வாய்ந்த கல்வியறிவின் பலன்கள் இன்னமும் இவ்வுலகம் நெடுநாளனுபவிக்கும் பாக்கியம் பெற்றிலது. யாம் எங்ஙனம் பெறுவம். ஆயினும் அவர்களது புகழுடம்பு நிற்றலால் மண்ணகத்தும் விண்ணகத்தும் புலவர் பலரும் போற்ற நிலவுவர். ஆதலால் யாமும் ஒருவாறு ஆறுதும்.

திரு. நாராயணையங்கார்
செந்தமிழ்ப் பத்திராதிபர்
மதுரை 13-3-1922

III

பத்திரிகைகளின் இரங்கல்

Eminent Scholar and Poet

The late Kumaraswamy Pulavar was a great authority on Tamil literature and grammar. He was a good Sanskrit scholar and poet. He was one of the chief Members of and examiner to the Madura and Jaffna Tamil Sangams. His whole life was spent in teaching and writing. He has written many commentaries on many classical works and he has composed many poems. He was held in great esteem by the late Pandithoreythevar, founder of the Madura Tamil Sangam and by the leading Tamil scholars in Southern India. He has rendered valuable assistance in the compilation of that big Tamil dictionary published by the late C. Cathiravetpillai (father of Mr. K. Balasingham). A great gap is caused by the death of this eminent scholar which

cannot easily be filled. Among his pupils the late Vidwan S. Sivananda Iyer of Tellippalai, S. Ganesa Iyer, Tamil Pandit, Oriental school, Jaffna, and Pandit Candiahpillai of the Education department may be mentioned. He leaves behind two sons and a daughter and a host of relations to bemoan his loss.

"The Ceylon Daily News"
10-3-1922

ஒரு புலவர் பெருமானின் மரணம்

யாழ்ப்பாணத்துச் சுன்னகம் அ. குமாரசுவாமிப் புலவரவர்களைத் நந்தமிழுலகத்தறியாதாரில்லை. இப்புலவர் பெருமான் துன்மதி ஹூ மாசி மீ 22-ம் தேதி இரவு தேகவியோகமாயினரெனக் கேட்டுப் பெரிதும் இரங்குகின்றோம். புலவரவர்கள் தென்கலை நிலை கண்டுணர்ந்தவர். வடநூற்புலமையுடையவர். இவராற் றமிழுக்கு விளைந்த நன்மை அளப்பரிதாம் இவ்வருந்தகையாளர் கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்ப மொழியுஞ் சொற்பிரயோக வன்மையுடையவர். தமக்கெனவாழாது பிறர்பொருட்டு உழைத்தவர். இவரியற்றிய கட்டுரைகள் எல்லாம் திட்பநுட்பஞ் செறிந்து செந்தமிழ்த்தேன் பிலிற்றிப் படிப்போருக்குப் பேருவகை அளிப்பனவாம். செந்தமிழ்ப் பத்திரிகைக்குப் புலவர் எழுதிவந்திருக்கும் நுண்பொருள்களெல்லாம் அவர்தம் சீர்த்த கல்வியினையும், கூர்த்த அறிவினையும், தவமுயற்சிகளையும், இனிது காட்டுவனவாம். இப்பெருந்தகையாளர் இறைவன் திருவடிநீழல் எய்தினரென்பது கேட்டுச் செந்தமிழுலகம் துன்பக் கடலுள் மூழ்கியது.

இவ்வறிஞர் பெருமானை இழந்து துன்பத்திற் கிடந்து வருந்தும் இவர் குடும்பத்தாருக்கு நம் அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

'தமிழகம்'
கோலாலம்பூர் 8-6-1922

கவிஞர்சிகாமணி

அருமை பெருமை வாய்ந்து அறிவொழுக்கங்களா னன்ற ஆத்தசிகா மணியும், வடமொழி தென்மொழியில் வல்ல கவிஞர்சிகாமணியுமாகிய யாழ்ப்பாணத்துச் சுன்ன கம் குமாரசுவாமிப்புலவர் சிவபதமடைந்தனர் என்னுஞ் செய்தியைக் கேள்வியுற்ற தமிழுலகம் அருமணி யிழந்த நாகம்போலக் கையாறுற்றுக் கவலையின் மூழ்கிற்றே. நுணங்கிய கேள்வியும் வணங்கிய வாயுமுடையராய்ச் சொற்பிரபஞ்சமே வடிவுகொண்டு படியில் வந்தனைய செந்தமிழ் வள்ளலாகிய இப்புலவர் பெருமானைப்போலக் கற்பவருளங் கொள்ளுமாறு கற்பகமென்னச் சொற் பொருள் தெளிக்கும் தேசிகோத்தமர்கள் யார் கொலோ? என்று மாணவரெல்லாம் கவலாநிற்கின்றனரே. நம் செந்தமிழ் அணங்கின் செய்தவப் பெற்றியும் இன்ன தாயிற்றே.....

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த புலவர் பெருந்தகையைத் தமிழுலகம் இழக்கப் பெற்றது நம்ம னோர் தவக்குறைவென்றே பின்னருங்கூறி இவ்வளவில் முடிக்குதும்.

தென்கோவை ச. கந்தையபிள்ளை
(செந்தமிழில் எழுதியது)

தமிழிற்கு உபகாரி

நமது மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்துவ அங்கத்த வருள் ஒருவரான சுன்னகம் வித்துவான் அ. குமார சுவாமிப்பிள்ளையவர்கள் துன்மதி ஐப்பசி மீ 22-ம் தேதி இவ்வுலக வாழ்வைத் துறந்தார் என்று தெரிந்து மிகுந்து வருந்துகின்றோம். இவர் தென்மொழியிற் சிறந்த பண்டிதர். வடமொழியில் வல்லவர். நமது மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலந்தொட்டுச் சங்கத்தின் அங்கத்தவராயிருந்து செந்தமிழுக்கு நீண்ட காலமாக வேண்டும் விஷயங்கள் எழுதியும், தமிழ்ச் சங்கத்தார்

நடாத்திவரும் தனித்தமிழ்ப் பரீக்ஷையிற் பரீக்ஷகராயிருந்து வினாப்பத்திரங்கள் எழுதியனுப்பியும், தமிழ்ச் சங்கத்திற்கு உதவி புரிந்ததோடு சிறந்த செய்யுளாலும், செவ்விய நடையாலும் சிற்சில நூல்களியற்றியும், வடமொழியிலிருந்து மொழி பெயர்த்து உதவியும், சிற்சில வற்றிற்கு உரைகள் எழுதியும், அவற்றை அச்சிடுவித்தும் தமிழுலகிற்கு உபகாரியாயிருந்தனர்.

'செந்தமிழ்'
மதுரை 1922

IV

இரங்கற்பாக்கள்

திருவாவடுதுறையாதீனத்துச்
சைவசித்தாந்தப் பிரசாரகர் தூத்துக்குடி
வித்துவான் பொ. முத்தையாபிள்ளை
இயற்றியது

செந்தமி ழெனுந்தாய் பெற்ற செல்வமே! சிறப்பு வாய்ந்த
செந்தமிழ்ப் புலவ ருக்கோர் திலகமே! சிறியே னுள்ளஞ்
சிந்தனை செயும்போ தெல்லாந் தித்திக்கும் அமுத வூற்றே!
எந்தையே! குமார சாமிப் புலவ! நீ எங்கே சென்றாய்?

வடமொழி வல்லார் தாமும் வரையறுத் துரைக்க லாற்று(து)
இடருறு மிடங்கள் தன்னின் இடரறுத் தியம்ப வல்ல
திடமினி உனைப்போல் யாரே செப்புதற் குரிய ராவர்
உடல்நிலை யிலதா மேனும் உன்பிரி வாற்று கில்லேன்.

உலகினை யிறந்து நின்ற தரனுரு வென்ன வோர்ந்திவ்
உலகினைத் துறந்தாய் போலும் உனக்கது சாலு மேனும்
உலகிலெம் போல்வார்க் கெல்லாம் உறுதுணை இன்றிச் சென்ற(து)
உலகுள வளவு மாற்றேம் ஓங்கருள் பெற்று வாழி.

வடமொழி தென்மொழி வித்துவான்
மகிபாலன்பட்டி
மகாமகோபாத்தியாயர் மு. கதிரேசன் செட்டியார்

இயற்றியது

வெண்பா

முந்நீர்த் திரைக்கரத்தான் முத்திறைக்கும் யாழ்ப்பாணச்
சுன்னகத் திற்பிறந்த தோன்றலே! — முன்னறிவிற்
கற்ற குமார சுவாமீ! கவினுடலுள்
உற்ற புகழெஞ்சிற் றே?

கூடல்வரு செந்தமிழிற் கூடும்பொருள் வினவி
நாடவருங் கட்டுரைகள் நல்கினையே! — தேடிப்
பொருளுரை நூல்கூறிப் புகழ்விளைத்த நின்னை
எரியின் சுவையாயிற் றே?

வாழுந் தமிழ்நிலத்து மக்களெலாந் துன்பமுறச்
சூழுங் குமார சுவாமி! நீ — ஈழமெனு
நாடொரீஇச் சென்றுயந் நாகமும் ஈழமய
நாடென்ப தோர்ந்திலகொ னன்று.

சொல்லாய்ந் தநும்பொருளுந் தோன்றவெழு துந்திறனே?
நல்லோய்! நின் பாலமைந்த நற்குணனே? — பொல்லா
விதனப் புரைதீர்க்கும் மெய்யன்பர் பாலன்போ?
எதனீப்பா ராட்டுவோம் யாம்.

பாயசடைப் பரமன் பாதநிழ லெய்தினையேற்
தூய குமார சுவாமி! நீ — மேயபேர்
இன்ப நுகர்வா யிருநிலத்திற் றேன்றுவையேல்
அன்பிற் றமிழ்புரப்பா யால்.

திருநெல்வேலி

புலவர் V. P. சுப்பிரமணிய முதலியார்

(Dy. Superintendent C. V. D. Retired)

இயற்றியது.

என்றுமுள தென்மொழியில் வடமொழியில்
இலக்கியத்தில் இலக்க ணத்தில்
நன்றுபயில் மாணாக்கர்க் குயர்குருவாய்
நூல்கள்பல நயக்கத் தந்தோன்
துன்றெழில்கூர் சுன்னகக் குமாரசுவா
மிப்புலவர் தூய சீர்த்தி
நின்றிலக விவ்வுலகை நீங்கினன்
அறிஞர்மனம் நீங்கி லானே.

கும்பகோணம்

பட்டண உயர்தரப் பாடசாலைத்

தமிழ்ப்பண்டிதர்

உ. சா. வெங்கடராமையர்

இயற்றியது.

தனித்தமிழ் வழங்கு மீழமண்டலந் தனில்யாழ்ப் பாணம்
தனிப்புகழ் எவர்க்குந் தாரேனென்பவன் மானத் தான்செய்
இனிப்புறு முரைகள் பாக்கள் பெயர்ப்புக்க ளினிய வற்றுல்
எனைப்புகழ்ந் தமையும் பெற்றேனெவனென வியம்பிலன்னன்.

வடகலை யுணர்ந்தோன் தெய்வ மறைவழி ஓழுகுஞ் சீலன்
திடமுளமனத்தால்நாளுஞ்செழுந்தமிழ்த் தீருந்தொண்டொன்றே
கடனெனப்புரிந்தோன் கேட்போர் களிப்புற உரைக்கும்சாந்தன்
மடனெருங் ககற்றி வாழ்ந்தோன் மன்னரும் மதிக்கப்பெற்றேன்

சுந்தரப் பெயர்கொண் டாதிக் கடவுளே தோன்றி யாண்ட
செந்தமிழ் சிறந்த பாண்டித் திருநகர் மதுரை தன்னில்
செந்தமிழ்வளர்த்த பாண்டித் துரையெனுஞ் செம்மல்அன்பால்
தந்தநற் கழகத் தாய்த்த தனிப்பெரும் புலவன் ஆனேன்.

செந்தமிழ் மொழியுஞ் சைவ சமயமுஞ் சிறக்க வென்றே
வந்திவ ணுயர்ந்தோ னுறு முகவள்ளல் அன்று மன்னத்
தந்தநற் றமிழ்தேர் கல்விச் சாலையின் தலைவ னுகிச்
சந்தத மவைக்கு ழைத்தோன் சற்குணன் குமார சாமி.

அன்னவன் புகழும் வாழி, அவன்வழி பெரிதும் வாழி,
மன்னுதென் மொழியும் வாழி, வடமொழி வாழி மண்ணில்
துன்னிய உயிர்கள் வாழி, துயரொருங் ககற்றி நாளும்
நன்னெறிச் செல்வோர் வாழி, நானிலம் வாழி வாழி.

புன்னலைக்கட்டுவன்

வித்துவசிரோன்மணி சி. கணேசையர்

இயற்றியது

ஏகவிருத்த குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்

திருமருவு யாழ்ப்பாண மேவுசுன் னைப்பதிச்
செம்ம லம்பல வாணனந்
திகழ்மேழி யின்பெருஞ் செல்வர்க்கோர் செல்வனுய்த்
தேர்ந்து வடமொழி தென்மொழி
தருமருவு பொழில்புறஞ் சூழமே ழாலையிற்
ருமோ தரன்தந் திடுந்
தமிழ்ப்பெருங் கழகமுட னுறுமுக நாவலத்
தனிமணிமுன் வண்ணை வைத்த
உரைமருவு கல்லூரி தனினலா சிரியனு
யுற்றினிது கற்பித் திடா
வோதுபல நூலுரைகள் செய்துதமிழ் நாட்டினுக்
கோர்தீப மெனவி ளங்கி
வரமருவு புதல்வனம் பலவாண பிள்ளையொடு
மற்றை முத்துக் குமார
மைந்தனுந் துயர்கொளக் குமாரசுவா மிப்புலவ
மகிபன் விண்ணுற் றனனரோ.

வெண்பா

சங்கப் புலவர் தனிமதிப்புப் பெற்றிருந்தான்
அங்கப் புலவ ரதிமதிப்புந் — தங்குவான்
கூடினன்சொல் சுன்னைக் குமாரசுவா மிப்பெயரோன்
பாடுங் கவிஞர் பதி.

சுன்னைக் குமார சுவாமிப் புலவமணி
மன்னுஞ் சுவர்க்க மருவியபோ — தின்னன்மகிழ்(வு)
எய்தினர் நூல்வழுக்க ளெய்தாமற் செய்கிலார்
செய்குவார் தாமுஞ் செகம்.

கம்பன் முதலோர் கவிநுண்மை நோக்கியுணர்ந்(து)
அம்புலவர் தம்புலங்கள் ஆர்வுபெறச் — செம்பொருள்கள்
தந்துநாட் டுங்குமார சாமிப் புலவனைப்போற்
புந்தியுடை யாரெவரிப் பூ.

கட்டளைக் கலித்துறை

வழுவின்றி நூல்பல கற்போர்க் குரைக்க மதியிலைடும்
பிழையின்றி நூல்செயச் செய்யாரைக் காட்டப் பெரிதுரைகள்
பழுதின்றி நாட்டக் குமார சுவாமிப் பருமணிபோல்
இழிவின்றி ஓங்குந் தமிழ்நா டெவரை இனிதெய்துமே.

சுத்திகொ ளாய்தமிழ்ச் சுன்னைக் குமார சுவாமியையாம்
வித்துவ சூடா மணியெனக் கூறிடல் வேண்டுங்கொலோ
சித்திர மாக வவன்மதி தீட்டித் திகழவைத்த
உத்தம மானபன் னூல்க ளெடுத்தினி தோதுமன்றே.

பெருந்தனு விட்டுக் குமாரசுவாமிப் பெருமன்சென்ற(து)
அருந்தமிழ் கற்பவ ராற்றுந் தவக்குறை வோ?வலதெம்
பருந்தமிழ் நாட்டின் தவக்குறை வோ?தமிழ்ப் பாவைசெய்த
இருந்தவப் பேற்றின் குறைவோ? வெதுவென் றியம்புவமே.

இராமநாதன் கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்
சாவகச்சேரி
ச. பொன்னம்பலபிள்ளை
இயற்றியது

வெண்பா

சொன்மதிக்கும் பாமதிக்குஞ் சூழ்மதிக்கும் பாவலர்தம்
பன்மதிக்கும் பாரிற் பலர்மதிக்கும் — முன்மதிகாண்
நாமிப் புலவமதி நாடிற் குமாரசு
வாமிப் புலவர் மதி.

சுன்னைக் குமார சுவாமிப் புலவரைப்போற்
பின்னைப் புலவர் பெரிதிருந்தும் — என்னைமுன்னைப்
பன்னூலுட் பல்லுரையுட் பன்னுபஞ்ச லக்கணத்துள்
ளந்நூலைச் செய்தா ரிவர்.

கட்டளைக்கலித்துறை

பாடுந் திறத்தினிற் றொன்னூலிற் பண்டிதர் பாற்பிழைகள்
தேடுந் திறத்தினிற் கண்டனந் தீட்டலிற் சீர்மதுரை
கூடுந் தமிழ்ச்சங்க நன்னூல்க ளாய்தலிற் கூறுமிந்த
நீடுங் குமார சுவாமிப் புலவர்க்கு நேரில்லையே.

நாவலன் பின்னரும் வித்வசிரோமணி நல்லுரைசொல்
ஆவலன் பொன்னம் பலமெனு மாதவ ரத்தமித்தும்
பாவலன் ருனிக் குமார சுவாமிப் பரிதியிந்நாள்
ஓவலன் மாண்டது யாழ்ப்பாண மாதுக் கொருகுறையே.

திரித்தீப மென்ன வணையாமற் செந்தமிழ்த் தேயமெங்குங்
கிரித்தீப மாகப் புகடந்து மேருக் கிளைக்குவட்டின்
கிரித்தீபச் சுன்னைக் குமார சுவாமிக் கிளர்புலவன்
திரித்தீப மென்ன வணைத்தா னிதற்கினிச் செய்வதென்னே.

சுன்னை முன்னை முருகேசன் சங்கரன் சொல்வரதன்
பன்னை முத்துக் குமாரன் முதலுள்ள பண்டிதர்கள்
பின்னைத் தாமோர் வடிவாக வந்து பிறந்தவன்காண்
துன்னைச் சீர்க்கலை விஞ்சுங் குமார சுவாமியுமே.

பரமேசுரக் கல்லூரித்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

நவநீதகிருஷ்ண பாரதியார்

இயற்றியது

ஒழியாத வருட்குமர சாமிமன்னு
நீவிண்ணு யுற்ற போதில்
அழியாத தமிழ்த்தாயி னுயிர்நிலையுங்
கலக்கமுற்ற தாகி லுன்றன்
பழியாத பெரும்புலமைத் திறனெயள
விடற்கெளிதோ பண்பார் கோவே
கழியாத துன்புசெய்தா யெம்மோர்க்குன்
கருணையிதோ கழறு வாயே

ஒண்மைமணி யொடுபோலி மணிமலிவுற்
றுறழ்ததென வூற்றுக் கல்வி
வண்மைநிறை புலவரொடு புன்புலவர்
மயங்கியினி வாது செய்வார்
எண்மைகொடு வயிற்றினுக்காத் தமிழ்மறந்து
போலிச்சீர்க் கேமாந் தோரைக்
கண்மைகொடு பாராத பெருங்குமர
சாமிவிண்ணைக் கலந்த தானே.

சேய்நிகர்த்த தமிழ்க்குமர சாமிவள்ளல்
சோர்ந்து விண்ணிற் சிறப்புற் றுலல்
நோய்நிகர்த்தீ ரினியேனு நுங்குற்ற
நோக்குவிரோ நோக்கி லென்னும்
தாய்மொழியை நிலைநிறுத்தல் வேண்டுமெனத்
தெருவெல்லாம் சாற்றிச் சாற்றி
நாய்நயக்குந் தவிசென்னத் தமிழறியார்க்
குயர்தவிசு நயந் தீந்தீரே.

வண்ணைநகர்
வித்துவான்
க வயித்திலிங்கம்பிள்ளை
இயற்றியது
கட்டளைக்கலித்துறை

பாடற் றுறையி லுலகோர் பரிந்து புலவனென்று
கோடற் குரிய குமார சுவாமிக் குரவனுயர்
ஆடற் பரிதப் பாண்டித் துரையன் றமைத்தவெழிற்
கூடற் றமிழ்ச் சங்க வித்வா னரனடி கூடினனே.

சுன்னக வாசன் குமார சுவாமி துலங்குகவி
மன்னக வைகிப் புவியோர் பயில வயங்குசங்க
முன்னக வேறும் பலநூல்க ளச்சிட்டு முற்றியபின்
நன்னக பூஷணன் பாதார விந்தத்தை நண்ணினனே.

புலவர் மாணவருள் ஒருவரும்
நியாயதுரந்தரரு மாகிய
பண்டிதர் க சிதம்பரநாதன்
இயற்றியது
கட்டளைக்கலித்துறை

திருவாழ்ந்த வீழத் தியாழ்ப்பாண நாட்டுத் திலகமென
வுருவாழ்ந்த மேனியி னுண்நிறை தண்ணளி யொன்னலர்க்கு
வெருவாழ்ந்த வாய்மை விளக்கினன் செந்தமிழ் வேட்டுதவுங்
குருவாழ்ந்த சுன்னைக் குமார சுவாமிக் குலமணியே.

பூவார் மதுதெளித் தாங்குசங் கத்தமிழ்ப் போதலர்த்தி
நாவார மாணவர் மாந்திட வார்த்து நயப்பதுதிக்
கோவார் பைந்தூது குழைத்து வடநிற மேகுயிற்றித்
தேவார மாவக ராதிசெய் தான்சுன்னைத் தேமணியே.

அள்ளிக் கொடுக்கு மமுதென யாப்பணி யாம்பொருணூல்
தெள்ளித் தமிழ்மொழித் தீஞ்சுவை தித்திக்கச் செய்துமனத்
துள்ளிக் குடிநின் றெழுக்காற்றி னூங்கு முயர்சரபப்
புள்ளிற் கவிகள் புலங்காத் தனன்சுன்னப் பொன்மணியே.

முன்னுள் முச்சங்க நிலைத்தெனப் பாண்டித் துரைமுயற்சி
தன்னுல் மதுரைத் தமிழ்ச்சங்க நான்கெனத் தானிலவ
இன்னுள் வரையு மிலக்கணவேந்த லெனநிறைத்தான்
சுன்னக வாசன் குமார சுவாமிச் சுடர்மணியே.

புலவர் மாணவருள் ஒருவராகிய

பண்டிதர் உடுவில் வ. மு இரத்தினேசுவர ஐயர்

இயற்றியது

மலத்திற னீங்கிய பேரறி வோய்!மிகு மாணவர்கள்
புலத்தி லிலக்கிய லக்கணம் வைத்த புலமையினோய்!
நிலத்தின் மிகநின் றிலங்கிடச் செய்தனை நீடுவிண்ணில்
தலத்தும் வளர்க்க விரும்பிக்கொல் சென்றனை தண்டமிழே.

தண்டமிழ் வள்ளா அல்! தமிழ்நாடு போற்றுந் தகுதிமிக்கோய்!
பண்டுள வாரிய நூலும் பயின்று பலபெயர்த்தோய்!
மண்டனில் வாழ்புல வோர்க்கு விருந்திடும் மாண்புலவோய்!
எண்டகு விண்புல வோர்க்கு விருந்தென வெய்தினையே.

புலவர் மாணவர்

மட்டுவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

இயற்றியது

கட்டளைக்கலிப்பா

கற்றி லாதவர் சொல்வழு நூலினைக்
கண்டு புன்னகை கொண்டிடு காட்சியும்
சொற்க ணேரிய சீரிய கூரிய
சூழ்ந்து நாற்கவி செய்திடு சூழ்ச்சியும்
பற்ப லாயிர மாயிர மாகிய
பன்று செந்தமிழ்ச் சொற்பகர் மாட்சியும்
முற்ற றிந்தமு துக்குறை வாளனே
முன்ன லூழில லென்றினிக் காண்பதே.

புலவர் மாணவர்
மட்டக்களப்புப் புலவர்மணி

ஏ. பெரியதம்பிப்பிள்ளை
இயற்றியது

வெண்பா

சுன்னாக் குமார சுவாமிப் புலவர்பிரான்
இன்னிலம்விட் டேகினை ரென்றுரைத்தார் — என்னே
இனியா ரிவனைப்போ லெவ்விதத்தி லேனும்
இனிவரமாட் டாரென்செய் வேம்.

கொச்சகக்கலிப்பா

கலைநிறைவு படைத்துடைய கடலனைய புலமையரும்
நிலைபடைத்த நினையடுத்து நிகழ்த்துவதல் லாலெதுவு
மலையளக்க அவனிமிசை அறைவதுவும் அறிவாரோ
குலமணியே குலமணியே குலவுதமிழ்ச் சபைமணியே.

எனையடைந்த மடமையெலாம் இரவிமுனர்ப் படுமிருள்போ
லுனையடைந்த வுடனெருங்கே அழிந்தொழிந்து போயினவே
உனையிழந்திவ் வுலகிருந்தே உறுபயனென் றினியறியேன்
தனையடைந்தோர்க் குறுதுணையே தமிழ்மகண்மங் கலவணியே.

வேரிநறை யொழுகிதழி விரிசடையோ னடனபதம்
ஆரிய! நீ அடைந்தபினர் அவனிமிசை அழகமைந்த
ஆரியந்தா னெங்குபுகு மருந்தமிழ்த்தா னெங்குபுகுஞ்
சூரியனை நிகர்குருசற் குணமணிபூ ஷணமணியே.

மண்மடந்தை யணியிழப்ப மாணவர்தம் மதியிழப்ப
எண்கடந்த தமிழறிஞர் இழைத்திடுதஞ் செயலிழப்ப
கண்ணகன்ற புடவியுளோர் கலங்கிமன வலியிழப்ப
விண்ணகநீ யடைந்தசெயன் மிகக்கொடிது மிகக்கொடிதே.

என்னுயிருக் கொருதுணைவா! இனியதமிழ்க் கொருதலைவா!
பொன்மடந்தை கலைமடந்தை புரிநடங்கண் டிடுபுலவா!
சுன்னநகர் வளர்குமர சுவாமியெனும் பெருந்தகவோய்!
உன்னையகன் றுலகுதுய ரொடுபுலம்ப ரொருநாளோ.

26. பாராட்டு

பண்டிதர் மணி சி. கணபதிப்பிள்ளை ஈழகேசரியின் 1940-ம் ஆண்டு மடலுக்கு வழங்கிய 'இரண்டு மனுஷர்' என்ற கட்டுரைப்பகுதி பின்வருமாறு:

II

ஒருநாள் (நாவலர் பாடசாலையில்) சிந்தாமணிப் பாடம் நடக்கின்றது. சுதஞ்சணன் என்ற இயக்கன் சீவகனுக்கு மூன்று மந்திரங்களை உபதேசித்து ஒவ்வொன்றுக்கும் பயன் இது இது என்று சுட்டிச்சொல்லுகின்றான்.

கடுந்தொடைக் கவர்கணைக் காமன் காமுறப்
படுங்குரல் தருமிது பாம்பு மல்லவும்
கடுந்திற நோய்களுங் கெடுக்கும் வேண்டிய
உடம்பிது தருமென உணரக் கூறினன்.

''இது காமன் விரும்பப்படும் சரீரத்தைத் தரும்.'' இது முதலாம் மந்திரத்தைப் பற்றிய உரைவசனம். 'குரல்' என்பதற்குச் சரீரம் என்று உரைக்கப்பட்டது. 'வேண்டிய உடம்பு இதுதரும்' என்ற மூன்றும் மந்திரப் பயனுக்கும் இதற்கும் பேதந் தோன்றவில்லை. இந்தப் பகுதிக்குரிய வசன பாகத்திலும் குரல்—சரீரம் என்றிருக்க வேண்டும். புலவர் (குமாரசுவாமிப்புலவர்) அவர்களுக்கு எங்கள் சந்தேகங்களைச் சொன்னேம். 'உரை வசனத்தில் 'சாரீரம்' என்றிருக்கவேண்டும். சாரீரத்தின் அரவைக் கறையான் அரித்துச் சரீரமாக்கியிருக்கலாம்' என்று ஹாஸ்யத்தோடு அநாயாசமாகச் சொன்னார்கள். சிந்தாமணி பதிப்பித்த ஐயரவர்கள் தமிழ்ப் பெருங்கடல்; கனத்த சங்கீத பரம்பரை; சற்றே சங்கீதமும் கைவந்தவர்கள். அப்படியிருந்தும் ஐயரவர்களுக்கு வாராத 'சாரீரம்' புலவரவர்களுக்குத் திடீரென்று வந்தது எங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியம் விளைத்தது. பிந்திய சிந்தாமணிப் பதிப்புக்களில்

'சரீரம்' 'சாரீர'மாய் விட்டது. இல்லையேல் இன்றைக்கும் இனியும் 'குரல்' என்பதற்குச் 'சரீரம்' என்று மற்றொரு பெயரும் நிகண்டுகளை மீறி வழங்க நேரிட்டிருக்கும்.

III

சேர் பொன். இராமநாதன் துரையின் இருபெரும் ஸ்தாபனங்கள் நைடதம் போலத் தொடக்கத்தில் எவர்களையும் வசீகரித்தவைகள். படித்தவர்களெல்லாம் அவற்றுக்குள்ளே போய்ப் புகுந்தார்கள். பலர் புகமுயன்றார்கள். ஆனால், புலவரவர்களை இராமநாதன் துரையே முயன்றும் பலிக்கவில்லை. புலவர் அவர்கள் விரும்பினால் சென்னைச் சர்வகலாசாலையை அடுத்து ஆராய்ச்சிகள், பழைய நூற் பரிசோதனங்கள் செய்திருக்கலாம். உயர்ந்த பட்டங்கள், பதவிகள் பெறலாம். அந்த வசியங்களில் புலவரவர்கள் எடுபடவில்லை.

காவிவேட்டியினால் கிளம்புகிற சாமிகள் மாதிரி, தமிழ்ப்பாஷையின் பேரால் புகழ் சம்பாதிக்கிற எண்ணம் புலவருக்குக் கிடையாது. தமக்குத் தாழ்வு வந்த போதும் தம்மாலே தமிழுக்குத் தாழ்வு வராமற் பாதுகாப்பதே புலவரவர்கள் வாழ்க்கையின் நோக்கமாயிருந்தது. செல்வாக்குள்ளவர்கள் தமிழுக்குச் செய்யுந் துரோகங்களுக்குப் புலவர் அவர்களின் தலை ஒன்றே ஒன்றுதான் தமிழ்நாடு முழுவதிலும் சாய்ந்து கொடாதது. இதுதான் புலவர் அவர்களுக்கும் ஏனைய புலவர்களுக்கும் வித்தியாசம். இப்படிப்பட்ட புலவரவர்கள் இராமநாதன் துரையையோ, சர்வகலாசாலைகளையோ பொருட்படுத்துவதெப்படி?

ஏழாலையில் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தாபித்த வித்தியாசாலையிலும், பிறகு வண்ணார்பண்ணையில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் புலவரவர்கள் படிப்பித்தவர்கள். ஆனால், தெருக்கள்,

சந்திகள், ஒழுங்கைகள், புகையிரத ஸ்தானங்கள், புகை வண்டிகள் முதலிய இடங்களே புலவரவர்களின் உண்மையான மாணவர்கள் படித்த பாடசாலைகள். கொக்குவில் ஸ்ரீ சபாரத்தின முதலியார் பின்னேரங்களிற் கச்சேரியிலிருந்து குதிரை வண்டியில் வருவார. அந்தக் குதிரை நாவலர் சைவப்பிரகாச வித்தியசாலை வாசலில் தானுக நின்றுவிடும். அந்தச்சமயம் புலவர் அவர்கள் பள்ளிக்கூடம் விட்டுப் புறப்படுஞ் சமயமாயுமிருக்கும். முதலியார் புலவரவர்களைத் தமது வண்டியிலேற்றி அறியவேண்டியவைகளைக் கேட்டுக்கொண்டு போவார். மருதனர்மடம் வரை முதலியார் மீள அப்பால் வேறு சிலர் சுன்னுகம் வரை புலவர் அவர்களைத் பின் றொடர்ந்து படித்துக்கொண்டு போவார்கள். இடையிடையே யாராவது புஸ்தகம் வைத்துக்கொண்டு நின்றால் ''ஏதுஞ் சந்தேகமா?'' என்று வினவிச் சிறிது நேரம் நிற்பார்கள் சந்தேகந் தெளிந்தபின் அப்பால் போவார்கள். வீட்டுக்குப் போனபிறகும் பலர் படிக்கிறதற்குக் காத்திருப்பார்கள். புலவர் அவர்களை 'நடக்கிற ஒரு புஸ்தகசாலை' என்று ஒருவர் எழுதினர். அப்படியல்ல அவர் ஒரு 'நடக்கிற தமிழ்ச் சர்வகலாசாலை'.

புலவரவர்கள் பணத்துக்குப் படிப்பிக்கவில்லை. படிக்கிறவர்களுக்கு அளவறிந்து படிப்பித்தவர்கள் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் வரவு செலவுக்குப் பொறுப்பான ஓர் உபாத்தியாயர் — புலவர் அவர்கள் பெருந்தகையை அறிந்தவர் — போக்குவரவுச் செலவுக்கு இருக்கட்டும் என்று ஏதாவது புலவரவர்களுக்குக் கொடுக்க அவர் முயல்வதும், புலவர் அவர்கள் அதனை ஏற்கக் கூசுவதும் ஒரு சிறந்த இலக்கிய பாடமாயிருக்கும்.

IV

அரைகுறை வித்துவான்கள் சிலர் புலவரவர்களைக் குறை கூறியதுமுண்டு. அது புலவரவர்களின் குற்றமன்று. முகஞ்சரியில்லாத ஒருவன் கண்ணுடியைக்

கோபித்த கதை தெரிந்தவர்களுக்குப் புலவர் அவர்களின் நூதனந் தோன்றுது. புலவர் அவர்கள் ஒரு சங்கப் பலகை. அந்தப் பலகை "குணநாடிக் குற்றமும் நாடி" மிக்கவற்றுல் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நூலையும் கொள்ளுவதாயிருந்தது. தெருவிலே போகிற ஒருவன் கல்வியறிவில்லாதவனுயிருந்தாலும் அவனென்று சொன்னுல் அதன் பிழை சரிகளைப் புலவர் அவர்கள் ஆராய்வார்கள். அது அவர்களது இயல்பு.

தெருக்களில் கூத்து விளம்பரங் கொடுக்கிறவர்கள் சில சமயங்களில் புலவர் அவர்கள் கையிலும் ஒன்றைக் கொடுத்து விடுவார்கள். புலவரவர்கள் அதனை வாங்கிப் பக்குவமாய் மடித்துத் தமது புஸ்தகத்தோடு வைத்துக் கொள்ளுவார்கள். பிறகு பள்ளிக்கூடத்தில் அந்த விளம்பரத்தை மெல்ல விரித்து முதலிலிருந்து முழுவதையும் படித்துப் பிழைகளைத் திருத்தும்படி மாணவர்களிடம் கொடுப்பார்கள். மாணவர்களுக்கு இது பெரிய சிரிப்பாயிருக்கும். மாணவர்கள் செயலைக் கண்ட புலவர் அவர்கள், "மணற்சோற்றில் கல்லாராய்கிறதாயிருந்தாலும் இதனுலும் பெரிய திருத்தங்கள் உண்டாகும்" என்பார்கள்.

V

படிப்பிக்கிற நேரம் படிக்கிறவர்களோடு சம்பாஷிக்கிற நேரந் தவிர்ந்த நேரங்களில், நடக்கிற நடக்கிற நேரஞ்சரி, கிடக்கிறபோதுஞ் சரி, எந்த நேரத்திலும் புலவர் அவர்கள் ஏதாவதொன்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தபடி இருப்பார்கள். அவர்கள் வாழ்ந்த உலகம் வேறு. சிந்தனையில் ஆழ்ந்திருக்குஞ் சமயங்களில் சாதாரணமானவர்கள் யாராவது வந்தால் வந்தவர்களோடு சம்பிரதாயத்துக்காக ஏதாவது ஒரு கேள்வி கேட்டுவிட்டு, அப்பால் தமது சிந்தனை உலகத்தில் சஞ்சாரஞ் செய்யத் தொடங்கி விடுவார்கள். இடையிடையே ஓரோர்கால் இந்த உலகத்துக்கும் இறங்கி எதிரில் இருப்பவர்களை முந்திக் கேட்ட கேள்விகளைக் கேட்

பார்கள். மறுமொழி சொல்லுகிறவர்கள் ஒன்றைத் தானே சொல்லி அலுத்துவிடுவார்கள். மறுமொழி ஒன்றும் புலவரவர்கள் செவிகளில் ஏறுவதில்லை. அவர் களுண்டு, சிந்தனை உலகமுண்டு. இதனாலே புலவர் அவர் களின் நிலையை அறியாத சிலர் அவர்களுக்குப் பயித்தி யம் பிடித்து விட்டதென்று நினைக்கிறதுமுண்டு.

பெரிய மனிதர்கள் பெரிய சால்வையோடு சிறிய தொரு துண்டுச் சால்வையையும் அணிந்து கொள்வது வழக்கம். புலவர் அவர்கள் பள்ளிக்கூடம் விடுகிற சம யத்தில் தாம் கொண்டுவந்த புஸ்தகங்கள் காகிதங்களை ஒன்று சேர்த்துத் துண்டுச் சால்வையில் வைத்துக் கொண்டு போகிறதற்குச் சௌகரியமாக ஒரு முடிச்சுப் போடுகிறது வழக்கம். முடிகிற சமயத்திலே அவரு டைய மனம் சிந்தனை உலகத்திலே பிரவேசிக்கத் தொடங்கிவிடும் முடிந்தபிறகு முடிச்சிலிருக்கும் பொருள் களிற் புலவர் அவர்களுக்குச் சந்தேகம் உண்டாகிவிடும். முடிச்சை அவிழ்த்துப் பார்க்கத் தொடங்குவார்கள். கைகள் அவிழ்க்கும். மனம் பழைய வேதாளம் போலே சிந்தனை உலகத்துக்குப் பறந்துபோய்விடும். கைகள் அவிழ்க்கும், முடியும்; பலதரம் இது நடக்கும். கடைசி யில் சந்தேகம் சந்தேகந்தான். ''என்ன என்ன பொருள் கள் வைத்து முடிந்தேன்'' என்று மாணவர்களை வினவு வார்கள். சில வேளைகளில் மாணவர்கள் சொல்வதும் பயனில்லாமற் போய்விடும். விஷயம் அறிந்த மாண வர்கள் செவ்வியறிந்து சொல்லுவார்கள்.

விஞ்ஞான சாஸ்திரியாரொருவர் தமக்குக் கொண்டு வந்து வைத்த உணவைத் தமது நண்பரொருவர் உண் டதையறியாமல் வெறும் பாத்திரத்தைப் பார்த்துவிட்டு முன்னே தாம் உண்டதாக எண்ணினார் என்ற ஒரு கதை சொல்லுவார்கள். விஞ்ஞான சாத்திரிகளைப்பற்றி இப்படிப்பட்ட கதைகள் பலவுண்டு. புலவர் அவர்க ளோடு பழகியவர்களுக்கு அந்தக் கதைகளில் ஒரு புது மையும் உண்டாகாது.

VI

ஒரு துக்கம். புலவரவர்கள் தம்மை யாராவது அவமதித்தால் அதனை நன்றாகச் சகிப்பார்கள். தம்மை அறியாதவர்கள் மதித்தால், பாராட்டினால் அந்தச் செயலை ஒரு சிறிதும் சகிக்கமாட்டார்கள்.

Profound Scholar

I know Kumaraswamy Pulavar of Chunnakam, the well known scholar of Jaffna by his numerous writings. He struck me as a profound scholar.

S. Anavarathavinayham Pillai M. A., LT.
Professor of Tamil
University College, Colombo 27-7-1925

The great Teacher and Indefatigable writer

The name of Kumaraswamy Pulavar of Chunnakam is among the best honoured in the Tamil land to-day. Possessed of sound and accurate scholarship in Tamil and Sanskrit, he became a great teacher and an indefatigable writer; and his services were eagerly sought and freely rendered throughout Ceylon and South India for the promotion of Tamil. He did much solid work to keep aloft the flaming torch of Tamil learning.

(Foreword to the Life of Kumaraswamy Pulavar by S. Ganesa Iyer.)

K. Sesha Iyer B. A., B. L.
High Court Judge,
Trivandrum 18-10-1925

II

செய்யுள்

I

சுன்னகம்

பூ. முருகேசபண்டிதர்

இயற்றியது

1888

குணக்குன்றம்

சுன்னநகர் தனிலுதித்தோன், எந்நயமும்
பெறக்கவிகள் சொல்ல வல்லோன்,
சென்னைமுதற் கன்னியிலும் தனதுகல்விப்
புகழ்நாட்டுந் திறத்தான் மிக்கோன்,
தன்னவரென் றன்னியரென் றுன்னுமல்
யாவரையுந் தழுவு மேன்மை
மன்னுமொரு குணக்குன்றம் குமாரசுவா
மிப்பெயரோன் பாவல் லோனே.

II

வடகோவை

வித்துவான் சபாபதிப்பிள்ளை

இயற்றியது

1888

ஏதமில்புலவன்

நீதில்பல நூலுரைகள் பிரசங்கம்
சிறப்பாகச் செய்யுந் தீமான்
நீதிமுத்துக் குமாரகவி ராசன்வழித்
தோன்றலென நிலவுஞ் செல்வன்,
மேதகுமம் பலவாணன் மிக்கதவப்
பேறென்ன விளங்கு மைந்தன்,
ஏதமிலாக் குமாரசுவா மிப்புதல்வன்
கும்மிநனீ இயம்பி னனே.

III

புலவருடைய மாணவர்

தென்கோவை

பண்டிதர் ச. கந்தையாபிள்ளை

இயற்றியது

வித்துவசிரோன்மணி

மங்குல் கண்படுக்கும் பொங்குபூந் தருக்களின்
விண்மணி வெயில்புகாத் தண்மணி நிழற்கீழ்ச்
செந்தார்ப் பொலிந்த சிறுபசுங் கிளிகள்
மேவிய காதலிற் பூவைகட் கென்றுஞ்
செந்தமிழ் மொழிகளைச் செவ்விதிற் பயிற்றல்
தம்பயன் கருதாத் தன்மையின் மீஇ
மாணவர் தமக்குப் பேணியே நாளும்
கலையமு தளிக்கும் நிலைமையின் வழாஅ
ஆன்றமை புலத்துச சான்றோர் செயலென
இறும்பூது பயக்கும் நறும்பொழி லுடுத்த
சுன்னமா நகரின் மன்னுபே ரறிஞன்;
எல்லார்க்கும் நன்றும் பணித லவருளுஞ்
செல்வர் தமக்கே செல்வமென் றுரைத்த
பொய்யில் புலவன் பொருளுரைக் கிலக்கியம்
ஆகப் புகலும் சோகமில் பெரியோன்,
வடமொழி தென்மொழிக் கடனிலை கண்ட
இத்தலம் புகழும் வித்துவ சிரோன்மணி
அளியனேன் மனமா மணிநீர்ப் பொய்கையின்
மலர்ந்திடுஞ் செந்தா மரைமல ரடியான்
துங்கமார் குமார சுவாமிப் புலவனே.

IV

கொக்குவில்

பண்டிதர் சி. சிலம்புநாதபிள்ளை

இயற்றியது

1888

நாற்கவிராசபண்டிதன்

தொல்காப் பியமுதற் சொல்லிலக் கணமும்,
அல்காப் பொலிதரு பல்காப் பியமும்,
கதிகுடி கொண்ட பதினெண் புராணமும்,
பதிபசு பாசப் பதிப்புணர் நூலும்,
மேதினி விரும்பு மேதகு நூல்களும்,
பற்பல வாய பரமத நூல்களும்,
மிகுவட மொழியும் வேண்டுவ தெரிந்து,
மற்றைய நூல்களும் கற்றினி தறிந்து,
மூப்பொரு ளுண்மை மொழிதரு மருணூல்
ஓருபதி னொன்குந் துரிசற வுணர்ந்து,
தான்பரன் என்னச் சாற்றுனூல் முதலாப்
பொய்ப்புறச் சமயர் பிதற்றுநூல் கடிந்தோன்.
சைவசித் தாந்த மெய்நெறித் தலைமைப்
பெயரா அறிவிற் பெரியோ னெனேன்.
சுன்னைக் குமார சுவாமிப் பிள்ளை
என்னு நாற்கவி ராச பண்டிதன்
வீங்குநீர் சூழ்புவி விளங்கப்
பாங்காய் நவின்றனன் பாவலர் வியக்கவே.

V

யாழ்ப்பாணத்துத்
தமிழ்ச்சங்கப் புலவர்களுளொருவரும்
உதயபானுப் பத்திராதிபருமாகிய

சு. சரவணமுத்துப்புலவர்

இயற்றியது

1900

புலவரேறு

துகடீர் சைவத் தொன்மைக் குடிவரு
முகடு ரொளிநிகர் முத்துக் குமார
கவிராச சேகரன் கனதவப் புதல்வனுய்ப்
புவிரா சர்கள்கீழ்ப் புகுதொழி லிழிவெனும்
ஆன்றோர் மொழிமரு தகமக லுழவே
தான்றோர்ந் துயர்வெனத் தரித்தொரு சைவ
மாணவா சார மறவா தம்பல
வாணவேள் புரிந்த வான்தவத் துதித்தோன்,
தேர்வட மொழியொடு தென்மொழிக் கடலு
நேர்பட வாய்ந்து நிலகண் டுணர்ந்தோன்,
தோன்முறை தெரிந்து சொன்முட் டறுத்தபிற்
தான்மறு வில்லாத் தனிக்குசை மதியோன்.
கற்பவ ருளங்கொளக் கட்டுரை வன்மையிற்
பற்பல நூலும் பயிற்றிடு திறத்தோன்.
சொல்லும் பொருளுஞ் சுவைபட வாய்ப்பப்
புல்லும் வனப்புப் பொலிந்திசை பிறழா(து)
அருங்கவி விரைந்துசெய் ஆற்றல்சேர் புகழான்,
.....
போலிநா வலர்கள் புரைபட இயற்றிய
நூலுரைப் பிழைகளு நுண்ணிதி னுய்ந்தவர்
.....

தன்னைப் பவரித் தலத்தருந் தகைக்குவ(டு)
என்னப் புகழும் இருந்தவத் தோன்கலை
குறைவற உணர்ந்த குமார சுவாமிப்
பொறைநிறைந் தோங்கிகற் புலவ ரேறே.

(யாப். காரிகை. சி. பா.)

VI

அல்வாய்

பண்டிதர் வே. கனபதிப்பிள்ளை

இயற்றியது

1930

புலவர்பெருமான்

களங்கூரு மாசொற் கவிகாளி தாசன்முன் கட்டுரைத்த
விளங்கூரு மேகசந் தேசத்தைக் காரிகை மேவவிண்டோன்
குளங்கூருங் கூடற்சங் கத்தான் குமார சுவாமியெனும்
வளங்கூர் புலவர் பெருமானும் ஈழநன் மண்டலமே.

27. புலவர் கையெழுத்து



I புலவர் கையொப்பம் (தமிழ்)



II (ஆங்கிலம்)



III புலவரின் தந்தையார் கையொப்பம்



(அப்பலவாணர்)

IV புலவரின் பேரனார் கையொப்பம்

(முத்துக்குமாரகவிராயர்)

பிற்சேர்க்கை 1

புலவரியற்றிய நூல்களின் அட்டவணை

செய்யுள் நூல்கள்

1. வதூலைக்கதிரேசன்பதிகம் (1884)
2. வதூலைக்கதிரேசன்சிந்து ,,
3. வதூலைக்கதிரேசன்ஊஞ்சல் ,,
4. வதூலைமாணிக்கவிநாயகர்பதிகம் ,,
5. துணைவைஅரசடிவிநாயகர்பதிகம் (1887)
6. துணைவைச்சண்முகர்ஊஞ்சல் ,,
7. துணைவைஅரசடி வைரவர்தோத்திரம் ,,
8. மிலேச்சமதநிகற்பக்கும்மி (1888)
9. மாவைப்பதிகம் (1892)
10. மாவையிரட்டைமணிமாலை ,,
11. மேகதூதக்காரிகை (1896)
12. நகுலேசுரர்ஊஞ்சல் ,,
13. ஏகவிருத்தபாரதம் முதலியன ,,
14. அத்தியடிவிநாயகருஞ்சல் (1897)
15. அமராவதிபூதூர் பாலவிநாயகர்பதிகம் ,,
16. கைலாயபிள்ளையார் ஊஞ்சல் (1904)
17. கோப்பாய் வெள்ளெருவைவிநாயகருஞ்சல் (1905)
18. விளிசிட்டிபொற்கலந்தம்பைவைரவர்ஊஞ்சல் (1912)
19. சாணக்கியநீதிவெண்பா (1914)
20. தெல்லிப்பழைதில்லையிட்டிஅம்மன்ஊஞ்சல் (1915)
21. பன்னாலைவள்ளிமலைக்கந்தசுவாமிஊஞ்சல் (1916)
22. இராமோதந்தம் (1921)
23. அராலி முத்துமாரியம்மன்ஊஞ்சல் ,,

உரைநூல்கள் (இலக்கியம்)

24. திருக்கரைசைப்புராணம்பொழிப்புரை (1890)
25. சூடாமணிநிகண்டு 1-ம்தொகுதிபதப்பொருள் (1895)

26. சூடாமணிநிகண்டு 2-ம்தொகுதிபதப்பொருள் (1900)
27. சூடாமணிநிகண்டு முதலிலந்து தொகுதி ,, ,,
28. இரகுவமிசக்கருப்பொருள் ,,
29. கலிலைசைச்சிலேடைவெண்பா அரும்பதவுரை (1901)
30. மறைசையந்தாதி அரும்பதவுரை ,,
31. நீதிநெறிவிளக்கப்புத்துரை ,,
32. திருவாதவூரர்புராணப்புத்துரை (1904)
33. முத்தகபஞ்சவிஞ்சதி குறிப்புரை (1909)
34. இராமாயணம்பாலகாண்டம் அரும்பதவுரை (1918)
35. ஏரெழுபது பொழிப்புரை (1920)
36. கல்வளையந்தாதி பதவுரை (1921)

உரைநூல்கள் (இலக்கணம்)

37. யாப்பருங்கலப் பொழிப்புரை (1900)
38. வெண்பாப்பாட்டியல் பொழிப்புரை ,,
39. தண்டியலங்காரப்புத்துரை (1903)
40. யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை (1908)
41. அகப்பொருள்விளக்கப்புத்துரை (1912)

இலக்கண ஆராய்ச்சி நூல்கள்

42. இலக்கணசந்திரிகை (1897)
43. வினாப்பகுபதவிளக்கம் (1913)

வசனநூல்கள்

44. கண்ணகிகதை (1900)
45. தமிழ்ப்புலவர்சரித்திரம் (1916)
46. இதோபதேசம் (1920)
47. சிசுபாலசரிதம் (1921)
48. இரகுவமிசசரிதாமிர்தம் (1922)

பதிப்பு நூல்கள்

49. இதோபதேசம் (மொழிபெயர்ப்பு) (1886)
50. நகுலமலைக்குறவஞ்சிநாடகம் (1895)
51. யாப்பருங்கலக்காரிகை (பழையவுரை) (1900)
52. ஆசாரக்கோவை ,,
53. நான்மணிக்கடிகை ,,
54. ஆத்திசூடிவெண்பா (1901)
55. சிவஷேத்திரவிளக்கம் ,,
56. உரிச்சொனிகண்டு (1902)
57. திருவாதவூரர்புராணமூலம் ,,
58. பழமொழிவிளக்கம் (1903)

தொகுப்பு நூல்கள்

59. சதாசாரக்கவித்திரட்டு (1901)
60. சிவத்தோத்திரத்கவித்திரட்டு (1911)

அகராதி

61. இலக்கியச் சொல்லகராதி (1915)

பிற்சேர்க்கை 2

புலவர் சிறப்புப்பாயிரம் வழங்கிய நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

முற்காலம்

1883	மறைசைக்கலம்பகம்	ச. பீதாம்பரப்புலவர்
1888	ஆறுமுநாவலர்சரித்திரம்	வே. கனகரத்தினம் பிள்ளை
,,	குடந்தைவெண்பா	பூ. முருகேசபண்டிதர்
,,	மயிலணிவிசாலாட்சியம்மைபதிகம்	பூ. முருகேசபண்டிதர்
,,	கிறீஸ்துமதகண்டனம்	சி. சங்கரபண்டிதர்
,,	திரிகோணசலவெண்பா	தம்பையாபிள்ளை
,,	சைவசித்தாந்தசாராவலி	ச. சுப்பிரமணியக் குருக்கள்
,,	புலியூரந்தாதியுரை	க. வேற்பிள்ளை
,,	வீரசோழியம்	சி. வை. தாமோதரம் பிள்ளை
1892	பாவலர்சரித்திரதீபகம்	ஆ. சதாசிவம்பிள்ளை
,,	தமிழ் ஆரும்பாலபாடம்	மு. ஆறுமுகஉபாத்தி யாயர்
,,	தமிழ் எட்டாம்பாலபாடம்	,, ,,
1894	திருக்கோவையாருண்மை	சுவாமிநாதபண்டிதர்
1895	நளச்சக்கரவர்த்திநாடகம்	ஆறுமுகம்பிள்ளை
1896	திருவாதவூரர்புராணவுரை	க. வேற்பிள்ளை

இடைக்காலம்

1900	திருவிடைமருதூர்க் கலம்பகம்	இராமசாமிச் செட்டி
1901	சந்தானதீபிகை	சு. நடராசையர்
,,	சிவஷேத்திரவிளக்கம்	க. வீரப்பச்செட்டி

பிற்காலம்

1904	மயிலைச் சிவசுப்பிரமணியர் ஊஞ்சல்	க. மயில்வாகனம்
,,	சைவமஞ்சரிச் சிறப்புப் பாயிரம்	பொ. பாண்டித்துரைத் தேவர்
1905	விநாயகமான்மியம்	ச. பூபாலபிள்ளை
,,	ஏகாதசிப்புராணம்	
1906	பாலப்பிரபோத விலக்கணம்	பொ. நல்லதம்பிப்பிள்ளை
,,	சிவஞானபோத மாபாடியம்	சுவாமிநாதபண்டிதர்
1908	சுபத்திரைவிலாசம்	B. குமாரகுலசிங்கம்
1909	திருக்கோணேசல புராணம்	ஆ. சண்முகரத்தினேயர்
1910	கிள்ளைவிடுதூது	மு.இரத்தினேஸ்வரையர்
1911	நகுலேச்சுரவிநோத சித்திரப்பூங்கொத்து	க. மயில்வாகனம்
1912	சந்தானாசாரிய புராணவசனம்	க. பொன்னம்பலம்
1913	வள்ளியம்மைதிருமண ஞானக்கருப்பொருள்	சிவசர்மா
,,	திருக்குறண்முதனினைப்பு	குருசாமிப்பிள்ளை
,,	ஒருதுறைக்கோவை	க. வைத்திலிங்கம்பிள்ளை
1915	இரகுவமிசவுரை	சி. கணேசையர்
1918	பிரபஞ்சவிசாரம்	ச. சபாரத்தினம்பிள்ளை
1920	தமிழ்வரலாறு	ச. பூபாலபிள்ளை
	இலந்தைகட்டுவிநாயகர் இரட்டைமணிமாலை	கோ. பேரம்பலப்பிள்ளை
	எஸ்தக்கியார் நாடகம்	எஸ். தம்பிமுத்து
	கித்திலூற்றுவடிவேலர் பதிகம்	ச. செல்லையாபிள்ளை
	மணிப்பத்து	இராமச்சந்திரகவிராயர்
	கந்தரலங்காரவுரை	ச.வயித்தியலிங்கம்பிள்ளை

பிற்சேர்க்கை 3

புலவர் செய்த பிரசங்கங்கள் சிலவற்றின் அட்டவணை

முற்காலம்

1881	வித்தியாதானம்	கா. நகர்விநாயகராலயம்
30-1-1882	சமயகுரவர்	பரு. சி. விநாயகராலயம்
20-2-1883	சிவராத்திரி	கீரிமலைச் சிவன்கோயில்
1883	ஆலயவழிபாடு	பரு. சி. விநாயகராலயம்
1890	கல்வி	நீர். சைவவித்தியாசாலை
7-1-1891	சைவசமயம்	புன்னலைக்கட்டுவன்
1891	கந்தபுராணம்	சுன். பூதராயர் கோயில்
1-9-1891	சடையநாயனார்	குரூசைமடம்நாயன்மார் கட்டு
1892	சைவசமயம்	திருக்கோணமலை
6-7-1892	தருமம்	தெல். சைவவித்தியாசாலை
7-8-1895	ஆலயவழிபாடு	கீரிமலைச் சிவன்கோவில்
21-8-1895	சமயபரிபாலனம்	ஏழா. சை. வித்தியாசாலை

இடைக்காலம்

18-1-1900	சைவபரிபாலனம்	மேலைப்புலோலி சைவப் பிரகாசவித்தியாசாலை
18-8-1900	வைதிகசைவம்	நிலாவெளி
19-8-1900	சைவமகத்துவம்	திருமலை முத்துக்குமார சுவாமிகோயில்
1900	தமிழ்மொழி	நயினாதீ. சைவப்பாடசாலை
,,	ஔவையார்	உடு. ஆங்கிலப் பாடசாலை
1901	பிள்ளையார்கதை	அள. பிள்ளையார் கோயில்
2-9-1901	பஞ்சாக்கரம்	கீரிமலைச் சிவன்கோயில்

1902	வைதிகசைவ பரிபாலனம்	வண்ணைர்பண்ணை, சைவப் பிரகாசவித்தியாசாலை
1902	சமயக்கல்வி	புன்னாலைக்கட்டுவன் ஆங்கிலபாடசாலை
10-9-1902	முப்பொருள்	சுதுமலை விவேகானந்த வித்தியாசாலை
11-9-1902	சைவசமயம்	ஏழாலைதெற்குச் சைவப் பாடசாலை

பிற்காலம்

1907	திருக்கோயில் வழிபாடு	மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில்
1907	வைதிகசைவம்	வண்ணைர்பண்ணை சைவப் பிரகாசவித்தியாசாலை
19-1-1910	தமிழ்மறை	திருமலை முத்துக்குமார சுவாமிகோயில்
1-1-1910	முருகன்பெருமை	மாவிட்டபுரம்கந்தசுவாமி கோயில்
1901	கல்வியின் பெருமை	சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை
1910	கந்தபுராணம்	மருதயினார்மடம் வைரவர் கோயில்
1911	இராமாயணம்	மானிப்பாய் இந். கல்லூரி
7-4-1913	சூரபத்மன்வதை	கந்தரோடை ஆங்கில வித்தியாசாலை
8-5-1913	வித்தியாதானம்	இருபாலை சேனாதிராய வித்தியாசாலை
1915	காளிதாசன்	கீரிமலை நகுலாம்பிகை வித்தியாசாலை

பிற்சேர்க்கை 4

புலவர் பத்திரிகைகளுக்கு வழங்கிய கட்டுரைகளின் அட்டவணை

முற்காலம்

உதயதாரகை (1840) அமெரிக்கன் மிஷன் யாழ்.

சைவபோதம் (20-8-1919)

இலங்கைநேசன் (1876) சின்னத்தம்பி

கிறீஸ்து தேவனு (1878), பன்னகவரி (1881)

உதயபானு (1880 யாழ். 1881 மதுரை.) சு. சரவணமுத்துப்புலவர்,

விடுகவிக்கு விடுகவி (10-10-80), இலக்கணவிளு (21-10-80), புண்ணியபூமி (29-11-80), நற்புத்தி (21-11-80), அஞ்ஞானி என்னுஞ் சொன்மறுப்பு (3-1-81), வியவகாரபதம் (11-2-81), இலக்கணவிளுதர் (14-8-81), செங்கோட்டை வாழும் பிராமணருக்கு (1-8-81), கடிதம் (1-9-81), கிறீஸ்து சிருட்டிகர் (7-9-81), பாதுகாவலன் பத்திராதிபருக்கு (12-9-81), வேதாந்த நிர்ணய பத்திரிகை நாயகருக்கு (29-9-81), வடவிலங்கைக் கிறீஸ்த வித்தகர் (1882), நாகரீகவர்த்தமானி (9-1-82), நாகரீகசாரவிநாசம் (30-1-82), சாந்தோக்கிய உபநிடதம் (21-3-80 — 21-3-83), கீரிமலைச் சிவன்கோயில் (15-5-83), சம்பந்த சுவாமிகள் புராணம் (1883)

இந்துமதாபிமானி (1883) சென்னை

விளக்கு வழக்கின் விலக்கு (1896), விப்பிரக்யாதி (6-1-92), பத்திரிகை (1892)

விஞ்ஞானவர்த்தனி (1883 சி. பி. சங்கம் S. சபாபதி)

வரலாறு (23-4-83), கடோபநிடதம் (7-8-84)

ஸ்ரீலோகரஞ்சனி (1887) சென்னை

சாத்திரவினாக்கள் (1887), ஆசிரிய விவகாரம் (12-9-88), என்மனார் என்னுஞ் சொன்முடிபு (15-11-88) புண்ணியபூமி (15-11-88), இலக்கியவிடயோபந்நியாசம் (5-12-88) கல்விப்பிரகரணம் (21-8-89)

இந்துசாதனம் (1889) யாழ்ப்பாணம்

வித்தியாபரீக்கை (14-5-91), உவமான அலங்கார சித்திரம் (1891), முதல்வன் என்னும் பதம் (1891), சிவகர்ணமிர்த பாடாந்தரம் (21-9-94), சூதசங்கிதை (19-11-1900)

ஆரியசனப்பிரியன் (1891)

விஞைப்பகுபதவிளக்கம்

இடைக்காலம்

அறிவுவிளக்கம் (1892) திருவனந்தபுரம், வள்ளல் சிவஞானதேசிகர்

பிங்கலநிகண்டு (1902), தமிழாராய்ச்சி (1900)

திராவிடகோகிலம் (1900) யாழ்ப்பாணம்

வித்தியாவிஞைதருக்கு (11-5-1900), சிவகர்ணமிர்த பாடாந்தரம் (11-5-1900)

ஞானசாகரம் (1902) சென்னை சுவாமி வேதாசலம்

காப்பியம் (1902), இலக்கியவாராய்ச்சி (1902), கந்தபுராணம் (1902), இலக்கணவாராய்ச்சி (1902), கந்தபுராணவரலாறு (1902), சாணக்கியசதகம் (1902), சாகுந்தலமொழிபெயர்ப்பு (1902)

பிற்காலம்

செந்தமிழ் (1902, மதுரைத் தமிழ்ச் சங்கம்)

1-ம் தொகுதி: (1902) அகராதி, அத்தியாத்தும ராமாயணம், அறுகுணங்கள், இதமாவது யாது, தணிகைப்புராணம் (I) தத்திதாந்தபதம், நிருத்தம், பரிமேலழகருரை, மடக்கலங்காரம், தணிகைப்புராணம் (II)

5-ம் தொகுதி: (1904), உகரவீற்றுவினைப்பகுதி, வாணன்கோவையுரை, மகாபாரதம்:

7-ம் தொகுதி: (1907), முத்துக்குமாரகவிராயர், முத்தகத்திரயம்.

9-ம் தொகுதி: (1908), அறிவுவிளக்கம், சாங்கிய கதோபதேசம், சொல்வகைநோக்கம், திருவள்ளுவர் பரிமேலழகருரை, மொழிபெயர்ப்பு.

10-ம் தொகுதி: (1909), யாப்பருங்கலக்காரிகை, கரவைவேலன்கோவை

12-ம் தொகுதி: (1910), கரவைவேலன்கோவை, மாகீர்த்திநாமநிரூபணம்.

33-ம் தொகுதி: (1911), தருக்கசூத்திரப்பரீக்கை, சுருங்கச்சொல்லல்.

15-தொகுதி: (1913), வினைப்பகுதி வேறுபடுகை, ஐயவினுவுக்கு விடையுரையாராய்ச்சி, தமிழகராதிச் சபை, ஐயவினுவுக்குவிடை, நாலடியார் கடவுள்வாழ்த்து.

16-ம் தொகுதி: (1914), இலங்கைத் தமிழரசர், சாணக்கிய நீதிசாரம்:

17-ம் தொகுதி: (1915) மதுரைத் தமிழ்ச்சங்க மங்கலவாழ்த்து, முருகேசபண்டிதர் பாட்டு, 'வேத்துணையோர் பரிபாடல்.'

18-ம் தொகுதி: (1916) மாகீர்த்திநாமநிரூபணம், ஐயவினுவுக்குவிடை, நாலடியார் கடவுள்வாழ்த்து.

19-ம் தொகுதி: (1917) பதார்த்ததீபிகை, வினைப் பகுதி வேறுபடுகை.

20-ம் தொகுதி: (1918) பதார்த்ததீபிகை.

21-ம் தொகுதி: (1919) வினைதரசமஞ்சரி I—II, பதார்த்ததீபிகை, இலக்கணவரம்பு, அவையல்கிளவி.

22-ம் தொகுதி: (1920), ஏதுப்போலி, சிசுபால சரித்திரம், சிவஞானசித்தியார், உவமப்போலி, பக்கப் போலி.

23-ம் தொகுதி: (1921), பழந்தமிழ்நூற்சொல், தமிழ்மொழி, சிறப்புப்பாயிரம், மகாபாரதம்.

ஆத்மபோதினி (1907), யாழ்ப்பாணம்

மனிதரைப்பாடுதல் (1909), தண்டமிழின்மேலாந் தரம் (1907), சிறப்புப்பாயிரம் (1907)

சைவபாலியசம்போதினி (1910), யாழ்ப்பாணம்

பத்திரிகை (13-3-10)

வைசியமித்திரன் (1910), தேவகோட்டை S. T. இராம நாதன்செட்டியார்

பத்திரிகை (13-3-1910), மனிதரைப்பாடுதல் (22-2-11), இலைபொலிகலம் (27-7-11), தருமவிசாரம் (28-8-11), பஞ்சபௌதிகம் (5-9-11), இருவினை (8-11-11), இருவகையிந்திரியம் (8-11-11), அகராதிச் சொற்பரீக்கை (9-5-13).

ஞானப்பிரகாசம் (1910) யாழ்ப்பாணம் அ. சண்முகரத் தின ஐயர்

மாகம் (1910), வித்தியாமகத்துவம் (1910)

தமிழ்மகவு (1917) சென்னை

இராமாயணச் சொற்பிரயோகம் (1918), பொது மொழி (1919)

புலவர் தொடர்புகொண்ட வேறு பத்திரிகைகள்

முற்காலம்

கத்தோலிக்கபாதுகாவலன் (1875) யாழ்ப்பாணம்
நாகரீகவர்த்தமானி (1878) காரைக்கால்

புதினுலங்காரி (1882) ச. சபாரத்தினமுதலியார்
முஸ்லிம்நேசன் (1883) M. C. சித்திலெப்பே, கொழும்பு
சித்தியாபிமானி (1884) ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, காரைக்கால்
சன்மார்க்கபோதினி (1884) S. தம்பிமுத்து, அச்சுவேலி
அமிர்தபோதினி (1888) பெருமாள்நாடார், திருப்பற்றூர்
ஞானமிர்தம் (1888) சபாபதிநாவலர்,
நாகநீலலோசனி (1889) G. சதாசிவம்பிள்ளை,
விவேகதிவாகரன் (1891) திருச்செங்கோடு,
விஜயகேசரி (1892) சிதம்பரம்
விஜயத்துவசம் (1892) சி. தாமோதரம்பிள்ளை, திருநெல்வேலி,
பாஸ்கரஞானோதயம் (1893) நாகபட்டினம்,
திராவிடமந்திரி (1893) காரைக்கால்,
இலங்கைப்புதினத்தான் (1893) கொழும்பு,
லோகோபகாரி (1895) சென்னை

இடைக்காலம்

பாண்டியகுலபரிபாலனி (1899),
பூலோகநண்பன் (1902)
ஞானமிர்தம் (1902) சபாபதிநாவலர்,
விவேகானந்தன் (1902) ச. இளயதம்பி, யாழ்ப்பாணம்

பிற்காலம்

பூலோகௌஷதோபகாரி (1904) கொழும்பு
காரைஞரனபானு (1905) காரைக்கால்
குருசந்திரோதயம் (1907) யாழ்ப்பாணம் S. A. செல்லத்துரைப்பிள்ளை
வித்தியாபாஸ்கரன் (1907) சிலங்கூர்
ஞானசித்தி (1908) யாழ்ப்பாணம் சி. தாமோதரம்பிள்ளை
பாண்டியன் (1908) இரங்கூன்

விஜயலட்சுமி (1908) யாழ்ப்பாணம்
மகாவிஜயலட்சுமி (1908) இ. சி. விநாயகமுதலியார், யாழ்ப்பாணம்
பாலசந்திரன் (1910) சி. செல்லையாபிள்ளை, கொழும்பு
சண்முகநாதன் (1911) சு. சரவணமுத்துப்புலவர், யாழ்ப்பாணம்
விஜயபானு யாழ்ப்பாணம்
வித்தியாபானு (1914) மதுரை மு. ரா. கந்தசாமிக் கவிராயர்
விவேகபானு ,, ,, ,,
சித்தாந்தம் (1915) சென்னை
கலாசிந்தாமணி (1915) சென்னை
சிவகர்மபோதினி (1920) கொழும்பு

பிற்சேர்க்கை 5

புலவருடைய சாதகக்குறிப்பு

சாலிவாகன சகாப்தம் களஎடு க்குச் சமமான பிரமாதீச வருடம் தை மாதம் கஅ-ம் தேதி ஞாயிற் றுக்கிழமை பகல் கஉ நாழிகை நஉ விநாடியில் அவிட்ட நட்சத்திரமும் பூர்வபக்கப் பிரதமையும் கூடிய சுப காலத்திற் புலவர் பிறந்தனர்.



பிற்சேர்க்கை 6

குமாரசுவாமிப்புலவர் வம்சாவலி



பிற்சேர்க்கை 7

குமாரசுவாமிப்புலவர் மனைவி வம்சாவளி



பிற்சேர்க்கை 8

புலவருடன் நேரிலும், கடிதமூலமும் நட்புறவு பூண்ட பெரியார் சிலரின் அட்டவணை

முற்காலம் 1854—1898

(பெயருக்கு முன்னுள்ள ஆண்டுகள் தொடர்பு பூண்ட காலத்தைக் குறிக்கும்)

1864	பூ. முருகேசபண்டிதர், சுன்னகம்	1830—1900
,,	ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, மானி.	1858—1917
,,	சு. சரவணமுத்துப்புலவர், ஊரெழு	1848—1916
,,	திருஞானசம்பந்த உபாத்தியாயர், சுழிபுரம்	1839—1906
,,	சி. வை. தாமோதரம்பிள்ளை	1832—1900
1865	சி. சங்கரபண்டிதர், சுன்னகம்	1821—1871
,,	கா. சபாபதிக்குருக்கள், கிரிமலை	1846—1921
,,	ந. ச. பொன்னம்பலபிள்ளை, நல்லூர்	1836—1897
1870	க. ஆறுமுகநாவலர், நல்லூர்	1822—1879
,,	அ. சிவசம்புப்புலவர், உடுப்பிட்டி	1829—1910
,,	த. கைலாயபிள்ளை, நல்லூர்	1855—1939
,,	அ. நாகநாதபண்டிதர், சுன்னகம்	1824—1884
,,	மா. வைத்தியலிங்கம்பிள்ளை,	1852—1902
1880	வே. கனகசபைப்புலவர், அளவெட்டி	1829—1873
,,	அ. அருளம்பலமுதலியார், கோவை	1850—1889
1882	சி. சபாரத்தினமுதலியார்	1858—1922
1883	ச. சிவப்பிரகாசபண்டிதர், நீர்வேலி	1864—1916
,,	ச. சிவானந்தையர், தெல்லிப்பழை	1873—1916
,,	நடராசையர், இணுவில்	1844—1905
1884	துரைச்சாமிமூப்பன், கபிஸ்தலம்	
1885	செ. இலக்குமணபிள்ளை, செங்கோட்டை	
1886	C. பிறிற்ரோ B. A., யாழ்ப்பாணம்	1841—1910
,,	உ. வே. சாமிநாதையர், சென்னை	1855—1942

1886	தா. செல்லப்பாபிள்ளை, வண்ணை	1838—1912
,,	தா. பொன்னம்பலபிள்ளை, ,,	1855—1939
1890	வே. அகிலேசபிள்ளை, திருமலை	
1893	ந. ச. பொன்னம்பலபிள்ளை, நல்லூர்	1836—1897
,,	ஆ. சதாசிவம்பிள்ளை, மானிப்பாய்	1820—1896
1894	Dr. S. ஆறுமுகம், வண்ணார்பண்ணை	
,,	சுவாமிநாதபண்டிதர், ,,	1864—1927
1895	கு. கதிரைவேற்பிள்ளை, உடுப்பிட்டி	1844—1904
1896	க. பாலசிங்கம், ,,	1876—1953
,,	க. வேற்பிள்ளை, மட்டுவில்	1864—1926

இடைக்காலம் 1898—1902

1898	சி. கணேசையர், புன். கட்டுவன்	1878—1958
1900	சி. செந்திநாதையர், ஏழாலை	1848—1924
,,	ச. கந்தையாபிள்ளை, கோப்பாய்	1880—1958
,,	சிவஞானதேசிகர், திருவனந்தபுரம்	
,,	செ. இராமசாமிச்செட்டி, ஆரியநல்லூர்	
1901	சுவாமி வேதாசலம், சென்னை	1876—1950
,,	சி. பொன்னம்பலம், கந்தரோடை	1876—1950
,,	சி. த. இலக்குமணச்செட்டியார், தேவகோட்டை	
,,	க. சிதம்பரநாதன், வட்டுநகர்	1890—1932
,,	வி. மயில்வாகனம், நீர்வேலி	1892—1934
,,	ஆ. சண்முகரத்தினஐயர், வண்ணை	1878—1921
1902	டி. சவரிராயபிள்ளை, திருச்சி	1858—1923
,,	மாகறல் கார்த்திகேயமுதலியார்	
,,	ச. ஏரம்பையர், மாதகல்	1847—1914
,,	சு. கதிரைவேற்பிள்ளை, கீரிமலை	

பிற்காலம் 1902—1922

1902	பொ. பாண்டித்துரைத்தேவர், மதுரை	1867—1911
,,	மு. இராகவையங்கார், ,,	
,,	ரா. இராகவையங்கார், ,,	1870—1948

1905 Barr. குமாரகுலசிங்கமுதலியார்,
தெல்லிப்பழை 1826—1889
,, ச. பூபாலபிள்ளை, மட்டக்களப்பு
,, சதாசிவம்பிள்ளை, சிதம்பரம் 1825—1910
1906 பொ. நல்லதம்பிப்பிள்ளை, தத்தைமங்கலம்
1907 தி. த. கனகசுந்தரம்பிள்ளை, சென்னை 1863—1922
,, பால்வண்ணமுதலியார், திருநெல்வேலி
1909 S. W. குமாரசுவாமி, தெல்லிப்பழை
,, சுவாமி விபுலானந்தர் 1892—1947
1911 சேர். அ. கனகசபை, பன்னலை 1855—1927
1913 C. அருளம்பலம், யாழ்ப்பாணம்
,, வ. குமாரசுவாமிப்புலவர், புலோலி 1848—1926
1912 W. சங்கரப்பிள்ளை, மானிப்பாய் —1912
1913 மு. அருணாசலக்கவிராயர், சேற்றூர் 1853—1924
,, மு. கந்தசாமிக்கவிராயர், ,,
,, குருசாமிப்பிள்ளை, சிதம்பரம்
,, பொ. இரத்தினவேலுமுதலியார்,
சிதம்பரம்
1914 J. S. சாண்ட்லர், சென்னை
,, கே. சண்முகம்பிள்ளை, உடுமலைப்பேட்டை
,, S. சோமசுந்தரதேசிகர், திருவாரூர்
1916 வே. முத்துச்சாமிஐயர் M. A., LT.
,, S. அனவரதவிநாயகம்பிள்ளை,
சென்னை 1877—1904
,, பாஸ்கரசேதுபதி, இராமநாதபுரம் 1867—1903
,, ச. தம்பிமுத்து, அச்சுவேலி 1857—1921
,, கோ. பேரம்பலப்புலவர், வேலணை 1859—1935
,, B. இராஜராசேஸ்வரசேதுபதி,
இராமநாதபுரம் 1889—1928
,, ஞா. அரங்கசாமிசாஸ்திரி,
திருநெய்த்தானம்
,, C. சிறீகாந்தா, கொழும்பு
1917 திரு நாராயணையங்கார், மதுரை 1861—1947
,, எம் பி. ரி. பெத்தாச்சிச்செட்டியார்
ஆண்டிப்பட்டி

1917 சிதம்பரசாஸ்திரி, பாலக்காடு
,, மு. திருவிளங்கம், கொழும்பு
,, சேர். பொ. அருணாசலம், கொழும்பு 1853—1924
,, வி. திருஞானசம்பந்தக்கவிராயர், ஆண்டிப்படி
,, பூவை கலியாணசுந்தரமுதலியார், சென்னை 1854—1918
,, P. சாம்ஸன், பேர்மா
,, Rev. J. கிங்ஸ்பெறி, யாழ்ப்பாணம் 1873—1941
,, ச. பொன்னம்பலபிள்ளை, சாவகச்சேரி 1870—1946
,, நவநீதகிருஷ்ணபாரதி, மாலை 1880—1952
,, C. இராசநாயகமுதலியார், மானிப்பாய் 1870—1940
1919 பொ. முத்தையபிள்ளை, தூத்துக்குடி
,, சேர். பொ. இராமநாதன், சுன்னாகம் 1851—1930
,, இ. செ. வரதராசையர், திருச்சி
1921 சி. மு. நடேசமுதலியார், சென்னை
,, மு. கதிரேசன்செட்டியார், மகிபாலன்பட்டி 1881—1953
,, வண. ஞானப்பிரகாசர், மானிப்பாய் 1875—1947
,, க. சோமசுந்தரப்புலவர், நவாலி 1880—1953

செய்யுள் முதற்குறிப்பகராதி

அண்ணறன், 164
அம்பல, 186
அம்புவி, 6
அள்ளிக், 206
அன்று, 31
அன்றுநகுல, 31
அன்றே, 86
அன்னவன், 20

ஆகமங்கள், 93
ஆங்கில, 38
ஆதியிலே, 31
ஆரண, 86
ஆரணமா, 93
ஆரணமு, 130
ஆவந்திகன், 36
ஆறெழுத், 30

உருவம், 135
உலகினை, 198
உலகுபுகழ், 128

எட்டுணையும், 89
எம்மை, 45
எழுத்தொடு, 4
என்கவிதை, 13
என்னுயி, 207
எனையடைந்த, 207

ஏட்டில், 89

ஐந்தன்பின், 14

ஒண்மை, 204
ஒழியாத, 204
ஓதுதமிழ், 111
ஓவாத, 134

கல்லாத, 88
கல்வி, 14
கலைநிறைவு, 207
களங்கூரு, 218
கற்றவர், 88
கற்றிலாதவர், 208
கங்கை, 33
கடற்படு, 162
கடுந்தொடை, 208
கம்பன், 202

காசிப, 132

சங்கப்புலவர், 202
சந்தாப, 35

சீதை, 111
சீர்கொண்ட, 30
சீர்மேவு, 29
சீரார், 48

சுத்தி, 202
சுன்னக, 203
சுன்னக வாசன், 205
சுன்னக், 202, 203, 207;
சுன்னநகர், 214

செந்தமி, 188
செந்திரு, 87
செம்பதும, 15
செல்லும், 86

சேய்நிகர்த்த, 204
சேயிதழ், 159

சொன்மதிக்கும், 203

சோதிடந், 71

தண்டமிழ், 206
தண்டிகவி, 123

தாதுவருடந், 17
தாதையார், 33
தாமோ, 19

திக்குலவும், 110
திங்களென, 132
திரண்டில, 161
திரித்தீப, 203
திருநாம, 132
திருமருவு, 201
திருவாழ்ந்த, 205

தீதில்பல, 214

துகடீர், 218

தூயமயிலணி, 12

தென்மொழியில், 81

தேவர், 94

தொக்ககலி, 32
தொல்காப்பியமெங்கே, 88
தொல்காப்பியமுத, 216

நந்தாத, 88
நல்குரவு, 30
நல்லி, 89

நாக்கு, 126
நாரணனார், 33
நாவலன், 203

நின்னிருபங், 21

நீடுறு, 162

பக்குவமாய், 37
படியெடு, 158
பண்டை, 121
பலரயன, 7

பாடற், 205
பாடுங், 89
பாடுந், 203
பாரில், 90
பாரேறு, 10

புல்லேற்ற, 162

பூதேவன், 110
பூவார், 205

பெருந்தனு, 202

பொய்தவிரு, 68
பொன்னின், 129

போற்று, 39

மங்குல், 215
மண்மடந்தை, 207
மரபோது, 121
மலத்திற, 206
மன்னர், 37
மன்னிய, 128
மன்னுசிவா, 132

மாமேவு, 132
மானுரு, 129

முத்திதரும், 38
முத்துக்குமார, 2
முந்தேறு, 36
முன்னுரும், 125
முன்னுள், 206
முன்னே, 90

மெய்ஞ்ஞான, 39

யூதேயாத், 31

வடமொழி, 198
வழுவின்றி, 202

வாகார், 36

வெண்பா, 88

வேதத்தை, 94
வேரிநிறை, 207

சிறப்புப் பெயரகராதி முதலியன

அகப்பொருள்விளக்கம், 9, 39, 121, 139, 143

அகிலேசபிள்ளை, வே. 29

அத்தியடிவிநாயகர்ஞ்சல், 89

அத்தியாத்துமராமாயணம், 155

அநவரதவிநாயகம்பிள்ளை, 149, 169

அம்பலவாணதேசிகர், 118, 119

அம்பலவாணபிள்ளை, 3, 6, 7, 8, 24, மகன், 26, 116, 183

அமராவதிபூதூர்பால விநாயகர்பதிகம், 28

அரங்கசாமிசாஸ்திரி ஞா. 156

அரசகேசரி, 1

அரசசன்மானம், 178, 181

அருணாசலக்கவிராயர். மு. ரா. 118, 169, 171

அருணாசலசாஸ்திரி, 101

அருணாசலதேசிகர். தி. 103

அருணாசலம். பொ. (சேர்) 178, 192

அருணாசலம்பிள்ளை, 3

அருளப்பமுதலியார், 46

அருளம்பலம். கா; 180

அருளம்பலமுதலியார். அ, 85

அறிவுவிளக்கம், 80, 84,

ஆச்சிமுத்தம்மையார், 110

ஆசாரக்கோவை, 77

ஆத்திசூடிவெண்பா, 77, 78

ஆத்மபோதினி, 90

ஆபிரகாம், (அலின்) 180

ஆறுமுநாவலர், 1, 2, 7, 14, 37, 38, 46, 50, 69, 85, 86, 91

ஆறுமுகம் சு. (டாக்டர்) 186

ஆறுமுகம்பிள்ளை, மு. 69, 135, 136

இதோபதேசம், 10, 43, 146, 148

இந்துசாதனம், 35, 70, 76

இரகுநாதையர். ச. 85, 87

இரகுவமிசக்கருப்பொருள், 73, 92

இரகுவமிசசரிதாமிர்தம், 146, 149

இரகுவமிசப்புத்துரை, 67

இராகவையங்கார். ரா. 34, 75, 175, 194,
இராசராசேஸ்வரசேதுபதி, 110, 111, 112, 125, 147
இராமசாமிச்செட்டியார், 71
இராமநாதன். பொ. (சேர்) 105
இராமநாதன் செட்டியார். எஸ். ரி. 157
இராமாயணம், 17, 67, 137, 158
இராமோதந்தம், 10, 102 125, 129
இலக்கணசந்திரிகை, 140
''இலக்கணச்சல்லாபம்'' 51
இலக்கணவிளக்கம், 54
இலக்கணவிளக்கச் சூறவளி, 54
இலக்கணவிளக்கப்பதிப்புரை மறுப்பு, 54
இலக்கணவிளு, 51
இலக்கியச்சொல்லகராதி, 153, 154
இலக்குமணச்செட்டியார். சி. த. 169, 171
இரகுவம்சம், 1, 9, 10, 17, 20, 67, 149
இரத்தினவேல் முதலியார். சு. 169, 170
இரத்தினேசுவரஐயர்.வ.மு. 103, 185, 206
இராகவப்பிள்ளை. சு. 86,89
இராகவையங்கார்.மு.169, 108, 111, 118
இலங்கைநேசன், 17, 46, 48, 50
இலைபொலிகலம், 177
இலையதம்பிப்பிள்ளை, 20, 102

உண்மைவிளக்கம், 42
உதயதாரகை, 35, 40, 145
உதயபானு, 16, 38, 39, 46, 51
உரிச்சொனிகண்டு, 77, 79

ஏகவிருத்தபாரதம் முதலியன, 16, 32
ஏரம்பையர். சு. 70
ஏரெழுபது, 138

ஐயனர் ஊஞ்சல், 4
ஐயாசாமிதேசிகர், 186

கதிரேசன்செட்டியார். மு. 185, 199
கந்தசாமிமுதலியார். மோ. 144

கண்ணகிகதை, 79
கணபதிப்பிள்ளை சி. 103, 185, 185, 187, 208
கணேசையர். சி. 10, 66, 177, 190, 201
கதிரிப்பிள்ளை. சி. 103, 104
கதிரைவேற்பிள்ளை. கு. 62, 64, 65, 169
கதிரைவேற்பிள்ளை. சு. 75
கந்தையாபிள்ளை. ச. 10, 44, 66, 128, 144, 197
கல்வளையந்தாதி, 138
கலியாணசுந்தரமுதலியார், பூவை, 169
கனகசபாபதிஐயர். வே. 69, 92, 184
கனகசபை. அ. (சேர்) 178, 180
கனகசபைப்புலவர். வே. 14
கனகசுந்தரம்பிள்ளை. தி. த. 165, 169, 175, 176
காமாட்சியம்மை, 8, 24, 192
கார்த்திகேயமுதலியார் (மாகறல்), 80, 169
கிங்ஸ்பெரி தேசிகர். தா. 147
குமாரசுவாமி. S.W. 146 180
குமாரசுவாமிமுதலியார். 62
குமாருடையார், 8
குருமூர்த்திசிவாசாரியர். க. 103, 185
கைலாயபிள்ளை. த. 44, 69, 121, 180
கோபாலராவ். த. 57
கோபாலையர், 117
சங்கரபண்டிதர். சி. 1, 5, 31, 37, 44
சதாசிவம்பிள்ளை (ஆனல்ட்), 38
சந்தானதீபிகை, 71
சந்திரசேகரப்பிள்ளை, 3
சண்முகம் J. K. 180
சண்முகரத்தினையர். ஆ. 66, 157
சபாபதிநாவலர், 53, 54
சபாபதிப்பிள்ளை, 7, 70
சபாபதிமுதலியார். 2
சபாரத்தினமுதலியார். ச. 19, 69, 70, 102, 122, 180
சரவணமுத்துப்புலவர். சு. 5, 12. 15, 16, 44, 69, 92, 141, 183
சவரிராயபிள்ளை. டி. 80, 84, 85, 157, 169

சாண்ட்லர். J. S. 69, 70
சாணக்கியநீதிவெண்பா, 102, 135
சாம்சன். பி. 169
சாமிநாதையர். உ. வே. 26, 56, 60, 61, 194
சிசுபாலசரித்திரம், 66, 146, 152
சிதம்பரநாதன். க. 66, 193
சிவசம்புப்புலவர். அ. 28, 70, 169
சிவஞானசுவாமிகள், 54 155
சிவஞானதேசிகர் (வள்ளல்), 169
சிவஞானம்பிள்ளை. C. 143, 169
சிவப்பிரகாசபண்டிதர். ச. 22, 101, 176
சிவானந்தையர். ச. 20
சிற்கைலாயபிள்ளை, 146
சின்னச்சியம்மை. கு. 10, 24, 113
சீவகசிந்தாமணி, 56
பிழைகள், 56, 58, 59
வழுப்பிரகரணம் 58
சீனிவாசகம்பிள்ளை. ம. 16, 24, 115, 183
சுப்பிரமணியமுதலியார், பி. வி. 168
சுவாமிநாதபண்டிதர், 28, 38, 125, 130, 136, 141, 168, 172
செந்தமிழ், 45, 72, 73, 107, 110, 112, 139, 155, 156, 158
செந்திநாதையர். சி. 116
செல்லப்பாபிள்ளை. தா. 43, 86, 89, 90
செல்லையாபிள்ளை. சி. 169
சேதுபதி (பாஸ்கர) 110, 111, 112, 192
சொக்கலிங்கச்செட்டியார், 169
சோமாஸ்கந்தபண்டிதர், 119
ஞானக்கும்மி, 4
ஞானசாகரம், 41, 73, 82, 156, 159
ஞானப்பிரகாசம் (பத்திரிகை), 35, 66, 135, 157
தர்க்ககுடாரதாலுதாரி, 58,
தண்டியலங்காரம் 9, 108, 123, 138, 139, 180
தமிழ்ப்புலவர்சரித்திரம், 44, 66, 111, 146, 147, 148, 151

தமிழகராதி, 16, 69

தாமோதரம்பிள்ளை. சி. வை. 2, 4, 5, 17, 19, கடிதங்கள் 21, 22, 23 28, 29, 54, 86, 88

தியாகராசச்செட்டியார், 57

தியாகராசபிள்ளை. சி. 185

திராவிடப்பிரகாசிகை, 53 55

திருக்கரசை, 39

திருக்கரசைப்புராணம், 39

திருக்கோணமலை, 39, 92, 102

திருஞானசம்பந்தப்பிள்ளை, 58

திருவாதவூரர்புராணம், 13, 38, 77, 78, 135, 136

திருவிளங்கம், 168

துணைவைஅரசடிவிநாயகர் ஊஞ்சல், 28

துரைச்சாமிமூப்பன், 14

துரைச்சாமி. வை. 180

தொல்காப்பியம், 4, 9, 14, 17, 20

நகுலமலைக்குறவஞ்சி நாடகம், 43

நகுலேசுரர் ஊஞ்சல், 29,

நகுலேசுரர் சதகம், 30, 31

நடராசர்பதிகம், 4

நடராசையர். சு. 11,

நல்லதம்பிப்பிள்ளை, 80, 130

நாகநாதபண்டிதர். அ. 10 25, 43

நாராயணையங்கார். திரு, 110, 108, 118, 168, 170, 195

பஞ்சாட்சரஐயர். ச. 103

பாண்டித்துரைத்தேவர். பொ. 106, 107, 108, 110, 125, 130, 139, 140, 169

பாஸ்கரசேதுபதி, 181

பால்வண்ணமுதலியார், 119

பாலகாண்டம்அரும்பதவுரை 137, 138

பாலசிங்கம். க. 193

பாலப்பிரபோதவிலக்கணம், 80, 131

பாவலர்சரித்திரம், 38

பிங்கலநிகண்டு, 80

பிறிற்றோ, 43

பொன்னம்பலபிள்ளை. தா. 70

புலவர் (குமாரசவாமிப் புலவர்) 3, 6, 10, 11, நாவலர்தொடர்பு 14, 15, 17, 24, 28 விவாகம் 26 சபாபதிநாவலர்தெடர்பு 53, சாமிநாதையர் தொடர்பு 56, 62, 66 யாழ்ப்பாணத்தமிழ்ச் சங்கம் 69, சென்னைத் தமிழகராதி, 70, 85, பிரசங்கம், 92, 103, மதுரைத்தமிச்சங்கம் 106 மனைவிமரணம் 113, மூன்ருவது இந்திய யாத்திரை 116, முற்கால நூல்கள் 28, இடைக்காலநூல்கள் 71, பிற்காலநூல்கள் 121 கட்டுரைகள் 151 மறைவு 184

பூபாலபிள்ளை. ச. 131, 132, 174

பெத்தாச்சிச்செட்டியார் 192

பெரியதம்பிப்பிள்ளை. ஏ. 103, 185, 187

பொன்னம்பலதேசிகர். சி. 101

பொன்னம்பலபிள்ளை. ந. ச. 19, 20, 30, 66

பொன்னம்பலபிள்ளை. ச. (சிதம்பரம்) 99, 100, 119, 123, 124, 139, 173, 183

போசப்பிரபந்தம், 36

போசராசன், 36, 39

மதுரைத்தமிழ்ச்சங்கம், 74, 106, 107, 108, 110, 112, 121, 137, 140, 151

மயிலணி, 5, 8

மாணிக்கத்தியாகராச பண்டிதர், 20, 21

மிலேச்சமதவிகற்பக்கும்மி 31, 46

முத்தகபஞ்சவிஞ்சதி, 84, 134, 136

முத்துக்குமாரகவிராயர், 1, 2, 4, 5, 9, 13, 119, 136

முத்துசாமி ஐயர். வே. 168, 172

முத்துத்தம்பிப்பிள்ளை. ஆ. 5, 10, 16, 63, 65, 70, 83

முத்தையாபிள்ளை. பொ. 117, 168, 192

முருசேபண்டிதர். பூ. 8, 12, 14, 15, 16, 17, 18, 37, 44, 85, 88, 214

யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கம் 16, 65, 85, 121, 124

வரதராசையர். க. ச. 148

வல்லிபுரநாதபிள்ளை. க. 115, 186

விசுவநாதமுதலியார். ச. 20, 85, 87

விபுலானந்தர் (சுவாமி), 171

விஞ்ஞப்பகுபதவிளக்கம், 16, 60, 127, 143, 146, 152, 180

வேங்கட்டராமையர். உ. சா. 200

வேதாசலம் (சுவாமி) 4, 34, 80, 81, 82, 169

வேற்பிள்ளை, க. 38

வைசியமித்திரன், 35, 40, 90, 157

வைத்தியநாதபிள்ளை. மு. 15, 16, 99, 102, 117

முத்துக்குமாரர் (235) என்பதனை முத்துக்குமாரர் மகன் அருளம்பலம் எனவும்,

வித்துவசிரோன்மணி என வருமிடங்களில் வித்துவ சிரோமணி என்வும் திருத்துக.

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	2	உண்மையை	உண்மை
2	7	நரேந்திரன்	நரேந்த்ரன்
2	8	தென்முனை	தெம்முனை
12	18	1869	1870
21	26	மிவருனை	மிலருனை
31	11	மென்று	மென்ற
41	19	உள்ளது	உள்ளன
56	15	காள்ள	கொள்ள
58	24	பண்டிதரை	பண்டிதர்
58	34	மாலை	குணமாலை
80	16	நாற்கவிராசநம்பி	நல்லகவிராச
109	12	1914	1911
116	5	மகளாகிய	மகளாகிய காலஞ்சென்ற
136	27	வியிற்கிராந்தை	வியுற் கிராந்தை
138	26	என்னும் நூல்களுக்குச்	என்னும்
178	5	25-6-1920	26-2-1920
178	26	inst	ultimo
215	16	புலத்துச	புலத்துச்
225	5	வைமஞ்சரிச் சிறப்புப்பாயிரம்	சைவமஞ்சரி
227	16	1901	1910
230	13	33	13
232	25	ஞரன	ஞான
239	25	1094	1940

குமாரசுவாமிப்புலவர் இயற்றிய நூல்கள்

	ரூபா	சதம்
தமிழ்ப்புலவர் சரித்திரம்	5	- 00
சிசுபாலசரித்திரம்	1	- 00
விஞ்ஞப்பகுபதவிளக்கம்	1	- 00
இலக்கணசந்திரிகை	1	- 00
இரகுவமிசசரிதாமிர்தம்		- 75
மேகதூதக்காரிகை		- 60
இராமோதந்தம்		- 60
ஞானக்கும்மி யேசுமதபரிகாரம்		- 25
கலைசைச்சிலேடை வெண்பா		- 25
மாவைப்பதிகம் மாவையிரட்டைமணிமாலை		- 10
கண்ணகிகதை		- 10

கிடைக்குமிடம்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

புலவரகம்

மயிலணி சுன்னாகம் P. O. இலங்கை

இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்

செய்யுள் நூல்கள்

1. சந்திரசேகரப்பிள்ளையார் இரட்டைமணிமாலை
2. முருகவேள் மும்மணிக்கோவை
3. திருக்கேதீச்சர நான்மணிமாலை
4. திணைவுப்பாமாலை
5. காசியாற்றுப்படை
6. மயிலணி அந்தாதி
7. கண்ணகி வெண்பா

வசன நூல்கள்

8. புலவர் நினைவுகள்
9. மகாத்மா காந்தி
10. சிவசம்புப்புலவர் சரித்திரம்

தொகுப்பு நூல்கள்

11. முருகேசபண்டிதர் பிரபந்தத் திரட்டு
12. முத்துக்குமாரகவிராயர் பிரபந்தத்திரட்டு
13. தோத்திர மஞ்சரி
14. முருகன் திருப்புகழ்மாலை

பதிப்பு நூல்கள்

15. தமிழ்ப்புலவர் சரித்திரம்
16. மாவைப் பதிகம்
17. ஐயனார் ஊஞ்சல்

மதிப்புரைகள்

காசியாற்றுப்படை

''ஆற்றுப்படை நூல்களின் வரிசையிலே இக் காசி யாற்றுப்படை இனிய அகவல் நடையிலே எழுதப்பட் டுள்ளது. 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று எண்ணுவது தமிழ் உள்ளம். எனவே, இதன் ஆசிரியர் இலங்கையினின்றும் புறப்பட்டுக் கன்னியா குமரியிலிருந்து காசிவரை சென்று இறைவனை வழிபட்டு வந்தமையை நிரல்பட விவரிக்கிறார். அகவல் நடை இனிமை பயப்பதோடு எளிமையாகவும் இருக்கிறது''

(செந்தமிழ் 14-7-1963)

புலவர் மு. உலகநாதன்.

''நூலில் பாட்டு நயம் சிறந்து விளங்குகிறது. எளிய நடை, நல்ல சொல்லாட்சி, தமிழ்ப்புலவர் நெறி வந்த இவ்வாசிரியர் பாடிய ஆற்றுப்படையில் புதுமை நலம் திகழ்கிறது''

'ஞானசம்பந்தம்'

மயிலணி அந்தாதி

''மயிலணியிற் கோயில் கொண்டுள்ள திருமுருகன் மீது அந்தாதித் தொடையமைய கட்டளைக்கலித்துறை யாற் பாடப்பெற்ற இனிய செய்யுட்களைக் கொண்ட நூலாக விளங்குகிறது. நூல் சிறிதே எனினும் பக்திச் சுவை மிகுந்தது. இனிய சந்த ஓசையுடையது. முரு கனின் பெருமைகளை உரைப்பது.'' (செந்தமிழ், 1966)

ச. சாம்பசிவன்